
ஸ்ரீ காசி

# அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பு மலர்



# ஸ்ரீ காசி
# அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலயத்
# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா
# சிறப்பு மலர்



**திருக்குட நன்னீராட்டு**
**10-11-1999**



பதிப்பாசிரியர்கள்
செம்மல் டாக்டர் சுப. அண்ணாமலை
பழம்நீ லெ.மு.மு. முத்துமாணிக்கம்

வெளியீடு
**ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்**
5, மேலவடம் போக்கித் தெரு, காரைக்குடி – 630 001.

உ

சிவமயம்

# மலர் மணம்

நகரத்தார்கள் தேசீய அளவில் ஆற்றிவரும் பணிகளுக்கு மணிமகுடம் வைத்தாற் போலத் திகழும் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், இப்புனிதத் தலத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீ விசாலாட்சி அம்பிகை திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவை ஒட்டி மலரச் செய்யும் சிறப்பு மலர் உங்கள் கண்முன் விரிந்து மணம் பரப்புகிறது.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் 1863 ஆம் ஆண்டு ஸ்ரீ காசியில் நிறுவப்பெற்று, அலகாபாத், அயோத்தி, கயா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக், பஞ்சவடி, சென்னை, காரைக்குடி ஆகிய நகரங்களில் கிளை விரித்து ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களுக்குத் தங்க நிழல்பரப்பி சமயக் கடமை ஆற்றுதற்குத் துணை நிற்பது இச்சத்திரம். ஸ்ரீ விசுவேசர் திருக்கோயிலில் நாள் தோறும் நடைபெற்றுவரும் நான்கு கால பூஜைகளில் மூன்று கால பூஜை நகரத்தார்களுக்கே உரியதாகச் செய்து, அவற்றை நடத்தி வருவதற்குரிய நிலையான சிறப்பு ஏற்பாடுகளைச் காசி நகரச்சத்திரத்தில் நகரத்தார்கள் செய்து வைத்துள்ளார்கள்.

"நதியேஷு கங்கா" என்றவாறு நதிகளில் புனிதமான கங்கை பாயும் புண்ணியத் தலத்தில் நகரத்தார்களுக்கு வாழையடி வாழையாக இருந்துவரும் இந்த உரிமை, இந்துக்கள் அனைவரும் போற்றுவதும், நகரத்தார்கள் பெருமை கொள்ளத்தக்கதுமாகும்.

கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் மிகச் சிறிய அளவில் கட்டப் பெற்றிருந்த ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோயிலையும் அதன் பூஜா உரிமைகளையும் காசி பிராமணர்களாகிய பண்டாக்களிடமிருந்து எழுத்து மூலமாகப் பெற்றனர். அதன்பின் அந்தக் கோயிலைப் புதுப்பிக்கவும் விரிவாக்கம் செய்யவும் விரும்பி 1890ல் அக்கோயிலருகே காசி மகாராஜா அவர்களுக்குச் சொந்தமான இடத்தையும் அவர்களிடமிருந்து கோயிலுக்கு தரும சாஸனமாகப் பெற்றுத் திருப்பணி வேலையைத் தொடங்கினர். 1893ல் தமிழ்நாட்டு ஆகமமுறைப்படி கோயில் கட்டிமுடிக்கப் பெற்று பூஜைகள் தமிழ்நாட்டு முறைப்படி தொடங்கப்பெற்றன. தேவகோட்டை ப.ராம.செ.ராம.இராமநாதன் செட்டியார் அவர்களால். 1971ல் புதிய விசாலாட்சி அம்மன் திருவுருவம் செய்யப்பெற்று பிரதிஷ்டை செய்து 1-11-1971ல் குடமுழுக்கு விழா நடத்தப்பெற்றது. அதற்குப் பிறகு 22-11-1985லும் 10-11-1999லும் குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

வரலாற்றின் கால ஏடுகளில் ஸ்ரீ காசி நகரச்சத்திரம் வளர்ந்த வரலாறு, வளர்க்கும் பணிகள் ஆகியவற்றை 1963ஆம் ஆண்டு ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பெற்ற சிறப்புமலரில் அமரர் சோம.லெ.அவர்கள் வரலாறாக

வடித்திருக்கின்றார்கள். அதன்பின்னர், தொடர்ச்சியான வரலாற்றை, காசிச் சத்திரத்தின் முன்னாள் தலைவர் கண்டனூர் திரு. சுப.சண்முகம் செட்டியார் அவர்கள் அதனோடு இணைத்துத் தந்தார்கள். அந்த பெருமை மிகு வரலாறு இப்பொழுது உங்கள் கைகளில் தவழும் சிறப்புமலரை அணி செய்கின்றது.

இந்த மலர் சிறக்க ஆசியுரை அருளிய ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் தவத்திரு முத்துக்குமாரசாமித்தம்பிரான் அவர்கள், நம் குருநாதர்கள் கோவிலூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் பாதரக்குடி ஸ்ரீ ரவீந்திர சுவாமிகள், துலாவூர் மடாதிபதி ஞானப்பிரகாச சுவாமிகள் கைலாஷ் ஆசிரம மகா சம்ஸ்தானம் அவர்கள், ஸ்ரீ காசி அன்னபூரணி கோவில் மகந்த் கோசுவாமி திரிபுவன்புரி சுவாமிகள் வாழ்த்துரை வழங்கிய தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள், செட்டிநாட்டு அரசர் திரு M.A.M. இராமசாமி அவர்கள், அருட்பணியண்ணல் கண்டனூர் சுப. சண்முகம் செட்டியார் அவர்கள் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நாகர்கோவில் மகாவித்வான் ஆறுமுக நாவலரவர்கள் அருளிய "ஆலய நிர்மாணம்" "ஆலய வழிபாடு" என்ற கட்டுரைகள் இம்மலருக்குப் பெருமை சேர்க்கின்றன. அருட்கவி பேராசிரியர் கு.செ.இராமசாமி அவர்கள் "கும்பாபிஷேகம் ஏன்" என்ற தலைப்பில் அரிய கட்டுரை வழங்கியுள்ளார்கள். பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம் அவர்கள் எழுதிய "காசி விசாலாட்சி கவின்மிகும் குடநீராட்டு" என்ற கட்டுரையும் காசிவிஸ்வேசர் அர்ச்சனைப் பதிகமும் விசுவநாதர் 108 போற்றியும் இடம்பெற்றிருக்கின்றன. ராயவரம் RM. இராமசாமி அவர்கள் வெளியிட்ட வாரணாசி மகத்துவம் என்ற சிறிய நூலிலிருந்து ஒரு பகுதியும் டுண்டிவிநாயகர் ஸ்தோத்திரமும் இடம் பெறுகின்றன. இவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, தென்னாட்டிலிருந்து வடநாடு சென்று, மொகலாய மன்னரைத் தமது இந்துஸ்தானி மொழிப்பேச்சால் ஈர்த்து அவரிடம் கங்கைக் கரையில் இடம் பெற்று, குமாரசாமி மடத்தை நிறுவிய ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் காசியின் மீது பாடிய காசிக்கலம்பகத்திலிருந்து பாடல்கள் தொகுத்துத்தரப்படுகின்றன. நகரத்தார்கள் காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் கட்டுவதற்கு முன் 50 ஆண்டுகள் இக்குமாரசாமி மடத்தில் தங்கியிந்துதான் பூஜைக்குரிய சாமான்களை விசுவநாதர் கோயிலுக்கு அனுப்பி வந்தார்கள்.

*இந்த அணிமிகு மலரைப் பணிவுடன் ஸ்ரீ விசாலாட்சி அம்மை திருவடிகளில் படைப்பதில் பெருமையுறுகின்றோம்.*

அன்புடன்
சுப. அண்ணாமலை
லெ.மு.மு. முத்துமாணிக்கம்
(பழம்நீ)
பதிப்பாசிரியர்கள்

சிவமயம்

# நன்றியுரை

அன்பார்ந்த பெரியோர்களே!

நம் நகரத்தார் பெருமக்களால் ஸ்ரீ காசியில் 1863ஆம் ஆண்டு சத்திரம் நிறுவப் பெற்று, படிப்படியாக விரிவாக்கம் செய்தும் மராமத்துகள் பார்த்தும் இன்று மிகப் பெரிய சத்திரமாக வளர்ந்து மிக நல்லமுறையில் நடைபெற்று வருவது நீங்கள் அறிந்ததே. 1970 முதல் மானேஜிங் சொஸைட்டி அமைக்கப்பெற்று நிர்வாகம் நன்கு நடந்து வருகிறது.

ஸ்ரீ காசியில் நமக்குச் சொந்தமான, நமது பராமரிப்பில் இருந்து வருகிற அருள்மிகு விசாலாட்சி அம்மன் கோயிலை பழுதுபார்த்து வர்ணவேலைகள் செய்து மருந்து சாத்தி 10.11.1999 அன்று5வது (ஐந்தாவது) திருக்குட நன்னீராட்டு சிறப்பாக நடைபெற்றது. நம்மவர்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீ ல ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், கோவிலூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீ காசி அன்னபூரணி கோயில் மகந்த் திரிபுவன்புரி கோசுவாமி ஆகிய மூவரும் வருகை தந்தது "பொற்குடத்துக்கு பொட்டு வைத்தது போல" மிகச் சிறப்பான ஒன்றாகும்.


செயற்குழுவினர் எல்லோரும் நல்ல ஒத்துழைப்பு தந்தார்கள். நம் சத்திரமேம்பாட்டிற்கும், விரிவாக்கத்திற்கும் பொருளுதவி தந்தவர்களுக்கும், ஒரு மாத காலம் காசியில் தங்கியிருந்து திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்து உதவிய அரிமளம் திரு.செ.லெ.முத்துச் செல்லப்ப செட்டியாரவர்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய பெருமக்களுக்கும், விளம்பரங்கள் சேகரித்துத் தந்த நல்ல உள்ளங்களுக்கும் படங்கள் தந்துதவிய திரு அன்பு N. சிதம்பரம் அவர்களுக்கும் திரு Dr.M. அழகப்பன் அவர்களுக்கும் திரு N. சிவனடியான் அவர்களுக்கும் குறுகிய காலத்தில் நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ விநாயகா ஸ்கீரின்ஸ் உரிமையாளர் திரு RM. லெட்சுமி நாராயணன் அவர்களுக்கும் மற்றும் எல்லாவிதத்தாலும் ஒத்துழைப்புத்தந்துதவிய அன்பர்கள் எல்லோருக்கும், குறிப்பாக இம்மலரின் பதிப்பாசிரியர்களாக இருந்து மலரை சிறந்த முறையில் உருவாக்கித் தந்த செம்மல் டாக்டர் சுப.அண்ணாமலை அவர்களுக்கும், "பழம் நீ" லெ.மு.மு.முத்துமாணிக்கம் அவர்களுக்கும் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்தின் சார்பிலும் எங்கள் சார்பிலும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நன்றி

**Dr. MR.** முத்தையா
தலைவர்

K. கண்ணப்பன்
செயலர்.

# காசி நகரச் சத்திரத்துப் படங்கள்





ஸ்ரீ காசியில் உள்ள நாட்டுக்கோட்டை
நகரச்சத்திர நுழைவாயில்



காசியில் ஸ்ரீ விஸ்வநாதர் பூஜைக்கு செல்லும்
புகழ்மிக்க "சம்போ"



ஸ்ரீ நகரேஸ்வரர்




ஸ்ரீ நகரேஸ்வரி

# காசி நகரச் சத்திரத்துப் படங்கள்



பண்டைக்கால ஸ்ரீ பாதாள ஈஸ்வரர்




காசிச் சத்திரத்தின் கலங்காத கல்வெட்டு



வள்ளி தெய்வயானை உடனாய சுப்பிரமணியர், ஸ்ரீ நடராஜர்,
ஸ்ரீ பார்வதி தேவி சிவபூசை செய்தல்
(100 ஆண்டுகளுக்கு முன் காசி சத்திரத்தில் உள்ள படம்)



ஸ்ரீ மாணிக்கவாசகர், ஸ்ரீ சிவகாமி அம்மன் உடனாய, ஸ்ரீ நடராஜா
(பாதுகாப்புக் கருதி நமது கயாச் சத்திரத்திலிருந்து கொண்டு வந்து
காசிச் சத்திரத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றது)

# அருள்மிகு
# ஸ்ரீ காசி விசாலாட்சி
# ஆலயக் கும்பாபிஷேகப்
# படங்கள்












# அருள்மிகு
# ஸ்ரீ காசி விசாலாட்சி
# ஆலயக் கும்பாபிஷேகப்
# படங்கள்











# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை
# நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம்
# காரைக்குடி
## 22-3-1998ல் தேர்ந்தெடுக்கப் பெற்ற செயற்குழுவினர்



துணைத் தலைவர்
S.KR. பழனியப்ப செட்டியார்
சொ. புதூர்



துணைத் தலைவர்
S.O.RM. கணபதி செட்டியார்
கண்டவராயன்பட்டி



செயலாளர்
K. கண்ணப்பன்
நாட்டரசன்கோட்டை




தலைவர்
Dr. MR. முத்தையா
கோட்டையூர்



துணைச் செயலாளர்
பழம்நீ லெ.மு.மு. முத்துமாணிக்கம்
தேவகோட்டை




துணைச் செயலாளர்
வ.ராம.வீர.ராம. ராமசாமி
காரைக்குடி



பொருளாளர்
Y.ST.L. சிதம்பரம் செட்டியார்
குளிபிறை

# செயற்குழு உறுப்பினர்கள்



சுப. சண்முகம் செட்டியார்
கண்டனூர்



CT. நடராஜன்
கொ. லெட்சுமிபுரம்



AL.AR.SM. நாராயணன் செட்டியார்
தேவகோட்டை



KR. முத்தையா செட்டியார்
தேவகோட்டை



A. திருநாவுக்கரசு செட்டியார்
காரைக்குடி




RM. ராமசாமி செட்டியார்
ராயவரம்



T. சிவனடியான் செட்டியார்
பனையபட்டி



முரு.ராம.மு. ராமன் செட்டியார்
விராய்ச்சிலை



ஜெமினி Y. பழநியப்பன்
மிதிலைப்பட்டி

# செயற்குழு உறுப்பினர்கள்



P.KT. சிங்காரம் செட்டியார்
வலையபட்டி



முத்து.உல.சுப. உலகப்பன்
நடராஜபுரம்



பதிப்பாசிரியர்
செம்மல் டாக்டர். சுப. அண்ணாமலை
தேவகோட்டை



PL. சொக்கலிங்கம் செட்டியார்
வேகுப்பட்டி



செ.லெ. முத்துச்செல்லப்ப செட்டியார்
அரிமளம்
திருப்பணியை மேற்பார்வை
செய்து உதவியவர்கள்



பதிப்பாசிரியர், பழம்நீ
லெ.மு.மு. முத்துமாணிக்கம்
தேவகோட்டை



N. லெட்சுமணன்
நாட்டரசன் கோட்டை



RM. வள்ளியப்பன்
மேலாளர், காசி



S. ஆண்டப்பன்
மேலாளர், காரைக்குடி

# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம் முன்னாள் தலைவர்கள்



அ.ராம.அ.லெ.முவீ.
முத்துவீரப்ப செட்டியார்
தேவகோட்டை
(1977–1980)




சி.க.அரு.சோம.
இராமநாதன் செட்டியார்
ஒக்கூர்
(1980–1984)




முதல் தலைவர்
AL.AR. சோமநாதன் செட்டியார்
தேவகோட்டை
(1970–1977)



உ.ராம.மெ.சுப.சேவு.அ.
அண்ணாமலை செட்டியார்
தேவகோட்டை
(1984–1989)



சுப. சண்முகம் செட்டியார்
கண்டனூர்
1989–1998



## ஸ்ரீ டுண்டி விநாயக ஸ்தோத்திரம்

ஸ்கந்த புராணத்தின் காசி கண்டத்தின் உத்தரார்த்தத்தில் அதாவது நான்காவது கண்டத்தில் ஐம்பத்து ஏழாவது அத்தியாயத்தில், ஸ்ரீ கண்டர் அதாவது சிவபெருமான கூறிய "டுண்டி விநாயக ஸ்தோத்திரம்".

### ஸ்ரீ கண்ட உவாச

ஸ்ரீகண்டர் கூறியது :

1. ஜய விக்னகிருதமாத்ய பக்தநிர்விக்னகாரக
அவிக்ன விக்னசமன மஹாவிக்னைக விக்னக்ருத்.

கருத்து :

விக்னங்களின் தோற்றத்தை உண்டாக்குபவரே, பக்தர்களின் விக்னங்களை நீக்குபவரே, விக்னமில்லாதவரே, விக்னங்களின் தோற்றத்தை நிறுத்துபவரே, மஹா விக்னத்திற்கும் விக்னத்தை உண்டாக்குபரே, உமக்கு ஜயமாகட்டும்.

2. ஜயஸர்வகணாதீச ஜயஸர்வகணாக்ரீணீ:
கணப்பரணதபாதாப்ஜ கணநாதீதஸத்குண.

கருத்து :

எல்லா கணங்களுக்கும் ஈசனே, கணங்களில் முதல் ஸ்தானத்தைப் பெற்றவரே, கணங்களால் நமஸ்கரிக்கப் பெற்ற பாத கமலங்கள் உடையவரே, எண்ணற்ற சத்குணங்கள் உடையவரே, உமக்கு ஜயமாகட்டும்.

3. ஜயஸர்வகஸர்வேச ஸர்வபுத்யேசேவதே
ஸர்வமாயாப்ரபஞ்சக்ஞ ஸர்வகர்மாக்ரபூஜித.

கருத்து :

எல்லா இடங்களுக்கும் செல்பவரே, எல்லோருக்கும் ஈசரே, எல்லா புத்திகளின் பொக்கிஷமே, எல்லா மாயா பிரபஞ்சத்தையும் நல்லவண்ணம் அறிந்தவரே, எல்லா கர்மங்களிலும் முதலில் பூஜிக்கப்பெற்றவரே, உமக்கு ஜயமாகட்டும்.

4. ஸர்வமங்களமாங்கல்ய ஜயத்வம் ஸர்வமங்கள
அமங்களோபசமன மஹாமங்களஹேதுக.

கருத்து :.

எல்லா மங்களங்களுக்கும் மங்களத்தைக் கொடுப்பவரே, சர்வ மங்களஸ்வரூபரே, அமங்களத்தின் தோற்றத்தை நிறுத்துபவரே, மஹா மங்களத்தின் காரணமே, உமக்கு ஜயமாகட்டும்.

5. ஜய ஸ்ருஷ்டிக்ருதாம்வந்த்ய ஜய ஸ்திதிக்ருதாநத
ஜய ஸம்ஹ்ருதிக்ருத்ஸ்துத்ய ஜய ஸத்கர்மஸித்தித.

கருத்து :

உலகத்தைப் படைத்தவரால் (பிரம்மனால்) வணங்கப்பட்டவரே, உலகத்தைக் காப்பவரால் (விஷ்ணுவால்) வணங்கப்படுவரே, உலகத்தை அழிப்பவரால் (ருத்திரரால்) துதிக்கப்படுபவரே, சத்கர்மங்களில் சித்தியைக் கொடுப்பவரே, உமக்கு ஜய மாகட்டும்.

6. ஸித்தவந்த்பயதாம்போஜ ஜய ஸித்திவிநாயக
ஸர்வஸித்யேகநிலய மஹாஸித்த்யருத்திஸீசக.

கருத்து :

சித்தர்களால் வணங்கப்பட்ட பாதகமலங்கள் உடையவரே, சித்தியைக் கொடுப்பவரே, எல்லா சித்தியையும் கொடுப்பவரே, எல்லா சித்திகளுக்கும் ஒரே இருப்பிடமே, மஹாசித்தியையும், மஹா ரித்தியையும் (செழிப்பையும்) குறிப்பவரே, உமக்கு ஜய மாகட்டும்.

7. அசேஷகுணநிர்மாண குணாதீச குணாக்ரணீ:
பரிபூரணசரித்ரார்த்த ஜயத்வம் குணவர்ணித.

கருத்து :

எல்லா குணங்களையும் உண்டு செய்பவரே, குணாதீதரே, நல்ல குணங்கள் உடையவரின் முதல்வரே, பரிபூர்ண பிரயோஜனம் உடையவரே, குணங்களால் வர்ணிக்கப் பட்டவரே, உமக்கு ஜய மாகட்டும்.

8. ஜயஸர்வபலாதீச பலாராதி பலப்ரத
பலாகோஜ்வலதந்தாக்ர பாலாபாலபராக்ரம.

கருத்து :

எல்லா பலங்களுக்கும் ஈசனே, பலம் குறைந்தவர்களுக்கு பலம் கொடுப்பவரே, கொக்கின் பல்லைப்போல் கூர்மையான பல் உடையவரே, சிறுவர்களிலும், சிறுமியர்களிலும், கூர்ம புத்திஸ்வரூபரே, உமக்கு ஜய மாகட்டும்.

9. அனந்த மஹிமாதார தராதர விதாரண
தந்தாக்ரப்ரோததிங்நாக ஜயநாகவிபூஷண.

கருத்து :

எல்லையற்ற மஹிமைக்கு ஆதாரமானவரே, க்ரௌஞ்ச பர்வதத்தை உடைத்தவரே, பிரளய காலத்தில் திசைகளின் யானைகளை கொம்பின் முனையால் அசைத்தவரே, உமக்கு ஜய மாகட்டும்.

10. யேத்வாம் நமந்தி கருணாமய திவ்யமூர்த்தே
சர்வைனசாமபிபுவோபுவிமுக்திபாஜ:
தேஷாம் சதைவ ஹரசீஹமஹோபசர்காந்
ஸவர்காபவர்கமபி சம்ப்ரததாசி தேப்யா:

கருத்து :

கருணாமய திவ்ய மூர்த்தியான உம்மைப் பூலோகத்திலிருப்பவர் எவர் வணங்குகிறாரோ, அவர் எல்லோரும் முக்திக்கு உரியவராவார். அவர்களின் மூன்று வித தாபங்களைப் போக்கி சுவர்க்கத்தையும், மோட்சத்தையும் அளிப்பாய்.

11. யேவிக்னராஜ பவதா கருணாகடாக்ஷை:
சம்ப்ரேக்ஷிதா க்ஷிதிதலேக்ஷண மாத்ரமத்ர
தேஷாம் க்ஷயந்தி ஸகலான்யபி கில்பிஷாணி
லக்ஷ்மீ: கடாக்ஷயதிதான் புருஷோத்தமான்ஹி

கருத்து :

விக்னராஜரான உம்முடைய கடாக்ஷம் பூலோகத்தில் ஒரு வினாடியாவது யார் மேல் விழுகிறதோ அவர்களின் எல்லா பாவங்களும் நீங்கி அத்தகைய புருஷோத்தமரை லட்சுமி தன் கடாக்ஷத்தால் நிச்சயமாக அனுக்கிரஹிப்பாள்.

12. யேத்வாம் ஸ்துவந்தி னதவிக்னவிகாததக்ஷ
தாக்ஷாயணீ ஹ்ருதயபங்கஜதிக்மரஷ்மே
ஷ்ருயந்த ஏவ த இஹ ப்ரதிதானசித்ரம்
சித்ரம் தத்ர கணபாய தஹோத ஏவ

கருத்து :

உம்மை நமஸ்கரிப்பவரின் விக்னங்களை நீக்குவதில் மிக சாமார்த்தியம் உடையவரான உம்மை, பார்வதியின் ஹிருதய கமலத்தின் திகழ் ஒளியாய் விளங்குபவரே, உம்மைத் துதிப்பவர் நிச்சயமாக கீர்த்தியை அடைவார்கள்.

13. யேஷீலயந்தி ஸததம் பவதோங்க்ரீ யுக்மம்
தே புத்ரபௌத்ரதனதான்யசம்ருத்திபாஜ:
ஸம்ஷீலிதாங்கரிகமலாபஹூப்ருத்ய வர்க்கைர்
பூபால போக்யகமலாம் விமலாம் லபந்தே

கருத்து :

யார் உம்முடைய இரண்டு பாதபத்மங்களை நிரந்தரமாக பாவிக்கிறார்களோ அவர்கள் புத்திர பௌத்திர செல்வ தான்யங்களால் நிறைந்தவராக இருப்பவர், அனேக சேவகர்களால் பாத கமலங்களில் சேவிக்கப்பட்ட லட்சுமியால் பூலோகத்தில் குறைவில்லாத செல்வத்தைப் பெறுவர்.

14. த்வம் காரணம் பரமகாரணகாரணானாம்
வேத்யோஸி வேதவிதுஷாம் ஸததம் த்வமேக:
த்வம் மார்கணீயமஸி கிஞ்சன மூலவாசாம்
வாசாமகோசர சராசரதிவ்யமூர்த்தே

கருத்து :

நீர் எல்லாவற்றுக்கும் காரணமானவர். காரணங்களுக்கெல்லாம் பரம காரணமானவர். வேத வித்துக்களுக்கு எப்பொழுதும் அறிவதற்கு யோக்கியமான பரம்பொருள் நீர் ஒருவரே, நீர் தேடி அறியக்கூடிய மூல வசனமாவீர், வசனத்திற்கு அப்பாற்பட்ட சராசர திவ்ய மூர்த்தி ஆவீர்.

15. வேதா விதந்தி ந யதார்த்தயா பவந்தம்
ப்ரம்மாதயோபி ந சராசரசூத்ரதார
த்வம் ஹம்ஸி பாசி விததாசி சம்ஸ்த்தமேக:
கஸ்தே ஸ்துதிவ்யதிகரோ மனசாப்யகம்ய.

கருத்து :

வேதங்கள் சாரசர சூத்திரதாரரான உம்மை யதார்த்தமாக அறியவில்லை. அதே போல் பிரம்மாதி வேத வித்துக்களும் உம்மை அறியவில்லை. நீர் ஒருவரே எல்லாவற்றையும் அழிப்பீர், நீர் காப்பீர், படைப்பீர். மனசுக்கு அப்பாற்பட்ட உம்மை எப்படித் துதிப்பது.

16. த்வத்துஷ்டத்ருஷ்டிவிஷிகைர் நிஹதாம் நிஹன்மி
தைத்யான் புராந்தகஜலந்தரமுக்கியகான்ஷ்ச
கஸ்யாஸ்தி சக்திரிஹ யஸ்த்வத்ருதேபி
துச்சம் வாஞ்சேத் விதாதுமிஹ சித்தித கார்யஜாதம்.

கருத்து :

உன்னுடைய துஷ்ட, திருஷ்டி என்ற பாணங்களால் அழிக்கப்பட்டவர்களை, அதாவது புராந்தங்கள், ஜலந்தரன், முதலிய அசுரர்களை நான் அழிக்கிறேன், சித்திகளைக் கொடுக்கும் உன்னை வழிபடாமல் காரியத்தை சாதிப்பதற்கு யாருக்குதான் சக்தி உண்டு.

17. அன்வேஷணே டுடுடிரயம் ப்ரதிதோஸ்தி தாது:
சர்வார்த்தடுண்டிததயா தவ டுண்டி நாம
காசீப்ரவேஷமபிகோ லபதேத்ர தேஹீ
தோஷம் வினாதவ விநாயக டுண்டி ராஜ

கருத்து :

"டுடி" என்ற மூலச்சொல்லின் பொருள் லோகத்தில் நாடுவது என்று பிரசித்திபடும். எல்லா புருஷார்த்தங்களையும் அடைவதற்கு நீர் நாடப்படுவதால் உம்முடைய பெயர் "டுண்டி" ஆகும். உம்மை வணங்கி திருப்திபடுத்தாமல், விநாயக டுண்டி ராஜரே, யாருக்குத்தான் காசிக்குள் நுழைய முடியும்?

18. டுண்டே ப்ரணம்ய புரதஸ்தவ பாதபத்மம்
யோமம் நமஸ்யதி புமாநிஹ காசிவாஸீ
த்தகர்ணமூலதிகம்ய புராதிஷாமி
தத் கிஞ்சிதத்ர நபுனர்பவதாஸ்தியேன

கருத்து :

யாரொரு காசிவாசி ஆரம்பத்தில் உம்முடைய பாத பத்மங்களை வணங்கி என்னை வணங்கிறார்களோ அவருடைய செவி மூலத்தில் புகுந்து பிராணம் போவதற்கு முன் அவருடைய கர்ண மூலத்தில் புகுந்து அவருக்கு உபதேசத்தை அளிப்பேன் அதற்கு பிறகு அவனுக்குப் புனர்ஜன்மமே கிடையாது.

19. ஸ்நாத்வா நர: ப்ரதமதோ மணிகர்ணிகாயாம்
உத்தூலிதாங்கரி யுகலஸ்து ஸசைலமாசு
தேவர்ஷிமானவபித்ருநபி தர்ப்பயித்வா
ஞானோததீர்த்தமபிலப்ய பஜேத்ததஸ்த்வாம்.

கருத்து :

முதலில் மணிகர்னிகா காட் என்ற இடத்தில் பாதங்களைக் கழுவி வஸ்த்திரங்களுடன் ஸ்நானம் செய்து அதன்பிறகு தேவரிஷிகள், மனுஷர்கள், மற்றும் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து ஞானோத தீர்த்தத்தைப் பெற்று உம்மை வணங்க வேண்டும்.

20. சாமோதமோதகபரைர்வரதூபதீபைர்
மால்யை: சுகந்தபஹுலைரனுலேபனைஷ்ச
சம்ப்ரீண்ய காசிநகரீ பலதானதக்ஷம்
ப்ரோக்த்வாத மாம் க இஹ சித்யதி நைவடுண்டே

கருத்து :

ப்ரசன்ன சித்தமாய் நிறைய மோதகங்களுடன் நல்ல தூப, தீபங்களால், நல்லவாசனை உள்ள பூமாலைகளால், சுகந்த திரவ்யங்களால், காசி நகரத்தின் பலனை அளிப்பதில் சாமர்த்தியம் கொண்ட உம்மை வழிபட்டு என்னை வணங்குபவருக்கு சித்தி எப்படி கிடைக்காமல் இருக்கும்?

21. தீர்த்தாந்தராணிச தத: க்ரமவர்ஜிதோபி
சம்சாதயன்னிஹ பவத்கருணாகடாக்ஷ:
தூரிக்ருதஸ்வஹிதகாத்யுபசர்கவர்கோ
டுண்டே லபேதவிகலம் பலமத்ர காஷ்யாம்

கருத்து :

ஹே டுண்டு விநாயகரே! உம்முடைய கருணை கடாக்ஷத்தால் வேறு தீர்த்தங்களில் க்கிரமம் இல்லாமல் வழிபட்டு உம்முடைய கருணைகடாக்ஷத்தால் எல்லாவிதமான துக்கங்களிலிருந்தும், விடைபெற்று காசி வாசத்தின் பலனை பரிபூர்ணமாக அடைவார்கள்.

# இன்று விழித்துவிட்டோம்!

*கவிஞர் கண்ணதாசன்*

ஆன்ற தமிழர் அருங்குணத்தி லேமிதந்து
தோன்றுந் திசையெங்கும் தொழில்புரிந்த காலமுதல்
ஈன்ற மனையரசு, இல்லத்தாள், பெற்றபிள்ளை
யாவும் மறந்து அயலகத்தே தமிழ்வளர்த்தோம்
வண்ணக் கலைவளர்த்தோம்; வரலாறே நாம்சமைத்தோம்;
எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களை(க்)
கண்ணில் இருத்திக் கலையோடு காத்துவந்தோம்.
காசி நகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்!
மாசற்ற பொன்னும் மணிவயிரம் இரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில்நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசி விசாலாட்சி கவிமதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார் அல்லேமோ!
பக்திக்குத் தானோ பணத்தைச் செலவழித்தோம்
பகுத்தறிவுக் கோவில்களாம் பள்ளிகளும் நாம்சமைத்தோம்!
பல்கலையும் ஆற்றிவரும் வண்ணப்பல் கலைக்கழகம்
செல்வம் வளர்த்துவரும் செட்டிமார் வண்ணமன்றோ?
வட்டி வணிகன் வளமார் தமிழகத்தில்
கொட்டிக் குவித்தவொரு கோடியிலும் மேலாகும்
அன்று பிறகலைகள் அறியா திருந்தவர்கள்
இன்று புவிமுழுதும் எத்தனையோ தொழில்புரிவார்
பழந்தமிழின் இலக்கியமும், பண்புமிகும் நூலினமும்
இழந்துவிடா திருப்பதற்கு எத்தனையோ நூல்நிலையம்
நாமே நடத்துகின்றோம்! நாட்டறிவை ஏற்றுகின்றோம்
வழக்கறிஞர் நூறு, மருத்துவரோ இருநூறு
வளரும் பொறிஇயலில் மலர்ந்தவரோ நானூறு
கிழக்கும்மேற் கும்அறிந்து, கேட்போர்க்குப் பதிலுரைக்கும்
தத்துவமும் நம்மக்கள் சமுதாயம் கண்டதுண்டு!
பர்மா நிலத்தில் பச்சைவயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை.
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்றுவரை
தாமாகத் தம்மைத் தலைதூக்கிக் கொண்டதில்லை.
இன்று விழித்துவிட்டோம்! எல்லோரும் ஒன்றுபட்டோம்
ஒன்று சமுதாயம் என்றுவரும் நாள்வரையும்
தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழக்கிடுவோர் சாதிக்கே வாழுமட்டும்
நாமும் நமதுகுலம் நலங்காணப் போரிடுவோம்,
நகரத்தார் நலஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்
நெ1, சாலைத் தெரு
காஞ்சிபுரம் – 631 502

# வாழ்த்துரை

*ஆலயப்பராமரிப்பினைப் பரம்பரைச் சொத்தாகக்கொண்டு விளங்கும் பரம்பரை நாட்டுக்கோட்டை நகரத்தார் பரம்பரை. இதற்கு மகுடம் வைத்தாற்போல அமைந்தது இவர்களிடமுள்ள விசாலாக்ஷி அம்மன் கோவில் நிர்வாகப் பொறுப்பு.*

*இவ்வாலயத்திற்கு ஜீரணோத்தாரணப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடத்திவைத்து இத்தொடர்பாக ஒருமலரும் வெளியிடுவது அறிந்து மகிழ்க்கிறோம்.*

*முத்திதரும் திருத்தலங்களுள் முதன்மைபெற்றதாக விளங்கும் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தின் அதிதேவதையாக விளங்கும் அன்னை விசாலாக்ஷி இன்னருள் மலர் ஆலயப் பராமரிப்பு - அதனால் கிடைக்கும் இம்மை மறுமைப்பயன்கள் இவைகளை விளக்கி ஆஸ்திகம் வளர்ப்பதாக அமைந்து விளங்க ஆசீர்வதிக்கிறோம்.*

நாராயணஸ்ம்ருதி.

கயிலை மாமுனிவர்
திருவளர் திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்
திருப்பனந்தாள் – 612 504
(தஞ்சை மாவட்டம்)

# வாழ்த்துரை

*காரைக்குடி, ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக் கழகம் அண்மையில் ஸ்ரீ காசியில் உள்ள விசாலாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாவையொட்டி சிறப்பு மலர் வெளியிட இருப்பதறிந்து நாம் மகிழ்கிறோம்.*

*"குவித்த கரம் விரித்தல் செயாக்*
*கோயில்களும் பலவுளவால்"*

*என்ற மகாவித்துவான் பிள்ளையவர்கள் வாக்கிற்கேற்ப தமிழகமெங்கும் உள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணியும், குடமுழுக்கும் நடத்துவதில் நகரத்தார் பங்கு உயர்ந்து விளங்குதல் உண்மை. மூவேந்தர், விசயநகர மன்னர்களையடுத்து திருக்கோயில் திருப்பணி இயற்றும் நகரத்தார் மேலாண்மைக் கழகம் சிறந்து விளங்கவும், ஸ்ரீ காசி விசாலாட்சி திருக்கோயில் குடமுழுக்கையொட்டி வெளிவர இருக்கும் சிறப்புமலர் பக்தி மணம் கமழ வெளிவரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.*

*சுபம்*

உ

*சிவமயம்*

**அருட்பணியண்ணல் சுப. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு,**

# நன்றி.

*கண்டனூரைச் சார்ந்த அருட்பணியண்ணல் சுப. சண்முகம் செட்டியார் அவர்கள் 1970ம் ஆண்டு முதல் 1998ம் ஆண்டு வரை ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொஸைட்டியில் செயற்குழு உறுப்பினர், இணைச் செயலாளர், செயலாளர், தலைவர் பதவிகளை வகித்து வந்து மிகச் சிறப்பாகச் செயலாற்றியவர்கள். அவர்களது பெரு முயற்சியினால் காசியில் சில சொத்துக்கள் விற்பது தடுக்கப்பட்டது. இதுபோன்ற பல நல்ல செயல்களைச் செய்தவர்கள். மேலாண்மைக் கழகத்திற்கு மிகுதியும் பாடுபட்டவர்கள். இப்பொழுது செயற்குழுவில் உறுப்பினராக இருந்து எங்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகிறார்கள்.*

*1963ம் ஆண்டு உயர்திரு. சோம. லெ. அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட நூற்றாண்டு மலருக்குப் பிறகு உள்ள செயல்களை அதன் தொடர்ச்சியாகத் தொகுத்துத் தந்துதவினார்கள். அவை* **ஸ்ரீகாசி அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா** *சிறப்பு மலரில் இடம்பெற்று, சத்திரத்துச் செய்திகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி செய்திருக்கிறோம்.*

*இவ்வாறு தொகுத்துத் தந்துதவிய முன்னாள் தலைவர், அருட்பணியண்ணல் திரு. சுப. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு மேலாண்மைக் கழகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

*MR. முத்தையா*
*தலைவர்*

*K. கண்ணப்பன்*
*செயலாளர்*



ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீன கர்த்தர்
கோவிலூர் – 630 307

# வாழ்த்துரை

புகழ்மிகு நதியான, புண்ணியக் கங்கை பாயும் புனிதப்பதி வாரணாசி என்னும் காசி மாநகர். கங்கைப் புனல் படிந்து ஆடுவார் எவராயினும், அவர்தம் தீவினைகள் நீக்கும் வித்தகராகிய விசுவேசப் பெருமான் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடம். அறம்வளர்த்த நாயகியான அன்னபூரணியும், விரும்பித் தொழுவார் தம் தீவினைகள் நீக்குகின்ற விசாலமான கண்கள் கொண்ட விசாலாட்சியும் வீற்றிருந்து அருள்செய்யும் வெற்றித் திருநகரம் காசி மாநகரம்.

வாழ்நாளில் ஒரு முறையாயினும் வாரணாசித் தலம் சென்று, வானோர் போற்றும் கண்ணுதற் பெருமானின் கழலடி பணிந்து கங்கையாடி வர வேண்டுமென்ற எண்ணமுடையவர் ஈடில்லாப் புகழ் வாய்ந்த நகரத்தார் பெருமக்கள்.

கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்று சொன்ன மதிசால் மன்னன் அரிச்சந்திரன் வாய்மை காக்க ஏவலாளாய் நின்று, சுடலை காத்த திருநகர் காசிப்பதி.

அம்பலத்தாடும் ஈசன் ஆலயமிருக்கும் இடமெல்லாம் திருப்பணி செய்து அறம் வளர்த்த நகரத்தார் கைவண்ணத்தால் உருவான விடுதிகளுள் சிறந்தது காசி நகர விடுதி. இப்பதிக்கண் நகரத்தார் பெருமுயற்சியால் உருவான அருள்மிகு விசாலாட்சி திருக்கோவில் திருக்குட நீராட்டுவிழா அண்மையில் மிகச்சீரிய முறையில் நடந்தேறியது. அதில் நாமும் கலந்து கொள்கின்ற வாய்ப்புக் கிடைத்தமை கண்டு பெரிது மகிழ்ந்தோம். அதனை ஒட்டி நகரத்தார் ஒரு மலர் வெளியிடுவது கண்டு மகிழ்ந்தோம்.

இம்மலர் சிறக்கவும், நகரத்தார் நலமுடன் வாழவும் நாம் அருள்மிகு திருநெல்வை உடனாய கொற்றவாளீசர் திருவடி மலர்களை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ சற்குரு நாதன் துணை

ஜெகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா சுவாமிகள்
ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரம மஹாசமஸ்தானம்
கெஞ்சேனஹள்ளி
பெங்களூர் 560 039



# வாழ்த்துரை

ஸ்ரீ பேரன்பு நிறைந்த முத்துமாணிக்கம் அவர்களுக்கு சத்குருவின் ஆசீர்வாதம் கொண்டு ஸ்ரீ ஜெயேந்திரபுரிஸ்வாமி எழுதியது. தாங்கள் 1-8-2000 தேதியிட்டு எழுதிய கடிதம் இன்று வந்து சேரப்பெற்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சத்குரு மஹாஸ்வாமிகள் அவர்கள் தங்கள் கடிதத்தைக் கண்ணுற்று ஸ்ரீ காசியில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குச் சொந்தமான அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் அண்மையில் ஸ்ரீ பேரன்பு நிறைந்த காஞ்சிப் பெரியவர் ஜெகத்குரு ஸ்ரீ ஜெயேந்திரசரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது குறித்து மிகுந்த மகிழ்ச்சியுற்று இந்த திருப்பணியில் பங்கு பெற்ற அனைவருக்கும் பூரண நல்லாசி வழங்கியுள்ளார்கள்.

ஸ்ரீ காசி விசாலாட்சி கோவிலில் பலவருடங்களாக ஸ்ரீ அம்பாளின் திருமுகத் தோற்றம் மட்டும் வெளியில் தெரிந்த நிலையில் நமது ஸ்ரீ ல ஸ்ரீ சத்குரு மஹாஸ்வாமிகள் அவர்கள் சுமார் ஒருமாதம் காசியில் தங்கியிருந்து ஸ்ரீ பேரன்பு நிறைந்த தேவகோட்டை ஜமீன்தார் AL. AR. சோம. அவர்களுடன் எதிர்ப்புத் தெரிவித்த பண்டாக்களை சமாதானம் செய்து அம்பாள் முகத் தோற்றத்தின் முன்பு ஸ்ரீ விசாலாட்சி அம்பாளின் முழு விக்ரஹத்தை முதன் முதலாகப் பிரதிஷ்டை செய்து முதல் கும்பாபிஷேகத்தையும் முன்னின்று நடத்திவைத்ததை நினைவு கூர்ந்தார்கள்.

ஸ்ரீ நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எந்த ஒரு பணியையும் திறம்படச் செய்யக்கூடியவர்கள். குறிப்பாகத் தெய்வத் திருப்பணியில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள் என்று கூறி ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவிலையும், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தையும் பாராட்டினார்கள்.

ஸ்ரீ நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் நலன் கருதி இவிடம் கோவில் கொண்டு அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ ஞானாட்சி ராஜராஜேஸ்வரி அம்பிகையின் திருவடிகளைச் சிந்தித்து இத்துடன் பிரசாதமும் அனுப்பியிருக்கிறது. எல்லோரும் அணிந்துகொள்ளவும்.

வேணும்
சத்குரு நாதன் துணை
ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமி



ஸ்ரீ ரவீந்திர சுவாமிகள் M.A.,
நகரத்தார் உபதேச குருபீடம்
பாதரக்குடி – 623 307

# வாழ்த்துரை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்ற கொள்கையைப் பன்னெடுங்காலமாக உயிர்மூச்சாகக் கடைப்பிடித்து வருபவர்கள் நகரத்தார் பெருமக்கள்

பாரதத்தின் ஆன்மீகத் தலைநகரம் காசி மாநகரில் விளங்கும் விசுவநாதப்பெருமானை ஒருமுறையாவது தரிசனம் செய்வதைக் கட்டாய வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்தான்.

அவ்வாறு செல்லும் சிவனடியார்களுக்கு உதவியாக காசிமாநகரில் ஒருசத்திரம் அமைத்து பல நூற்றாண்டுகளாகச் செம்மையாக நடத்தி வருவது மிகவும் சிறப்பாகும். உலகப்போர் நடந்த சமயத்திலும் நிறுத்தாமல் அங்கிருந்து அர்த்தஜாம பூஜைக்கு "சம்போ மகாதேவ" என்ற கோஷத்துடன் அபிஷேகசாமன், நைவேத்தியங்கள் கொண்டுசெல்லப் பட்டிருக்கின்றன. இந்த உரிமையைப் பெறுவதற்காக எத்தனையோ மன்னர்களும் கோடீசுவரர்களும் எத்தனை கோடி வேண்டுமானாலும் கொடுக்க முன்வந்துள்ளனர். ஆனால் ஒரு நகரத்தர் உயிருடன் இருக்கும்வரை கொடுக்கமாட்டோம் என்று கூறிவிட்டார்கள் நமது நகரத்தார்கள்.

நகரச்சத்திரத்தில் பாதாள லிங்கமும் ஸ்ரீ விசாலாட்சி நகரேஸ்வரர் நகரேஸ்வரி அமைக்கப்பெற்று தினசரி மற்றும் தீபாவளி முதலிய சிறப்பு வழிபாடுகள் நடந்து வருகின்றன. தென்னாட்டு ஆகமமுறையை வடநாட்டில் பிரகாசப்படுத்துவது போல் அங்கு விசாலாட்சி கோயில் கும்பாபிஷேகம் நடத்தியிருப்பது மிகவும் சிறப்பாகும்.

இவ்வாறு பல சிறப்புக்களைச் செய்துவரும் நகரத்தார் பெருமக்கள் காசியில் விசுவநாதர் உபதேசிக்கும் மந்திரமாகிய திருவைந்தெழுத்தை முறைப்படி உபதேசம்பெற்று அனுட்டானம் செய்யவேண்டும் என்பதையும் நினைவுறுத்தி எல்லா நலன்களும் மென்மேலும் பெற்று வாழ நல்லாசிகளைத்தெரிவித்துக்கொள்கிறோம். சுபம்

ஸ்ரீ பழம்பதி நாதர் துணை



ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மடாதிபதி, துலாவூர் மடம்.

# வாழ்த்துரை

"கோத்திரத்தால் ஏழாய்க் கோவிலால் ஒன்பதாய்
தோத்திரத்தொடு கோவில் திருப்பணியும் குடமுழுக்கும்
பாத்தியமாய் நகரத்தார் பல அறப்பணிசெய் அன்பர்களின்
கோத்திரமே புகழுறச் செய் குருதலமாம் துலாவூரே"

நகரத்தார்கள் திருக்கோவில்களுக்குத் திருப்பணி செய்வதில் பெரும் விருப்புடையவர்கள். தாம் தொழில் செய்யும் போதே தெய்வங்களுக்கென்றே பங்குவைத்து அதனால் வரும் வருமானத்தைத் தான தருமங்களுக்கும், திருக்கோவில் திருப்பணிக்கும் பல நூறாண்டுகளுக்கு முன்னரே தொடங்கிப் பணியாற்றி வருபவர்கள்.

காசியில் நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்தின் பொறுப்பில் உள்ள அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மலர் சிறப்பாக அமைய ஸ்ரீ மங்களாம் பிகைசமேத வாஞ்சீஸ்வரப் பெருமான் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்
ஸ்ரீ.நி.ஞா.தேசிகசுவாமிகள்
**6–10–2000**



**MAHANTH GOSWAMI TRIBHUWANPURI**
ANNAPURNA TEMPLE VARANASI, U.P

# வாழ்த்துரை

1800 மைல்களுக்கு அப்பால் இருந்து நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் நகரச்சத்திரத்தின் மூலமாக வாரணாசியில் அருள்மிகு விசாலாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை 10-11-1999 அன்று சிறப்பாக நடத்தினார்கள். என்னையும் விழாவில் கலந்து கொள்ளும்படி அழைத்து இறை அன்புக்குப் பாத்திரமாகும்படி செய்தார்கள். நகரத்தார்களின் சிறப்பான இறைப்பணி மேலும் தொடர எல்லாம் வல்ல அன்னபூரணிப் தாயைப் பிரார்த்திக்கிறேன்.

MAHANTH GOSWAMI TRIBHUWANPURI



முனைவர் மு. தமிழ்க்குடிமகன் எம்.ஏ. பிஎச்.டி
தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

# வாழ்த்துரை

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் திருப்பணி இல்லாத இடமே தமிழகத்தில் இல்லையெனக் கூறலாம். தமிழும் சைவமும் எங்கெல்லாம் போற்றப்படுகின்றதோ அங்கெல்லாம் நகரத்தார்களின் பணிக்கொடை நம் கண்முன்னே விரிந்து காட்சியளிக்கும். அவ்வகையில் முத்தித் தலமாகிய காசியில் அ/மி.விசாலாட்சியம்மன் திருக்கோயிலைப் பாதுகாத்துப் பேணித் திருக்குடமுழுக்குப் பெருவிழா நடத்தியமை யறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். குடமுழுக்கு விழாவின் சார்பாகச் சிறப்பு மலர் வெளிவரவிருப்பதறிந்தும் மகிழ்ச்சி. அச்சிறப்பு மலர் பல்துறைப் பெருமக்களின் கருத்துக் களஞ்சியமாக விளங்கிட எனது வாழ்த்துகள்.

அன்புடன்
மு. தமிழ்க்குடிமகன்




டாக்டர் மு-அ-மு- இராமசாமி
செட்டிநாடு மாளிகை, ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை – 600 028

## வாழ்த்துரை

*ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் தலைவர் திரு டாக்டர் முத்தையா அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் நகரத்தார்களுக்குச் சொந்தமான ஸ்ரீ காசி விசாலாட்சி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் ஒன்று வெளிவரவிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வழிவழியாக நம் நகரத்தார்கள் செய்து வரும் தெய்வத்திருப்பணிகள் மிகவும் பாராட்டுக்குரியவை. ஆன்மீகம் தழைத்து இறைமணம் கமழும் மலர் வெளியீடு சீரோடும் சிறப்போடும் நடைபெற்று எல்லோருக்கும் இன்பமும் அன்பும் பெருக அருள்மிகு ஸ்ரீகாசி விஸ்வேஸ்வரர் விசாலாட்சி திருவடிகளைச் சிந்தித்து வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றேன்.*

மு.அ.மு.இராமசாமி



சுப. சண்முகம் செட்டியார்
முன்னாள் தலைவர், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை
நகரச்சத்திரம் மானேஜிங் சொசைட்டி

# வாழ்த்துரை

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் 1863ல் தொடங்கப்பெற்றதால் அதன் நூற்றுண்டு விழாவை 1963ல் அப்போது ஸ்ரீ காசி சத்திரத்தையும் அதன் கிளைச் சத்திரங்களையும் நிர்வகித்து வந்த பர்மாநகரத்தார்கள் மிகச்சிறப்பாகக் கொண்டாடினார்கள். அதை ஒட்டி ஒரு மலரையும் வெளியிட்டார்கள். அந்த மலருக்கு பதிப்பாசிரியர் பொறுப்பை சோமலெ அவர்களிடம் ஒப்புவித்தார்கள். சோமலெ அவர்கள் நிறையமலர்களை உருவாக்கியவர்கள். எந்தப் பொறுப்பை ஒப்புக்கொண்டாலும் அதை ரொம்பப் பொறுப்புடன் செய்து முடிப்பவர்கள். அதே போல் அந்த மலரை உருவாக்க அவர்கள் அதற்காக செலவிட்ட நேரத்தையும் அவர்களின் கடுமையான உழைப்பையும் நான் நேரில் பார்த்தவன். அவர்கள் சென்னை ரெங்கோன் நகரவிடுதியில் தங்கிக் கொண்டு ஸ்ரீ காசி சத்திரத்துக்கும் அதன் கிளைச் சத்திரங்களுக்கும் நேரில் போய் அங்கேயே தங்கிக்கொண்டு அங்குள்ள ஆவணங்களைப் பார்த்தும் அங்கு பணியாற்றுபவர்கள் மூலம் செய்திகள் சேகரித்தும் ஒவ்வொரு சத்திரத்தைப் பற்றியும் ரொம்ப விபரமாக வெளியிட்டிருக்கிறார்கள். அந்த மலர்தற்போது ஒரு சிலரிடம் தான் இருக்கிறது. நமது ஸ்ரீ காசி சத்திரமும் அதன் கிளைச் சத்திரங்களும் நாளுக்கு நாள் நல்ல வளர்ச்சி பெற்று வருவதாலும் ஸ்ரீ காசி சத்திரங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள நகரத்தார் பெருமக்கள் ஆவலாக இருக்கிறார்கள். அதனால் ஸ்ரீ காசி விசாலாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை ஒட்டி நமது மானேஜிங் சொசைட்டியின் வரலாறு குறித்து ஒருமலர் வெளியிடமுடிவு எடுக்கப்பெற்றது.

பர்மா நகரத்தார்களால் நியமிக்கப் பெற்ற இடைக்காலக் கமிட்டியாரிடமிருந்து 9-2-1970ல் 76 ஊர் நகரத்தார்கள் ஸ்ரீ காசி நாட்டுகோட்டை நகரச்சத்திரம் மானேஜிங் சொசைட்டியின் நிர்வாகத்தை ஒப்புக்கொண்டது முதல் அதன் செயற்குழு உறுப்பினராகவும் பின்னர் துணைச் செயலர், செயலர், தலைவராகவும் பணியாற்றி தற்போது மீண்டும் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருவதால் இம்மலருக்கு செய்திகள் சேகரித்துக் கொடுக்கும் பணியை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டியின் வரலாறு குறித்துள்ள செய்திகளை 1963ல் பரமா நகரத்தார்கள் வெளியிட்ட நூற்றுண்டு விழா மலரிலிருந்தும். அவர்களால் நியமிக்கப் பெற்ற இடைக்கால கமிட்டியார் 9-2-1970ல் வாசித்தளித்த அறிக்கையிலிருந்தும் தொகுத்தும் அதன்பின்னர் நடந்த நிகழ்ச்சிகளை நான் சேகரித்தும் இம்மலருக்கு வழங்கி உள்ளேன்.

நம்முன்னோர்கள் போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாத காலத்தில் வட நாட்டிற்குப் போய் இவ்வளவு பெரிய சத்திரங்களை கட்டியும் ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரப்பெருமானுக்கு தினசரி நடைபெறும் நான்கு காலபூஜைகளில் மூன்று காலப் பூஜைகளை என்றென்றும் நடத்திவரும் உரிமைகளைப் பெற்றும் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறார்கள். அதை மனதில் கொண்டு அவர்கள் தொடங்கிவைத்த சத்திரங்களும் பூஜைகளும் மேன்மேலும் சிறப்புற நடைபெற நகரத்தார் பெருமக்கள் அனைவரும் மேற்படி பணியில் பங்கு பெற வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்

சுப. சண்முகம்



திருப்பணிச் செம்மல்

திரு. அள.அரு. சோம. நாராயணன் செட்டியார்

பாலெஸ், வட்டாணம் ரோடு, தேவகோட்டை

# வாழ்த்துரை

திருச்சிற்றம்பலம்

வாளினான் வேலினான் மால்வரை யெடுத்ததிண்
தோளினான் நெடுமுடி தொலையவே யூன்றிய
தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளுநா ளுயர்வதோர் நன்மையைப் பெறுவரே

நகரத்தார்கள் ஆற்றிவரும் சிவப்பணிகளில் சிறப்பிற்குறியது ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சந்திரம். சைவராகப் பிறந்த எல்லோரும் வாழ்நாளில் ஒரு முறையாவது ஸ்ரீ காசி சென்று கங்கையில் நீராடி ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ விசாலாட்சியை தெரிசிக்க கொடுத்துவைத்திருக்க வேண்டும்.

1970 ஆம் ஆண்டு காசி நகரச் சந்திரம் மானேஜிங் சொசைட்டி நிறுவப்பட்ட பொழுது அதன் முதல் தலைவராக இருக்கும் நற்பேறு என் தந்தையாருக்கு ஸ்ரீ விசுவேஸ்வரப் பெருமான் அளித்தார்.

இச்சத்திரத்தின் நிர்வாகத்தில் உள்ள ஸ்ரீ விசாலாட்சி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் 10-11-1999 அன்று நடைபெற்ற போது காஞ்சி சுவாமிகள் வந்திருந்து ஆசி வழங்கினார்கள் என்று கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ந்தேன். கும்பிஷேகத்தை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலர் மணம் பெற்றோங்க வாழ்த்துதும்.

சோம. நாராயணன்

# A brief history of
# The Sri Kasi Nattukkottai Nagara Chatram, Varanasi

'Somalay'

The Nattukkottai Chettiars or Nagarathars are a leading community of bankers and merchants hailing from Tamilnad (Madras State) and doing business all over India and the countries of South East Asia. They are reputed as builders and restorers of the great Temples of South India, which often reach palatial proportions.

**HOLY KASHI**

Kashi or Varanasi is one of the few living cities of the world whose traditions run back to the concept of gods and the divine origin of things.The religious outlook of India might have undergone some modifications through changes over a period of several thousands of years, but the importance of Kashi in the sphere of religion still remians undiminished.

Millions of pilgrims overflowing with religious ferver from all over India come here for a dip in the holy waters of the Ganga and for Darshan of Sri Vishweshwara the presiding deity of the place. Thousands come here every year to take their residence in this holy city after retirement from active life and spend their last days in meditation and renunciation with with a devout faith in obtaining Salvation (Moksha) in the end. Ages since people from the farthest corners of India have come and settled here and have brought with them their culture and traditions. So one can find every part of India represented in the different quarters of the city, and all the important places of pilgrimage represented by different temples with the presiding deities installed therein.

In the Puranas we find location of about 800 temples of different parts of India in Varanasi, of which the important ones can still be identified.

Varanasi has also been the most important centre of learning and culture where the sages and seers from different parts of India congregate in large numbers to learn and to preach their ideas.

From time immemorial Varanasi has been the cosmopolis of India and still continues to be the capital of India's religion and culture.

Varanasi is not only a sacred place for the Hindus but the Buddhists, Jains and the Sikhs also hold it as their sacred place of pilgrimage.

**DAILY PUJAS**

From about 1820, the Nattukkottai Chettiars have been doing rich and lavish Pujas for Lord Viswanath, thrice a day, at 4 a.m., 11.30 a.m. and 9 p.m. Thus, three out of the four main services of the Viswanath Temple are carried out by the Chatram, which is a charitable institution founded for the purpose. These daily services have become so famous that devotees coming for Darshan of Vishwanathji have always made it a point to attend the "ARTI" service particularaly in the evening (the Bada Puja or Artha Jama Puja) which is conducted on behalf of this Chatram.

The abovesaid Trikala Pujas and the service in the Temples of Lord Viswanath and Mateswari Annapoorna have been performed without any break for nearly 150 years now. Even during the Quit India Movement of 1942 and the consequent Curfew imposed in Varanasi, the Nattukkottai Chatram obtained special permission from the District Magistrate of Varanasi to enable its staff to go to the Vishwanath Mandir.

**ABISHEKAMS**

The ARTI is preceded by Abishekams of Milk, Honey, Ghee, Sandal, Rosewater, Perfumed Articles etc., all supplied by the Chatram. The services are done to the accompaniment of Nadhaswaram or South Indian Shenoi, which is a characteristic musical instrument used in the Temples of Tamilnad. For the regular observance of these services, the Chatram has on its payroll a staff of Hindustani Brahmins and others. Silver vessels. decoration articles and valuable ornaments have been donated by the Nattukkottai Chettiars to the Vishwanath Mandir through the Chatram. The articles for preparing the daily food (Bhoj) of the Lord are supplied by the Chatram every day and taken in a procession. The kitchen-hall in the Vishwanath Mandir has been built out of the funds of this Chatram. The Visalakshi Mandir owes its present stately building to the munificience of the Nattukkottai Chettiars; in appreciation of their devotion, His Highness the Maharaja of Kashi gave them a plot of land on which the Visalakshi Mandir has been built.

**FLOWER - GARDEN**

A Flower Garden is maintained by the Chatram on a large scale in order to ensure uninterrupted supply of flowers to the Viswanath Mandir. A Goshala was run for several decadas; since 1941, milk is purchased from milkmen who use the Goshala premises and supply milk promptly and regularly for Abhishekam to the Deity.

**CHATRAM - BAVAN**

The Chatram is housed in an imposing and spacious building constructed in Gudowlia, not far from the Viswanath Temple, in 1863. The house-warming ceremony took place on August 24, 1863; It is the Centenary of this event that is being celebrated now. Feeding of Hindu Sadhus and Swamijis, the Brahmins and the poor - Annadhan - is a regular and important feature of Chatram activiies. Until the outbreak of hostilities with Japan, Annadhan was offered in an extensive manner. Due to the break in communication between India and Burma since 1942, the inflow of funds from Chettiars in Rangon was stopped. After resumption of communications in 1947, various restrictions have been placed on remittance of money from Burma. As a result, Annadhan is done on a moderate but comparatively smaller scale. But, all the other activities of the institution continue undiminished.

Within the precincts of the Chatram is located the Nagareswar Temple, designed on the pattern of temples in Tamilnad. Here, on Karthik day every month, the vigraha of Lord Subramanya is seated in a silver peacock (which, incidentally, is India's National Bird) vahana to give Dharshan to devotees.

**A HOME AWAY FROM HOME**

For ages, Kashi has attracted Hindus from every nook and corner of India and abroad. With the vast increase in transport facilities, thousands of pilgrims from Madras State and Ceylon flock to this Holy City; to them all, the Nattukkottai Chatram is a home away from home and they congregate here in large numbers all the year round. The Chatram has living rooms, kitchen rooms, dining halls, prayer halls, verandahs, quadrangles and rooms for storage of large quantities of Ganges water for Abishek of Lord Viswantah brought regularly from Suddha Ganga at Prayag.

Apart from pilgrims, lodging is given in the Chatram also to Hindu students appearing for Vedic, Hindi and other examinations conducted by the Banaras Hindu University and other Temples of Learning in Varanasi. Some poor students who were fed by the Chatram are now serving in the banares Hindu University in its Sanskrit and Indology Departments as distinguished scholars. The Chatram also acts as the agency of the people of Madras State for performance of various ceremonies like the litting of Moksha Deepa for departed souls and for giving offerings to dead ancestors. Ganga water is sent by the Chatram to various temples in Tamilnad and to individuals both in and out of India.

In view of its vital role in the history of the Viwanath Temple and the fact that so far a sum of fifty lakhs of rupees has been spent by the Chatram authorities in religous charities in Varanasi, the Chatram was appointed as Receiver of the Viswanath Mandir in the nineteen-thirties during which period the Mahants had certain disputes amongst themselves. The Chatram acted as Receiver and managed the affairs of the Mandir for six years at the unanimous request of all the parties to the dispute.

**BRANCH CHATRAMS**

In addition to the chatram at Varanasi, branch Chatrams exist in Ayodhya and Prayag in Uttar Pradesh State , in gaya in Bihar state, in Calcutta, Kalighhat and Tarakeshwar in West Bengal State, in Nasik-Panchawati in Maharashtra State and in Godavari (Rajahmundry) in Andhra Pradesh State. Until the OutBreak of War in the Far East, a Chatram was maintained in Hardwar in a rented building. Thus spread out in five states of the indian union and founded by the people of a sixth state - Tamil Nad, this chatram is an institution of great national importance helping the emotional integration of India.

**MANAGEMENT**

The chatram was managed by the Chettiar buisness houses of the calcutta , in rotation, till 1930. Its management then passed on to the Chettiar business-houses in Rangoon and it is functioning from Rangoon presently. In the war period (1942 - 1947) the management of the Chatram was in the hands of a local committee formed in Karaikudi. The managing society owns properties in Rangoon, Varanasi, Calcutta and other places. Donation and offerings are made by the Chettiar Business house opperating in burma , Malaya , Saigon etc.,. Chettiar pilgrims visiting Varanasi give Mahamai ( contribution given out of free will). Most of these monies are earmarked for specific activities and each of these activities has a capital endowment.

May Lord Kasi Viswanath bless the activites of Nattukottai Nagara Chatram and help its continued service for all time to come. We pray to HIM with folded hands as we fervently believe that this humble institution depends absolutely on HIS unbounded mercy.

* * * * *

Now the chatram is managed by a society in the name of Sri Kasi Nattukottai Nagara Chatram Managing Society , having head office at Karaikudi. The Members of the above Society are being represented by all the Nagarathar Villages.

-----------

- ஆதிசங்கரர் காசியில் சில காலம் தங்கி வேதாந்தம் போதித்தார்.
- பண்டித மதன்மோகன் மாளவியா காசியில் நிறுவிய வாரணாசி இந்து பல்கலைக் கழகம் இன்றும் நன்கு நடைபெற்றுவருகிறது.

  தேசியகவி பாரதியார் இங்குச் சில காலம் படித்தார்.
- காசியில் நகரத்தார் ஸ்ரீவிசுவநாதர் பூஜைக்காக ஏற்படுத்திய நாதசுரம் ஒன்று மட்டுமே வாசிக்கப் பட்டு வருகிறது.

## ஸ்ரீ காசி

சிவத் தலங்களிலெல்லாம் நிகரற்று விளங்கும் காசியம்பதியில் கங்கை கரையிலும் சரி, நகரெங்கிலும் சரி ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் உள்ளன. கண் பார்வை செல்லுமிடமெங்கும் ஒரு சிவலிங்கத்தைக் காணலாம். புதிய சிவன்கோயில் அமைக்க காசியிலிருந்து சிவலிங்கம் வரவழைப்பது மரபு.

இவ்வாறு சிவலிங்க வடிவமாய்த் திகழும் காசியில் கோயில் கொண்டுள்ள விசுவேசர்க்கு தினந்தோறும் நடைபெறும் நான்கு காலப் பூஜைகளில் **மூன்று காலப் பூஜைகளை** செய்யும் பேறுபெற்ற புகழ்மிக்க ஒப்பற்ற நிறுவனம் **காசி நகரச்சத்திரம்.**

காசிமா நகரின் வாழ்விலும் வரலாற்றிலும் இச்சத்திரம் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறது. நகரச்சத்திரம் விசுவேசர் கோயிலுக்கு அருகேயுள்ள குதோலியா சந்திப்பையடுதது அமைந்த கட்டிடமாகும். கல்கத்தாவில் தொழில் செய்துவந்த நகரத்தார்கள் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடத்தை விலைக்கு வாங்கி அதைப் புதுப்பித்து 1863ல் ருத்ரோத்காரி ஆவணி 10ம் தேதியில் **நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்** என்ற பெயரில் தொடங்கினார்கள். அன்று முதல் விசுவேசர், விசாலாட்சி, அன்னபூரணி முதலிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூஜைகள் சிறப்பாகச் செய்யப்பெற்று வருகின்றன.

1863ல் கோஷாயிஅரிதயான்கிரி 1866ல் கிருஷ்ணய்ய சாஸ்திரி 1873ல் ஈரலால் 1874ல் கின்னுகிரி கொசாயி, காந்ததாகிரி கொசாயி, 1877ல் பாபுமியா, 1884ல் பத்திக்கி நாத் கோசுவாமி, 1894ல் விசுவநாதகோசுவாமி, துர்கா பிரசாத் 1895ல் மன்னுப்பட்டு பிராமணர் என்பர்களிடமும் இடங்கள் வாங்கப்பெற்று இவ்வற்றை தக்கவாறு கட்டி பெரியதொரு மாளிகையாக நகரத்தார்கள் அமைந்துள்ளனர்.

விசுவேசருக்கு அபிஷேகம் செய்ய தூய்மையான பால் குறித்த நேரங்களில் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாட்டையும் நகரத்தார்கள் செய்திருந்தார்கள். சொந்தமாகவே பசுமடம் தொடங்கினார்கள். அதற்குரிய இடத்தை நகரச்சத்திரத்திற்கு அருகேயே வாங்கி 15-1-1897ல் கட்டிடம் கட்டி முடித்தனர். இதில் சொந்தமாகப் பசுக்களை வைத்துப் பால் கறந்து அபிஷேகம் நடத்தி வந்தனர்.

காசி விசுவேசருக்கு நாளும் நறுமலர்கள் அனுப்ப நந்தவனம் ஒன்றை நடத்தி வந்தனர். 1894ம் ஆண்டில் சிக்ரா பகுதியில் பெரிய தோர் இடம் வாங்கி நந்தவனம் அமைக்கப்பெற்றது. மீண்டும் 1902லும், 1905லும் புதிதாக இடங்கள் வாங்கி நந்தவனம் விரிவாக்கப்பெற்றது. இது தவிர பசுமடத்துக்காகவும், நந்தவனத்துகாகவும் 8-12-1924ல் காசிநாத பட்டாச்சாரி என்ற வங்காளியிடம் இடம் வாங்கியிருக்கிறார்கள்.

இரங்கூன் நகரத்தார்கள் அந்நகரில் நடத்திய நந்தவனத்துக்குரிய நிதியை 1955ல் காசிநகர சத்திரத்துக்கு கொடுத்து உதவினர்.

இச்சத்திரம் தொடங்கியது முதல் இச்சத்திரத்தின் சார்பாக நடைபெற்றுவரும் மூன்று காலப் பூஜைகளுக்கும், உச்சிக்காலப்பூஜைக்கு ஒரு தடவையும் அர்த்தஜாமத்துக்கு ஒரு தடவையும் ஸ்ரீ காசி விஸ்வேசர் கோவிலுக்கு சத்திரத்து வேலை ஆட்களும் சாதுக்களும்

அபிஷேக ஆராதனைப் பொருள்களை நாதஸ்வர இன்னிசையுடன் **சம்போ சம்போ சங்கர மஹா தேவா** என்று வழிநெடுக சொல்லிக்கொண்டே கோவிலுக்கு கொண்டு செல்வார்கள். அதோடு அன்னபூரணி கோவிலுக்கும் பூஜைப் பொருள்களைக் கொண்டு செல்வார்கள். விசுவேசர் கோவிலுக்கு அர்த்தஜாமப் பூஜைப் பொருள்கள் கொண்டுபோகும் போது மறுநாள் அதிகாலையில் நடக்கும் உசத் காலைப்பூஜைக்குரிய பொருள்களையும் சேர்த்துக் கொண்டு போய்க் கொடுப்பார்கள். பொதுமக்கள் கடைக்காரர்கள் ஆகியோர் சம்போவைப் பார்த்து இன்றும் வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அன்னபூரணி கோவிலுக்கு ஒரு காலப் பூஜைக்குரிய பொருள்களும் ஒருகாலத்துக்கு அபிஷேகத்துக்கு பால் மட்டும் கொடுத்து வந்தோம். தற்போது கோயில் மகந்துகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க இரண்டு காலத்துக்குரிய பூஜைப்பொருள்கள் அனைத்தும் அனுப்பிவைக்கிறோம்.

சம்போ என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கும் சிவபெருமானுக்குரிய பூஜைப் பொருள்களைகளைக் கொண்டு செல்வதை அங்குள்ள மக்கள் 'சம்போ' என்று அழைக்கிறார்கள்.

நாள்தோறும் இச்சத்திரத்திலிருந்து அனுப்பப்பெறும் பொருள்களைக் கொண்டு கோவிலிலேயே நைவேத்தியம் தயார் செய்ய வேண்டும் என்பதற்காக கோவிலுக்குள்ளே மடப்பள்ளியை நகரத்தார்கள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீவிசுவேசர் கோவிலில் உள்ள கோபுரத்தில் மெர்க்குரி லைட்டுப்போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளி அறைக்கு வெள்ளிக்கட்டில், நைவேத்தியம் வைப்பதற்கு உள்ள நாற்காலிகள், முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். நைவேத்தியத்துக்கும் தீபத்துக்கும் வேண்டிய பொருள்கள் யாவும் ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு அனுப்பபெறுகின்றன. அபிஷேகத்திற்கு கங்கை நீர்வைப்பதற்கு 5 தாமிர அண்டாக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

காசி விசுவநாதர் கோவிலுக்கு ஒரு நாள்கூட சம்போ போவதில் தடை ஏற்பட்டது கிடையாது. 1942ம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் நடைபெற்ற காசிமாநகரில் கலகங்கள் நிகழ்ந்தன. ஊரடங்குச் சட்டம் போடப்பெற்றது. அப்போதும் கூட விதிவிலக்குப் பெற்று சம்போ உரியநேரத்தில் சென்று வந்தது. தற்போதும் அதேபோல அரசு நமக்கு ஊரடங்குச் சட்டம் இருக்கும் போது விதிவிலக்கு அளிக்கிறது.

## குளிர்காலச்சட்டை

ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசிமாதம் சிவராத்திவரை குளிர் காலச்சட்டை (மக்-மல்பட்டு) நம் சத்திரத்திலிருந்து விசுவேசருக்கு அணிவிக்கப்பெறுகிறது.

காலை 10.45 மணிக்கும் இரவு 8.30 மணிக்கும் பூஜைப்பொருள்கள் காசி விசுவநாதர் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இன்றைய விலைவாசி ஏற்றத்தையும் கூட பொருட்படுத்தாது தினமும் ஸ்ரீவிசுவேசர் கோவிலுக்கு அனுப்பிவரும் சம்போ ஆராதனைப்பொருள்களின் அளவுகளை அதிகப் படுத்தி நம் முன்னோர்களால் ஆரம்பிக்கப்பெற்ற இத்தருமச்செயலை மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்திவருகிறோம்.

## நகரேஸ்வரர் கோவில்

சத்திரத்துக்குள்ளேயே இருக்கிறது. இந்தக்கோவிலில் உள்ள சிவபெருமானுக்கு **நகரேஸ்வரர்** என்றும், இறைவிக்கு **நகரேஸ்வரி** என்றும் பெயர். நகரேஸ்வரர் கோயிலின் வெளிவாசலுக்கு வெளியே மேற்குப்பகுதியில் கிழக்குப்பார்த்த முகமாக ஒரு விநாயகர் திருவுருவம் இருக்கிறது. நகரேசுவரருக்கு திருவாட்சி உண்டு. இது கல்கத்தா தண்டாயுதபாணி கோவிலிலிருந்து கொண்டு வரப்பெற்றது. நகரேசுவரருக்கு எதிரில் நந்தியும் கருவறையின் வாயிலில் பிள்ளையார் தண்டாயுதபாணி திருவுருவங்களும் அமைந்துள்ளன. சுற்றுப்பிரகாரத்தில் கருவறை மதிலில் தட்சிணாமூர்த்தி அண்ணாமலையார், பிரம்மா, திருவுருவங்களும், பிரம்மாவுக்கு எதிரில் சண்டிகேசுவரர் திருவுருவங்களும் காணப்பெருகின்றன. கருவறை மதிலுக்கு எதிரில் சுற்றுப்பிரகாரத்தில் நந்தியுடன் கூடிய 48 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கின்றன. தென்மேற்கு மூலையில் விநாயகரும் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியரும் காட்சி கொடுக்கின்றனர். இரண்டு வேல், இடும்பன் ஆகியவையும் இருக்கின்றன. கல்கத்தா சின்ன வீட்டுக்காரர்களால் இவை கொண்டு வரப்பெற்றன. சுற்றுப் பிரகாரத்தில் வட பகுதியில் நகரேஸ்வரிக்கு உட்கோயில் இருக்கிறது. வடகிழக்கு மூலையில் வைரவர் விக்கிரகம் இருக்கிறது. இக்கோயிலில் தினசரிப் பூஜைகளோடு சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை, விசாகம், சஷ்டி உற்சவங்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. 11.2.1962ல் மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோவிலைப் புதுப்பித்து 29.10.1978லிலும் 7.11.1994லும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

## பாதாள ஈஸ்வரர் கோவில்

சத்திரத்துக்குள்ளேயே இருக்கிறது.

இக்கோயிலில் 4 சிவலிங்கமும் ஒரு நந்தியும் ஒரு பாவைவிளக்கும் உள்ளன.

சத்திரத்தின் ஒரு பகுதி நகரத்தார்கள் விலைக்கு வாங்குமுன் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடமாக இருந்தது. அந்த மடத்தில் பெருமதிப்பிற்குரிய துறவி ஒருவர் சமாதி அடைந்தனர். அவ்விடத்தில் லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றன. இந்த லிங்கங்களுக்கு 'பாதாள ஈஸ்வரர்' என்ற பெயர் நிலவிவருகிறது. பாதாள ஈஸ்வரரின் பெருமையே நகரச்சத்திரம் அடைந்துள்ள பெரு முன்னேற்றத்திற்கு காரணம் என்று நகரத்தார்கள் நம்புகிறார்கள். காசி யாத்திரை மேற்கொள்வோர்அறிந்தோ அறியாமலோ செய்திருக்கக்கூடிய தவறான செயல்களுக்குப் பிராயச்சித்தமாக காசியை விட்டுப் புறப்படு முன் பாதாள ஈஸ்வரருக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். பலர் சேர்ந்து கூட்டாகவும் அபிஷேகம் செய்யலாம். தினசரி பூஜையோடு ஒவ்வொரு திங்கட்கிழமையும் வெகு சிறப்பாக அபிஷேகம் செய்யப்படுகிறது. அவர்கள் விரும்பும் தொகையை சத்திரத்தில் கொடுத்தால் அதை திங்கட்கிழமை நடைபெறும் பூஜைக்கு பயன்படுத்துவார்கள்.

## அன்னபூரணி கோயில்

சத்திரத்தில் அன்னம் பாலிக்கும் மண்டபத்தில் கருங்கல் திருவுருவம் நிறுவப்பெற்றிருக்கிறது. தினசரி பூஜையும் நடைபெறுகிறது.

மானேஜர் பெட்டியடிக்கு அருகே சுப்பிரமணியர், நடராஜர், பரமசிவன் பார்வதி. ஸ்ரீ காசி விஸ்வநாதர் படங்கள் உள்ளன. நடராஜர் சிவகாமி அம்மன் மாணிக்க வாசகர் திருவுருவங்களும் உள்ளன. நகரேஸ்வரர் கோயில் பூஜை நடைபெறும் போது மேற்கண்ட திருவுருவங்களுக்கும் படங்களுக்கும் பூஜை நடைபெறுகிறது.

தீபாவளிக்கு முதல் நாளும் தீபாவளி அன்றும் தீபாவளிக்கு மறுநாளும் ஆக மூன்று நாட்களில் நகரேஸ்வரர் கோயிலில் **தங்க விசாலாட்சி** அம்மனை வைத்து பூஜை செய்யப்பெறுகிறது. மூன்று நாட்களும் அம்மனைத் தரிசிக்க பெரும் கூட்டம் வருகிறது. தீபாவளி அன்று இரவில் சத்திரத்தில் உள்ள அன்னபூரணி ஹாலில் திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. 108 நகரத்தார் பெண்கள் கலந்துகொள்கிறார்கள். தீபாவளி அன்று காலையில் நம் சத்திர அலுவலகத்தில் மஞ்சள் உப்பு கற்கண்டு சர்க்கரை மற்றும் பல மங்கலப்பொருள்கள் ஏலம் நடைபெறுகிறது. நகரத்தார்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

## அன்னம்பாலிப்பு

தீபாவளிக்கு முதல் நாள் இரவு பலகாரமும் தீபாவளி அன்று காலைப் பலகாரம். மதிய உணவு, இரவு பலகாரமும் தீபாவளிக்கு வரும் அனைவருக்கும் வழங்கப்பெறுகிறது. நான்கு வேளைகளுக்கும், உபயதார்கள் தரும் தொகைக்கு மேல் ஆகும் செலவை சத்திரமே ஏற்றுக் கொள்கிறது.

9.2.1970ல் 76 ஊர் நகரத்தார்கள் நிர்வாகத்தை ஒப்புக் கொண்டபின் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன. ஸ்ரீ வில்வேஸ்வரர் கோவிலில் நாம் கட்டிக் கொடுத்திருக்கும் மடப்பள்ளியை மறாமத்துச் செய்திருக்கிறது. நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று கீழ்க்கண்ட பணிகள் செய்திருக்கிறது.

1. நகரேஸ்வரர் சன்னிதானத்தில் ஸ்பிரிங்கேட் போட்டிருக்கிறது
2. நகரேஸ்வரி சன்னிதானத்தில் இரும்பு கேட் போட்டிருக்கிறது.
3. மேல் வீட்டில் புதிதாய் குளியல் அறையும் கழிவறையும் கட்டியிருக்கிறது.
4. நகரேஸ்வரர் கோவிலுக்கு அருகில் பசுமடம் கட்டியிருக்கிறது.
5. மரப்பெருச்சாளி வாகனம் செய்யப் பெற்றிருக்கிறது.
6. நகரேஸ்வரர் முன்புள்ள வரசித்தி விநாயகருக்கு வெள்ளி அங்கி செய்யப் பெற்றிருக்கிறது.
7. குளியல் அறை கழிவறை வசதியுடன் கூடிய 5 புதிய தங்கும் அறைகள் கட்டியிருக்கிறது.

சத்திரம் 1863ம் வருடம் கட்டப் பெற்றதால் அடிக்கடி எங்காவது பழுது ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

அதனால் 1983க்குப் பின் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன.

சத்திரத்தின் பின்பகுதி சுவர், தார்சு பூறாவும் வெடிவு ஏற்பட்டும் அதை ஒட்டி முன்புறம் உள்ள ரூம்கள் அனைத்திலும் வெடிவுகள் ஏற்பட்டும் விட்டது. நம் பகுதியிலிருந்து நல்ல அனுபவமுள்ள வேலைஆட்களை அனுப்பி பின்பக்கச் சுவர், தார்சு, முன்பக்கமுள்ள ரூம்கள் அனைத்தையும் சீர்செய்யப்பெற்றது.

அதே மாதிரி சத்திரத்தின் முன்பக்கம் உள்ள சுவர்களில் வெடிவுகள் ஏற்பட்டு நீண்ட காலமாக சீர் செய்ய முடியாமல் இருந்தது. சுவரை ஒட்டி ஏராளமான எலெக்ரிக் ஒயர்கள் செல்வதால் சுவற்றில் வேலை செய்ய யாரும் முன்வரவில்லை. இறைவன் அருளால் எந்த ஆபத்தும் இல்லாமல் சுவரை சீர் செய்து பெயிண்டும் அடித்து விட்டோம். தற்போது கட்டிடத்தின் முன்பக்கம் பார்க்க ரொம்ப அழகாக இருக்கிறது. நமது அலுவலகத்துக்கு மேல்மாடியில் புழக்கத்தில் இல்லாமல் பெரிதும் பழுதுபட்டிருந்த 5 தங்கும் அறைகளையும் மராமத்துச் செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அந்த மாடியிலேயே 5 ரூம்களில் தங்குபவர்கள் உபயோகத்துக்கு ஒரு குளியலறையும், கழிவறையும் புதிதாய் கட்டியிருக்கிறது. நம் சத்திரத்தின் நடைபாதையிலும் நகரேஸ்வரர் கோவில் அருகேயும் உள்ள வாரத்திலும் மரக்கைகள் பெரிதும் பழுதடைந்து விட்டன. மரக்கைகள் அனைத்தையும் மாற்றி வாரம் பூறாவும் சீர் செய்திருக்கிறது சத்திரம் பூறாவும் எலெக்ட்ரிக் ஒயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய ஒயரிங் செய்யப்பெற்றுள்ளது.

## ஸ்ரீ காசி

**நந்தவனம் :-** நந்தவனத்தில் பல இடங்கிளில் சுவர்கள் இடிந்துவிட்டதால் அவைகளை அகற்றி விட்டு புதிதாக உயரமான சுவர்கள் கட்டப்பெற்றது. நமக்குச் சொந்தமான சிக்ரா லாட்ஜ்க்கும் நந்தவனத்துக்கும் இடையில் சிறிய கட்டைச்சுவர் இருந்தது. அதனால் சிக்ரா லாட்ஜ்வில் குடி இருப்பவர்கள் நந்தவனத்துக்குள் நுழைந்து தொந்திரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். அதனால் அந்த சுவரையும் நாம் புதிதாகக் கட்டிய சுவர் உயரத்துக்கு உயர்த்திக் கட்டியிருக்கிறது.

## பாதாள ஈஸ்வரர் கோயில்

கோவில் பூறாவும் சுவர்களை கொத்திவிட்டு புதிதாக சிமிண்ட் போட்டு சீலிங் புதிதாகப் போட்டு மூலஸ்தானத்தில் 3 அடி உயரத்துக்கு மார்பிள் பதித்து சுவர்களுக்கு டிஸ்டெம்பர் அடித்திருக்கிறது.

இரவில் யாத்ரீகர்கள் வந்தவுடன் சத்திரத்தின் முன் கதவு திறந்ததும் நேராக கோயில் வரை வந்து விடுவார்கள். இரயில்கள் பெரும்பாலும் அகாலத்தில் வருவதால் இரவில் 2 மணி 3 மணிக்குக் கூட யாத்ரீகர்கள் வருகிறார்கள். ஊர் நிலைமை அங்கு சரி இல்லாததால் சத்திரத்திற்கும் அங்கு பணியாற்றும் அலுவலர்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக நடைபாதையில் திண்ணைக்குப் பக்கத்தில் ஒரு கிரில் கேட்டுப் பொறுத்தி அந்த இடத்தில் காலிங் பெல்லும் வைத்திருக்கிறோம். வருகிறவர்கள் மணியை அடித்தால் மேல் வீட்டில் ஆபீசுக்குப் பக்கத்தில் படுத்திருப்பவர்களுக்கு கேட்கும்படியாக மணியை வைத்திருக்கிறோம். உள்ளே இருந்தவாரே வெளியில் இருக்கிரவர்களை விசாரித்து தெரிந்து கொண்டு தற்போது அனுமதிக்கிறார்கள்.

சத்திர அலுவலகத்தின் அருகே பெரிதும் பழுதடைந்திருந்த மூன்று சிறிய அறைகளை சீர் செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது.

ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் கோவிலுக்கு நகரத்தார்கள் பசுமடம் சந்து வழியாக போய் வருவார்கள் அந்தப் பாதை பொது நடைபாதையாக இருந்து வந்தது. அந்தப் பாதை நீண்டகாலமாக அசுத்தமாக இருந்ததால் அதை சீரமைப்பு செய்து நாம் மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ளும் வகையில் வெளியே இரும்பு கேட்டும் போட்டிருக்கிறது.

சத்திரத்தில் உள்ள கிணற்றை கூடுதல் ஆழம் செய்து புதிய மோட்டார் பொருத்தி இருக்கிறது. அன்னபூரணி ஹாலில் சாப்பிட வருபவர்கள் கைகழுவ மூன்று தண்ணீர் பைப்பு குழாய்கள் பொருத்தி அதற்கு தொட்டியும் கட்டியிருக்கிறது. பசுமடம் மறாமத்து செய்து சிமிண்ட் தரை போட்டிருக்கிறது.

சத்திரம் யாத்திரைக்கட்டு மேல் வீட்டிலிருந்து நேரடியாக நமது அலுவலகத்துக்கும் சாப்பாட்டு ஹாலுக்கும் வரத் தோதாக பாதை அமைத்திருக்கிறது. மேல் வீட்டில் சாப்பாட்டு ஹாலில் சாப்பிட்டு விட்டு கைகழுவ தண்ணீர் குழாய்கள் பொருத்தி இருக்கிறது.

அன்னபூரணி ஹாலில் உள்ள மர உத்திரங்கள் பழுதாகிக் கொண்டு வருவதால் அதன் பக்கத்தில் இரும்பு கர்டர்கள் பொருத்தியிருக்கிறது. யாத்திரைக் கட்டின் கீழ்ப்பகுதியில் புதிதாக இரண்டு குளியல் அறைகளும், ஒரு கழிவறையும் கட்டியிருக்கிறது. சம்போ சுவாமிகள் ரூம்மிற்கு அருகேயும், குளியல் அறைகள் கட்டியிருக்கிறது. பொது கழிவறைகளுக்கு ஏற்கனவே தொட்டியிலிருந்து தண்ணீர் எடுத்தார்கள். தற்போது எல்லாக் கழிவறைகளுக்கும் தண்ணீர்க் குழாய் பொறுத்தியிருக்கிறது.

சத்திரத்தில் எட்டு இடங்களில் ஸ்பீக்கர்கள் பொருத்தி இருக்கிறது. அங்கு வரும் யாத்ரீகர்களுக்கு ஊரிலிருந்து தொலைபேசி அழைப்புகள் வருவதால் நமது அலுவலகத்திலிருந்தே அவர்களை மைக்கில் கூப்பிட்டு அவர்கள் பேச ஏற்பாடு செய்திருக்கிறோம். மேல் வீட்டில் நீண்ட காலமாக உபயோகத்தில் இல்லாதிருந்த ஹால் ஒன்றில் புதிதாய் சிமிண்ட் தரை போட்டு சுவற்றில் உள்ள வெடிவுகளை சீர்செய்து டிஸ்டெம்பர் அடித்து கதவுகளுக்கு வர்ணம் வைத்து மின் விசிறிகள் பொருத்தி உபயோகத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அது யாத்ரீகர்களுக்கு பெரிதும் உபயோகமாக இருக்கிறது.

கட்டிடம் பூறாவும் தார்சில் வெடிவு இருந்தவைகளை சீர் செய்திருக்கிறது. அன்னபூரணி ஹால், அய்யர் ஹால் மறாமத்து செய்யப் பெற்று இரண்டு ஹால்களிலும் மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கிறது. சத்திரத்துக்கு உள்ளே நுழையும் இடத்தில் மர உத்திரங்கள் பழுதடைந்து விட்டதால் அதற்குப்பதில் இரும்பு கர்டர்கள் பொருத்தியிருக்கிறது.

சத்திரத்தில் எல்லா இடங்களிலும் மின் விசிறிகள் பொருத்தியிருக்கிறது. சில ரூம்களில் ஏர் கூலர் பொருத்தி இருக்கிறது.

அய்யர் ஹாலில் ஏற்கனவே இருந்த பழைய அறையை சீரமைப்பு செய்து நகரேஸ்வரர் கோவில் குருக்கள் தங்க கொடுத்திருக்கிறது.

நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று எட்டு சாதா அறைகளும், குளியல் அறை, கழிவறை வசதியுடன் கூடிய நான்கு அறைகளும் கட்டியிருக்கிறது.

நகரத்தார்கள் நன்கொடையாக கீழ்கண்ட பொருள்களை கொடுத்திருக்கிறார்கள்.

1. கிரைண்டர்கள்.
2. மின் விசிறிகள்
3. தண்ணீர் சுடவைக்க ஹீட்டர்கள்
4. ரெப்ரிஜிரேட்டர்
5. தண்ணீர் மோட்டார்கள்
6. 6KV ஜெனரேட்டர் ஒன்று
7. 10KV ஜெனரேட்டர் ஒன்று
8. 25KV ஜெனரேட்டர் ஒன்று
9. எரிவாய்வு அடுப்புகளும், சிலிண்டர்களும்

**இங்கு வழிபட வேண்டிய முக்கிய கோயில்கள்**

1. ஸ்ரீ காசி விஸ்வனாதர் கோவில்
2. ஸ்ரீ அன்னபூரணி கோவில்
3. ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவில்
4. ஸ்ரீ காலபரைவர் கோவில்

**இங்குள்ள 64 கட்டங்களில் முக்கியமாக நீராடக்கூடிய கட்டங்கள்**

1. அசி கட்டம்
2. கேதார கட்டம்
3. தசாசுவமேதக் கட்டம்
4. மணிகர்னிகா கட்டம்
5. பஞ்ச கங்கை கட்டம்

**இங்கு முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள்**

1. சாரநாத்
2. ராம் நகர் (கோட்டை)
3. பிர்லாமந்திர்
4. சங்கட் மோட்சன்
5. துளசி மனாஸ்மந்திர்
6. துர்கா மந்திர்

இச் சத்திரம் கீழ்க் கண்ட உதவிகளைச் செய்து வருகிறது. அதற்கு சத்திரத்தோடு கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு அதற்கான செலவு துகையைக் கேட்டு அதற்கு சத்திரத்தின் பெயரால் டிராப்ட் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

1. குறிப்பிட்ட நாளில் ஸ்ரீ காசி விசுவேசுவருக்கு அபிஷேக ஆராதனை செய்ய விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி அபிஷேக ஆராதனை செய்து விபூதி பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

2. குறிப்பிட்ட நாளில் அன்னதானம் வழங்க விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி அன்னதானம் வழங்கப்படும்.

3. யாத்ரீகர்கள் தங்க நல்ல இட வசதியும் செட்டிநாட்டிலிருந்து நல்ல சமையல்க்காரர்களைக் கொண்டு சுவையான உணவும் வழங்கப்படுகிறது.

4. அறுபதாம் ஆண்டு விழா வைதீக முறைப்படி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

5. கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் வேண்டுமென்பவர்கள் ஸ்ரீ காசிச் சத்திரத்தோடு தொடர்பு கொண்டு அதற்கான செலவு தொகையை அனுப்பி வைத்தால் அவர்கள் பிரயாகை சத்திரத்திலிருந்து கங்கை அனுப்ப ஏற்பாடு செய்வார்கள்.

6. காசிக்கு அஸ்தி அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அஸ்தியை சிறிய டின்னுக்குள் வைத்து மேலே துணி போட்டு தைத்து அதில் காப்பியிங் பென்சிலினால் அனுப்புகிரவர்கள் பெயரையும் கீழ்க்கண்ட விலாசத்தையும் ஆங்கிலத்தில் எழுதி ரிஜிஸ்தர் பார்சலில் அனுப்ப வேண்டுகிறோம்.

அஸ்தி கரைக்க ரூ. 100/-க்கு மணி ஆர்டர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம் அல்லது ரூ. 100/க்கு **SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM** என்ற பெயருக்கு டிராப்ட் எடுத்து விபரமாக கடிதம் எழுதி கீழ்க்கண்ட முகவ்ரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் போய் அஸ்தியை கரைக்க விரும்பினால் நேரில் வருவதாகவும், அஸ்தியை வைத்து வைக்கும் படியும் எழுத வேண்டுகிறோம். நேரில் போகா விட்டால் அஸ்தியை கரைத்து விபூதி பிரசாதம் அனுப்பி வைக்க வேண்டியது என்றும் விபூதி பிரசாதம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரியையும் எழுத வேண்டுகிறோம்.

பொதுக்குழு தீர்மானப்படி அஸ்தி வந்த ஒரு வருடம் வரைதான் காசியில் வைத்து வைப்பார்கள். ஆகவே நேரில் போய் கரைக்க விரும்புகிறவர்கள் அஸ்தி அனுப்பி ஒரு வருடத்துக்குள் போய் கரைக்க வேண்டுகிறோம்.

மோட்சதீபம் போட விரும்புவர்கள் தொலைபேசி எண் 542/321012ல் யார் பெயருக்கு மோட்ச தீபம் போட வேண்டுமென்று விபரம் சொன்னால் காசியில் சத்திரத்திலிருந்து அதற்கான ஏற்பாட்டை உடனே செய்வார்கள். அதற்கு ரூ. 100/- **SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM** என்ற பெயருக்கு டிராப்ட் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.


சத்திர முகவரி

**SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM**

**GODHOWLIA, VARANASI - 221 001 (UP)**

**PHONE : 0542 - 321012**

1. தற்போது திரிபேஸ் கரண்டுக்கு அனுமதி வாங்கி சத்திரம் முழுவதும் பெரும் பொருட்செலவில் புதிய ஒயரிங் செய்யப்பெற்றுள்ளது.

2. மேல் வீட்டில் இரண்டு ரூம்கள் கட்டியிருக்கிறது.

3. எரி வாய்வு அடுப்புகளும், சிலிண்டர்களும் வைத்திருக்கிறது.

4. புதிதாக சமையற்கூடம் ஒன்று கட்டி, பழைய சமையற்கட்டையும் போஜன ஹாலாக மாற்றி பளிங்கு கற்கள் பதித்திருக்கிறது.

5. மேல் வீட்டுக்குப் போக ஏற்கனவே இருந்த படிக்கட்டுக்குப் போக மேலே சுலபமாக ஏறுகிறாற்ப் போல் புதிய படிக்கட்டு அமைத்திருக்கிறது. நமது சத்திர அலுவலக உபயோகத்துக்கு போக யாத்ரீகர் உபயோகத்துக்கு குளியல் அறை, கழிவறை வசதியுடன் கூடிய அறைகள் 9ம் சாதா அறைகள் 26ம் சாமான்கள் வைத்துக்கொள்ள லாக்கர்கள் 24ம் இருக்கின்றன. யாத்ரீகர்கள் தங்க பெரிய கூடங்கள் 2ம் சிறிய கூடம் ஒன்றும் யாத்திரைக் கட்டும் இருக்கின்றன.

வாரணாசி இரயிலை விட்டு இரங்கியவுடன் **நாட்கோட் சத்திரம் கொதவுலியா** என்று சொன்னால் ரிக்சாக்காரர்கள், ஆட்டோக்காரர்கள், டாக்சிக்காரர்கள் நமது சத்திரத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள்.

## ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவில்

காசித் திருத்தலம் தன்னகத்தே எழுந்தருளியுள்ள விசாலாட்சியும் விசுவேசுவரரும் வந்தடுத்த எல்லா உயிர்களையும் பக்குவப்படுத்தி முத்திப் பேற்றை வழங்குவதால் மூர்த்திச் சிறப்பும் எந்த உயிர்க்கும் எம தண்டனையின்மை முதலிய பெருமைகளைக் கொண்டுள்ளதால் தலச்சிறப்பும் கண் கூடாகி அறிகின்ற நிலையில் கடவுள் தன்மைகளைப் புலப்படுத்தும் கீர்த்திகளையுடைய கங்கையாறு பாய்வதால் தீர்த்தச் சிறப்பும் ஒருங்கே பெற்றுத் திகழ்கின்றது.

ஒப்புயர்வற்றதாகவும் ஒளிர்கின்ற இக்காசித் திருத்தலத்தில் ஸ்ரீகாசி விஸ்வேஸ்வரர் விசாலாட்சி, அன்னபூரணி கோயில்களில் நடைபெறும் தினசரி பூஜைகளுக்கு அபிஷேக ஆராதனை நைவேத்தியப் பொருள்கள் அனுப்பும் பேறு மகுடதன வைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு கிடைத்திருக்கிறது.

காசியில் விசாலாட்சி அம்மன் கோவில் விசாலாட்சி கட்டம் என இப்போது வழங்கும் பகுதியில் கங்கைக்கரையருகே குறுகிய தெரு வொன்றில் உள்ளது. முன்னாளில் இப்பகுதி மீர்காட் என்ற பெயரில் வழங்கிவந்ததாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மிகச்சிறிய அளவில் கட்டப் பெற்றிருந்த ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவிலையும் அதன் பூஜா உரிமைகளையும் காசி பிராமணர்களாகிய பண்டாக்களிடமிருந்து எழுத்து மூலமாகப் பெற்றனர். அதன்பின் அந்தக் கோவிலைப் புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்யவும் விரும்பினர். எனவே 1890 அளவில் அக்கோவிலருகே காசி மஹாராஜா அவர்களுக்கு

சொந்தமான இடத்தையும் அவரிடமிருந்து கோவிலுக்கு தரும சாஸனமாக பெற்றுத் திருப்பணி வேலையைத் தொடங்கினர். 1893ல் கோவில் கட்டி முடிக்கப்பெற்று பூஜைகள் தமிழ் நாட்டு முறைப்படி தொடங்கப் பெற்றன. மேற்படி கோயிலில் பூஜை செய்த பண்டாக்கள் இருந்த வீடுகளை கல்கத்தாவில் தொழில் செய்துவந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் விலைக்கு வாங்கி பத்திரம் பதிந்துள்ளனர். அவற்றில் அவர்கள் தொடர்ந்து குடி இருந்துவரவும் இசைவு வழங்கி உள்ளனர். **திருவுருவங்கள்** :- மூலவராகிய பழைய விசாலாட்சி அம்மன், புதிய விசாலாட்சி அம்மன், உற்சவ விசாலாட்சி அம்மன், விநாயகர், லிங்கம், நந்தி, பாலதண்டாயுதபாணி சண்டிகேசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய திருவுருவங்களும் இக்கோவிலில் வைத்து வழிபடப் பெறுகின்றன. 7.2.1908ல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. 9.2.1970ல் 76 ஊர் நகரத்தார்கள் நிர்வாகம் ஒப்புக்கொண்டதும் 1971ல் புதிய விசாலாட்சி அம்மன் திருவுருவம் பொன்னாச்சியில் புதிதாகச் செய்யப்பெற்றது. தேவகோட்டை ப.ராம.செ.ராம. இராநாதன் செட்டியாரவர்கள் சொந்தச் செலவில் சிலை செய்து கொடுத்ததோடு காசியில் கொண்டு வந்து சேர்க்கும் செலவையும் பொறுப்பையும் அவர்களே ஏற்றார்கள்.

கோயிலைப் புதுப்பித்து புதிய விசாலாட்சி அம்மன் சிலையை பிரதிஷ்டை செய்து 1-11-1971ல் குடமுழுக்கு விழா நடத்தப்பெற்றது. இவ்வுருவத்துக்கு வெள்ளி அங்கி காரைக்குடி சிப.சித. உமையாள் ஆச்சி அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பெற்றது.

மீண்டும் கோயிலைப் புதுப்பித்து 22.11.1985ல் குடமுழுக்கு விழா நடத்தப்பெற்றது. தற்போது கோவிலைப் புதுப்பித்து 10.11.1999ல் குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

எங்கும் நிறைந்து பெருங்கருணை பொழிந்து அனைத்து உயிர்களையும் காக்கும் அன்னை விசாலாட்சியின் கனிந்த அருட்பார்வையில் நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள் எல்லா நலமும் பெற்று சீரும் சிறப்பும் அடைவார்களாக.

## வழித்துணை வருவான்

காட்டையும், காடு சார்ந்த பகுதியையும் பழந்தமிழர்கள் முல்லை நிலம் என்று பிரித்தார்கள். இந்த முல்லையை அடுத்த மலைப் பகுதிகள் குறிஞ்சி நிலம் என்று பிரிக்கப்பெற்றன. குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனாக முருகப் பெருமானைக் கூறுகிறோம். பிற்காலத்தில் சுப்பிரமணியர் வழிபாடு பரவுவதற்கு முன்னமேயே முருகன் வழிபாடும் சிறப்பாக வேல் வழிபாடும் பழந்தமிழ் நாட்டில் விளங்கி வந்திருக்கக் காண்கிறோம். முல்லை, குறிஞ்சி ஆகிய இரு நிலங்களையும் பெற்றுள்ள செட்டிநாடு வாழ் மக்கள் முருகன் வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பழைய பாய்மரக் கப்பற் காலத்தில், கப்பல் ஏறும்பொழுது, திருத்தணி முருகன் வழித்துணை வருவான் என்று சொல்லிச் செல்கின்ற மரபு இருந்து வந்தது. வேல் வழிபாட்டினை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நகரத்தார் பெருமக்கள் தாங்கள் சென்று வாணிகம் செய்த பகுதிகளிலெல்லாம் முருகனுக்குக் கோயில் எடுத்திருக்கிறார்கள். சிறப்பாக, இலங்கை, மலாய் நாடு, பர்மா ஆகிய பகுதிகளில் முருகனுக்குத் திருக்கோயில் எடுத்து வேல் வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். கடல் கடந்து சென்று வாழ்வு சிறக்க வழி தேடிய இவர்கள் வாழ்வின் குறிக்கோளாகிய வழிபாட்டை மறவாமல் போற்றினார்கள் என்பதற்குத் தமிழ் வழங்காத இப்பிற நிலங்களில் இன்றும் நிலைபெற்றிருக்கும் இத் திருக்கோயில்கள் தக்க எடுத்துக்காட்டுக்களாகும். இப்பகுதிகளில் எல்லாம் சென்று பிற மொழி பேசும் மக்களோடு பழகுகின்ற காலத்திலுங்கூட, அங்கங்கே உள்ள இத் திருக்கோயில்கள் என்னைக் கவர்ந்ததோடு, பிற செயல்களினால் இறை வழிபாட்டை மறந்திருந்த என்னை, முருகன் மறவாதிருக்கச் செய்த செயல் இன்றும் என் நெஞ்சைவிட்டு நீங்காது நிற்கின்றது. அங்கனம் முருகனை நினைக்குமாறு இவர்கள் செய்த திருப்பணி என்றும் வாழ்வதாக.

அ.ச. ஞானசம்பந்தன், செயலாளர், தமிழ் வெளியீட்டுக் கழகம், கோட்டை, சென்னை-9.

## பிரயாகை

அலஹாபாத்தில் இரயில் சந்திப்பிலிருந்து 6 கீ.மீ. தொலைவிலும் அலஹாபாத் சிட்டிக்கும் காசிக்கும் இடையே செல்லும் (மீட்டர்கேஜ்) தாராகஞ்ச் இரயில் நிலையத்திற்கு சமீபத்திலும் தாராகஞ்சு மோரியில் நகரச்சத்திரம் கட்டப்பெற்றிருக்கிறது. கங்கை யமுனை சரசுவதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடும் திருவேணி சங்கமத்துக்கு அண்மையில் இருப்பதால் இந்த இடத்தில் சத்திரம் கட்ட கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் முடிவு செய்தனர். அதன் பயனாக சத்திரம் 22.7.1891ல் துவங்கப் பெற்றது. 1891, 1901, 1913 ஆகிய வருடங்களில் மூன்று வீடுகளும் அதனைச்சார்ந்த இடங்களும் ரூ. 5,825க்கு வாங்கப்பெற்றன. அதில் இரண்டு வீடுகளில் வேண்டிய மாற்றங்கள் செய்து கட்டப்பெற்றன. ஒரு வீடு மாத்திரம் 1960ல் ரூ. 5,000த்துக்கு விற்கப்பெற்றது. சத்திரத்தில் யாத்ரிகர்கள் தங்க சத்திரம், யாத்திரைக்கட்டு, ஆகிய இரண்டு கட்டுகள் இருக்கின்றன. சத்திரத்தைச் சேர்ந்த வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன.

இச் சத்திரத்துக்கு விகாரி ஆண்டு தைத்திங்கள் முதல் தேதி இரங்கோன் நகரத்தார்களால் வழங்கப்பெற்ற நடராஜர், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் விக்கிரகங்கள் காசி சத்திரத்தில் இருக்கின்றன.

பல வேறு நிலையிலுள்ள மக்களும் கங்கையில் நீராட வருகிறார்கள். அவ்வாறு வர இயலாதவர்களுக்கு ஏனையோர் கங்கை நீரைக் குடங்களிலும், செம்புகளிலும் எடுத்துச் செல்கின்றனர். மரணத்தின் எல்லையிலும் மனிதனின் கண்ணிமைகளிலும் நாவிலும் ஒரு துளி கங்கை நீரை ஊற்றும் வழக்கம் பல பகுதிகளிலும் உண்டு.

சத்திரமும் அதனைச்சார்ந்த யாத்திரைக்கட்டும் நீண்ட காலமாக பழுதடைந்திருந்தது. 1983க்குப் பின் சத்திரத்திலும், யாத்திரைக்கட்டிலும் ஏற்பட்டிருந்த வெடிவுகள் அனைத்தையும் சீர்செய்து தரைகளில் புதிதாய் சிமிண்ட் போட்டும் சுவர்களில் டிஸ்டெம்பர் அடித்தும் ஜன்னல்கள் கதவுகளுக்கு வர்ணம் வைத்தும் கட்டிடம் புதுப்பிக்கப்பெற்றது. சத்திரத்தில் மூன்று கழிவறைகளும், ஒரு குளியல் அறையும், யாத்திரைக் கட்டில் இரண்டு கழிவறைகளும், ஒரு குளியல் அறையும் கட்டப்பெற்றன. மின்சாரக்கம்பிகள் அனைத்தும் பழுதாகி விட்டதால் பழைய மின்சாரக் கம்பிகளை எடுத்துவிட்டு புதிய மின்சாரக்கம்பிகள் (ரீஓயரிங்) பொருத்தப்பட்டன.

தண்ணீர் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்பட்டதால் தண்ணீர் மோட்டார் வைத்து பைப்பு போட்டு தண்ணீர் தாராளமாக கிடைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீகாசிக்குப் போகிறவர்கள் முதலில் பிரயாகையில் உள்ள திருவேணிசங்கமத்தில் தான் நீராட வேண்டும். குடும்பத்தோடு நீராடுவது ரொம்ப விசேடம். திருவேணி சங்கமத்தில் நீராடுவதற்கு சத்திரத்தின் வாடிக்கையான படகுக்காரர் இருக்கிறார். நமது சத்திரத்துக்குப்போனால் சத்திர மேலாளர் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து தருவார். காசியிலிருந்து பிரயாகைக்கு இரயிலிலும் பிரயாணம் செய்யலாம் பஸ் அல்லது டாக்சியிலும் போய்வரலாம். சிலர் சென்னையிலிருந்து காசிக்குப்போகும் பாதையில் பிரயாகை இருப்பதால் அங்கே இறங்கி திருவேணி சங்கமத்தில் தீர்த்தம் ஆடிவிட்டு காசி செல்கிறார்கள்.

காசியிலிருந்து பஸ்ஸிலோ இரயிலிலோ போனால் சத்திரத்துக்குப் போய் திருவேணிசங்கமத்தில் தீர்த்தம் ஆடிவிட்டு திரும்பியவுடன் உணவருந்திவிட்டு ஊரைச்சுற்றிப் பார்க்கபோகலாம். ஊர்சுற்றி பார்த்துவிட்டு நேரே இரயில் நிலையத்திற்குப் போக சத்திர மேலாளரே குதிரைவண்டி ஏற்பாடு செய்து கொடுப்பார். இங்கு முக்கியமாப் பார்க்க வேண்டியது பண்டிட் ஜவகர்லால்நேரு வீடுதான். பிரயாகை காசியிலிருந்து 125 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இரயிலை விட்டு இரங்கி நாட்கோட் சத்திரம் மோரி தாரா கஞ்சு என்று சொன்னால் ஆட்டோக்காரர்கள், குதிரை வண்டிக்காரர்கள் நம் சத்திரத்தில் கொண்டு போய் விடுவார்கள்.

இந்து தேச சரித்திரத்தைப் பற்றிய ஐதீகம் ஒன்று உண்டு. அதாவது இந்திய வாணிபர்கள் முதலில் வர்த்தகத் துறையில் பல நாடுகளுக்கிடையில் ஐக்கியத்தை உண்டு பண்ணுகின்றனர். பின்பு அதைத் தொடர்ந்து அருள் துறையிலும் ஐக்கியம் ஏற்படுகிறது. திரும்பத் திரும்ப நேர்ந்து வருகிற இச்சீரிய நிகழ்ச்சிக்கு ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நல்லதொரு சான்று ஆகும்.

தென்னிந்தியாவில் அமைந்துள்ள அரும்பெரும் கோவில்களையெல்லாம் ஜீரணமடைந்து வந்த பொழுது அவைகளைப் புதுப்பித்து வைத்த சிறப்பு **நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு** உரியதாகிறது. அத்தகைய அரிய திருப்பணியுடன் நின்று விடாது. புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் பல புண்ணிய க்ஷேத்திரங்களில் அதே திருப்பணியைப் பரப்புவாராயினர். அதன் மூலம் தமிழ்நாட்டுக்குத் தனிச் சிறப்பை அவர்கள் கொண்டு வந்திருக்கின்றனர்.

ஸ்ரீ காசியம்பதி சிவனாரது சிறப்பு வாய்ந்த உறைவிடமாகும். உடலுக்கு இருதயம் எவ்வளவு இன்றியமையாததோ, அருள் துறையில் காசியம்பதி இந்தியா முழுதுக்கும், அவ்வளவு இன்றியமையாததாகிறது. என்றென்றும் இந்தியா முழுதுக்கும் அருள் உணர்வை ஊட்ட வல்லதாய் ஸ்ரீகாசி இருந்து வருகிறது. அத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீகாசி விசுவநாதருக்கும் அவருடைய அடியார்களுக்கும் அரிய முறையில் **நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்** பணியாற்றி வந்திருப்பது பாராட்டுதற்குரிய விஷயமாகும். இவ்வரிய பணியில் இப்பொழுது நூறு ஆண்டுகள் கழிந்திருக்கின்றன. இனி என்றென்றுமே இந்த நகரச் சத்திரம் இறையவனாரது திருத் தொண்டுகளைச் சீருடனும் சிறப்புடனும் செய்து வருவதற்கு ஸ்ரீகாசி விசுவநாதர் அருள் புரிவராக.

**சுவாமி சித்பவானந்தா**
ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த் துறை

# அயோத்தியா

இராமர் பிறந்த தலமாதலால் அயோத்தி புனிதமாக கருதப்படுகிறது. ஆகையால் கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காசிக்குப்போகும்போது அயோத்திக்கும் சென்று அங்குள்ள சரயுநதியில் தீர்த்தம் ஆடி இராமரையும் தரிசனம் செய்துவர எண்ணினர். அதன்பயனாக சரயுநதிக்குச் செல்லும் பெரிய சாலையில் துளசிதாஸ் பூங்காவுக்கு அருகே இருக்கும் காலி இடத்தை விலைக்கு வாங்கி செட்டிநாட்டிலிருந்து தச்சர், கொல்லர்களை வரவழைத்து ஒரு பெரிய கட்டிடத்தை கட்டினார்கள். எல்லா வேலையும் முடிந்து 2.9.1883ல் சத்திரம் செயல்படத் துவங்கியது. சத்திரம் ரெயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது. நுழைந்தவுடன் பெரிய ஓட்டுவாரம் இருந்தது. மூன்று கட்டுகள் இருக்கின்றன. அதில் நடுக்கட்டில் இராமர் கோவில் அதில் ஒரு கட்டில் யாத்ரீகர்கள் தங்குகிறார்கள். அதற்கு பின்புறம் அதை ஒட்டி ஒரு கட்டும் இருக்கிறது. கூட்டம் அதிகம் வரும் போது அதிலும் யாத்ரீகர்கள் தங்குகிறார்கள். மற்றொரு கட்டில் யாத்ரீகர்கள் சாப்பாட்டுக் கட்டாக பயன்படுத்துகிறார்கள். கூட்டம் அதிகம் வரும்போது அந்த கட்டையும் இரவில் படுக்க பயன்படுத்துகிறார்கள். ஏற்கனவே நந்தவனமும் இருந்திருக்கிறது. சத்திரத்தின் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. சத்திரத்தின் வெளிப்பகுதி சொற்ப வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. சத்திரத்தின் பெரும்பகுதி சுவர் மண்ணால் பூசப் பெற்றது.

1883 முதல் 1942 வரை இங்கு அன்னதானம் நடைபெற்று வந்திருக்கிறது.

சத்திரத்திலுள்ள இராமர் கோவிலுக்கு தினசரி பூஜைகள் நல்ல முறையில் நடந்து வருகிறது.

அயோத்தியாவில் நூற்றுக்கணக்கான இராமர்கோவில்கள் இருந்தாலும் இந்த விக்கிரகம் தான் மிக அழகாக வடிக்கப்பெற்றிருக்கிறது. இங்கு கோயில் கொண்டுள்ள இராமர் தம் கையில் கோதண்டம் வைத்திருப்பதால் இங்குள்ள மக்கள இவ்விக்கிரகத்தை கோதண்டராமர் என்று அழைக்கிறார்கள். இராமர், சீதை, இலக்குமணர், பரதர், சத்துருக்கர், அனுமான் திருவுருவங்களும் உள்ளன. நகரத்தார் பல ஆண்டுகள் இவ்வூரில் திருவிழாக்களை நடத்தி வந்தனர். அதற்காகச் செய்யப்பெற்ற தேர் இன்றும் உள்ளது. இராம நவமி 9 நாட்களிலும் சத்திரத்திலிருந்து நாகநாதர் கோயிலுக்குப்பூஜை அபிஷேக நைவேத்தியப் பொருள்கள் அனுப்பி வந்தனர்.

1983க்குப் பின் யாத்ரீகர்கள் ஹாலில் நவீன கழிவறைகள் மூன்றும் குளியல் அறை ஒன்றும் கட்டப்பெற்றது. தண்ணீர் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்பட்டதால் தண்ணீர மோட்டார் வைத்து பைப்பு போட்டு தண்ணீர் தாராளமாகக் கிடைக்க வசதி செய்யப்பெற்றிருக்கிறது.

கட்டிடம் மிகவும் பழுதடைந்து விட்டது. தலைவர் மற்றும சொசைட்டி நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் நேரில் பார்த்து கட்டிடம் முழுவதும் பழுது பார்த்து விடவேண்டுமென்று முடிவு செய்தார்கள். 1995க்குப் பின் செட்டி நாட்டிலிருந்து கொத்தர், தச்சர்களை அனுப்பி மறாமத்து தொடங்கப்பெற்றது.

முன்னால் போடப்பட்டிருந்த ஓட்டு வாரத்தில் மரக்கைகள், ஓடுகள் முற்றிலும் பழுதடைந்துவிட்டதால் அவற்றைப் பிரித்து விட்டு புதிதாக காங்கிரீட் தார்சு போட பெற்றது. பெரும்பகுதி சுவர்கள் மண்ணால் பூசப்பட்டதால் கரையான்களால் கட்டிடத்தில் உள்ள மரக்கைகள் சேதமடைந்துவிட்டன. ஆதலால் அதற்கு புதிய மரக்கைகள் பொருத்தப்பட்டன. சுவர் பூறாவும்கொத்திவிட்டு புதிதாய் சிமிண்ட் போடப்பட்டது. தரைகள் பூராவும் பழுதாகிவிட்டதால் அவைகளை கொத்திவிட்டு புதிதாய் சிமிண்ட் போடப்பட்டது. தார்சில் ஏற்பட்டிருந்த வெடிப்புகளை சீர் செய்திருக்கிறது. மின்சாரக் கம்பிகள் அனைத்தும் பழுதாகிவிட்டதால் அவைகளை எடுத்துவிட்டு புதிதாய் ஒயர்கள் (ரீ ஒயரிங்) பொருத்தியிருக்கிறது. சுவர்களுக்கு டிஸ்டெம்பரும் ஜன்னல் கதவுகளுக்கு வர்ணமும் வைத்திருக்கிறது. விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கிறது.

ராமநவமி அன்று சத்திரத்திலுள்ள இராமர் அயோத்தி நகரில் நமது தேரில் அமர்ந்து வீதி உலா வருவது வழக்கம். தற்போது பிரச்சினை அதிகம் இருப்பதால் அரசாங்கம் அனுமதி கொடுப்பதில்லை. அதனால் சத்திரத்திலேயே இராமருக்கு விசேட அபிஷேக அலங்காரம் செய்து பொது மக்கள் தரிசனத்திற்கு வைக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசனம் செய்து செல்கிறார்கள்.

தற்போது சத்திரம் எல்லா வசதியுடனும் ரொம்ப அழகாகவும் இருக்கிறது.

அயோத்தியா காசியிலிருந்து 200 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இரயிலில் போனால் இரயிலை விட்டு இறங்கி ஆட்டோவிலோ, குதிரை வண்டியிலோ போகலாம். நாட்கோட் ஸ்ரீராம்மந்திர்-பாபு பஜார் என்று சொன்னால் நம் சத்திரத்தில் கொண்டு போய் விட்டு விடுவார்கள்.

---

## ஜோதிர் லிங்கங்கள் 12

1. சோமநாதர் - சௌராஷ்டிரம்
2. மல்லிகார்ச்சுனம் - ஆந்திரம்
3. திரியம்பகம் - நாசிக்பஞ்சவடியருகே
4. மகாகாளர் - உஜ்ஜயினி
5. ஓங்காரம் - உஜ்ஜயினி அருகே
6. பீமசங்கரர் - பூனா அருகே
7. இராமேச்சுரம் - தமிழ்நாடு
8. குஸ்ருணேச்சரம் - எல்லோரா குகை அருகே
9. நாகநாதர் - சவுண்டி அருகே
10. வைத்தியநாதர் - பாட்னா அருகே
11. கேதாரேச்சுரர் - இமயத்தில்
12. விசுவேசுவரர் - காசி

### தருமம் வளர்க்கும் தனவணிகர்

நாசிக் பஞ்சவடி நற்பிர யாகை
காசி அயோத்தி கயைகல் கத்தா
தார கேசுரம் தண்கோ தாவரி
என்னும் தலங்கள் இருநான் கதனில்
சத்திரம் கட்டித் தருமம் வளர்க்கும்
நற்றன வணிகர் நலமுடன் காசி
நாதன் அருளால் நாளும்
வாழ்க! வாழ்க! வழிவழிச் சிறந்தே!

- வித்துவான் வலம்புரி வே. அண்ணமலை

# கயா

கயா பீகார் மாகாணத்திலுள்ள புனிதத்தலம் பல்குனி ஆற்றின் கரையில் அமைந்த கோவிலில் விஷ்ணு பாதம் இருக்கிறது. இப்பாதத்தில் முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். காசிக்கு நகரத்தார்கள் போகத் தொடங்கியது முதலே கயாவுக்கும் போய் தல ஸ்றார்த்தம் செய்து பிண்டம் போட்டு வந்திருக்கிறார்கள். மனிதன் பற்றற்வனாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் விருப்பமான பழம் காய் இலை முதலிய மூன்றிலும் ஒவ்வொன்றை இனி கைவிடுவதாக வடபால விருட்சத்தில் உறுதி செய்து கொடுப்பது இந்தத் தலத்தில் வழக்கமாகும்.

பல்லாண்டுகள் வாடகைக் கட்டிடத்தில் சத்திரம் நடைபெற்று வந்தது. கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் 1884ல் ரூ. 2,500க்கு சந்த் சவுரா என்னும் பகுதியில் வாங்கிய இடத்தில் கட்டிடம் கட்டினார்கள். புதிதாய் கட்டப்பெற்ற சத்திரம் 19-4-1910ல் செயல்படத்துவங்கியது. பின்னர் 1911ல் ரூ. 2,500க்கு ஒரு இடமும் 1928ல் ரூ. 1,800க்கு ஒரு இடமும் வாங்கி விஸ்தரித்திருக்கிறார்கள். நகரச்சத்திரம் செட்டி நாட்டுப்பாணியில் நன்றாகக் கட்டப்பெற்றிருக்கிறது. முன்ஓட்டுவாரம், அதற்கு அடுத்தது ஒரு ஹால் அதில் நடராஜர் திருவுருவம் வைக்கப்பெற்றிருக்கிறது. அந்த ஹாலை நடராஜர் ஹால் என்று அழைக்கிறார்கள். இரண்டு பக்கத்திலும் ஒரே மாதிரி கட்டு கட்டப்பெற்றிருக்கிறது. ஒரு கட்டில்தான் யாத்ரீகர்கள் பயன்படுத்துகிறார்கள். மற்றொரு கட்டில் பெரும் கூட்டம் போகும்போது பயன்படுத்துகிறார்கள்.

நடராஜர்ஹாலில் உள்ள நடராஜருக்கு தினசரி பூஜைகள் நடைபெறுகின்றன.

1942 வரை நாள் தோறும் 5 பிராமணர்களுக்கும் 10 சாதுக்களுக்கும் அன்னதானம் நடைபெற்று வந்தது.

விஷ்ணு பாதத்தில் நூறு ஆண்டுகள் நகரத்தார்கள் பால் அபிஷேகம் செய்தும் நெய்தீபம் போட்டும் வந்திருக்கிறார்கள். விஷ்ணுபாதத்தருகே அந்த மண்டபத்திலேயே நகரத்தார்கள் ஒரு சிவலிங்கத்தையும், ஒரு அம்மனையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். 1926 முதல் 1942 வரை விஷ்ணு பாதத்தில் சந்தனக்காப்பு சாத்தி வந்திருக்கிறார்கள். நகரத்தார்களுக்கென்று இவ்வூரில் பண்டாக்களும் சாஸ்திரியும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

நம் சத்திரங்களிலே அதிகமாகப் பழுதடைந்தது கயாச்சத்திரம்தான். 1983க்குப் பின் செட்டி நாட்டிலிருந்து தச்சர்கள், கொல்லர்களை அனுப்பி மராமத்து செய்யப்பெற்றது. கட்டிடத்திலுள்ள சுவர், தார்சு பூராவும் வெடிப்பு ஏற்பட்டு விட்டது. மழைகாலம் பூராவும் மழைத் தண்ணீர் ஒழுகி, அதனால் மரக்கைகள் அனைத்தும் நீண்ட காலமாக பழுதடைந்திருந்தன. இரண்டு கட்டிலும் ஹாலிலும் ஏற்பட்டிருந்த வெடிப்புகளை சீர் செய்து முன் வாரத்தில் பழுதடைந்திருந்த மரக்கைகளும், ஓடுகளும் மாற்றி சுவர்களுக்கு டிஸ்டெம்பரும், கதவு ஜன்னல்களுக்கு வர்ணமும் வைக்கப் பெற்றது. இரண்டு கட்டிலும் ஒவ்வொரு கட்டுக்கும் இரண்டு நவீன கழிப்பிடங்களும் ஒரு குளியல் அறையும் கட்டப்பெற்றன.

யாத்திரீக்கர்கள் தங்கும் கட்டில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டன. தண்ணீர் மோட்டார் வைத்து பைப்பு போட்டு தண்ணீர் தாராளமாக கிடைக்க வசதி செய்யப்பெற்றிருக்கிறது.

நடராஜர் ஹாலில் உள்ள தரைக்கு புதிதாய் சிமிண்ட் போட்டிருக்கிறது. பிண்டம் போட விரும்புகிறவர்கள் சத்திர மேலாளரிடம் சொன்னால் அவர் நம்மால் நியமிக்கப்பெற்ற பண்டாக்களிடம் சொல்லி அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பார். ஊர் சுற்றிப்பார்க்கவும உணவு வசதியும் அவரே செய்து கொடுப்பார்.

கயாவுக்கு 10 கிலோ மீட்டர் தெற்கே புத்த கயா என்னும் பௌத்ததலம் இருக்கிறது. இது புத்தர் பிரான் ஞான ஒளி பெற்ற சிறப்பினையுடையது. இங்குள்ள மகா போதிக்கோயிலில் புத்தரின் பொற்சிலை பொலிவுடன் காட்சித்தருகிறது. புத்தர் ஞானம்பெற்ற பின் உலவிவந்த நடைபாதை ஒன்று சிற்ப வேலைப்பாடுகளுடன் ஒரு மேடை போலக் கட்டப்பட்டிருக்கிறது. ஞானம் பெறும்போது புத்தர் வீற்றிருந்த வஜ்ராசனமும் அவர்க்கு நிழல் தந்த போதி மரமும் பர்மியர், திபேத்தியர், ஜப்பானியர், தாய்லாந்து நாட்டினர், இலங்கை நாட்டினர் ஆகியோர் அமைத்துள்ள பௌத்த கோயில்களும் புத்த கயாவில் உள்ளன.

கயா காசியிலிருந்து 265 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இரயிலிலும் செல்லலாம். டாக்ஸியிலும் செல்லலாம். இரயிலில் சென்றால் நம் சத்திரம் செல்வதற்கு ஆட்டோ, குதிரைவண்டிகள் கிடைக்கும். நாட்கோட் சத்திரம் சந்த்சவுறா என்றால் நம் சத்திரத்தில் கொண்டு போய் விடுவார்கள்.

உ

முருகா

பஞ்சவடி
பிலவ, ஆவணி 6,
22-8-1961

இளம்பூரணன் இன்னருளால் இன்று இங்குவந்து நகரமடாலயத்தில் தங்கினேன். பூஜை உணவு முதலிய சகலவகைக்கும் அனுகூலமாக இருந்தது. "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரியினை வீரர் கண்டார்" என்று கம்பநாடர் பாடியருளிய கோதாவிரியை அடியேனும் கண்டு களித்தேன்.

மடம் யாத்ரீகர்கட்கு மிக்க வசதியாக அமைந்துளது. தரும குணசீலர்களான நகர தணவணிகர்களுடைய அறம் போற்றுதற்குரியது.

மடாலயத்தில் திரு. கோபாலசாமி அவர்கள் நல்ல முறையில் கவனித்து மடத்தின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருப்பது பாராட்டுதற் குரியது. வாழி மடாலயம்.

அன்பன்,
**கிருபானந்தவாரி,**
ஆசிரியர், "திருப்புகழமிர்தம்"
சென்னை.

# கல்கத்தா நகரத்தார் ஹவுஸ்

நகரத்தார்கள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்த துறைமுகப்பட்டிணங்களில் கல்கத்தா முக்கியமானது. கல்கத்தாவிலிருந்து பர்மாவுக்கும், இலங்கைக்கும் அரிசி நவதானியம் முதலியவற்றை ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஏறத்தாழ 120 கடைகள் இருந்து வந்தன.

நகரத்தார்கள் நடத்திய கடைகள் அன்னிய நாட்டு வியாபார சங்கங்களுடனும் ஆங்கிலேய கம்பெனிகளுடனும் வணிக உறவு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டனர். எல்லாக்கடைகளிலிருந்தும் ஏற்றுமதி செய்த பொருள்களுக்கு கப்பல் கட்டணத்துக்கு செலுத்திய தொகைகளில் 100 ரூபாய்க்கு 5 ரூபாய் வீதம் ஆண்டு இறுதியில் கப்பல் கம்பெனியிலிருந்து திரும்ப வாங்கப்பட்டது. இவ்வாறு கிடைத்த ரீபேட் தொகையை தருமப் பொது பண்டு என்று வைத்திருந்தார்கள். இவ்வகையில் ஆண்டு தோறும் ரூ. 25,000 வரை வருவாய் வந்து கொண்டிருந்தது.

முக்கியாட்டாவில் கன்னிங்தெரு 40 ஆம் நம்பர் வீட்டில் எல்லா கடைகளும் இருந்துவந்தன. அந்த வீட்டிலேயே வேல் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

1840 வரை கல்கத்தா நகரத்தார்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இருந்து வந்தனர். பிறகு சிறிது சிறிதாக ஒற்றுமை சீர்குலைந்தது. காரைக்குடி சேகரம் தேவகோட்டை சேகரம் என இரு கட்சிகள் ஏற்பட்டன. அப்போது இருந்தவர்களுக்குள் வயதானவர்கள் நாலுபேரை மத்தியஸ்தராக வைத்து வீட்டை ஒரு கட்சிக்கும் சுவாமியை இன்னொரு கட்சிக்குமாகத் திருவுளச்சீட்டு போட்டனர். காரைக்குடியாருக்கு சுவாமியும் தேவகோட்டையாருக்கு வீடும் விழுந்தன.

காரைக்குடியார் உடனே சுவாமியையும், பொருள்களையும் எடுத்தக்கொண்டு கன்னிங்தெரு 64 ஆம் நம்பர் வீட்டுக்கு மாறினர். தேவகோட்டையார் உடனே தேவகோட்டைக்கு எழுதி வேலாயுதம் செய்து வரவழைத்தனர். அந்த வேலாயுதத்துக்கு ‘சிங்கார முருகேசர்’ என்றும் அந்த வீட்டுக்கு பெரியவீடு என்றும் பெயரிட்டனர். அது முதல் தேவகோட்டை சேகரத்துக்கு பெரிய வீடு என்றும் காரைக்குடி சேகரத்துக்குச் சின்னவீடு என்றும் பெயர்கள் வழங்கி வரலாயின.

பெரியவீட்டுக்காரர்கள் சில ஆண்டுகள் கழித்து எஸ்ரா தெரு 48 ஆம் நம்பர் கட்டிடத்துக்கும் அதன்பிறகு அதே தெருவில் 54 ஆம் நம்பர் கட்டிடத்துக்கும் மாறினர். அந்த வீட்டில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு கன்னிங்தெரு 40 ஆம் நம்பர் கட்டிடத்துக்கு குடிபோய் அதில் 17 ஆண்டுகள் (1898 முதல் 1915 வரை) இருந்தார்கள். பிறகு லோயர் சித்பூர் ரோடு 180 ஆம் நம்பர் கட்டிடத்தில் 1921 வரை இருந்தனர்.

கோவில் வீடுகள் இரண்டு ஏற்பட்டமையால் மகமைகள் தனித்தனியாக அந்தந்த வீட்டுக்காரர்களால் எழுதப்பெற்றன.

19ம் நூற்றாண்டின் முற்பகுதியல் 120 கடைகள் இருந்தன. ஆனால் அவை படிப்படியாகக் குறைந்தன. 1861ல் சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டதும், பர்மா அரிசிக்கு

ஐரோப்பாவில் நிலையான மார்க்கெட் ஏற்ப்பட்டது. அதன் விளைவாகக் கல்கத்தா நகரத்தார்கள் சிலர் அரிக்கனில் நெல் அறைக்கும் இயந்திரங்களை நிறுவினர் சிறிது சிறிதாக இரங்கூனில் நகரத்தார்களின் கடைகள் கூடிக்கொண்டு வந்தன. இவ்வாறு ஏற்பட்ட போது கல்கத்தா நகரத்தார்களும் இரங்கூனில் தொழில் தொடங்கினர். இரங்கூனில் தொழில் லாபகரமாக நடைபெற்று வந்ததும் கல்கத்தாவில் தொழில் சுருங்கிற்று. இரங்கோன் தொழிலுக்கு குறைந்த வட்டிக்கு கல்கத்தா வங்கிகளிலும், மார்வாரிகளிடமும் பணம் கடன் வாங்கி வெயன் வட்டிக்கு இரங்கோனில் அடைப்பதே கல்கத்தா கடைகளின் முக்கியமான தொழிலாக இருந்து வந்தது. மார்வாரிகள் நாள் தோறும் பெரிய வீட்டுக்கும் சின்ன வீட்டுக்கும் வந்து தாங்கள் அடைக்க வேண்டிய பணத்தைச் செட்டிய வீட்டில் கூடுதலான வட்டிக்கு ஏலம் கேட்ட கடையில் பணத்தை அடைப்பது வழக்கமாக இருந்தது.

கடைகளின் எண்ணிக்கை 120லிருந்து 43ஆகக் குறைந்தது. அதன்பிறகு கடைகள் கூடியும் குறைந்தும் வந்தன. 1883 ஆம் ஆண்டில் கல்கத்தா நகரத்தார்கள் ஒற்றுமையாக இருந்து கப்பல் கம்பெனிகளிடம் 100க்கு ஒரு ரூபாய் வீதம் மட்டுமே கமிஷன் வாங்குவதென்றும் யாரும் கூட்டியோ குறைத்தோ கமிஷன் வாங்குவதில்லை என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டதிலிருந்து இந்த விவரம் தெரிகிறது. இந்த ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட கடைக்காரர்கள் கையொப்பம் இட்டிருக்கிறார்கள்.

1. அரு.லெ.
2. வெ.அரு.
3. வயி.நாக.ராம.
4. மெ.செ.
5. வீ.மு.
6. நாக.மு.ப.வ.
7. அழ.ப.
8. வெ.வீர.அ.
9. அ.ராம.
10. அன.மெ.சு.
11. மெ.அரு.சித.
12. ராம.மெ.
13. பெரி.சுப.தெ.
14. சி.கரு.சி.
15. அ.க.
16. மு.ராம.ப.
17. கும.பெரி.
18. ராம.சா.
19. ந.பெரி.
20. க.ராம.ராம.கு.
21. மெ.ப.
22. சா.ராம.
23. சுப.வ.
24. பழ.நா.
25. பெ.மெ.
26. பழ.சு.அரு.
27. வீ.க.அ.
28. பழ.சுப.லெ.
29. நா.முரு.
30. ராம.லெ.
31. முரு.மு.
32. அ.ராம.
33. ராம.அரு.அரு.
34. குழ.மெ.
35. பெரி.க.அரு.
36. கு.பழ.சு.
37. ப.ராம.லெ.
38. ம.பழ.
39. ராம.ப.
40. சா.சா.
41. அ.செ.சு.
42. சி.ராம.க.
43. நா.பழ.

பெரிய வீட்டுக்காரர் என்பதை 'பிக்செட்டி பிரதர்ஸ்' என்றும் சின்ன வீட்டுக்காரர் என்பதை 'ஸ்மால் செட்டி பிரதர்ஸ்' என்றும் வெள்ளைக்காரர்கள் குறிப்பிட்டு வந்தார்கள்.

சிங்காரமுருகேசருக்கு உற்சவம் நடத்த வேண்டுமென்று இரண்டு வீட்டு நகரத்தார்களும் கூடிப் பேசுவதற்காக பார்த்திப ஆண்டு பங்குனி மாதத்தில் 1886ல் கூட்டம் கூட்டினார்கள். ஆண்டுக்கு ஒரு வீட்டு சுவாமியாக மாறிமாறி காளிக்காட்டுக்கு சித்தரபவுர்ணமியன்று போய் வருவதென்று முடிவு செய்யப்பட்டது. திருவுளச்சீட்டு பெரிய வீட்டுக்காரருக்கு விழுந்ததால் முதல் ஆண்டில் பெரிய வீட்டுச்சுவாமி காளி காட்டுக்குப்போய் வந்தது. சித்றா பவுர்ணமி காலத்தில் மழையும் காற்றும் மிகுதியாய் இருந்ததால் 1893ல் முதல் திருவிழாவை பங்குனி உத்திரத்துக்கு மாற்றிக் கொண்டார்கள். அந்த ஆண்டில் கல்கத்தாவில் இருந்து வருகிற சுவாமிக்கு 5 நாட்களுக்கு அபிஷேக ஆராதனையும் காளி காட்டுக்கு பவனி செல்லும் சுவாமிக்கு சம்பிரதாய பூஜையும் ஆண்டுதோறும் நடைபெற்றது. இந்த இரண்டு வகைச் செலவுகளுமே காளிகாட்டு திருவிழாக் கணக்காக செய்யப்பெற்றன.

காளிகாட்டு திருவிழாவுக்கென்று வெள்ளித் தேர் செய்து வைக்கப்பட்டது. அந்த ரதத்தில் உற்சவ விக்கிரகத்தை வைத்து தங்க நகைகள் அணிவிக்கப்பட்டதைக் கண்டு வங்காளிகள் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தார்கள். நமது உற்சவ மூர்த்திக்கு "சொன்னார் கார்த்திக்" என்று பெயர் இட்டு அதை வழிபட்டு வந்தனர். திருவிழாக் காலத்தில் உண்டியல்களில் வங்காளிகள் பணம் போட்டு காணிக்கை செலுத்தினர். வெள்ளித்தேர் செல்லுவதற்கு இடையூறு இல்லாதபடி டிராம் போக்குவரத்து சிறிது நேரம் நிறுத்திவைக்கப்பட்டது. டிராம் எலெக்ட்ரிக், டெலிபோன் முதலிய கம்பிகள் தேரைத்தட்டாதவாறு தேர் செல்லும்போது அவை தூக்கிவைக்கப்பட்டன. இதற்குரிய வசதிகளை உரிய அலுவலர்கள் செய்து கொடுத்தனர். பாண்டு, மேளவாத்தியம் முதலியனவும் தேவாரக்குழுவும் பவனியில் வந்தன. காளி காட்டில் 5 நாட்கள் சிங்கார முருகேசர் தங்கியபோது நகரத்தார்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் உணவு வசதி செய்யப்பட்டது. சுவாமி சேர்க்கைக்கு வரும்போது ஆங்கிலேய, கவர்னர் நாம் செய்த மரியாதைகளைப் பெற்றுக்கொண்டார்.

காலம் செல்லச் செல்ல மீண்டும் நகரத்தார்களுக்குள் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. பெரிய வீட்டுச் சுவாமி புறப்பாடு காலத்தில் சின்ன வீட்டார் காளிகாட் மடத்தைப்பூட்டி விட்டார்கள். கல்கத்தா உயர்நீதி மன்றத் தீர்ப்பு பெரிய வீட்டார்க்கு அனுகூலமாக இருந்ததால் அவர்கள் பூட்டை உடைத்து மடத்தை திறந்து திருவிழா நடத்தினர். நகரத்தார்களுக்குள் ஒருவருக்கொருவர் செலவு தொகையை வசூலித்துக் கொள்ளக் கூடாதென்ற எண்ணம் நிலவியது. நீதிமன்றத்தாரின் ஆணை எவ்வாறிருப்பினும் சின்ன வீட்டாரிடம் செலவு தொகை வாங்குவதில்லையென்று பெரிய வீட்டுக்காரர் முடிவு செய்தனர். 1907ம் ஆண்டு அளவில் தீபாராதனைச் சமயம் பெரிய வீட்டு நகரத்தார் ஒருவர் மீது முருகப்பெருமான் அருள் வந்தது. சின்னவீட்டு நகரத்தாரையும் சேர்த்துக்கொண்டு பூஜைநடத்தும்படி உத்தரவாயிற்று. வயது முதிர்ந்தவர்கள் நால்வர் வந்து அழைக்க சின்ன வீட்டுக்காரர்களும் காளிகாட் பூஜையில் கலந்து கொண்டனர்.

முதலாவது உலகப் போர் ஏற்பட்டதும் 1914ல் தொழில் நிலைமை மந்தமாகி விட்டது. சின்னவீட்டுக் கடைகள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்டன. கடைகளை ஒடுக்கியவர்களுக்கு வெள்ளிரதத்துக்காக அவர்கள் கொடுத்திருந்த ரூபாய் சத்திரத்துக்கணக்கிலிருந்து திரும்பிக் கொடுக்கப்பட்டது. சின்ன வீட்டிலிருந்து ஊருக்குப் போனவர்கள் தவிர எஞ்சியிருந்த தீ. சொ, பழ.கரு ஆகிய இரண்டு கடைகளும் பெரிய வீட்டுக்கு வந்தன.

கடைகள் தொகை குறையக்குறைய நிலைமை மாறிக்கொண்டே வந்தது. வெள்ளித்தேர் திருப்பாதிரிப்புலியூர் கோயிலுக்கு விற்கப்பட்டது.

நகரத்தார்கள் கல்கத்தாவுக்கு வந்தது முதல் வ.பெ.சி.மு. என்ற விலாசம் வைத்து ரூ. 1,17,000 மூலதனத்துடன் சுவாமிக்காக நடத்திவந்த தொழில் சீர்கெட்டு 1909ல் அந்தக்கடை நிறுத்தப்பட்டது.

1940ம் ஆண்டு வரை காளிகாட்டில் பங்குனி உத்திரம் சிறிய அளவில் நடைப்பெற்றுவந்தது.

மகமை வசூலித்து திருவிழாக்களை நடத்திவந்ததோடு இரண்டு வீட்டுக்காரர்களும் அவரவர் கோவில்களில் அன்றாடப் பூஜைகளை நடத்தி வந்தனர். கல்கத்தாவில் தொழில் நன்றாய் இருந்தபோது கப்பல் கம்பெனி வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 வரை ரிபேட் தொகை கிடைத்ததால் பல அறச்செயல்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் கல்கத்தா நகரத்தார்களுக்கு ஏற்பட்டது.

கல்கத்தாவுக்கு நகரத்தார்கள் வந்தது முதலே, தலைசிறந்த தலமாகிய காசிக்குப்போய் விசுவேசுவரரை வழிபட்டு வந்தனர். கல்கத்தாவுக்கு கப்பலில் வந்தும் சிலர் இராமேஸ்வரத்திலிருந்து காசிவரை நடந்து சென்றும் வந்தனர். காசி யாத்திரை செல்லும் நகரத்தார்கள் தொகை பெருகிற்று. கல்கத்தா நகரத்தார்களிடம் தருமப்பண்டு தொகையும் பெருகிற்று. இந்த நிலைமையில் நகரத்தார்களுக்கென்று காசியில் ஒரு சத்திரம் கட்டவேண்டுமென்று முடிவு செய்து 1863ல் கல்கத்தா நகரத்தார்கள் **காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்தை** நிறுவினர்.

காசிநகரச்சத்திரத்துக்கு இன்று முக்கியமான சொத்தாக இருந்துவருவது கல்கத்தா எஸ்ரா தெருவில் உள்ள 34ஆம் நம்பர் கட்டிடமாகும். 1918ல் கல்கத்தாவில் நகரத்தார்களுக்கு 13 கடைகள் இருந்தன. அடிக்கடி பல வீடுகள் மாறி அல்லற்பட்டதால் 13 பெட்டியடிகளும் இருப்பதற்குச் சொந்தக்கட்டிடம் வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். காசிச்சத்திரத்துக்கும் நகரத்தார்கள் மேற்கொண்டுள்ள இன்ன பிற சிவப்பணிகளுக்கும் ஆண்டு தோறும் வருமானம் வரக்கூடிய கட்டிடமாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர்.

1918ஆம் ஆண்டு சூலை மாதம் 5ஆம் தேதி எஸ்ரா தெரு, 34ஆம் நம்பர் கட்டிடம் டேவிட் எஸ்ரா என்ற சீமானிடம் ரூ. 1,27,916-10-8க்கு வாங்கப்பட்டது. இந்தக் கிரயம் கல்கத்தா ரிஜிஸ்ட்ரார் ஆப் அஸ்யூரன்ஸ் அலுவலகத்தில் 1918ஆம் ஆண்டு 2846ஆம் கிரயமாக முதற்புத்தகம் 84வது வால்யூமில் 148 முதல் 167 பக்கம் வரை பதிந்திருக்கிறது. இவ்வாறு வாங்கிய கட்டிடத்தை முற்றிலும் பிரித்து பழைய அஸ்திவாரத்தை மட்டும் வைத்தக்கொண்டு அதன்மீது (கீழ்தளம் உட்பட) மூன்றுமாடி கட்டிடத்தை செட்டிநாட்டுக் கட்டிடங்களைப்போல கட்டுவதென்று நகரத்தார்கள் முடிவு செய்தார்கள்.

அத்தகைய பிளானை எட்வர்ட் ஹோப் ஜான்ஸ்டன் என்ற வெள்ளைக்கார என்ஜினியர் சில திருத்தங்களுடன் அங்கீகரித்து புதுக்கட்டிடம் கட்ட கார்ப்பரேசனில் அனுமதி வாங்கிக் கொடுத்தார். கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 1,22,398-2-9க்கு அந்த என்ஜினியருடைய சிபார்சுப்படி தினேஸ் சந்தர் சென் என்பவரிடம் 23-8-1920ல் நகரத்தார்கள் காண்டிராக்ட் செய்து கொண்டார்கள். மேற்படி கட்டிடத்தின் இடப்பரப்பு சுமார் 81/2 கட்டா அதாவது ஏறத்தாழ 6120 சதுர அடி. 1921 நவம்பர் மாதம் 2ஆம் தேதி இந்த கட்டிடத்தில் நகரத்தார் குடிபுகும் விழா சிறப்பாக நிகழ்ந்தது. இதில் நிறுவப்பட்ட சிங்கார முருகேசர் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி அக்காலத்தில் ஸ்டேட்ஸ்மென் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்கத்தா நகரத்தாருக்கு சொந்த கட்டிடம் அரு.அரு.சோம. ஏஜெண்ட் சாமினாதன் செட்டியார் பெயரால் 1918ல் கிரயம் வாங்கப்பெற்றது. அவர் 1921ல் இந்த சொத்தை ஒரு டிரஸ்டு சொத்தாக ஏற்படுத்தி அரு.அரு. சோமசுந்தரம் செட்டியாரை டிரஸ்டியாக நியமித்து செட்டில்மெண்டு எழுதிவைத்தார்கள். 1934ல் இந்தச் சொத்து ரங்கூனில் ஏற்பட்ட காசி நகரச்சத்திரத்தின் மானேஜிங் சொசைசிட்டியின் ஆளுகைக்கு வந்தது.

1955ல் அரு.அரு. சோம வாரிசுகள் மானேஜிங் சொசைட்டிக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி பவர் ஆப் அட்டர்னி பதிந்துகொடுத்தனர். அவ்வாறே ஒரு அவிடிவிட் கையெழுத்திட்டு 5-4-1955ல் கல்கத்தா கார்ப்பரேசனுக்கு எழுதிக்கொடுத்தனர். 8-12-1955 முதல் கல்கத்தா கார்பரேசன் ரிகார்டுகளில் இந்த சொத்து மானேஜிங் சொசைட்டிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. 27-8-1958 முதல் இது நகரத்தார் ஹவுஸ் என்ற பெயரால் வழங்கி வருகிறது.

1942ல் ஜப்பானியர் பர்மாவை பிடித்துக்கொண்டதும் நகரத்தார்களும் அவர்களை சார்ந்தவர்களும் ஆயிரக்கணக்கானவர் பர்மாவிலிருந்து கால்நடையாக அரிக்கன், சிட்டகாங் பாதை வழியாகவும், மணியுவா, இம்பால், மணிப்பூர் பாதை வழியாகவும் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் தங்குவதற்கும், சாப்பாடு வசதி செய்வதற்கும் அரசாங்கத்தார் செலவில் இரயில் டிக்கெட்டும் மருத்துவ வசதியும் பெறவும் நகரத்தார் ஹவுஸில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இது இந்தச் சத்திரத்தின் வரலாற்றில் குறிப்பிட தக்க முக்கியமான நிகழ்ச்சியாகும்.

## நகரேஸ்வரர் கோவில் - கல்கத்தா

இந்தக் கோவில் ஸ்ட்ராண்டு ரோடு 35ஆம் கட்டிடத்தில் இருக்கிறது. இங்கு ஏற்கனவே ஒரு சிவலிங்கம் அரசமரத்தடியில் இருந்தது. இந்த இடத்தில் நகரத்தார்கள் ரூபாய் எண்பதாயிரம் செலவில் சிவாலயம் கட்டி கும்பாபிஷேகம் நடத்தினர். இச்சிவலிங்கத்துக்கு நகரேசுவரர் என்று பெயர் வைத்து நகரேசுவரி என்ற அம்பாளையும் பிரதிஷ்டை செய்தனர். கோவில் இன்றளவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நம்மால் நியமிக்கப்பட்ட சாஸ்திரி பூஜைக் காரியங்களைக் கவனித்து வருகிறார். பூஜை படித்தரச்செலவுகள் காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்தினால் செய்யப்பட்டு வருகின்றன.

பெரிய வீட்டிலிருந்து சிங்கார முருகேசர், இடும்பன், விநாயகர் ஆகிய மூர்த்திகள் எஸ்ரா தெரு 34ஆம் நம்பர் வீட்டிலிருந்து 1930 அளவில் நகரேஸ்வரர் கோவிலில் கொண்டுபோய் வைக்கப்பட்டன. விக்கிரகங்கள் யாவும் கல் திருவுருவங்களாக உள்ளன. சிங்கார முருகேசர் முகம் செம்பால் செய்து தங்க முலாம் பூசப்பெற்றது; இந்த விக்கிரகத்தின் ஏனைய பகுதிகள் சந்தன மரத்தால் செய்யப்பெற்றன. மர விக்கிரகம் பழுதடைந்திருந்ததால் கல்லில் சிங்காரமுருகேசரர் விக்கிரகம் செட்டிநாட்டில் கம்பனூரில் செய்யப் பெற்று அதற்கேற்ப புதிய வெள்ளி அங்கியுடன் 1963ல் கல்கத்தாவுக்கு கொண்டுவரப் பெற்றிருக்கிறது.

இந்த கோவில் கட்டிடத்துக்கும் இடத்துக்கும் யாதொரு வரியும் செலுத்தவேண்டியதில்லை என்றும் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தின்பரப்பு ஒன்றே முக்கால் கட்டா அல்லது 1160 சதுர அடி.

கங்கை கரையில் அமைந்து கவர்ச்சியான காட்சி தருவதால் கங்கையில் நீராடுபவர்கள் பல நூறுபேர்கள் கங்கை நீரால் நகரேஸ்வரருக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அலுவலகங்களுக்கு செல்லுபவர்களும் நூற்றுக் கணக்கான இந்துக்களும் இங்கு வந்து வழிபடுவது ஒவ்வொரு நாளும் காணக்கூடிய காட்சியாகும். இந்த கோவிலில் சிங்காரமுருகேசர் எழுந்தருளியிருப்பதால் ஆடி கார்த்திகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

**காளிகாட்** :- கல்கத்தா நகரத்தார் ஹவுசிலிருந்து 8 கி.மீ. தொலைவில் ஆதி கங்கை என வழங்கப்படும் காளிகாட் ஆற்றின் கீழ்க்கரையில் காளிகோவில் அருகே அமைந்த பகுதியாகும். கல்கத்தாவிலிருந்து சித்ராபவுர்ணமி திருவிழா நடத்தியபோது சிங்கார முருகேசரை கல்கத்தா நகரத்தார்கள் காளிகாட்டில் எழுந்தருள செய்தனர். அதற்காக 6.9.1878ல் இடம் வாங்கப்பெற்றது. மற்றொரு பகுதி 1885லும், மூன்றாவது பகுதி 1893லும் வாங்கப்பெற்றன. மூன்று இடங்களும் ஒரு சேகரமாக வந்ததும் திருவிழாத் தேவைக்கேற்ப இரண்டு மாடிக்கட்டிடமாக மடம் கட்டப்பட்டது. விரிவான திண்ணையும் முகப்பில் நடைபாதையில் காங்கீரிட் தார்சும் கூடியது. இக்கட்டிடத்துக்கு அந்நாளிலேயே ரூ. 40,000 க்குமேல் செலவு ஆகியிருக்கவேண்டும். திருவிழா நின்ற பிறகு, குடும்பத்துடன் வரும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு காளிகாட் மடம் பயன்படுத்தப்பட்டது. காளிகாட் மடத்துக்கென்று தனியாக மகமை வசூலிக்கப்பட்டது. அப்போது கல்கத்தா நகர விடுதியில் ஆண்பிள்ளைகள் மட்டும் தங்கி வந்தனர்.

1945 முதல் காளிகாட்டுக்கு யாத்திரீகர்கள் வருவது பெரும்பாலும் நின்றுவிட்டது. இப்போது இந்த கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. கட்டிடம் மிகவும் பழுதான நிலையில் இருந்து வருகிறது.

தண்டாயுதபாணி சிலை வைத்து பூஜை செய்யப்பெற்றது.

காளிகாட் கோவிலின் நுழைவாயிலில் நகரத்தார்கள் சிறியதொரு விநாயகர் கோவிலை கட்டியுள்ளனர். இதன் நிர்வாகம் எப்போதுமே காளிகோவில் பண்டாக்களிடமிருந்து வந்திருக்கிறது. வெள்ளித்தேரை நிறுத்தி வைப்பதற்காக 1906ல் காளிக்காட்டில் ஓர் இடத்தை கோர்ட் ஏலத்தில் நகரத்தார்கள் ரூ. 3,150க்கு வாங்கி அதில் ரதக் கொட்டகை கட்டினர். பிற்காலத்தில் வெள்ளி ரதம் விற்கப்பட்டதால் கொட்டகை தேவைப்படவில்லை. கொட்டகையும், இடமும் 1939ல் காசி நகர சத்திர மானேஜரால் ரூ. 6,000க்கு விற்று முதல் செய்யப்பட்டன.

# தாரகேசுவரம்

தாரகேசுவரம் என்பது ஹவுராவிலிருந்து மின்சார ரயிலில் செல்லக்கூடிய ஊர், 55 கி.மீ. தொலைவில் அமைந்தது. இது மகந்துப் பிரதேசம்.

இந்த சிவத்தலம் வங்காளிகளால் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. இங்கு கோவில் கொண்டுள்ள இறைவன் பெயர் தாரகநாதர். இது சுயம்பு லிங்கம்.

காசி யாத்திரையாக வரும் நகரத்தார்கள் தாரகேசுவரத்துக்குப்போய் வந்தனர். அவ்வாறு போய் வருபவர்களின் வசதிக்காக மகந்திடம் இடம் வாங்கி கல்கத்தா நகரத்தார்கள் ரூபாய் பதினாயிரம் செலவில் மடம் கட்டி ஆர்ச்சும் அமைத்தனர். இந்த மடம் அமைக்கப்பட்டது. 1890ஆம் ஆண்டு வாக்கிலென்று ஊகிக்கவேண்டியதிருக்கிறது.

மடத்துக்கு சேகரமான ஓர் இடம் 1907ல் ரூ. 2,000த்துக்கு குத்தகை எடுக்கப்பட்டது. இந்த இடம் முன் அக்ரிமெண்டின்படி 1952ஆம் ஆண்டு அளவில் மகந்து வயப்பட்டது.

தாரகேசுவரம் நகரமடத்துக்குள் ஒரு நந்தவனம் இருந்தது.

பல ஆண்டுகள் இந்தத் தலத்தில் அன்னதானம் செய்யப்பட்டது. 1941 வரை தாரகநாதருக்கு நகரத்தார்கள் பாலாபிஷேகம் ஒவ்வொருநாளும் செய்து வந்தார்கள். கல்கத்தா நகரம் ஜப்பானியருடைய குண்டு வீச்சுக்கு உள்ளானபோது கல்கத்தா நகரத்தார் சிலர் தாரகேசுவரம் நகர மடத்தில் தங்கினர்.

யாத்திரைக்காரர்கள் தாரகேசுவரத்துக்குப் போய் வருவதும் அருகிவிட்டது. மடம் ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் கோவிலுக்கு அண்மையிலும் கடைத்தெருவின் நடுவேயும் உள்ளது. வங்காளிகள் நமது மடத்தை "செட்டிபாடி" என்று குறிப்பிட்டு வருகிறார்கள். மடத்தின் சில பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. மடம் மிகப் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. செட்டியார்கள் வெட்டியகுளம் ஒன்று தாரகேசுவரத்தில் இருக்கிறது. மடத்தின் முன் பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

கல்கத்தா நகரத்தார் ஹவுசில் பெரும் பகுதி வாடகைக்கு விடப்பட்டிருப்பதால் ஒரு பெரிய அறையும், அலுவலக அறைக்கு அடுத்துள்ள ஒரு சிறிய அறையும், குடி இருந்தவர் ஒருவர் காலி செய்தபோது அவரிடமிருந்து திரும்பப்பெற்று அதில் குளியல் அறையும், கழிவறை வசதியும் செய்துள்ள ஒரு அறையும் ஆக 3 தங்கும் அறைகள் இருக்கின்றன.

கல்கத்தா நமது விடுதி இருக்கும் தெரு ரொம்ப பிரபலமானது. இரயில்வே ஸ்டேசனிலிருந்து டாக்சியில் நம் விடுதிக்குப் போகலாம். **எஸ்ரா ஸ்ட்ரீட் நகரத்தார் ஹவுஸ்** என்று சொன்னால் அவர்கள் கொண்டு போய்விட்டு விடுவார்கள்.

# நாசிக் பஞ்சவாடி

பம்பாய் மாநகரில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அடிக்கடி நாசிக் பஞ்சவடி சென்று கோதாவரியில் நீராடியும் அங்குள்ள கோவில்களில் வழிபட்டும் வந்தனர்.

நகரச்சத்திரம் பஞ்சவடியில் பஞ்சவடித்தெருவில் மேற்குப்பார்த்த கட்டிடம். இது ஆற்றிலிருந்து 1/2 கி.மீ. இராமர் கோயிலுக்குச் சமீபத்திலும் அமைந்தது. சீதாகுகை, பஞ்சவடி இரண்டும் சத்திரத்துக்கு சமீபமாக உள்ளன. இவ்வளவு பொருத்தமான இடத்தை தேடி வாங்கினவர்களை எவ்வளவு பாராட்டினாலும் பொருந்தும். கோதவரியில் வெள்ளம் சில சமயங்களில் வருவது உண்டு. அப்போது மற்ற சத்திரங்களில் கோதாவரி உட்புகும். ஆனால், நகரச் சத்திரம் ஒரு காலும் பாதிக்கப்படவில்லை. காரணம் இது மேடான இடத்தில் இருப்பதாகும்.

நகரச்சத்திரம் உள்ள கட்டிடம் 1865 அளவில் தீக்சித் பண்டா என்பரிடமிருந்து 800 ரூபாய்க்கு பம்பாய் நகரத்தார்களால் வாங்கப்பட்டது. பிறகு ஏறத்தாழ 8,000 ரூபாய் செலவில் செட்டி நாட்டிலிருந்து கொத்தர், தச்சர், வரவழைக்கப்பட்டு புதுப்பிக்கப்பெற்றது. 1867 ஜனவரி 21ம் தேதி சத்திரம் இக்கட்டிடத்தில் பணியாற்றத் தொடங்கியது. இது இந்தக் கட்டிட வாயிலில் நிலைக்கதவுக்கு மேல் உள்ள கல்வெட்டில் குஜராத்தியிலும், மராத்தியிலும் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து தெரிகிறது. தமிழில் 'நகர மடம்' என்று இந்தக் கல் வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டுக்கு மேற்கே சுவரில் பதித்த பளிங்குக் கல்லில் இந்தியில் 'ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி மந்திர்' என்றும் தமிழில் 'நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்' என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தக் கட்டிடம் முதலில் கோயில் வீடாக மட்டும் இருந்துவந்தது. இப்போது கோயில் வீடாகவும், நகர விடுதியாகவும் இருந்து வருகிறது.

இங்கு தண்டாயுதபாணி கோயில் இருக்கிறது. இங்கு விநாயகர் திருவுருவமும், பழநி ஆண்டவர் திருவுருவங்கள் இரண்டும் இடும்பன் திருவுருவமும், மயில் திருவுருவமும், பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. பஞ்சலோக விநாயகர் திருவுருவமும் இருக்கிறது. மரப் பெருச்சாளி வாகனமும், தங்கமுலாம் பூசிய வெள்ளி மயிலும் இருக்கின்றன. வட இந்தியர்கள் இந்த இறைவனை கார்த்திகேயர், கார்த்திக் சுவாமி என்று சொல்லுகிறார்கள். பஞ்சவடியில் இந்த கோயிலையும், சத்திரத்தையும் கார்த்திக் சுவாமி மந்திர் என்ற பெயரில்தான் எல்லோரும் குறிப்பிடுகிறார்கள். அப்படிச் சொன்னால்தான் இடத்தை அடையாளம் காண்பிப்பார்கள். புதுமடம் இதற்கு நயாமடம் என்றும் செட்டி தர்மசாலை என்றும் பெயர். இது நகரச்சத்திரம் உள்ள தெருவிலேயே எதிர் வரிசையில் நான்கு கட்டிடங்களுக்கு அப்பால் இருக்கிறது.

இப்பொழுது சத்திரம் உள்ள வீடு கோயில் வீடாக இருந்ததால் நகரத்தார் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் தைப்பூசத்தில் பிராமணர்களுக்கும், ஏழைகளுக்கும் சாப்பாடு போடவும் வசதியாக பம்பாய் நகரத்தார்கள் புதுமடத்தை ஏற்படுத்தினர். அந்த கட்டிடத்தை 1905ல் ஒரு வண்ணானிடமிருந்து ரூ.1,500க்கு வாங்கி சீர்திருத்தங்கள் செய்தார்கள்.

இங்கு ஒரு லிங்கம் இருக்கிறது. இக்கட்டிடத்தின் பெரும் பகுதி போஸ்ட் ஆபீசுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. மற்ற பகுதியில் சிலர் குடி இருந்து வருகிறார்கள். பஞ்சவடி இராமர் கோவிலில் 1942 வரை நகரத்தார்கள் அகண்ட தீபம் போட்டு வந்தனர். அதற்கு நாள் தோறும் எண்ணெய் கொடுத்து வந்தனர்.

1942க்கு முன் பஞ்சவடி கபாலிசுவரர் கோயிலில் பால் அபிஷேகத்துக்கு தினசரி பால் கொடுத்து வந்திருக்கிறார்கள். தீபம் போட்டு வந்திருக்கிறார்கள்.

9.2.1970ல் 76 ஊர் நகரத்தார்கள் நிர்வாகத்தை ஒப்புக்கொண்ட பின் கீழ்க்கண்ட பணிகள் செய்திருக்கிறார்கள்.

சமையல் கொட்டகை தகரக் கூரைபோட்டு புதிதாய் கட்டியிருக்கிறார்கள். மேல் வீட்டில் மரத்தளத்துக்கு சிமிண்ட்போட்டிருக்கிறார்கள். கோபுரத்தை சீரமைத்து கோவிலில் மராமத்துப் பார்த்து 28.1.1972ல் கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள்.

தங்க முலாம் பூசிய வெள்ளி மயில் வாகனம், மர பெருச்சாளி வாகனம் நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். சத்திரம் ரொம்ப பழமையானது. சுவர் முழுவதும் மண்பூச்சு, அதனால் அடிக்கடி மண்பூச்சு கொட்டிவிடும், வருடா வருடம் அதை சீர்செய்வது வழக்கம். கட்டிடம் முழுதும் மராமத்துச் செய்து கோபுரத்தையும் சீரமைப்புச் செய்து குடமுழுக்கு விழா செய்வதென முடிவு எடுத்து செட்டிநாட்டிலிருந்து தச்சர்கள், கொத்தனார்களை அனுப்பி கீழ்கண்ட பணிகள் செய்யப்பெற்றன. ஸ்தபதிகளும் அனுப்பப்பெற்றனர். சுவற்றிலிருந்த மண்பூச்சை அகற்றிவிட்டு புதிதாய் சிமெண்ட் பூசியிருக்கிறது. ஓட்டு வாரங்களில் உள்ள அனைத்து ஓடுகளும் பழுதாகிவிட்டதால் புதிய ஓடுகள் போட்டிருக்கிறது. கோபுரம் சீரமைக்கப்பெற்று வர்ணம் வைக்கப்பெற்றது. தரை முழுவதும் பழுதாகிவிட்டதால் புதிதாக மொசைக் தரை போடப்பட்டிருக்கிறது.

மேல் வீட்டுத் தளம் ஏற்கனவே மரத்தில் போட்டிருக்கிறது. 1971ல் அதன்மேல் சிமிண்ட் போட்டிருக்கிறார்கள். மரப்பலகையாக இருப்பதாலும் நாள்ப் பட்டதாக இருப்பதாலும் நடக்கும்போதெல்லாம் பலகை ஆடும். அதற்கு காங்கிரட் கொஞ்சம் போட்டு அதன்மேல் சிறிது சிமிண்ட் போட்டு அதற்கு மேல் மொசைக்தரை போட்டிருக்கிறது. தற்போது மேல் வீட்டுத்தளம் ரொம்ப உறுதியாக இருக்கிறது. மேல் வீட்டில் இரவில் தங்கும்போது கழிவறைக்கு வருவதானால் தோட்டத்திற்குத்தான் வரவேண்டியிருந்தது. அதனால் மேல் வீட்டிலேயே ஒரு குளியல் அறையும், ஒரு கழிவறையும் கட்டியிருக்கிறது. தற்போது யாத்ரீகர்கள் தங்குவதற்கு மேல்வீடு ரொம்ப வசதியாக இருக்கிறது.

ஜன்னல் கம்பிக்கு பதில் மரக்கைகள் வைத்து கட்டியிருந்தது. ஜன்னல்களும் ரொம்ப பழுதாகிவிட்டது. புதிய ஜன்னல் செய்து அவைகளுக்கு கிரில்க் கம்பிகள் போட்டிருக்கிறது.

மின்சார ஒயர்கள் முழுதும் பழுதாகிவிட்டதால் புதிய ஒயர்கள் (ரீ ஒயரிங்) பொருத்தியிருக்கிறது.

கோவில் மண்டப மேல்த்தளம் மரப்பலகைகள் போட்டு அதற்கு மேல் மண்போட்டு அதற்குமேல் சிமிண்ட் பூசியிருக்கிறார்கள். மண்டபத்திலுள்ள மரப்பலகைகளை கறையான் சேதப்படுத்திவிட்டதால் மண்டபத்தில் ஒவ்வொரு பகுதியாக விழுக ஆரம்பித்தது. அதனால் அவைகளை இடித்துவிட்டு தற்போது காங்கிரீட் தளம் போட்டிருக்கிறது. மண்டபத்தைச் சுற்றி உள்ள சிறிய சுவரை அகற்றிவிட்டு மண்டபத்தைச் சுற்றி கிரில் கம்பி அடைத்திருக்கிறது. கோவில் மண்டபம் தரை முழுதும் மார்பிள் போட்டிருக்கிறது. கருவறையின் பின் பக்கத்தில் உள் சுவற்றில் மார்பிள் கல் பதித்திருக்கிறது. ஏற்கனவே சிறிய பழனி ஆண்டவர் சிலை இருந்திருக்கிறது. பின்னால் கருங்கல்லில் பெரியசிலை செய்து வைத்திருக்கிறார்கள். நிலை மாற்றப்படவில்லை. அதனால் கிட்டத்தில் இருந்து பார்த்தால் சுவாமியின் முகம் தெரியும். கொஞ்ச தூரத்திலிருந்து பார்த்தால முகம் தெரியாது. அதனால் தூரத்தில் இருந்து பார்த்தாலும் சுவாமியின் முகம் தெரிகிறார்ப்போல் அந்த அளவுக்கு நிலையை உயர்த்தி வைத்திருக்கிறது. புது நிலை வைப்பது போல் முறையே பூஜைகள் செய்து நிலையை வைத்திருக்கிறது. பின்புறம் இருந்த விநாயகர் சிலையை முன்பக்கத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறது. அதேபோல் இடும்பன் சிலையையும் முன்பகத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறது. மயிலை சாஸ்திர முறைப்படி இருக்கவேண்டிய உயரத்துக்கு உயர்த்தி பிரதிஷ்டை செய்திருக்கிறது.

மூன்று புதிய அறைகள் கட்டியிருக்கிறது. அதில் ஒரு அறை பாம்பே நகரத்தார்கள் பங்குனி உத்திரத்துக்கு வரும்போது உபயோகத்துக்கு தேவைப்படும் சாமான்களை வைக்க அவர்களுக்கு கொடுத்திருக்கிறது.

5 புதிய குளியல் அறைகளும், 5 கழிவறைகளும் புதிதாய் கட்டியிருக்கிறது. ஏற்கனவே இரண்டு கழிவறைகள் கட்டப்பெற்றிருந்தன. தற்போது 2 தங்கும் அறைகளும், 5 குளியல் அறைகளும், 7 கழிவறைகளும், மேல் வீடும் யாத்ரீகர்கள் உபயோத்துக்கு வைத்திருக்கிறது. லாக்கர் வசதியும் செய்து வைத்திருக்கிறது. எல்லா இடத்திலும் மின் விசிறிகள் பொருத்தியிருக்கிறது. முனிசிபல் தண்ணீர் வருகிறது. அதை தொட்டியில் நிரப்பி சிறிய மோட்டார் வைத்து டாங்குக்கு ஏற்றினார்கள். தற்போது பூமியின் அடியில் போர்போட்டு நல்ல தண்ணீர் கிடைக்கிறது. கட்டிடத்தில் எல்லா இடத்துக்கும் தண்ணீர் பைப்பு போட்டிருக்கிறது. தோட்டத்தில் உள்ள சமையல்க்கொட்டகை பழுதாகிவிட்டதால் அதையும் புதுப்பித்திருக்கிறது. சுவர்களுக்கு டிஸ்டெம்பர் பூசியும் ஜன்னல்கள், கதவுகளுக்கு வர்ணம் வைத்தும், புதிதாய் கட்டிய கட்டிடம் போல் காட்சியளிக்கிறது. மேற்கண்ட மராமத்து பணிகளை முடித்து கும்பாபிஷேமும் 9.9.1992ல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. முக்கிய விசேடங்கள் :- பங்குனி உத்திரம் தைப்பூசம், கந்தர்சஷ்டி, திருக் கார்த்திகை, ஏற்கனவே பாம்பே நகரத்தார்கள் பங்குனி உத்திரத்துக்கு பாம்பேயிலிருந்து வந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து, வருபவர்களுக்கு அன்னதானம் செய்து, விநாயகர், கார்த்திக் சுவாமி முதலிய திரு உருவங்களுக்கு அலங்காரம் செய்து விநாயகரை மரப்பெருச்சாளி வாகனத்திலும் பழநி ஆண்டவரை தங்க முலாம் பூசிய வெள்ளி மயில் வாகனத்திலும் எழுந்தருளச் செய்து அவர்களே வாகனங்களை தூக்கி நகரில் பாண்டு வாதியங்களுடன் ஊர்வலம் வருகிறார்கள். அங்கு லாக்கரில் உள்ள வெள்ளி அங்கி, நகைகளை எடுத்து அணிவிப்பதற்கு காசியிலிருந்து ஒருவர் அனுப்பப் பெறுகிறார். பாம்பே நகரத்தார்களும், அவரும் இருந்து நகைகளை சுவாமிக்கு அணிவித்து விழா முடிந்தவுடன்

திரும்ப லாக்கரில் வைக்கிறார்கள். தற்போது பாம்பே நகரத்தார்கள் தைப்பூசமும் கந்தர்சஷ்டியும் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சிறப்பாக செய்து வருகிறார்கள். திருக்கார்த்திகை சத்திரத்திலேயே சிறப்பாக கொண்டாடப் பெறுகிறது. காலையிலிருந்து இரவுவரை சுவாமி தரிசனம் செய்ய தமிழர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

பாம்பே நகரத்தார்கள் இக்கோயிலில் அதிகம் ஈடுபாடு உடையவர்கள். கும்பாபிஷேகத்திற்கு நிதிஉதவி செய்ததோடு கும்பாபிஷேகத்திலும் எல்லோரும் கலந்துகொண்டு சொசைட்டி நிர்வாகிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள்.

**நாசிக்** :- சென்னையிலிருந்து நாசிக்குக்கு செல்ல பம்பாய் ரயிலேறி பூனாவில் இறங்கி பூனாவிலிருந்து 193 கிலோமீட்டா பஸ் அல்லது வாடகை காரில் பிரயாணம் செய்து நாசிக்கை அடையலாம். பஸ் பயணம் 51/2 மணிநேரம் ஆகும். பம்பாயிலிருந்து நாக்பூர் அல்லது வார்ணாசி செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில்களில் பயணம் செய்யலாம் 188 கிலோமீட்டர் தூரம். இரயில் நிலையத்தின் பெயர் நாசிக்ரோடு. இங்கிருந்து நாசிக் 9 கி.மீ., பஞ்சவடி 10 கி.மீ. பஸ்ஸிலும் செல்லலாம் டாக்சியும் கிடைக்கும்.

## காசியம்பதியில் நீராடும் கங்கைத் துறைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| * 1. | அசி | 23. | தண்டி | 45. | யமேசுவரம் |
| 2. | லோலார்கம் | 24. | ராணாமகால் . | 46. | கங்காமகால் |
| 3. | துளசிதாஸ் | 25. | முன்ஷி | 47. | அக்னீசுவரம் |
| 4. | ஜானகி | 26. | அகல்யாபாய் | 48. | இராமா |
| 5. | பாரசுவநாதம் | 27. | சீதளா | 49. | இலட்சுமண பாலா |
| 6. | சிவாலயம் | 28. | பிரயாகை | 50. | மங்களா கௌரி |
| 7. | நிரஞ்சனம் | * 29. | தசாசுவமேதம் | * 51. | பஞ்சகங்கை |
| 8. | பிரமேந்திரம் | 30. | அசுவம் | 52. | பிந்துமாதவம் |
| 9. | அனுமந்தம் | 31. | கிடிகீ | 53. | துர்க்கா |
| 10. | அரிச்சந்திரம் | 32. | மான்மந்திரம் | 54. | பிரம்மா |
| 11. | லல்லி | 33. | திரிபுரசுந்தரி | 55. | சத்திரம் |
| 12. | சிந்தாமணி | 34. | விசாலாட்சி | 56. | ராஜமந்திரம் |
| 13. | ராணி | 35. | ஜராசசந்தேசுவரம் | 57. | லால் |
| * 14. | கேதாரம் | 36. | லலிதா | 58. | கௌ |
| 15. | சௌகி | 37. | கங்காகேசவம் | 59. | நாராயணன் |
| 16. | உருக்மாங்கதம் | 38. | பிரம்மநாளம் | 60. | திருலோசனேசுவரம் |
| 17. | கேஷமேசுவரம் | 39. | மகாசுமயானம் | 61. | பிரகலாதம் |
| 18. | மானசரோவர் | 40. | சித்திவிநாயகம் | 62. | ராஜ |
| 19. | நாரதம் | * 41. | **மணிகர்ணிகை** | 63. | கட்கவிநாயகம் |
| 20. | அன்னபூரணா | 42. | தத்தாத்ரேயம் | * 64. | வருணாசங்கமேசுவரம் |
| 21. | பாண்டேயம் | 43. | சேந்தியம் | | |
| 22. | சதுர்சஷ்டி | 44. | சங்கடாதேவி | | |

* புள்ளியிட்டவை சிறப்புமிக்க நீராடு துறைகள். நடந்து செல்ல இயலாதவர்கள் படகிலேனும் சென்று இத் துறைகளிலும் நீராடுவது மரபு. (64ல் பலதுறைகள் இப்பொழுது இல்லை.)

# ரெங்கோன் நகர விடுதி

கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் ரெங்கோன் சென்று அங்கு தொழில் செய்ய ஆரம்பித்து தொழிலும் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருந்தது. பர்மாவுக்கும், சென்னைக்கும் கப்பல் போக்குவரத்து அதிகமாயிற்று. பர்மாவிலிருந்து சென்னைக்கு வரும்போதும் செட்டி நாட்டிலிருந்து பர்மாவுக்குப்போகும்போதும் தங்குவதற்கு சென்னையில் சொந்தக்கட்டிடம் வேண்டுமென்று நகரத்தார்கள் கருதினார்கள். அதனால் துறைமுகத்துக்கு சமீபத்தில் உள்ள பவழக்காரத் தெருவில் ஒரு பெரிய இடத்தை விலைக்கு வாங்கி செட்டி நாட்டிலிருந்து தச்சர் கொல்லர்களைக் கூட்டிவந்து ஒரு பெரிய உறுதியான கட்டிடத்தை கட்டினார்கள். அது 1907ம் ஆண்டு செயல் படத் தொடங்கியது. பர்மா நகரத்தார்களால் கட்டப்பெற்றதால் அதற்கு **ரெங்கோன் நகர விடுதி** என்று பெயர் வைத்தார்கள். மேல் வீடும் கட்டியிருக்கிறார்கள். பர்மாவிலிருந்து வருகிறவர்கள் பெட்டி பெட்டியாக சாமான்கள் கொண்டு வருவது வழக்கம். அதனால் சாமான்கள் கொண்டு வந்த பெட்டிகளை வைக்க தோதாக ஒரு பகுதியில் வெள்ளைக்கல் பதித்திருக்கிறார்கள். பர்மா போக்குவரத்து இருந்த வரையில் விடுதியில் கூட்டம் மிகுதியாக இருந்தது. அதன்பின் கூட்டம் ரொம்பக் குறைவாக இருந்தது. சாப்பாடு வேண்டுமென்பதற்காக பர்மா தொடர்புடைய நகரத்தார் ஒருவரை மெஸ் வைக்க அனுமதி கொடுத்திருந்தார்கள். பர்மா தொடர்பு நின்று போனதும் நகரத்தார்கள் வருகை பெருமளவில், குறைந்துவிட்டது. செட்டிநாட்டிலிருந்து ஒரு சிலர் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அதனால் அவர் பப்ளிக் ஹோட்டல் மாதிரி வெளி ஆட்கள் அனைவருக்கும் சாப்பாடு போட ஆரம்பித்துவிட்டார். அதனால் தண்ணீர் செலவு அதிகமாகிவிட்டது. மின்சாரச் செலவும் அதிகமாகிவிட்டது. அவர் மின்சாரத்திற்கு பணம் கட்டுவதில்லை, வாடகையும் சரியாகக் கொடுப்பதில்லை.

பர்மா நகரத்தார்கள் நியமித்த இடைக்காலக் குழு அவர்கள் பொருப்பிலிருந்த சத்திரங்களை சொசைட்டியிடம் ஒப்புவித்தார்கள். ரெங்கோன் நகர விடுதி மாத்திரம் இரங்கூன் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் கோவில்கள் தர்ம பரிபாலனசபை நிர்வாகத்தில் இருந்தது. நம் சொசைட்டி மூலம் நான்கு வருடங்களாக அவர்களை அணுகி நிர்வாகத்தை சொசைட்டியிடம் ஒப்புவிக்கச் சொல்லி பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாக அவர்கள் நிர்வாகத்தை சொசைட்டியிடம் ஒப்புவிக்க இசைவு தெரிவித்தார்கள். ரெங்கோன் நகர விடுதியில் அப்போது மேலாளராக இருந்த மானகிரி அ.முருகப்ப செட்டியாரவர்களுக்கு நம் சொசைட்டியிடம் ஒப்புவிப்பதற்கான அதிகாரத்தை வழங்கினார்கள். 23-9-1974ல் நிர்வாகத்தை ஒப்புவித்தார்கள்.

சொசைட்டியின் சார்பில் அப்போது நமது சொசைட்டியின் தலைவராக இருந்த தேவகோட்டை அள.அரு.சோமனாதன் செட்டியாரவர்களும் செயற்குழு உறுப்பினராக இருந்த கண்டனூர் சுப. சண்முகம் செட்டியாரவர்களும் ரெங்கோன் நகர விடுதி நிர்வாகத்தை மேற்படி பரிபாலனசபையின் அதிகாரம் பெற்ற மானகிரி அ.முருகப்ப செட்டியாரவர்களிடமிருந்து ஒப்புக்கொண்டார்கள். மேற்படி பரிபாலன சபையிடமிருந்து நிர்வாகத்தை ஒப்புக் கொண்டபின் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன. முதலில் இரண்டு தங்கும் அறைகளும் மேல்வீட்டில் ஒரு குளியல் அறையும் ஒரு கழிவறையும் கட்டப்பெற்றன. போர்டிங் அண்டு லாட்ஜிங் என்ற லைசென்ஸ் வாங்கியிருந்தார்கள். அதனால் முதல்நாள் தங்கியவர்களின் பெயர்கள் விபரத்தை மறுநாள் போலீஸ் ஸ்டேசனில் தெரிவித்து விட்டு வரும் வழக்கம் இருந்தது. போர்டிங் அண்டு லாட்ஜிங்

தேவையில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து லைசென்சும் கான்சல் செய்யப்பட்டது. ஆண்கள் மாத்திரம் தான் தங்கலாம் என்ற விதி இருந்தது. அந்த விதியை செயற்குழுவின் ஒப்புதல் பெற்று மாற்றம் செய்யப்பெற்றது. தற்போது ஆண்கள் பெண்கள் இரு பாலரும் வந்து தங்கிச்செல்கிறார்கள். கோதாவரிச் சத்திரம் விற்ற போது அங்கிருந்த மரகத விநாயகர் சோமாஸ்கந்தர் முதலிய விக்கிரகங்களை சென்னைக்கு கொணர்ந்து ரெங்கோன் நகரவிடுதி மேல் மாடியில் உள்ள பூஜை அறையில் அவ்விரு மூர்த்திகளையும் 22-8-1982 விநாயக சதுர்த்தி அன்று பிரத்திஷ்டை செய்யப்பெற்றது. சிவாச்சாரியர் தினந்தோறும் வந்து பூஜை செய்கிறார்.

1983க்குப் பின் பெருமுயற்ச்சி செய்து மெஸ் காலி செய்யப்பெற்றது. மெஸ் காலியானதும் இரண்டாம் கட்டில் 5 புதிய அறைகள் கட்டப்பெற்றன. மேல்வீட்டில் 3 புதிய அறைகள் கட்டப்பெற்றன. ஏற்கனவே இருந்த கழிவறைகள் எட்டையும் சீரமைப்பு செய்து புதிதாய் தடுப்பு சுவர் கட்டி புதிய கதவுகளும் போடப்பெற்றன. ஏற்கனவே இருந்த ஆண்கள் குளியல் அறைகள் சீரமைப்பு செய்யப்பெற்றன. மூன்றாம் கட்டில் வாரம் பூராவும் பழுதாகிவிட்டதால் அவற்றைப் பிரித்து புதிய மரக்கைகள் போட்டு புதிய ஓடும் போடப்பட்டது. மூன்று பழைய அறைகள் சீரமைப்பு செய்யப்பெற்றன. பழைய மின்சாரக் கம்பிகள் பழுதாகிவிட்டால் (ரீ ஒயரிங்) புதிய மின்சாரக் கம்பிகள் பொருத்தப்பட்டன. குடி தண்ணீர்க் குழாய் விடுதியின் உள்ளே கடைசிக் கட்டில் வைக்கப்பட்டிருந்தது. அதைப்பொருத்தி நீண்ட காலம் ஆகிவிட்டதால் முற்றிலும் பழுதாகி தண்ணீர் வருவது நின்று விட்டது. அதனால் கார்ப்பரேசனை அணுகி விடுதியின் நுழைவாயிலில் சிறிய ரூம் கட்டி அதில் வைத்திருக்கிறது. அதனால் அடிபைப் அடிக்கும்போது தண்ணீர் வேகமாக வருகிறது.

அலுவலகம் விடுதியில் உள்ள ஹாலில் இருந்தது. விடுதியில் நுழைவாயிலில் இரண்டு பக்கமும் அடைத்து ஒரு கட்டு அலுவலகத்துக்கும் மற்றொரு கட்டு பொது உபயோகத்துக்கும் வைத்திருக்கிறது.

1996க்குப் பின் செட்டி நாட்டிலிருந்து கொத்தனார் தச்சர்கள் அனுப்பி கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன. பழைய அறை ஒன்று சீரமைப்பு செய்யப்பெற்றது. இரண்டாம் கட்டில் மேலும் இரண்டு புதிய அறைகள் கட்டப்பெற்றன. மூன்றாம் கட்டில் ஒரு பகுதியில் இருந்த ஓட்டுக் கூடத்தைப் பிரித்துவிட்டு அந்த இடத்தில் புதிதாக மூன்று அறைகள் கட்டப்பெற்று அதற்குமேல் உள்ள காங்கிரட் தார்சில் புதிய அறை ஒன்றும் கட்டப்பெற்றது. ஆண்கள் குளியல் அறைகள் பழுதாகிவிட்டதால் அதை மாற்றி அந்த இடத்தில் புதிதாக ஆறு குளியல் அறைகள் கட்டப்பெற்றன. பெண்கள் குளியல் கழிவறைகளை, சீர் செய்தும் பெண்கள் குளியல் அறைக்குப்பக்கத்தில் அவர்கள் உடை மாற்றிக்கொள்ள ஒரு சிறிய அறையும் கட்டப்பெற்றது. மேல் வீட்டுத்தார்சு பூராவுக்கும் சிமிண்ட் போட்டிருக்கிறது. சுவர்களுக்கு புதிதாய் டிஸ்டெம்பர் அடித்திருக்கிறது. அலுவலக உபயோகம் போக யாத்ரீகர்கள் தங்க 19 தங்கும் அறைகள் இருக்கின்றன. குளியல் அறைகள் 9 இருக்கின்றன. கழிவறைகள் 11 இருக்கின்றன. சாமான்கள் வைக்க 65 லாக்கர்கள் இருக்கின்றன. பெரிய ஹால் ஒன்றும், மேல் வீடும் இருக்கின்றன. தற்பொழுது திரி பேஸ் கரண்டுக்கு அனுமதி வாங்கி புதிதாக தாமிர ஒயரிங் செய்திருக்கிறது.

தங்கும் அறையில் கட்டில் மெத்தை போடப்பெற்றிருக்கிறது. கீழ்வீட்டிலும் மேல்வீட்டிலும் மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. தண்ணீர் எப்போதும் கிடைக்க வசதி செய்யப்பெற்றிருக்கிறது. விடுதியில் எல்லா வசதியும் இருப்பதால் நகரத்தார்கள் பெருமளவில் வந்து தங்கிப் போகிறார்கள்.

உ

சிவமயம்

# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மானேஜிங் சொசைட்டியின் வரலாறு

சிவபக்தி மிக்காராய் தமிழ் நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் பாடல் பெற்ற தலங்கள் முதலியவற்றில் புதிய கோயில்களைக் கட்டியும் மன்னர்கள் கட்டிய கோவில்களைப் பேணியும் புதுப்பித்தும் வந்த பெருமை பல நூற்றாண்டுகளாக நகரத்தார்களைச் சேரும். தலயாத்திரை செய்வதில் நகரத்தார் ஆடவர்கட்கும் பெண்டிர்க்கும் உள்ள ஈடுபாடு உலகறிந்தது. இவர்களில் பலர் இராமேஸ்வரத்திலிருந்து கால்நடையாக காசிக்குச் சென்று விசுவநாதரை வழிபட்டு வந்தனர். 19ம் நூற்றாண்டுக்கு முற்பட்டகாலத்தில் போக்குவரத்து வசதிகள் மிக்க குறைவாக இருந்தன. அந்நாட்களில் நடந்து சென்றும் தலயாத்திரை செய்பவர் பல இன்னல்களுக்கு ஆளாயினர். இக்காரணத்தால் பலர் சேர்ந்து காசியாத்திரையை மேற்கொள்வதும் கூடியவரை சிவராத்திரி அன்று காசியில் இருக்குமாறு பயணம் அமைத்துக் கொள்வதும் நகரத்தார்களுள் வழக்கமாகி இருந்து வந்தது.

கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அன்னிய நாட்டுக்கு அரிசி நவதானியங்கள் ஏற்றமதி செய்வதில் கிடைத்த ரிபேட் தொகையை தர்மப் பொதுப்பண்டாக வைத்திருந்தார்கள். அந்த பண்டிலிருந்து முத்தி தரும் தலங்கள் ஏழில் முதன்மையானதாகிய காசியில் தர்மம் செய்வதே சிறந்தது என்று அவர்கள் கருதினர். குமர குருபரர் மடத்தில் சில காலமும் பின்னர் தற்காலிகமாக வேறு ஓர் இடத்திலும் இருந்து கொண்டு அவர்கள் சிவராத்திரி போன்ற திருவிழாக்களில் விசுவேசுவரருக்கு அபிஷேகங்கள் நடத்திடவும், ஏழைகளுக்கு அமுது படைக்கவும் ஏற்பாடு செய்தனர். மேற்கண்ட முறையில் 50 ஆண்டுகள் அபிஷேகம் அன்னதானம் முதலியன நடைபெற்றன. காசியாத்திரை சென்ற எல்லா நகரத்தார்களும் காசி கேதார கட்டத்தில் குமரகுருபர சுவாமிகளால் 1720ல் கட்டப் பெற்ற குமார சுவாமிகள் மடத்தில் தங்கி வந்தனர்.

அந்த மடத்தில் நகரத்தார்கள் தங்கிய பகுதி செட்டிசத்திரம் என்ற பெயரில் இன்றும் வழங்கி வருகிறது.

கங்கைக் கரையில் கேதாரகட்டத்தில் அழகாக அமைக்கப்பட்டிருந்த கேதார ஈஸ்வரர் கோவிலின் சுற்றுப்பிரகாரத்தில் காணப்படும் மீனாட்சி அம்மன் சொக்கலிங்கப் பெருமான் ஆகிய மூர்த்திகளை கல்கத்தா நகரத்தார்கள் பிரதிஷ்டை செய்தனர். பூஜை செலவும் நெடுங்காலமாக அவர்களே ஏற்றனர்.

நகரத்தார்கள் காசியம்பதியில் சத்திரம் கட்டி அபிஷேக ஆராதனைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அங்கு ஆராதனையும், நைவேத்தியமும் முறையாக நடைபெற வில்லை. நகரத்தார்களால் தான் அவை ஒழுங்கான வடிவம் பெற்றுள்ளன. மகந்துகளைக் கலந்து விசுவேசுவரர்க்கு உசத் காலப் பூஜை, உச்சிக் காலப் பூஜை, அர்த்த ஜாமப் பூஜை என்று மூன்று காலப் பூஜைகளை என்றென்றும் நடத்தி வரும் உரிமையை நகரத்தார்கள் பெற்றார்கள். அதன் பின்னர் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடம்

விலைக்கு வாங்கப்பெற்றது. 1863ல் ருத்ரொத்கார் ஆவணி 10 தேதியில் அந்த மடம் சில பகுதி புதுப்பிக்கப்பெற்றும் பெரும் பகுதி புதிதாகக் கட்டப்பெற்றும் **காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்** என்ற பெயரில் தொடங்கப்பெற்றது. அன்று முதல் விசுவேசர் விசாலாட்சி, அன்னபூரணி முதலிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூஜைகள் சிறப்பாக செய்யப்பெற்று வருகின்றன. அந்தணருக்கும், துறவிகளுக்கும் ஏழை எளியோர்களுக்கும் உணவு படைக்க அன்னதானக் கட்டளைகள் ஏற்படுத்தி சத்திரத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாக நாள் தோறும் அன்னதானம் செய்யப்பெற்றது. 1867வாகில் பம்பாய் நகரத்தார்கள் நாசிக் பஞ்சவடியில் சத்திரம் நிறுவி தண்டாயுதபாணி திருவுருவத்தை பிரதிஷ்டை செய்தனர்.

1880 முதல் கல்கத்தா நகரத்தார்கள் கிளைச்சத்திரங்களை ஆரம்பித்தார்கள். காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரமும் அதைச் சார்ந்த கிளைச் சத்திரங்களும் கல்கத்தா நகரத்தார்களின் மேற்பார்வையில் இயங்கி வந்தன. நாசிக் பஞ்சவடி சத்திரம் மட்டும் பம்பாய் நகரத்தார்கள் மேற்பார்வையில் இருந்து வந்தது. பல காரணங்களால் கல்கத்தாவில் நகரத்தார்களின் கடைகள் எண்ணிக்கையில் குறைந்தன. பல கடைகள் கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்கு மாற்றப்பெற்றன. செல்வம் பெருக்கிய நகரத்தார்கள் சிவமும் பெருக்கப் பெரு விருப்பம் கொண்டனர். கல்கத்தா நகரத்தார்கள் பர்மா நகரத்தார்களிடம் நகரச்சத்திர நிர்வாகத்தையும் அதைச் சார்ந்த கிளைச் சத்திரங்களின் நிர்வாகத்தையும் 1925ல் ஒப்புவித்தனர். பர்மா நகரத்தார்களும் அதை மன மகிழ்வுடன் ஒப்புக்கொண்டனர்.

1925ம் ஆண்டுக்குப் பின் இரங்கூன் நகரத்தார்கள் காசிச்சத்திரத்துக்கு மகமை எழுதினர். காசி முதலிய சத்திரங்களின் ஆட்சி இரங்கூன் நகரத்தார்களின் மேற்பார்வையில் நடைபெறத் தொடங்கியது. இந்த ஆட்சி முறை இன்னும் சிறப்பாக விளங்குவதற்காக 1934ம் ஆண்டில் இரங்கூன் நகரத்தார்கள் கூடி சொசைட்டியை உருவாக்கினர். 10-9-1934ல் பவ ஆவணி 25ம் தேதி காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மானேஜிங் சொசைட்டி இரங்கூன் சப்ரிஜிஸ்ட்டிரார் ஆபீசில் பதிவுசெய்யப்பெற்றது.

இரங்கூன் நகரத்தார்கள் பர்மாவில் உள்ள தண்டாயுதபாணி கோவிலுக்குத் தைப்பூசம் மகமை எழுதி வருவதோடு காசிச்சத்திரத்துக்கு ரூ. 1,000த்துக்கு அரைக்கால் வீதம் ஆண்டுதோறும் மகமை எழுதி வருவதென்று ஒருமனதாய் தீர்மானித்தனர். மலாயா, செய்கோன், இலங்கை நகரத்தார்களுக்கும் எழுதி மகமை வசூலிப்பதென்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்றது.

கல்கத்தாவிலும் கோதாவரியிலும் அந்தந்த ஊர்களில் கிடைத்த வீட்டு வாடகைகளைக் கொண்டே எல்லாச் செலவுகளும் செய்யப்பெற்றுவந்தன. ஏனைய 6 சத்திரங்களுக்கும் வாடகைச் சத்திரத்தில் நடந்துவந்த ஹரித்துவார் சத்திரத்திற்கும் இரங்கூன் தலைமைக் காரியாலயத்திலிருந்து மாதம் ரூ. 3,000/- அனுப்பப் பெற்று வந்தது. பிறகு செலவுகளைச் சிக்கனமாகச் செய்ய ஏற்பாடு ஆகி ரூ. 2,000/- மட்டும் அனுப்ப பெற்றது.

நிர்வாக சபையார் சத்திரங்களில் கட்டிடங்களை அவ்வப்போது பழுது பார்த்தும் புதுப்பித்தும் தேவையில்லாத இடங்கள் முதலியவற்றை விற்றும் சத்திரங்களின் நலத்தைப் பேணி வந்திருக்கிறார்கள்.

காசி விசுவேசர் கோவில் மகந்து பங்காளிகளுக்குள் கோவில் நிர்வாகம் பற்றி சச்சரவு உண்டாகி வழக்கு நடந்தது. மகந்துகளுக்குள் ஒற்று மையில்லாத நிலையில், காசி விசுவேசர் கோயில் நிர்வாகத்தை நடத்தும் பொறு ப்பை நகரத்தார்களே ஏற்க வேண்டுமென்று அலஹாபாத் உயர்நீதி மன்றம் ஆணையிட்டது. இந்நிகழ்ச்சி நகரத்தார்களுடைய ஆழ்ந்த தெய்வபக்திக்கும் சீலத்துக்கும், அவை வடஇந்திய மக்களால் மதிக்கப் பெற்றதற்கும் எடுத்துக் காட்டாகும். நகரத்தார்களின் இறைப்பணியைப் போற்றிப் பிறப்பிக்கப்ட்ட இந்த ஆணைக் கிணங்க காசி சத்திர ஏஜெண்ட், கோவில் ரிசிவராக இருந்து வருவதற்கு நிர்வாக சபை இசைவு தெரிவித்தது.

நகரத்தார் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க, நிர்வாக சபையார், நாசிக் பஞ்சவடி நகரச்சத்திரம், கார்த்திக் சுவாமி கோவில் அவைகளின் சொத்துக்கள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டு 1940ம் ஆண்டு முதல் அவற்றின் ஆட்சியையும் பொறுப்புடன் கவனித்து வந்தனர்.

1942ல் பர்மாவில் ஜப்பானியருடைய ஆட்சி ஏற்பட்டு இந்தியாவிற்கும், பர்மாவிற்கும் போக்குவரத்து இல்லாதிருந்தது. இதனால் நிர்வாக சபை செயலாற்ற இயலாது போயிற்று இருப்பினும் அறச்செயல்கள் நின்றுவிட வில்லை. பூஜைகளும் ஏனைய செயல்களும் செம்மையாக நடைபெற நகரத்தார்கள் சுபானு வருடம் ஆவணி 24ல் 9-9-1943ல் காரைக்குடி அறுபத்தி மூவர் குருபூஜை மடத்தில் கூடி காசி நகரச் சத்திரத்தின் தற்காலிக நிர்வாகத்துக்கு ஒரு குழுவை அமைத்தனர்.

தேவகோட்டை அள.சுப.பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இக்குழுவின் தலைவராகவும் காரைக்குடி மெ.செ.சு. சிதம்பரம் செட்டியாரவர்கள் செயலாளராகவும் கானாடுகாத்தான் மு.சித.மு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் இருந்து சத்திரம் தொடர்ந்து பணியாற்ற உதவினர். 1953ல் பர்மா நகரத்தார்களிடம் திரும்ப நிர்வாகத்தை ஒப்புவித்தனர்.

போருக்குப் பின் 8-6-1953ல் விஜய வைகாசி 26ம் தேதி இரங்கூன் நகரத்தார்கள் கூடி தலைவர், உபதலைவர் காரியதரிசி முதலியவர்களையும் நிர்வாக சபை அங்கத்தினர்களையும் காரியசபை அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுத்தனர்.

மலாய் நாட்டில் நன்கொடை வசூலிப்பதற்கான முயற்சிகளை சொசைட்டி மேற்கொண்டது. சொசைட்டி பிரதிநிதிகளாக இரங்கூன் சொ.மு.அ.மெ.ராம ஏஜெண்ட் பழ. சண்முகம் செட்டியார் அவர்களும் ராம.பெ.அழ. ஏஜெண்ட அண்ணாமலை செட்டியார் அவர்களும் பினாங்கு முதல் சிங்கப்பூர் வரை பல ஊர்களுக்குச் சென்று நகரத்தார்களைச் சந்தித்தனர். இதன் பயனாக மலாயா நகரத்தார்கள் ரூ. 80,666 நன்கொடை வழங்கினர்.

1955 லிருந்து 1959 வரை பர்மா நகரத்தார்கள் காசிச்சத்திரம், கிளைச் சத்திரங்களை மராமத்து செய்துள்ளார்கள்.

1955-56 வரை இரங்கூன் நகரத்தார்கள் மகமையும் நன்கொடையும் தந்தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி.

1958-59ல் செய்கோன் நகரத்தார்கள் ரூ.3,000/- அனுப்பி உதவினர்.

1959ம் ஆண்டில் சொசைட்டி பிரதிநிதிகளாக இரங்கூன் சொ.மு.அ.மெ.மு. ஏஜெண்ட் பழ. சண்முகம் செட்டியார் அவர்களும் ராம. வீர. ராமசாமி செட்டியாரவர்களும் காசிக்குப் போய் அவ்விடத்தில் அன்றாட உபயோகத்தில் இல்லாதிருந்த உபரி நகைகளும் வெள்ளி சாமான்களும் ரூ. 44,579க்கு விற்றுக் கொடுத்தனர். அப்பணம், காசி கிளை ஸ்டேட்பாங்கில் டெபாசிட் செய்யப்பெற்றது.

11-2-1962ல் காசியில் நமது நகரேஸ்வரர் கோவிலில் உள்ள மூர்த்திகளுக்கு மருந்து சாந்தி அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

1963ல் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அதற்காக ஒரு மலரும் வெளியிடப்பெற்றது.

பர்மாவிலிருந்து நம்மவர்கள் பெரும் பகுதியினர் ஊர்வர நேர்ந்ததால் சொசைட்டியின் நிர்வாகத்தை இந்தியாவிலுள்ள நம்மவர்களிடம் ஒப்புவிப்பதென இரங்கூனில் 12-4-1964 தேதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது. சொசைட்டியின் பொறுப்புகளை இந்தியாவில் நகரத்தார் பொதுக் கூட்டம் கூட்டி ஒப்புவிக்கவும் சொசைட்டியை இந்தியாவில் ரிஜிஸ்தர் செய்யவும் சொசைட்டிக்கு நிரந்தர வருமானம் கிடைக்க தோதாக மேலும் சொத்துக்கள் வாங்கிவைக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை செய்ய மேற்படி கூட்டத்தில் 16பேர் கொண்ட ஒரு இடைக்காலக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அந்த கமிட்டிக்கு அரு.சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். மேற்படியார்கள் பதவியை ராஜிநாமச் செய்ததால் 29-8-1968ல் கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். 12-4-1964 முதல் 8-2-1970 வரை சொசைட்டியின் நிர்வாகம் இடைக்கால கமிட்டியினரால் நடத்திரவரப்பெற்றது. பர்மா நகரத்தார்களின் விருப்பப்படி 31-3-1965ல் சொசைட்டியை இந்தியாவில் ரிஜிஸ்தர் செய்தும் 2-8-1967ல் மதுரையில் கீழமாரட் தெருவில் ஒரு வீடு வாங்கி புதுப்பித்தும், இந்தியாவில் 76 ஊர் நகரத்தார்கள் கூட்டத்தை கோவிலூரில் கூட்டி அந்தக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பெற்ற செயற்குழுவிடம் நிர்வாகத்தை 9-2-1970ல் ஒப்புவித்தனர்.

1932ல் ஹரித்துவாரில் பாய் நாதா சிங் தர்மசாலையில் சில பகுதிகளை வாடகைக்குப் பிடித்து நகரச் சத்திரம் நடைபெற்று வந்தது. ஹரித்துவாரம், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதாரிநாத் செல்பவர்களுக்கு இந்தச்சத்திரம் மிகவும் பயன்பட்டு வந்தது. 1942ல் பர்மாவிலிருந்து பணம் வருவது தடைபட்டது. வாடகைக் கட்டிடம் காலி செய்யப்பெற்றது.

பர்மா நகரத்தார்களால் நிறுவப்பெற்ற இடைக்கால கமிட்டியார் இந்தியாவில் 76 ஊர் நகரத்தார்களால் 9-2-1970ல் தேர்ந்தெடுக்கப்பெற்ற செயற்குழுவினரிடம் கீழ்கண்ட ஊர்களில் உள்ள சத்திரங்களையும் அந்தந்த சத்திரங்களுக்கு சொந்தமான சொத்துக்களையும் ஒப்புவித்தனர்.

1. ஸ்ரீ காசி
2. அயோத்தி
3. பிரயாகை
4. கயா
5. கல்கத்தா
6. தாரகேசுவரம்
7. நாசிக் பஞ்சவடி
8. கோதாவரி



காளிகாட் வீடும் ஒப்புவிக்கப்பெற்றது. இரங்கூன் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் கோவில்கள் தர்மபரிபாலன சபையால் 23-9-1974ல் நம் சொசைட்டியிடம் இரங்கூன் நகர விடுதி நிர்வாகம் ஒப்புவிக்கப்பெற்றது. கோதாவரியிலிருந்த சத்திரம் ஒன்றுக்கும் உபயோகமில்லாமலும் பெரிதும் பழுதடைந்து விட்டதால் 2-8-1982ல் விற்கப்பெற்றது.

காளிகாட் வீடும் ரொம்ப பழுதடைந்திருக்கிறது. வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

தற்போது நமது சொசைட்டியின் நிர்வாகத்தில் கீழ்கண்ட சத்திரங்கள் இருக்கின்றன.

1. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், வாரணாசி
2. நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், பிரயாகை
3. நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், அயோத்தியா
4. நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், கயா
5. நகரத்தார் ஹவுஸ், கல்கத்தா
6. நகரமடம், தாரகேசுவரம்
7. நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், நாசிக் பஞ்சவடி
8. ரெங்கோன் நகர விடுதி, சென்னை
9. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக்கழகம், காரைக்குடி (காரைக்குடி நகர விடுதி)

9-2-1970ல் நிர்வாகம் ஒப்புக்கொண்ட பின் காசியில் பசுமடம் இடத்தில் ஐந்து கடைகளும் தாரகேஸ்வரம நமது மடத்தின் முன் பகுதியில் மேல்மாடியுடன் கூடிய நாலு கடைகளும் புதிதாகக் கட்டி வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. காசிச் சத்திரத்தில் தொலைபேசி (டெலிபோன்) வைக்கப்பெற்றது.

1983க்குப் பின் காசிச்சத்திரம், பிரயாகைச்சத்திரம், நாசிக் பஞ்சவடி சத்திரம், அயோத்தி சத்திரம், கயா சத்திரம், இரங்கோன் நகரவிடுதி ஆகிய சத்திரங்களில் மராமத்து செய்தும் எல்லா சத்திரங்களிலும் கழிவறைகள் குளியல் அறைகள் வசதியும் பைப்பு போட்டு தண்ணீர் வசதியும் செய்யப்பெற்றன.

**கும்பாபிஷேகம்** - ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவிலில் 1-11-1971லும், 22-11-1985லும் 10-11-1999லும் நாசிக் பஞ்சவடி கார்த்திக் சுவாமி கோயிலில் 28-1-1972லும் 9-9-1992லும் காசியில் நகரேஸ்வரர் கோவிலில் 29-10-1978லும் 7-11-1994லும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**கல்வி நிதி உதவி** - வசதி குறைந்த மாணவ, மாணவியர்களுக்கு பிளஸ் 2 வகுப்புகளுக்கும் பட்டதாரி வகுப்புகளுக்கும் தொழில் கல்வி கற்கவும், இலவச நிதி உதவி வழங்கப்படுகின்றது. வசதி குறைந்த மாணவிகளுக்கு தையல், டைப்ரைட்டிங் வகுப்புகளுக்கு இலவசநிதி உதவி வழங்கப் பெறுகிறது.

**சிறுதொழில் செய்ய நிதி உதவி** - வசதி குறைந்த பெண்களுக்கு திருமணமாகும் போது அவர்கள் சிறுதொழில் தொடங்க இலவச நிதி உதவி வழங்கப்பெறுகிறது.

இந்த சொசைட்டியின் பதிவு அலுவலகம் வாரணாசியிலும், நிர்வாக அலுவலகம் காரைக்குடியிலும், மத்திய அலுவலகம் சென்னையிலும் இருக்கின்றன.

காசி சத்திரத்துக்கும் அதனைச் சார்ந்த சத்திரங்களுக்கும் செல்லும் அனைவருக்கும் ஜாதி மத வேறு பாடின்றி அனைத்து வசதிகளும் செய்யப்பெறுகிறது. ஆனால் நன்கொடைகள் நகரத்தாரல்லாதவர் யாரிடத்திலும் பெறுவதில்லை.

**நித்திய கட்டளை நிதி** - ஸ்ரீ காசியில் ஸ்ரீ விஸ்வேசுவரப் பெருமானுக்கு நம் நகரத்தார்கள் தொன்று தொட்டு செய்து வரும் அபிஷேக ஆராதனையோடு நித்திய கட்டளை உபயதார்கள் தரும் மூலதனத்துக்குள்ள வட்டியையும் கொண்டு தினந்தோறும் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக செய்து வருகிறோம். ஸ்ரீ காசியில், நம் நகரத்தார் குடும்பம் ஒவ்வொருவருக்கும் என்றைக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அதற்கு ரூ. 1,001/- ஆயிரத்தி ஒன்று கொடுத்தால் வருடத்தில் ஒரு நாள் ஸ்ரீ காசியில், அவர்கள் பெயரால் அவர்கள் குறிப்பிடும் ஆங்கில மாதம் தேதியில் அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் அனுப்பிவைக்கப்பெறும். அவர்கள் வெளிநாட்டில் இருந்தாலும் அந்த முகவரிக்கு விபூதி பிரசாதம் அனுப்பிவைக்கப்பெறும்.

இந்த அர்ச்சனை அவர்களின் குடும்பத்தாருக்கு பரம்பரையாக அவர்கள் குறிப்பிடும் பெயருக்கு தொடர்ந்து செய்து வைக்கப்பெற்று விபூதி பிரசாதம் அனுப்பி வைக்கப்பெறும். ஆகவே நகரத்தார் பெருமக்கள் அனைவரும் ரூ. 1001/-க்கு SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM MANAGING SOCIETY என்ற பெயருக்கு டிராப்டு எடுத்து No 5 மேற்கு வடம் போக்கித் தெரு சிவன்கோவில் அருகில், **காரைக்குடி** - 630 001 என்ற முகவரிக்கு அனுப்பி ஆண்டவனின் திருவருளைப் பெற வேண்டுகிறோம். **காரைக்குடியில்** நமது நிர்வாக அலுவலகம் முதலில் மேலமடத்திலும் அதன்பின் இந்து மதாபிமான சங்கக்கட்டிடத்திலும் இருந்தது. நமது தலைமை அலுவலகத்துக்கும் நம்மவர்கள் வந்து சௌகர்யமாகத் தங்கிப் போகவும் காரைக்குடி நகரச் சிவன் கோவில் கிணற்றடிக் காளி அம்மன் கோவில் அருகே காரைக்குடி நகரத்தார்கள் வழங்கிய காலிஇடத்தில் புதிய கட்டிடம் கட்டப்பெற்று 18-1-1991ல் திறப்பு விழா நடைபெற்றது. அதோடு ஸ்ரீ காசி விநாயகர் திருவுருவமும் நமது கட்டிடத்தில் உள்ள காலி இடத்தில் கருவறை கட்டி பிரதிஷ்டை செய்யப்பெற்று தினந்தோறும் பூஜைகள் சிறப்பாகச் செய்யப்படுகிறது. நமது கட்டிடத்தை சுற்றி உள்ள காலி இடத்தில் தென்னை மரங்கள் வில்வ மரங்கள் பூச்செடிகள் நிறைய உண்டாக்கியிருக்கிறோம். புஸ்பங்கள் ஏராளமாகக் கிடைப்பதால் ஸ்ரீ காசி விநயாகப் பெருமானுக்கு தினந்தோறும் அபிஷேகம் முடிந்ததும் புஸ்ப அலங்காரங்கள் சிறப்பாக செய்யப்படுகிறது.

இந்தக் கட்டிடத்துக்கு மேல்மாடி கட்டி 9-2-1997ல் திறப்பு விழா நடைபெற்றது.

இந்தக் கட்டிடத்தில் இரண்டு ஹால்கள் இருக்கின்றன. இரவு நேரங்களில் உபயோகப்படுத்த ஒவ்வொரு ஹால்களுக்குப் பக்கத்திலும் கழிவறை வசதியுள்ள ரூம் கட்டியிருக்கிறது. பகல் நேரங்களில் உபயோகப்படுத்த கட்டிடத்தின் பின்பகுதியில் உள்ள காலி இடத்தில் ஆண்களுக்கு இரண்டு குளியல் அறைகளும், இரண்டு கழிவறைகளும், பெண்களுக்கு இரண்டு குளியல் அறைகளும் இரண்டு கழிவறைகளும் கட்டியிருக்கிறது.

குளியல் அறை கழிவறை வசதியுடன் கூடிய தங்கும் அறைகள் 7 இருக்கிறது. சாமான்கள் பாதுகாப்பாக வைக்க லாக்கர்கள் 24 இருக்கிறது.

1. **இங்கு கங்கைத் தீர்த்தம் கிடைக்கும்.** பாத்திரம் கொண்டு வந்து வாங்கிச் செல்லலாம்.

2. இங்கு திருமணத்திற்கு பெண்பார்க்கவும், திருமணம் பேசி முடிக்கவும் கட்டணம் ஏதுமின்றி இடம் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது.

## காசியில் கருடனும் பல்லியும்

இலங்கையில் இராவணனைக் கொன்று மீண்ட இராமர், தம் பாவத்தைப் போக்கிக்கொள்ள விரும்பி, இராமேச்சுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபடக் கருதினார். சிவலிங்கம் ஒன்று கொண்டு வரும்படி அனுமாரைக் காசிக்கு அனுப்பினார்.

அனுமார் காசிக்குச் சென்றார். அங்கே கருடன் வட்டமிட்டுப் பறந்ததும், பல்லி திருவுளம் சொல்லியதுமான இடத்தில் உள்ள சுயம்புலிங்கத்தை எடுத்துக் கொண்டு இராமேச்சுரம் திரும்பினார்.

காசியும் அதன் சுற்றுப்புறமும் வயிரவர் காவலுக்கு உரியவை. வயிரவர் இசைவு இன்றி இலிங்கத்தை எடுத்தபடியால் அனுமாருக்கும், வயிரவருக்கும் போர் மூண்டது.

அப்பொழுது அனுமார் கருடன் வட்டமிட்டதையும், பல்லி திருவுளம் சொல்லியதையும் கூறினார்.

அதுகேட்ட வயிரவர், அன்று முதல் கருடனும் பல்லியும் காசியில் பறக்கவும், திருவுளம் சொல்லவும் கூடாது என்று சாபமிட்டார். இன்றும், காசியில் கருடன் பறப்பதில்லை. பல்லி திருவுளம் சொல்லுவதுமில்லை.

மாடு முட்டுவதில்லை - மலர் மணப்பதில்லை

பிணம் வீசுவதில்லை - காக்கை பறப்பதில்லை

## ஸ்ரீ காசிநாட்டுக்கோட்டை நகரச்சத்திர மானேஜிங் சொஸைட்டியில் இதுவரை தலைவர், காரியதரிசி பதவிகள் வகித்தவர்களின் விபரம்

| வருஷம் | திருவாளர்கள் | |
|---|---|---|
| 1934 | சா.அ.ச. ராமன் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | சுப.க.அ. லெட்சுமணன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1936 | அள.வீர.பெ. லெட்சுமணன் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| 1937 | அ.க.அ.சித.வெ. சிதம்பரம் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | அள.வீர.பெ. சிவப்பிரகாசம் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1940 | சா.ராம.சித.ச. ராமசாமி செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1941 | சா.ராம.சித.ச. நாச்சியப்ப செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1946 | கூ.கரு.நா. நாராயணன் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | சி.கரு.ஆ.கரு. ராமனாதன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1948 | கூ.கரு.நா.கண்ணப்ப செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| 1949 | கூ.கரு.நா. நாராயணன் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| 1950 | அள.வீர.வெ.பெ. அருணாசலம் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | கூ.அரு.சித.நா. சோமசுந்தரம் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1951 | கூ.கரு.நா. நாராயணன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1953 | ராம.வீர. ராமசாமி செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | ராம.பெ.அள. அண்ணாமலை செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1955 | மு.அள. நடராசன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| | ராம.அரு.அரு.வீர. ராமசாமி செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | கூ.அரு.க.வயி.சொ. கண்ணப்ப செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1956 | கூ.கரு.நா. நாராயணன் செட்டியார், காரியதரி சி | இரங்கூன் |
| 1957 | ராம.பெ.அள. சொக்கலிங்கம் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | சா.ராம.அரு.ராம. ராமசாமி செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1959 | சொ.மு.அ.மெ.மு. சண்முகம் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| 1961 | மு.சிவ. சிவப்பிரகாசம் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | அரு.சு. சுப்பிரமணியன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |
| 1963 | முருகப்பா அன் சன்ஸ் நடராசன் செட்டியார், தலைவர் | இரங்கூன் |
| | அரு.சு. சுப்பிரமணியன் செட்டியார், காரியதரிசி | இரங்கூன் |

### இடைக்கால கமிட்டி
### காரியதரிசி

1964-1968 அரு.சு. சுப்பிரமணியன் செட்டியார், நாட்டரசன்கோட்டை

1968-1970 கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார், நாட்டரசன்கோட்டை

## 1970 முதல் தலைவர் காரியதரிசி பொருளாளர் பதவி வகித்தவர்களின் விபரம்

### தலைவர்

1970-1977 அள.அரு. சோமநாதன் செட்டியார், தேவகோட்டை.
1977-1980 அ.ராம.அ.லெ.அ.முவீ. முத்துவீரப்ப செட்டியார், தேவகோட்டை
1980-1984 சி.க.அரு. சோம இராமநாதன் செட்டியார், ஒக்கூர்
1984-1989 உராம.மெ.சுப.சேவு.அ. அண்ணாமலை செட்டியார், தேவகோட்டை
1989-1998 சுப. சண்முகம் செட்டியார், கண்டனூர்

### காரியதரிசி

1970-1973 கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார், நாட்டரசன்கோட்டை

### கூட்டுக்காரியதரிசிகள்

1973-1980 கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார், நாட்டரசன் கோட்டை
1973-1980 ராம ஸ்ரீனிவாசன் செட்டியார் ராயவரம்

### காரியதரிசி

1980-1984 எஸ்.பி.எஸ். மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை
1984-1989 சுப. சண்முகம் செட்டியார், கண்டனூர்
1989-1990 ராம. முத்தழகப்ப செட்டியார், கோனாபட்டு
1990-1998 சித. நடராஜன் செட்டியார், கொ. லெட்சுமிபுரம்

### பொருளாளர்கள்

1970-1980 அராம.அ.லெ.அ.முவீ. முத்துவீரப்ப செட்டியார், தேவகோட்டை
1980-1983 வயிநாகரம் சோம. கருப்பன் செட்டியார், அமராவதி புதூர்
1983-1984 அ.ந. முத்துக்கருப்பன் செட்டியார், சிறுகூடற்பட்டி
1984-1989 மெ.செ.ச.மு.மெ. முத்துராமன் செட்டியார், காரைக்குடி
1989-1998 கே. கண்ணப்ப செட்டியார், நாட்டரசன்கோட்டை

## பர்மா நகரத்தார்களால் நியமிக்கப்பெற்ற இடைக்காலக் கமிட்டி உறுப்பினர்கள் 1964-70

| | |
|---|---|
| திரு. மு.பழ. நடராஜன் செட்டியார் | நாட்டரசன் கோட்டை |
| திரு. அரு.சு. சுப்பிரமணியன் செட்டியார் | நாட்டரசன் கோட்டை |
| திரு. பி.சு.வ. பழநியப்ப செட்டியார் | கடியாபட்டி, விஸ்வனாதபுரம் |
| திரு. ப.மு. முத்தையா செட்டியார் | புதுப்பட்டி |
| திரு. சொ.சுப. சுப்பிரமணியன் செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. அரு. காந்தி அண்ணாமலை செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. நா.லெ. ராமனாதன் செட்டியார் | ஒக்கூர் |
| திரு. பழ. சண்முகம் செட்டியார் | கடியாபட்டி ராமச்சந்திரபுரம் |
| திரு. சித.கும. சிதம்பரம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. லெ.பழ.அரு. அருணாசலம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. ஆ.விக.மெ.அரு. தியாகராஜன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. வெ.பெரி.பழ. காசிவிஸ்வநாதன் செட்டியார் | பாகனேரி |
| திரு. கண.க.சொ.கண. கண்ணப்ப செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. ராம. ஸ்ரீனிவாசன் செட்டியார் | ராயவரம் |
| திரு. மது.கும. நடராஜன் செட்டியார் | வலையபட்டி |

## 9-2-1970 முதல் 22-3-1998க் கிடையில் துணைத்தலைவர் பதவி வகித்தவர்கள்

| | |
|---|---|
| திரு. சி.க.அரு.சோம. இராமநாதன் செட்டியார் | ஒக்கூர் |
| திரு. மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. சாநா.அ.சொ. அண்ணாமலை செட்டியார் | காரைக்குடி |
| திரு. மு.வ.மு. இராமனாதன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. சு.மு.பழ. நாச்சியப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. RM. முத்துப்பழநியப்ப செட்டியார் | பாகனேரி |
| திரு. மதுகும. நடராஜன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. மெ. நடராஜன் செட்டியார் | நாட்டரசன் கோட்டை |
| திரு. டாக்டர் முரு. முத்தையா செட்டியார் | கோட்டையூர் |
| திரு. மா. கருப்பையா செட்டியார் | கண்டவறாயன்பட்டி |

## 9-2-1970 முதல் 22-3-1998க்கிடையில் துணைச்செயலர்களாக பதவி வகித்தவர்கள்

| | |
|---|---|
| திரு. மெ.செ.ச.மு.மெ. முத்துராமன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. மது.கும. மதுவப்ப செட்டியார் | வலையபட்டி |
| திரு. சுப. சண்முகம் செட்டியார் | கண்டனூர் |
| திரு. RM. நாராயணன் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. நா.சுப. மணியன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. லெ.மு.மு. முத்துமாணிக்கம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. புலவர் அ.நா. மலையாண்டி செட்டியார் | வலையபட்டி |

## 9-2-1970 முதல் 22-3-1998க்கிடையில் செயற்குழு உறுப்பினர்களாக பதவி வகித்தவர்கள்

| | |
|---|---|
| திரு. ராம ஸ்ரீனிவாசன் செட்டியார் | ராயவரம் |
| திரு. பி.சு.வ. பழநியப்ப செட்டியார் | கடியாபட்டி, விஸ்வநாதபுரம் |
| திரு. சா. கணேசன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. எஸ். மெய்யப்ப செட்டியார் | புதுவயல் |
| திரு. சுப. அருணாசலம் செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. சுப. சண்முகம் செட்டியார் | கண்டனூர் |
| திரு. சு.வி.நா. நாகப்ப செட்டியார் | நாச்சியாபுரம் |
| திரு. கும.நா.சுப.நா. மாணிக்கம் செட்டியார் | செம்பனூர் |
| திரு. வெ.கண. கண்ணப்ப செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. பெரி.அழ.மு.மு. அண்ணாமலை செட்டியார் | பாகனேரி |
| திரு. முபமு. ராமசாமி செட்டியார் | கொப்பனாபட்டி |
| திரு. KM.PR. முத்துராமன் செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. மு.கரு.ராம. ராமசாமி செட்டியார் | குழிபிறை |
| திரு. சோம லெ | நெற்குப்பை |
| திரு. ஆவிகமெ. அரு. தியாகராஜன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. பெரி.சி. சின்னக்கருப்பன் செட்டியார் | குழிபிறை |
| திரு. மெ.சித. சிதம்பரம் செட்டியார் | கோனாபட்டு |
| திரு. சி.நா.ராம.ராம. ராமநாதன் செட்டியார் | ஆத்தங்குடி |
| திரு. பழ.லெ. பழநியப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. RM. நாராயணன் செட்டியார் | கண்டரமாணிக்கம் |
| திரு. முரு.ராம.முரு. முருகப்ப செட்டியார் | நடராஜபுரம் |
| திரு. கூ.அரு.க.அரு.க. கண்ணப்ப செட்டியார் | கீழப்பூங்குடி |
| திரு. வெ.பெரி.பழ.மு. காசிவிஸ்வநாதன் செட்டியார் | பாகனேரி |
| திரு. அபிசீனியா பழ. நாச்சியப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. L. சோமு செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. கா.சுப.சொ.கதி. காளையப்ப செட்டியார் | பாகனேரி |
| திரு. கூ.அரு.க.அரு. சொக்கலிங்கம் செட்டியார் | கீழப்பூங்குடி |
| திரு. மு.பழ. நடராஜன் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. வ.நா.சித. சிதம்பரம் செட்டியார் | ராங்கியம் |
| திரு. சித.அரு. அருணாசலம் செட்டியார் | கண்டனூர் |
| திரு. அ.ராம.அ.லெ.அ.மு.வீ. முத்துவீரப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. மதுகும. மதுவப்ப செட்டியார் | வலையபட்டி |
| திரு. கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. மெ.செ.ச.மு.மெ. முத்துராமன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. அ.ந. முத்துக்கருப்பன் செட்டியார் | சிறுகூடற்பட்டி |
| திரு. அரு.கி. கிருஷ்ணன் செட்டியார் | பாகனேரி |
| திரு. பெரி. வேலாயுதம் செட்டியார் | குழிபிறை |
| திரு. நாக.ராம. ராமசாமி செட்டியார் | பொன் புதுப்பட்டி |

| | |
|---|---|
| திரு. RM. ரெங்கநாதன் செட்டியார் | கருங்குளம் |
| திரு. சிக.அரு. சோம இராமநாதன் செட்டியார் | ஒக்கூர் |
| திரு. சுப.சொ. சுப்பிரமணியன் செட்டியார் | நாச்சியாபுரம் |
| திரு. அ.ராம.தெ.அழ. தேனப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. அள.அரு.சோம. நாராயணன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. RM. பழநியப்ப செட்டியார் | மேலச்சிவபுரி |
| திரு. A.K.A.CT.AL. சிதம்பரம் செட்டியார் | கோட்டையூர் |
| திரு. பெரி.பழ. ராமசாமி செட்டியார் | விராமதி |
| திரு. SP. மணியன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. பெரி.சித. லெட்சுமணன் செட்டியார் | கடியாபட்டி |
| திரு. K.V.RM. மாணிக்கம் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. SP.S. மெய்யப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. SP. தியாகராஜன் செட்டியார் | கொப்பனாபட்டி |
| திரு. RM. ஜோதிலிங்கம் செட்டியார் | வி. லெட்சுமிபுரம் |
| திரு. வே. வேலாயுதம் செட்டியார் | பாகனேரி |
| திரு. S.N. சுப்பிரமணியன் செட்டியார் | செம்பனூர் |
| திரு. தெ.பழ. அழகப்பசெட்டியார் (எ) குழந்தையன் செட்டியார் | வேந்தன்பட்டி |
| திரு. நா. அருணாசலம் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. செல்லகணபதி செட்டியார் | கண்டனூர் |
| திரு. CT. நடராஜன் செட்டியார் | கொ. லெட்சுமிபுரம் |
| திரு. V.MR.P.K. நாச்சியப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. AL.AR.V. காளைராஜா செட்டியார் | தேவகோட்டை |
| திரு. உராமமெ.சுப.சேவு.அ. அண்ணாமலை செட்டியார் | தேவகோட்டை |
| திரு. முராம. சொ.பெரி. சொக்கலிங்கம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. அண. சோமசுந்தரம் செட்டியார் | அரிமளம் |
| திரு. ராம. சண்முகம் செட்டியார் | கோனாபட்டு |
| திரு. ராம. ராமசாமி செட்டியார் | ராயவரம் |
| திரு. Y.ST.L. சிதம்பரம் செட்டியார் | குழிபிறை |
| திரு. N. சுப்பிரமணியன் செட்டியார் | கீழச்சிவல்பட்டி |
| திரு. ராம. திருநாவுக்கரசு செட்டியார் | நெற்குப்பை |
| திரு. மெ. நடராஜன் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. சோம.லெ. வெள்ளையன் செட்டியார் | தேவகோட்டை |

உ

சிவமயம்

# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மை கழகம், காரைக்குடி

## 22.3.1998ல் தேர்ந்தெடுக்கப்பெற்ற செயற்குழு

தலைவர் :

| | |
|---|---|
| திரு. டாக்டர். முரு. முத்தையா செட்டியார் | கோட்டையூர் (மதுரை) |

துணைத் தலைவர்கள் :

| | |
|---|---|
| திரு. S.O.RM. கணபதி செட்டியார் | கண்டவராயன்பட்டி (மதுரை) |
| திரு. S.KR. பழநியப்ப செட்டியார் | சொக்கலிங்கம்புதூர் |

காரியதரிசி :

| | |
|---|---|
| திரு. K. கண்ணப்ப செட்டியர் | நாட்டரசன்கோட்டை (சென்னை) |

துணைக் காரியதரிசிகள் :

| | |
|---|---|
| திரு. "பழம்நீ"லெ.மு.மு. முத்துமாணிக்கம் செட்டியார் | தேவகோட்டை (மதுரை) |
| திரு. வ.ராம.வீர.ராம. ராமசாமி செட்டியார் | காரைக்குடி |

பொருளாளர் :

| | |
|---|---|
| திரு. Y.ST.L. சிதம்பரம் செட்டியார் | குழிபிறை, (புதுக்கோட்டை) |

உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| திரு. சுப. சண்முகம் செட்டியார் | கண்டனூர் (திருச்சி) |
| திரு. CT. நடராஜன் செட்டியார் | கொ. லெட்சுமிபுரம், (காரைக்குடி) |
| திரு. AL.AR.SM. நாராயணன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. KR. முத்தையா செட்டியார் | தேவகோட்டை |
| திரு. A. திருநாவுக்கரசு செட்டியார் | காரைக்குடி |
| திரு. RM. ராமசாமி செட்டியார் | ராயவரம் |
| திரு. O. அழகப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. T. சிவனடியான் செட்டியார் | பனையபட்டி |
| திரு. முரு.ராம.மு. ராமன் செட்டியார் | விராய்ச்சிலை, (சென்னை) |
| திரு. Y. பழநியப்ப செட்டியார் | மிதிலைப்பட்டி, (தஞ்சாவூர்) |
| திரு. P. KT. சிங்காரம் செட்டியார் | வலையபட்டி |
| திரு. PL. சொக்கலிங்கம் செட்டியார் | வேகுப்பட்டி, (புதுக்கோட்டை) |
| திரு. N. லெட்சுமணன் செட்டியார் | நாட்டரசன்கோட்டை, (தஞ்சாவூர்) |
| திரு. முத்து.உல.சுப. உலகப்ப செட்டியார் | நடராஜபுரம், (மதுரை) |
| திரு. T. வேலாயுதம் செட்டியார் | கொ.அழகாபுரி, (காரைக்குடி) |

கணக்கு தணிக்கையாளர்கள் :

| | |
|---|---|
| திரு. ராம. ராமனாதன், F.C.A. | சென்னை |
| திரு. சொ. ராமனாதன், F.C.A. | புதுக்கோட்டை |

பொதுக்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| திரு. V. பெரியணன் செட்டியார் | அரிமழம் |
| திரு. முத்துசெல்லப்ப செட்டியார் | அரிமழம் |
| திரு. ராம. மணி (எ) செல்லப்பன் செட்டியார் | அரிமழம் |
| திரு. A.N. சோமசுந்தரம் செட்டியார் | அரிமழம் |
| திரு. கதி.செ. வள்ளியப்ப செட்டியார் | அரிமழம் |
| திரு. ராம.வெ. வெங்கடாஜலம் செட்டியார் | அரியக்குடி |
| திரு. அரு.ச. சண்முகம் செட்டியார் | அரியக்குடி |
| திரு. சுப.சு. முத்துக்கருப்பன் செட்டியார் | ஆத்தங்குடி |
| திரு. சுப.கு.ராம. சுப்பிரமணியன் செட்டியார் | ஆத்தங்குடி |
| திரு. விசி.நா. சண்முகம் செட்டியார் | ஆத்தங்குடி |
| திரு. சுப. சொக்கலிங்கம் செட்டியார் | ஆத்தங்குடி |
| திரு. SP. நாச்சியப்ப செட்டியார் | ஆ.முத்துபட்டணம் |
| திரு. N.R.CT.N. தண்ணீர்மலை செட்டியார் | ஆ.முத்துபட்டணம் |
| திரு. கா.மு.சுப. அழகப்ப செட்டியார் | ஆத்திகாடு தெக்கூர் |
| திரு. அரு.நா.ராம. சுந்தரம் செட்டியார் | ஆத்திகாடு தெக்கூர் |
| திரு. அ.நா. அண்ணாமலை செட்டியார் | ஆத்திகாடு தெக்கூர் |
| திரு. பெ.சித.லெ. சேவுகன் செட்டியார் | ஆராவயல் |
| திரு. ரெ.சுப. சுப்பிரமணியன் செட்டியார் | ஆராவயல் |
| திரு. ராம.ச. ராமசாமி செட்டியார் | ஆராவயல் |
| திரு. முரு. சாத்தப்ப செட்டியார் | இராமச்சந்திரபுரம் |
| திரு. அரு.அ.மு. தெய்வராயன் செட்டியார் | இராமச்சந்திரபுரம் |
| திரு. வயி.சித. சிதம்பரம் செட்டியார் | இராமச்சந்திரபுரம் |
| திரு. சித.மு. சிதம்பரம் செட்டியார் | இராமச்சந்திரபுரம் |
| திரு. கா.பழ. மீனாட்சி சுந்தரம் செட்டியார் | உலகம்பட்டி |
| திரு. பழ.சிவ. நடராஜன் செட்டியார் | உலகம்பட்டி |
| திரு. மு. பழனியப்ப செட்டியார் | ஓ.சிறுவயல் |
| திரு. PL.S.RM. சுப்பையா செட்டியார் | ஓ.சிறுவயல் |
| திரு. மு.செ.மு.சே.ரெ. சேக்கப்ப செட்டியார் | ஒக்கூர் |
| திரு. S.K.AR.SM. ராமனாதன் செட்டியார் | ஒக்கூர் |
| திரு. அர. சிங்காரவடிவேலன் செட்டியார் | கண்டனூர் |
| திரு. மு.க.வீர. ராமனாதன் செட்டியார் | கண்டனூர் |
| திரு. நா. இராமநாதன் செட்டியார் | கண்டனூர் |
| திரு. சிவ.ராம. ஆவுடையப்ப செட்டியார் | கண்டனூர் |
| திரு. மு.நா.நா.நா. நாச்சியப்ப செட்டியார் | கண்டனூர் |

| | |
|---|---|
| திரு. சுப. அழகப்ப செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. AL.S. தியாகராஜன் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. ஆத. தியாகராஜன் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. SM. சிங்காரம் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. நா.பழ.நா.நா. நாச்சியப்ப செட்டியார் | கண்டரமாணிக்கம் |
| திரு. பெ.நா.லெ.நா. திருப்பதி செட்டியார் | கண்டரமாணிக்கம் |
| திரு. பழ.மெ.நா. மெய்யப்ப செட்டியார் | கண்டரமாணிக்கம் |
| திரு. நா. தியாகராசன் செட்டியார் | கண்டரமாணிக்கம் |
| திரு. KM. நாராயணன் செட்டியார் | கானாடுகாத்தான் |
| திரு. AL. சந்திரமௌலி செட்டியார் | கானாடுகாத்தான் |
| திரு. ராம.நா. கருப்பையா செட்டியார் | கானாடுகாத்தான் |
| திரு. ராம. அண்ணாமலை செட்டியார் | கானாடுகாத்தான் |
| திரு. சி.முரு.அ. முருகப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. முரு.நா.ராம.சோம.லெ. கணேசன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. மெ.ராம.செ. வீரப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. வெ.ராம.சிவ.ராம.சிவ. மீனாட்சிசுந்தரம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. சி.மு.அரு.நா.அரு. நாராயணன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. மெ.நா.மெ.மெ. இராமனாதன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. SP. ராமசாமி செட்டியார் | காரைக்குடி |
| திரு. ப.மு.சித. பழநியப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. பழ.அண.அ. வள்ளியப்பசெட்டியார் | காரைக்குடி |
| திரு. ஆத. ராமசாமி (எ) நாச்சியப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. நா.முரு.அரு.மு. முருகப்ப செட்டியார் | காரைக்குடி |
| திரு. ராம.சித. ராமசாமி செட்டியார் | காரைக்குடி |
| திரு. லெ.நெ.ராம. ராமகிருஷ்ணன் செடடியார் | காரைக்குடி |
| திரு. நா.ப. மாணிக்கம் செட்டியார் | காரைக்குடி |
| திரு. வி.ராம.உ. விசுவநாதன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. கண.மெ. நடராஜன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. இராம.பழ. அழகப்ப செட்டியார் | கீழச்சிவல்பட்டி |
| திரு. அரு. சின்னக்கருப்பன் செட்டியார் | கீழச்சிவல்பட்டி |
| திரு. சுப.அள.கரு. அழகப்ப செட்டியார் | கீழச்சிவல்பட்டி |
| திரு. சுப.அண.கரு. அழகப்ப செட்டியார் | கீழச்சிவல்பட்டி |
| திரு. கூ.அரு.க.அரு. கண்ணப்பசெட்டியார் | கீழப்பூங்குடி |
| திரு. நா.லெ.அரு.லெ. சொக்கலிங்கம் செட்டியார் | கீழப்பூங்குடி |
| திரு. பெரி.ராம. சிதம்பரம் செட்டியார் | குழிபிறை |
| திரு. V. முத்துராமன் செட்டியார் | குழிபிறை |
| திரு. கரு.ராம.கதி. நாச்சியப்ப செட்டியார் | குழிபிறை |
| திரு. சித. திருநாவுக்கரசு செட்டியார் | குழிபிறை |
| திரு. பழ.கி. ஸ்ரீநிவாசன் செட்டியார் | குருவிக்கொண்டான்பட்டி |
| திரு. வ.பழ.ராம. கருப்பையா செட்டியார் | குருவிக்கொண்டான்பட்டி |
| திரு. N.S.AR. முத்துகுமார் செட்டியார் | கொ. லெட்சுமிபுரம் |

| | |
|---|---|
| திரு. நாக. இராமசாமி செட்டியார் | கோனாபட்டு |
| திரு. சுப. அருணாசலம் | கோனாபட்டு |
| திரு. ராம.மு. நாகப்பசெட்டியார் | கோனாபட்டு |
| திரு. AR. பெத்தபெருமாள் செட்டியார் | கோனாபட்டு |
| திரு. அ.அ.ராம.சுப. அருணாசலம் செட்டியார் | கோட்டையூர் |
| திரு. அ.பள. மெய்யப்ப செட்டியார் | கோட்டையூர் |
| திரு. இராம. முத்தையா செட்டியார் | கோட்டையூர் |
| திரு. மு.தே.அ.நா. அருணா / சண்முகம் | கோட்டையூர் |
| திரு. N.SP.K. சுப்பிரமணியன் செட்டியார் | செம்பனூர் |
| திரு. R. வள்ளியப்பன் செட்டியார் | சிராவயல் |
| திரு. ராம. சம்பந்தம் செட்டியார் | சிராவயல் |
| திரு. வயி. வயிரவன் செட்டியார் | சொக்கநாதபுரம் |
| திரு. சோம. விஸ்வநாதன் செட்டியார் | சொக்கநாதபுரம் |
| திரு. காசிஸ்ரீசுப. ராகவன் செட்டியார் | சொக்கநாதபுரம் |
| திரு. அரு. ராமனாதன் செட்டியார் | சொக்கலிங்கம் புதூர் |
| திரு. கண. சந்திரசேகர் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. சொ.சித. சண்முகநாதன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. V.L. இராமநாதன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. முவீ. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. உ.மு.சுப.லெ.அழ அழகப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. பழ.சோம. கைலாசநாதன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. சபா. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. S. காசி செட்டியார் | தேவகோட்டை |
| திரு. SM.L. வெள்ளையன் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. சி.நா.வயி.நா. நாச்சியப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. ராம. அருணாசலம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. மெ.ராம.பழ.ராம. சுப்பையா செட்டியார் | தேவகோட்டை |
| திரு. தெவ.சி.வி. உடையப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. RM.AN. குமரப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. முக.பெரி.மு.வீர. வீரப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. சுப. செட்டியப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. சோம. தேனப்ப செட்டியார் | தேவகோட்டை |
| திரு. கும.ராம. குமரப்ப செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. கும. நல்லகருப்பன் செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. நா. சிவனடியான் செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. சுப. முத்துக்கருப்பன் செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. வீ.மு.வீர. முத்துக்கருப்பன் செட்டியார் | நச்சாந்துபட்டி |
| திரு. ராம.ராமனாதன் செடடியார் | நடராஜபுரம் |
| திரு. சுப.சொ. சுப்பிரமணியன் செட்டியார் | நாச்சியாபுரம் |
| திரு. MN. சுந்தரம் செட்டியார் | நாச்சியாபுரம் |
| திரு. சு.வி.நா. நாகப்ப செட்டியார் | நாச்சியாபுரம் |

| | |
|---|---|
| திரு. ராம.உ.உ. கருப்பையா செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. கி.நா.கண.நட. சிதம்பரம் செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. ஆவி.அரு.ராம. கண்ணப்ப செட்டியார் | நாட்டரசன்கோட்டை |
| திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் | நெற்குப்பை |
| திரு. லெ.ப.ப. இராமநாதன் செடடியார் | நெற்குப்பை |
| திரு. ராம.ராம. திருநாவுக்கரசு செட்டியார் | நெற்குப்பை |
| திரு. பெரி.சுப. விஸ்வநாதன் செட்டியார் | நெற்குப்பை |
| திரு. முரு.சொ. சேதுராமன் செட்டியார் | நெற்குப்பை |
| திரு. PR.N. பெரியகருப்பன் செட்டியார் | நேமத்தான்பட்டி |
| திரு. N. காசி முத்துக்கருப்பன் செட்டியார் | நேமத்தான்பட்டி |
| திரு. பழ. சங்கரநாராயணன் செட்டியார் | பலவான்குடி |
| திரு. கும. வள்ளியப்பசெட்டியார் | பலவான்குடி |
| திரு. அ.ராம.தெ.அழ. தேனப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. மு.கு.மு. குமரப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. கரு.சிவ.கா.மு. சுந்தரம் செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. மு.அரு.சொ.அரு. சோலையப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. அண. அழகப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. அ. லெட்சுமணன் செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. SP. மெய்யப்ப செட்டியார் | பனையபட்டி |
| திரு. முத்துபழநியப்பன் (எ) வேலாயுதம் செட்டியார் | பனையபட்டி |
| திரு. AR.S.L. முத்துகணேசன் செட்டியார் | பனையபட்டி |
| திரு. சொ. முத்தையா செட்டியாரர் | பி.அழகாபுரி |
| திரு. சித. இராமநாதன் செட்டியார் | பி.அழகாபுரி |
| திரு. M. சோமசுந்தரம் செட்டியார் | பி.அழகாபுரி |
| திரு. யெ.ராம.வீர.பழ. வீரப்ப செட்டியார் | புதுவயல் |
| திரு. அ.சு.பழ.சு.சோம. சுப்பிரமணியன்செட்டியார் | புதுவயல் |
| திரு. பெரி.வீர.ராம.பெரி. சிதம்பரம் செட்டியார் | புதுவயல் |
| திரு. வீர.அரு.சுப. அழகப்ப செட்டியார் | புதுவயல் |
| திரு. எ.பெரி.வீர. வீரசோலையப்ப செட்டியார் | புதுவயல் |
| திரு. மு.ராம.சுப. ஆறுமுகம் செட்டியார் | பொ.புதுப்பட்டி |
| திரு. வீர.கா. ஆறுமுகம் செட்டியார் | பொ.புதுப்பட்டி |
| திரு. அ.பெரி. அடைக்கப் செட்டியார் | பொ.புதுப்பட்டி |
| திரு. சுப.வே.மா. தியாகராஜன் செட்டியார் | பாகனேரி |
| திரு. வெ.வெ.கரு.சொ. நாகப்ப செட்டியார் | பாகனேரி |
| திரு. சுப.ஆறு. மாதவன் செட்டியார் | பாகனேரி |
| திரு. சுப.கா. ராமையா செட்டியார் | பாகனேரி |
| திரு. சக்தி கா. சேது ராமன் செட்டியார் | மகிபாலன்பட்டி |
| திரு. ஏ.ராம. ஏகப்ப செட்டியார் | மகிபாலன்பட்டி |
| திரு. ராம. ஆறுமுகம் செட்டியார் | மேலைச்சிவபுரி |
| திரு. ராம. சுப்பையா செட்டியார் | மேலைச்சிவபுரி |
| திரு. அ.சொ. அண்ணாமலை | மேலைச்சிவபுரி |
| திரு. சுப. இராமசாமி செட்டியார் | மேலைச்சிவபுரி |

| | |
|---|---|
| திரு. VE.S. வயிரவன் செட்டியார் | மிதிலைப்பட்டி |
| திரு. ராம.மு. பெருமாள் செடடியார் | மிதிலைப்பட்டி |
| திரு. சாத.க.அழ. வள்ளிப்ப செட்டியார் | ராயவரம் |
| திரு. மு.அ.சு.சித. சுப்பிரமணியன் செட்டியார் | ராயவரம் |
| திரு. பவ.பழ.ராம. பழநியப்ப செட்டியார் | ராயவரம் |
| திரு. அ.நா. மலையாண்டி செட்டியார் | வலையபட்டி |
| திரு. VD. மாணிக்கம் செட்டியார் | வலையபட்டி |
| திரு. மது.கும. நடராஜன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. P.V.RM. வள்ளியப்ப செட்டியார் | வலையபட்டி |
| திரு. SP. மணியன் செட்டியார் | வலையபட்டி |
| திரு. RM. சுப்பையா செட்டியார் | வலையபட்டி |
| திரு. VD. குமரப்ப செட்டியார் | வலையபட்டி |
| திரு. கும.சா.சபா. அழகப்ப செட்டியார் | விராமதி |
| திரு. வயி.ராம. பழனியப்ப செட்டியார் | விராமதி |
| திரு. வயி. லெட்சுமணன் செட்டியார் | விரையாச்சிலை |
| திரு. RM. சிதம்பரம் செட்டியார் | விரையாச்சிலை |
| திரு. RM. ஜோதிலிங்கம் செட்டியார் | வி. லெட்சுமிபுரம் |
| திரு. PL. விஸ்வநாதன் செட்டியார் | வி. லெட்சுமிபுரம் |
| திரு. சோம.மு. முத்தையா செட்டியார் | வெற்றியூர் |
| திரு. அ. தெய்வராயன் செட்டியார் | வெற்றியூர் |
| திரு. இராம. ஆண்டியப்ப செடடியார் | வேகுப்பட்டி |
| திரு. KN. முத்துபழநியப்ப செட்டியார் | வேகுப்பட்டி |
| திரு. ராம. ராமனாதன் செட்டியார் | வேகுப்பட்டி |
| திரு. அரு. திருப்பதி செட்டியார் | வேந்தன்பட்டி |
| திரு. சோம. அழகப்ப செட்டியார் | வேந்தன்பட்டி |
| திரு. பெரி. ரெத்தினம் செட்டியார் | வேந்தன்பட்டி |
| திரு. M. லெட்சுமணன் முருகப்பன் | வேந்தன்பட்டி |
| திரு. மு.சுப. முத்துராமன் செட்டியார் | மதகுபட்டி |
| திரு. RM. சோமசுந்தரம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. SP.A.R. சுப்பிரமணியன் செட்டியார் | காரைக்குடி |
| திரு. L. ராமனாதன் செட்டியார் | நாட்டரசன் கோட்டை |
| திரு. PL. சாத்தப்ப செட்டியார் | சிறாவயல் |
| திரு. TS. சிதம்பரம் செட்டியார் | கானாடுகாத்தான் |
| திரு. சி.ராம. நாகப்ப செட்டியார் | மகிபாலன்பட்டி |
| திரு. RM. சுப்பிரமணியன் செட்டியார் | நடராஜபுரம் |
| திரு. K.V.RM. ராமனாதன் செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. N. கண்ணப்ப செட்டியார் | கண்டவராயன்பட்டி |
| திரு. செல்வகணபதி செட்டியார் | கண்டனூர் |
| திரு காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம் செட்டியார் | தேவகோட்டை |
| திரு. பழ.கா. சோலையப்ப செட்டியார் | பள்ளத்தூர் |
| திரு. பெ.ஆத.சி.சுப. ராமசாமி செட்டியார் | கண்டரமாணிக்கம் |

## நம் சொஸைட்டியின் நிர்வாகத்தில் உள்ள சத்திரங்களின் முகவரி

1. தலைமை அலுவலகம்

**Sri Kasi Nattukkottai Nagara Satram Managing Society**
No. 5, West Vadampokki Street (Near Sivankoil)
Karaikudi - 630 001. Phone : 04565 - 20501

2. ஸ்ரீகாசி (வாரணாசி)

**Sri Kasi Nattukkottai Nagara Satram,**
Godhowlia VARANASI - 221 001. (U.P) INDIA. Phone : 0542-321012
Bankers : Indian Bank, Godhowlia Branch, VARANASI.
Bank of Madura, VARANASI.

3. பிரயாகை

**Nattukkottai Nagara Satram,**
149, Mori Daraganj P.O. Allahabad - 211 006 (U.P) INDIA

4. அயோத்தியா

**Nattukkottai Nagara Satram,**
Natkot Sri Ram Mandir
Boboo Bazaar, AYODHYA - 224-123, Faizabad (U.P) INDIA

5. கெயா

**Nattukkottai Nagara Satram**
No. 171, Chand Chowra, Gaya - 823 001 (Bihar State) INDIA

6. கல்கத்தா

**Nagarathar House**
34, Ezra Street, CALCUTTA - 700 001, West Bengal, INDIA

7. தாராகேஸ்வரம்

**Nagarathar Madam**
Tarakeswar (Near Calcutta), West Bengal, INDIA

8. நாசிக் பஞ்சவடி

**Nattukkottai Nagara Satram**
Kartik Swamy Mandir, Shanichowk Panchavati, (Nasik - 422 003)
Maharastra, INDIA

9. சென்னை

**Rangoon Nagara Viduthi**
88, Coral Merchant Street, Mannady,
CHENNAI - 600 001. Phone : 044 - 5268155

உ

சிவமயம்

# காசிக் கலம்பகத்தில்

(20 பாடல்கள் செம்மல், டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களின் பொழிப்புரையுடன்)

(நேரிசை வெண்பா)

புயலார் பொழிற்காசிப் பூங்கோயின் மேய
கயலார் தடங்கணாள் காந்தன் - செயலாவி
உய்யத் துதியா ருதிப்பார் துதிப்பாரேல்
வையத் துதியார் மறுத்து

காசியில் மேகம் உலாவும் பூஞ்சோலைகள். நடுவில் அழகிய கோவில். அங்கு உமையொரு பாகனாக எழுந்தருளியிருக்கும் விசுவநாதர். அவர் புகழைப் போற்றாதோர் பிறவியெடுப்பார். போற்றுபவர் முத்தியடைவர்.

(கட்டளைக் கலித்துறை)

இருப்பா ரவிமுத்தத் தெங்கேகண் மூடுவ ரென்றும் வெள்ளிப்
பொருப்பாள ரோடித் திரிவதெல் லாமிப் புவனங்களை
உருப்பாதி யிற்படைத் தோர்பாதி யிற்றுடைத் தூழிதொறும்
விருப்பா ருயிர்களின் மேல்வைத்துத் தாஞ்செயும் வேலைகண்டே.

கயிலைநாதன் "அவிமுத்தம்" என்ற காசியில் வாழ்கின்றான். அவன் ஒரு பாதி ஆணும் மறுபாதி தாயுமானவன். தாய் உலகை - உயிர்களைப் படைக்க, ஆண் தன்மையுள்ள உருத்திரன் அவற்றை அழிக்கின்றான். இவ்வாறு கோடிக் கணக்கான உயிர்களைப் படைத்து, காத்து அழித்தல் வேலையே அவனுக்குச் சரியாக இருக்கிறது. தூங்க எங்கே நேரம்?

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கண்ணொன்று திருநுதலிற் கனலுருவ மாப்படைத்த
காசி நாதா
தண்ணொன்று நறையிதழித் தாரென்றா ணெட்டுயிர்த்தா
டரைமேல் வீழ்ந்தாள்
எண்ணொன்று முணராமே கிடக்கின்றா ளிதுகண்டா
லெழுத்தொன் றோதத்
துண்ணென்று வருவரெனத் துணிந்தனளோ வறியேனித்
தோகை தானே.

கண் ஒன்றை நெற்றியில் உடைய காசிநாதா! உன்னைக் காதலிக்கும் இவள், "அவரது கொன்றை மாலை" என்று சொல்லத் தொடங்கினாள். நினைவு இழந்தாள். நீ பார்த்து இவள் காதில் "பிரணவம்" ஓத வருவாய் என்று முடிவு செய்தாளோ? (காசியில் இறந்தோரின் காதில் சிவபெருமான் பிரணவத்தை உபதேசித்து முத்தி கொடுப்பான் என்பது செய்தி)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கொழுதி வரிவண் டுழுதுழக்குங்
குழலீர் நறுங்கட் கோதையிவள்
அழுத விழி நீர் முந்நீரை
யுவர்நீ ராக்கு மதுகூறீர்

எழுத வரிய திருமார்பி
விளஞ்சேய் சிறுசே வடிச்சுடும்
முழுது முடையாண் முலைச்சுவடு
முடையார் காசி முதல்வர்க்கே

நீவிர் சூடிய மாலையில் வண்டு ஏதோ சேதி சொல்லும். அத்தகைய தோழிகளே! இவள் பொருட்டுக் காசி நாதனிடம் தூது செல்க. அவர் அடையாளம் தெரியுமா? அவர்மார்பில் பாலமுருகன் உதைத்த சுவடும் உலக நாயகியின் முலைச் சுவடும் இருக்கும் அவரிடம் போய் இவள் அழுத கண்ணீர் கடல் நீரை மேலும் உப்பாக்கியது என்று சொல்லுங்கள்.

காணுங் காணு நதிகளெல் லாம்புனற்
கங்கை யேயங் குளதெய்வம் யாவையும்
தாணு வெங்க ளகிலேச ரேமற்றைத்
தலங்கள் யாவுந் தடமதிற் காசியே

பூணு மாசைமற் றொன்றே யுடல்விடும்
போது நன்மணி கர்ணிகைப் பூந்துறை
பேணு மாறு பெறவேண்டு மப்புறம்
பேயொ டாடினு மாடப் பெறுதுமே

நதிகளெல்லாம் கங்கையே. தலங்களெல்லாம் காசியே, சிவமெல்லாம் விசுவநாதரே, எனக்கு ஒரு ஆசை, கங்கைக் கரையில் மணிகர்ணிகைத் துறையில் உயிரை விட வேண்டும் (அங்ஙனம் விட்டால் "சிவசாரூபம்" பெறுவேன்) பிறகு சிவனைப் போல் பேயோடு கூத்தாடினால்தான் என்ன? (சாரூபம் - சிவனை ஒத்த உருவம்)

(கட்டளைக் கலித்துறை)

திருக்கோலங் கொண்டநற் றேன்மொழி யாளெண் டிசையினுநின்
உருக்கோல மேகண்டுங் கண்டிலள் போலு மொழிகுநறை
மருக்கோல நீலக் குழல்சே ரவிமுத்த வாணதொல்லை
இருக்கோல மிட்டுண ராயெங்கு மாகி யிருப்பதுவே

நீல மலர் சூட்டிக் கோலம் செய்து கொண்ட கூந்தலை உடைய விசாலாட்சியுடன் அமர்ந்த விசுவநாதா! நீ எங்கும் இருக்கின்றாய். ஆனால் பழைய வேதம் ஓலமிட்டும் உன்னை உணரவில்லை. இவளும் எங்கும் உனது உருவெளித் தோற்றத்தைப் பார்க்கிறாள், ஆனால் நேரில் இன்னும் பார்க்கவில்லை போலும்.

(கட்டளைக் கலிப்பா)

தூது கொண்டுந் தமைத்தோ முமைகொண்ட
    தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக்
காது கொண்டெங் கவிதைகொண் டாட்கொண்ட
    காசி நாதர் கருத்தே தறிகிலேம்.
போது கொண்டொரு பச்சிலை கொண்டுதாம்
    பூசை செய்திலர் புண்டரீ கப்பதம்
ஏது கொண்டு கொடுப்பர் கொடுப்பரே
    லிருவ ருக்குமற் றென்படு நெஞ்சமே

காசிநாதர், தம்மைத் தோழராகக் கொள்ளும் உரிமையைப் பெற்ற சுந்தரரின் தமிழை அவருக்குத் தூதராகப் பணி செய்தாவது கேட்க ஆசைப்பட்டவர். குண்டலம் தொங்கும் செவியினால் எனது தமிழையும் கேட்டு என்னையும் ஆட்கொண்டார். அவர் கருத்துயாதோ? மக்கள் காசியில் இறந்தால் முத்தி என்று கருதுகின்றனர். ஆனால் சிவபெருமானை மலர்தூவி பூசை செய்யாவிட்டால் முத்தி எப்படிக் கிடைக்கும். சிவபெருமான் அவர்களிடம் எதைப் பெற்று, பிரதியாக முத்தி கொடுப்பார்? கொடுத்தால் நெடுங்காலமாக அவரைத் தேடி இளைத்த பிரமனுக்கும் திருமாலுக்கும் நெஞ்சம் என்ன பாடு படும்?

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந் திருக்கரமுங்
    கலந்தோர் பேதைப்
பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக்கு மவுலியுமாய்ப்
    பிரிக்க லாகா
எண்ணிருக்குங் கணத்தொடுமா னந்தவனத் திருப்பாரை
    யெங்கே காண்பார்
பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ண னுங்கண் ணனுமமரர்
    பலருந் தானே

காசியில் சிவசாரூபம் பெற்றவர் அதிகம். அவர்கள் ஒவ்வொருவரும் நெற்றிக்கண், ஒருகையில் நெருப்பு, பெண் ஒருபாகம், பிறை சூடிய சடை - இவற்றை உடைய சிவகணங்கள். இவர்கள் சூழக் காசி ஆனந்த வனத்தில் விசுவநாதர் வீற்றிருக்கின்றார். இப்படி எல்லோரும் ஒரே மாதிரி இருந்தால் அவரைத் தேடும் வேதமும், திருமாலும், பிரமனும் எப்படிப் காண்பர்?

(கட்டளைக் கலித்துறை)

பல்லாண்டு தம்மைப் படைத்தவத் தேவரைப்
        பார்த்துப் பைம்பொன்
வில்லாண்ட தோள்கொட்டி யெந்தையர் கோல
        விடம்பழுத்த
அல்லாண்ட கண்டத்தெம் மாதிப் பிரானவி
        முத்தத்திலே
சில்லாண் டிருந்து சிவமாய்ச் செலுஞ்சிறு
        செந்துக்களே.

காசியில் இறந்த சிற்றுயிர்கள் (மனிதர்கள்) சிவசாரூபம் பெற்றுச் சிவலோகம் செல்வர். வழியில் பல ஆண்டுகளாகத் தங்களைப் படைத்துக் காத்து வந்த தேவர்களைக் கண்டு "நீர் அப்படியே இருக்கின்றீர், நாங்கள் உங்களைவிட மேலான கதி யடைந்தோம்" என்று பெருமிதமாகச் சொல்லிச் செல்வர்.

(கொச்சகக் கலிப்பா)

புகுமே மதிக்கொழுந்தும் புன்மாலைப் போதும்
நகுமே கிளையு நகைத்தா னமக்கென்ன
உகுமே யுயிர்காசி யுத்தமரைக் காணத்
தகுமேயப் போதிதழித் தாரும் பெறலாமே

விசுவநாதரைக் காதலிக்கும் பெண் சொல்கிறாள்: "நான் காசிநாதனைச் காணும் நாள் வாராமலா போகும்? உறுதியாக வரும், இப்போது என்னைத் துன்புறுத்தும் பிறைநிலா அன்று தலைகாட்டுமா? இந்த மாலை, முல்லை மலரே பல்லாகக் கேலியாய்ச் சிரிக்குமா? உறவினர் பரிகசிக்கிறார்கள். அப்போது இதைப் பற்றிக் கவலைப் பட மாட்டேன். என் உயிர் போகும் படியான வாதனை உண்டாகுமா? அவர்வருவார். ஒரு மொழி தருவார். கொன்றை மாலையையும் காதற் பரிசாகத் தருவார் (ஒரு மொழி என்பது இரு பொருள் தரும். ஒன்று அன்பு வார்த்தை. மற்றொன்று பிரணவ உபதேசம்)

ஆமோ வவிமுத்தத் தையரே பெண்பழிவீண்
போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ
தேமோது கொன்றைச் செழுந்தாம நல்காநீர்
தாமோ தருவீ ருமதுபரந் தாமமே

காசிநகர்ப் பெருமானே! உன்மீது காதல் கொண்டு வருந்தும் இவளுக்கு உமது கொன்றை மாலையை அளிக்காமல் இருப்பது பாவமல்லவா? பெண் பழி சும்மா விடுமா? இத்தலத்தில் பாவம் செய்தோர்க்கு எம தண்டனை இல்லை. ஆயினும் வயிரவர் தண்டனை உண்டே! மாலை தராத நீர் எங்ஙனம் மேலான மேனியை இவளுக்குத் தருவீர்?

வண்டுவிடு தூது

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சிறைவிரிக்கு மதுகரங்கா டேம்பிழிபூம் பொழிற்காசித்
  திருநா டாளும்
மறைவிரிக்குஞ் சிலம்படியார் திரள்புயத்துப் புரளுநறு
  மலர்ப்பூங் கொன்றை
நறைவிரிக்கு மிதழ்க்கரத்தா லூட்டுமது விருந்துண்டு
  நயந்து மற்றென்
குறைவிரித்தோ ரிருவரிசை கூட்டுண்ணுந் திருச்செவிக்கே
  கூறு வீரே.

காதலி வண்டைத் தூது விடுகின்றாள்: "எளிதாகப் பறந்து செல்வீர், வண்டுகளே பாதத்தில் வேதச் சிலம்பு ஒலிக்கக் காசிநகரில் எண் தோள்வீசி ஆடும் விசுவநாதரின் தோள்களில் அணிந்த கொன்றை மாலை மணத்தால் உங்களை வரவேற்கும் பூ இதழ்களாகிய கைகளால் தேன் அமுதம் தரும். உண்டு களியுங்கள். அப்படியே, கந்தருவர் இருவர் தமது காதணிகளாய் விளங்கி இசையமுதம் தர அதனைப் பருகி மகிழும் விசுவநாதரின் திருச் செவியில் என் வேண்டுகோளையும் சொல்லுங்கள்.

(கட்டளைக் கலித்துறை)

கூற்றடிக் கஞ்சிக் குலையுநெஞ்சேயஞ்சல் கோச்செழியன்
மாற்றடிக் கஞ்சு மிடப்பா கனைமள்ளர் கொன்றகருஞ்
சேற்றடிக் கஞ்ச மலர்வயற் காசிச் சிவக்கொழுந்தைப்
போற்றடிக் கஞ்சலி செய்பற்று வே று புகலில்லையே.

மரணக்காலத்தில் எமனின் காலடியோசை பயமுத்தும் என் று நடுங்கும் மனமே! அஞ்சாதே - பாண்டியனின் பிரம்படி தாங்காமல் மறைந்த சிவபெருமான் - உழவரின் சே று நிரம்பிய வயலில் தாமரை மலர்ந்திருக்கும் காசி நகரில் திகழும் பெருமான் - அவன் திருவடியைப் போற்று; வணங்கு; பற்றிக்கொள். நமக்கு வே று புகல் (அடைக்கலம் தருபவர்) இல்லை.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

நரைமு திர்ந்தன கண்கள் பஞ் சார்ந்தன
நமன்றமர் வழிக்கொண்டார்
திரைமு திர்ந்துட றிரங்கின திரங்கலை
செயலி து மடநெஞ்சே
உரைமு திர்ந்தவர் குழாத்தொடு மடைதியா
லொழுகொளி முடிக்கங்கைக்
கரைமு திர்ந்திடாக் கலைமதி முடித்தவர்
காசிநன் னகர்தானே.

நெஞ்சே! நமக்கு நன்றாக நரைத்து விட்டது. கண்பார்வை மங்கிவிட்டது. நம் உயிரைப் பிடிக்க எமதூதர் வந்து கொண்டிருக்கிறார்கள். தோல் சுருங்கி உடம்பு மெலிந்து விட்டது. இதற்காக நீ சோர்ந்து போகாதே. என்ன செய்ய வேண்டும் தெரியுமா? ஒளிவிரிக்கும் செஞ்சடையில் அலைவிரிக்கும் கங்கையையும், கலைநிரம்பும் பிறைநிலாவையும் அணிந்த பெருமானின் காசிநகரை அறிஞர்களுடன் சேர்ந்து அடைவாயாக.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

முத்தாடி மடித்தலத்தோ ரிளஞ்சேயை யுலகீன்ற
முதல்வி யோடும்
வைத்தாடு வீர்பொ துவி னின்றாடு முமக்கிந்த
வார மென்னே
கொத்தாடு சடையொடுமா னந்தவனத் தேகுறுந்தா
ணெடும்பூ தத்தோ
டொத்தாடு வீரடிகட் கெல்லோமும் பிள்ளைகளென்
றுணர்ந் திடீரே

உமா தேவியாரோடு அமர்ந்து, மழலை கொஞ்சும் முருகனை மடியில் வைத்து விளையாடுகின்றீர். பொ துவில் நின் று ஆடும் உமக்கு இந்த ஓரவஞ்சனை எதற்காக? காசி ஆனந்த வனத்தில் குட்டையும் நெட்டையுமான பூதங்களைச் சமமாய்க் கருதி ஆடுகின்றீர்! அப்படி இருக்க, எல்லா உயிர்களும் உமக்குப் பிள்ளைகள் என் று ஏன் எண்ணவில்லை ?

ஊர்

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

உரைத்த நான்மறைச் சிரத்துமைந் தவித்தவ
ருளத்தும்வண் டொருகோடி
நிரைத்த பூங்குழ னிரைவளை யவளொடு
நின்றவ ருறைகோயில்

குரைத்த தெண்டிரைக் கங்கைமங் கையர்துணைக்
கொங்கைமான் மதச் சேற்றைக்
கரைத்தி ருங்கடல் கருங்கட லாச் செயுங்
காசிமா நகர்தானே

தாமே உரைத்த வேதங்களின் உச்சியிலும் (முடிபு) ஐம்புலன்களையும் அருட்புலனாக ஆள்பவரின் சிந்தையிலும், கோடி வண்டுகள் குரலெடுத்துப்பாடும் கூந்தலும், கல், கல்லென்று ஒலிக்கும் கை வளைகளும் உடைய விசாலாட்சியோடு விளங்கும் விசுவநாதர் உறையும் கோயில் எது தெரியுமா? அலையோசை எழுப்பி வரும் கங்கை நதி, மங்கையர்கள் மார்பில் பூசிய கஸ்தூரிக் கலவையைக் கரைத்துச் சென்று, பெரிய கடலைக் கரிய கடலாக்கிவரும் காசி நகராகும்.

(நேரிசை வெண்பா)

அகிலாண்ட மாயகண்ட மானவகி லேசா
முகிலாண்ட சோலையவி முத்தா - நகிலாண்ட
சின்னவிடைப் பாகா திருநயனஞ் செங்கமலம்
அன்னவிடைப் பாகா வருள்.

அனைத்து உலகமாயும் குறைவிலா நிறைவாயும் விளங்கும் விசுவநாதா! மேகம் உலாவும் சோலைகள் சூழ்ந்த அவிமுத்தம் என்னும் காசிநாதப் பெருமானே! பெரிய கொங்கையும் சிறிய இடையும் உடைய உமாதேவியை இடப்பக்கத்தில் கொண்டவனே! செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலை இடபமாகக் கொண்டு செலுத்துபவனே ! எனக்கு அருள் செய்வாயாக

(கட்டளைக் கலித்துறை)

முத்திக்கு வேட்டவர் மோட்டுடற் பார முடைத்தலையோ
டத்திக்குஞ் சாம்பற்கு மேம்பின ராலிவை யன்றியப்பாற்
சித்திப் பதுமற் றிலைபோலுங் காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவல மேபல மாகப் பலித்ததுவே

முத்தியை விரும்பினோர், காசிக்கு வரும்வரை, தங்கள் உடல் பாரத்தைத் தாங்கினர். அது காசியில் இறந்து சாரூபம் பெற்று, நாற்றம் வீசும் தலையையும், எலும்பையும், சாம்பலையும், பெறுவதாக முடிந்தது. அதைத் தவிர வேறு இல்லை போலும்! காசி நாதரிடம் பக்தி செலுத்தியதற்கு கேவலமே பரிசாகக் கிடைத்தது (கேவலம் - இழிவு - முத்தி)

(நேரிசை வெண்பா)

ஆனந்த வல்லியுட னானந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தா டருட்கடலை - ஆனந்தம்
கொள்ளத் திளைத்தாடுங் கூடாதே லிப்பிறவி
வெள்ளத் திளைத்தாடு வீர்

ஆனந்த வனத்தில் ஆனந்த வல்லியுடன் ஆனந்த நடமாடும் அருட்கடலாகிய விசுவநாதப் பெருமானின் பக்தியில் ஈடுபடுக. அது வாய்க்க வில்லையாயின் பிறவிக்கடலில் நீந்தி இளைப்பீர்.

(நேரிசை வெண்பா)

வேதத் துரகர் விரக ரகிலேசர்
பாதத் துரகப் பரிபுரத்தார் - நாதரிவர்
சேவடிக்கண் டாரே திறம்பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண் டாரே குலைந்து.

பாடலின் ஈற்றடியைத் "தென்புலத்தார் கோ அடிக்கு அண்டாரே குலைந்து" என்று பிரித்துக் கொள்க வேதங்களைக் குதிரைகளாக உடையவர். நுண்ணறிவை அளிப்பவர். காலில் பாம்பைக் கழலாக அணிந்தவர் - இவர் காசிநாதர் இவர் திருவடியைத் தரிசித்தோர், எமனது தண்டனையிலிருந்து தப்புவர்

சான்று ஆவணம்

श्री काशी विश्वनाथो विजयतेतराम् ॐ

Dr. S.K. Pandey
Chief Executive Officer
SHRI KASHI VISHWANATH MANDIR
Vishwanath Gali, Varanasi - 221001
श्री काशी विश्वनाथ मन्दिर
विश्वनाथगली, वाराणसी - 221001
✆ (0542) 322629

श्री काशी विश्वनाथो विजयतेतराम्

सं. [illegible] दिनांक [illegible]

Manager Nattu Kotya,

A list of commodies required for 3.00 AM Mangala Aarti daily being attached herewith you are requested to kindly arrange sending the ingredients as per this list at the earliest.

2/12/96
(Dr. S.K. Pandey)
Chief Executive Officer

# காசி விசாலாட்சி கவின்மிகும் குடநீராட்டு

## சொ.சொ.மீ. சுந்தரம்

இந்திய நாட்டில் ஓடிவரும் ஆறுகளில் புனிதமிக்கது கங்கை. இமயமலையில் மானசரோவர் பகுதியில் உற்பத்தியாகி வங்காள விரிகுடாவில் சேரும் கங்கைக்கு காசியில் தான் சிறப்பும் பெருமையும் அதிகம்.

காள கண்டன் உமாபதி தருபாலா!
காசி கங்கையில் மேவிய பெருமாளே!

என்பது திருப்புகழ். வடக்குநோக்கிப் போவது சரண யாத்திரை, தெற்கு நோக்கிப் போவது மரணயாத்திரை. அதுவரை தெற்கு நோக்கி வந்த கங்கை காசியில் வடக்கு நோக்கி ஓடுகிறது. இதனால் அதை உத்தரவாகினி என்கிறோம். கங்கை வருமுன்பே புகழ்பெற்ற திருத்தலம் காசி. ஆன்மா கடைத்தேறி இனிமேல் பிறவிகள் இல்லாமல் ஆண்டவனை அடையும் இடம் காசி. எனவே காசியில் இறக்க முத்தி என்றனர் சான்றோர். காசியில் இறந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள். அவர்கள் காதுகளில் விசுவநாதர் பிரணவ மந்திர உபதேசம் செய்கிறார். இந்த இடம் கங்கைக் கரையில் மணிகர்ணிகைக் கட்டமாகும்.

காசி, மாயாபுரி, அவந்தி, காஞ்சி, அயோத்தி, துவாரகை, மதுரை எனப்படும் ஏழு மோட்சத் தலங்களில் முதலிடம் பெறுவது காசி. பன்னிரண்டு சோதிலிங்கங்களில் விசுவநாதர் சிறப்பிடம் பெறுகிறார். சுயமாகவே பிரகாசிப்பது காசி."தேசொடும் பொலிந்து முத்தித் திருமகள் உறைதல் தன்னால் காசி என்றுரைப்பர்" என்று காசிக் கண்டம் பேசுகிறது. முத்தி தரும் திருத்தலங்கள் நான்கு "அன்னமலி வயற்புலியூர், காசிநகர் காளத்தி, ஆலவாயாம் இன்னவளம் பதிநான்கு" என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் குறிப்பிடுகிறார். காசி மகாமயானம் என்று புகழப்பெறுகிறது. அந்த விசுவநாதனைத் தவிரப் பிறவெல்லாம் அழியும். காசியில் இறந்தால் இனிமேல் பிறப்புமில்லை இறப்புமில்லை. எனவே இறப்பே இறந்துபோகிறது, இனிப் பிறந்தால் தானே இறப்பு வரும்? சாவையே சாகவைத்து அமுதநிலை அள்ளித்தருவது காசி.

தீயே உனக்கொருநாள் தீமூட்டிப் பாரேனோ
சாவே உனக்கொருநாள் சாவு வந்து சேராதோ

என்று நேரு மறைந்தபோது கவியரசர் கண்ணதாசன் பாடினார். இந்த எண்ணத்தை ஈடேற்றி இறப்பையே இறக்கவைத்து ஆன்மாவை இளைப்பாறச் செய்யும் திருத்தலம் காசி.

கங்கைக்கு நிகரான நதியும் இல்லை காசிக்கு நிகரான பதியும் இல்லை. என்பது சான்றோர் வாக்கு காசிப்பதியில் 1863ல் நாட்டுக்கோட்டை நகரச்சத்திரப் புதிய கட்டிடம் கட்டப்பெற்றது. விசுவநாதப் பெருமான் சோதிலிங்கம். யாரும் தொட்டு வணங்கலாம். கங்கை நீராட்டலாம் அப்பெருமானுக்குரிய நான்குகால வழிபாடுகளில் மூன்றுகால வழிபாடுகள் நகரத்தார்களால் நடத்தப்படுகின்றன இது நகரத்தாருக்கு விசுவநாதப்பெருமான் கொடுத்த தனிப்பெருமை. விசுவநாதர் ஆலயத்தோடு இணைந்தது அன்னபூரணி ஆலயம். ஆனால் விசாலாட்சி ஆலயம் நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பெற்று காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்தின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. சக்திபீடங்கள் 64ல் சிறப்பானவை நான்கு. அவை குற்றாலம் பராசக்தி, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி ஆகியவை. விசாலமான கண்களால் உலகை எல்லாம் பார்த்து அருள்புரிபவள் விசாலாட்சி. இந்த அன்னையின் ஆலயத்திற்கு 1908ல் திருக்குடநீராட்டு நடந்தது. அதன்பிறகு பிலவங்க ஆண்டில் ஒரு திருக்குடநீராட்டு நடந்தது. 1971ல் மூன்றாவது முறையும் 1985ல் நான்காவது முறையும் இப்பொழுது 10-11-1999ல் ஐந்தாவது முறையாகவும் திருக்குடநீராட்டுவிழாக்கள் நடந்துள்ளன. இந்த ஆண்டில் இக்குடநீராட்டு விழாக்காண ஆயிரக்கணக்கான நகரத்தார் பெருமக்கள் காசிக்கு வந்தார்கள். இதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆச்சிமார்கள், அவர்கள் "கிருஷ்ணன்" கடையில் காசிப் பட்டுச்சேலை வாங்கினார்கள் "வேணி" கடையில் பாத்திரங்கள் வாங்கினார்கள், ராஜீவ் மோகன் கடையில் ருத்ராட்சங்கள் வாங்கினார்கள் குடநீராட்டையும் விட்டு விடாமல் கண்டு களித்தார்கள்.

விசாலாட்சி ஆலயம் பல சந்துகளுக்கு இடையில் உள்ள மிகச்சிறிய ஆலயம் அந்த ஆலயத்தைச் சுற்றியுள்ள வீடுகளில் எல்லாம் நகரத்தார் பெருமக்கள் சென்று இனிக்கப் பேசி இடம் பிடித்துக் கொண்டார்கள். குடநீராட்டுவிழாக் காண இடம் கொடுத்த காசிப்பெருமக்கள், தங்கள் வீடுகளில் வந்து இருந்து குடநீராட்டுவிழாக்கண்டவர்களுக்குக் காப்பியும் போட்டுக்கொடுத்து விருந்தோம்பும் நகரத்தார்களுக்கே தங்கள் விருந்து உபசரிக்கும் பண்பை வெளிப்படுத்தினார்கள். திருக்குடநீராட்டுவிழாவுக்கு முன் தீபாவளி விழா சிறப்பாக நடந்தது. நகரச்சத்திர நகரேசுவரர் ஆலயத்தில் நகரத்தார்களால் செய்யப்பெற்ற தங்க விசாலாட்சி தரிசனம் தந்தாள் நவம்பர் மாதம் 6, 7, 8 ஆம் தேதிகளில் ஆயிரக்கணக்கானோர் தங்க விசாலாட்சியை வணங்கித் தங்கள் மனங்களில் அவளைத் தங்கி இருக்கச் செய்தார்கள்.

காஞ்சி காமகோடிபீடம் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தீபாவளியன்று நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்துக்கு வருகைதந்து தங்கவிசாலாட்சியை வணங்கினார்கள். அன்று நடைபெற்ற திருவிளக்கு வழிபாட்டில் நூற்றுக்கணக்கான ஆச்சிமார்கள் பங்கேற்றார்கள். நவம்பர் மாதம் எட்டாம் தேதி காலையில் நடைபெற்ற "அனுக்ஞை" வழிபாட்டிலும் திருக்குடநீராட்டு விழாவிலும் காஞ்சிப் பெரியவர்கள் கலந்து கொண்டார்கள். யாகசாலை வழிபாடுகள் எட்டாம்தேதியும் ஒன்பதாம் தேதியும் நிகழ்ந்தன. நவம்பர் பத்தாம் தேதி புதன்கிழமை காலை 9-30 மணிக்குத் திருக்குட நன்னீராட்டு சிறப்பாக நடைபெற்றது. உலகப்புகழ்பெற்ற பிள்ளையார்பட்டி பிச்சைக்குருக்கள் திருக்குட நீராட்டுக்குரிய ஏற்பாடுகளை முந்திய இரண்டு திருக்குட நன்னீராட்டுகளுக்கும் செய்தது போலவே இப்பொழுதும் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

திருக்குடநீராட்டு விழாவுக்கு நகரத்தார் பெருமையை உலகமெங்கும் பரப்பிக்கொண்டிருக்கின்ற கோவிலூர் ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் வருகை தந்து அருளாசி தந்தார்கள். நியூயார்க்கில் கோவிலூர் மடத்துக்குக் கிளைகள் உண்டாக்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள நாச்சியப்பசுவாமிகள் அங்கிருந்து ஜெர்மனிக்கு வந்து, பிறகு டில்லிக்கு வந்து திருக்குடநீராட்டு விழா நடக்கும் புதன்கிழமைக் காலையில் காசிக்கு வந்து சேர்ந்தார்கள். இது நகரத்தார் திருப்பணிகளைத் தொடர்ந்து செய்யும் அவர்களின் கருணையையும் எளிமையையும் ஈடுபாட்டையும் காட்டியது.

காஞ்சி மடாதிபதியும் கோவிலூர் மடாதிபதியும் ஒருசேர வீற்றிருந்த காட்சி தென்தமிழும் வடமொழியும் ஆனான் கண்டாய் என்ற அப்பரடிகள் தேவாரத்தை நினைவூட்டியது காசி அன்னபூரணி ஆலய மகந்த் (நிர்வாகி) கோசுவாமி திரிபுவன்புரி அவர்களும் மதன்மோகன் மாளவியாவின் பேரனும், உச்சநீதிமன்ற நீதிபதியுமான கிரிதர் மாளவியா அவர்களும் காசி இந்து பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சிம்மாத்ரி அவர்களும், காசி விசுவநாதர் கோயில் நிர்வாக அதிகாரி லலித் திவாரி அவர்களும் திருக்குட நன்னீராட்டில் கலந்து கொண்டார்கள். வேதம் ஓதி, திருமுறைபாடி வேள்வி செய்து நாதசுர மங்கல ஒலியோடு திருக்குட நீராட்டுக் கண்ட காசிப் பெரியவர்கள் இது நகரத்தார்களாலேயே முடியும் என்று பாராட்டினார்கள். திருக்குட நீராட்டுவிழா ஏற்பாடுகள் தங்கும் வசதி, உணவு வசதி ஆகியவற்றை காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர நிர்வாகிகள் மிகச்சிறப்பாகச் செய்து இருந்தார்கள் தலைவர் டாக்டர் எம். ஆர். முத்தையா செட்டியார். துணைத்தலைவர்கள் எஸ்.ஓ.ஆர்எம். கணபதி செட்டியார் எஸ்.கேஆர் பழனியப்ப செட்டியார், செயலர் கே. கண்ணப்பசெட்டியார், துணைச்செயலாளர்கள் "பழம்நீ" லெ.மு.மு. முத்துமாணிக்கம் செட்டியார். வி. இராமசாமி செட்டியார். பொருளாளர் ஒய்.எஸ்டி.எல். சிதம்பரம் செட்டியார் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் ஆகிய அனைவரும் விசாலாட்சியின் திருக்குட நீராட்டு விழாவைச் சிறப்பாகச் செய்யும் புண்ணியம் பெற்றார்கள்.

இவ்விழாவில் கலந்து கொண்டு திருக்குட நன்னீராட்டு விழாவில் நேர்முக வர்ணனை செய்யும் பேறு எனக்கும் வாய்த்தது. இது என் தவப்பயன் என்றே எண்ணி மகிழ்கிறேன்.

# கும்பாபிஷேகம் ஏன்?

அருட்கவி கு.செ. இராமசாமி

காயமே கோயிலாக

ஆலயம் என்ற சொல்லை, ஆ + லயம் என்று பிரிக்கலாம். ஆ - ஆன்மா. லயம் - லயமாதல். (ஒன்று கூடுதல்).

ஆன்மா பரம்பொருளை உணர்ந்து அதனோடு லயமாகும் இடம் ஆலயம்.

ஆலயம் - பசு, கருவறை - பசுவின் மடி, விக்கிரகம் - மடியில் உள்ள காம்பு. தெய்வ அருள் - காம்பில் இருந்து சுரக்கும் பால்.

வி - விசேடம், கிரகம் - தங்கி இருக்கும் இடம். தெய்வம் விசேடமாய்த் தங்கி இருக்கும் இடம் விக்கிரகம்.

ஆலயங்கள் 1. சரீரப் பிரஸ்தாரம், 2. இருதயப் பிரஸ்தாரம் என்று இரண்டு வகையாய் அமைகின்றன.

காயமே கோயிலாக என்பது அப்பரடிகள் தேவாரம், ஊனுடம்பு ஆலயம் என்பது திருமூலர் திருமந்திரம்.

மனித உடம்புதான் ஆலயம். இதன் வெளி அமைப்பைப் போல் அமைவது சரீரப் பிரஸ்தாரம். உள் அமைப்பைப் போல் அமைவது இருதயப் பிரஸ்தாரம்.

சரீரப் பிரஸ்தாரம்.

உடம்பின் வெளி அமைப்பைப் போல் அமைவது என்றால், அது எப்படி?

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | உடம்பு |
| கோபுரம் | - | வாய் |
| நந்தி | - | நாக்கு |
| கொடிமரம் | - | உள்நாக்கு |
| விளக்குகள் | - | ஐம்பொறிகள் |
| கருவறை | - | இருதயம் |
| சிவலிங்கம் | - | ஜீவன் |

இது ஒரு வகையான பார்வை. வேறொரு வகையாகவும் பார்க்கலாம். அது

| | | |
|---|---|---|
| கர்ப்பக்கிரகம் | - | தலை (மூலாதாரம்) |
| அர்த்தமண்டபம் | - | கழுத்து (சுவாதிஷ்டானம்) |
| மகாமண்டபம் | - | மார்பு (மணிபூரகம்) |
| ஸ்நபன மண்டபம் | - | நாபி (அநாகதம்) |
| ஸ்தம்ப மண்டபம் | - | தொடை (விசுக்தி) |
| நிருத்ய மண்டபம் | - | பாதம் (ஆக்ஞை) |

தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு, மஜ்ஜை, மேதை, சுவேதநீர் என்ற ஏழு தாதுக்களால் இந்த உடம்பின் கட்டுமானம்.

செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணாம்பு, மணல், தண்ணீர், காரம் என்ற ஏழு பொருட்களால் ஆலயத்தின் கட்டுமானம்.

மூன்று பிரகாரங்கள் என்றால், அவைகள் ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம், என்னும் அவைகள் போல.

ஐந்து பிரகாரங்கள் என்றால் அவைகள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற பஞ்சகோசங்கள் போல.

கோபுரம் - ஸ்தூலலிங்கம்
கருவறைலிங்கம் - சூட்சுமலிங்கம்
கலசம் - ஸஹஸ்ரார பீடம்

பிரம்மரந்தரத்தில் இருந்து அமிர்த தாரை சொரிவது போல, கருவறை மேல்பகுதியில் இடப்பட்ட பிரம்மரந்தரக் கல் வழியாகத் தீர்த்தம் கருவறையில் வழிய நடக்கும் கும்பாபிஷேக வைபவம்.

இருதயப் பிரஸ்தாரம்.

சரீரப் பிரஸ்தாரம் - பஹிர்முகம். யாவரும் காண வெளியே கோயில் அமைத்தான் காடவர்கோன் பல்லவ மன்னன்.

இருதயப் பிரஸ்தாரம் - அந்தர் முகம், உள் முகமாய்க் கோயில் அமைத்தார் திருநின்றவூர்ப் பூசலார் நாயனார்.

முன்னது - புறக்கோயில்
பின்னது - அகக் கோயில் (மனக் கோயில்)

சைவ சித்தாந்தப்படி, தத்துவம் முப்பத்தாறு. ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், பத்து இந்திரியங்கள், நான்கு அந்தக்கரணங்கள் என்னும் தத்துவங்கள் இருபத்து நான்கும் தாமரைத் தண்டு.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன், மூலப் பிரகிருதி என்னும் ஏழோடு, சுத்த வித்தை என்பதும் கூடிய தத்துவங்கள் எட்டும், தாமரை இதழ்கள் எட்டு.

ஈசத்துவம், சாதாக்கியம் என்ற இரண்டும் தாமரை இதழ்களின் உள்ளே கேசரங்கள்.

சக்திதத்துவம் - தாமரையின் பொகுட்டு
சிவதத்துவம் - பீஜாட்சரம்

*பத்மகோச ப்ரதீகாச*
*ஹ்ருதயஞ் சாப்யதோமுகம்*
*தஸ்யமத்யே மஹானக்நிர்*
*விச்வார்ச்சிர் விச்வதோமுக;*
*தஸ்யா : சிகாயா மத்யே*
*பரமாத்மா வ்யவஸ்தித :*
*ஸப்ரஹ்ம ஸ சிவ : ஸ ஹரி :*
*ஸ இந்த்ர : ஸ அக்ஷர :*
*பரம: ஸ்வராட்*

ஸ்ரீ நாராயண சூக்தம்

இருதயம் கவிழ்த்துவைத்த தாமரை மொட்டுப் போல் உள்ளது. அதன் மத்தியில் ஒரு மகா அக்னி நிலைபெற்றுள்ளது. அது எங்கும் ஒளி வீசுவது. எல்லாத் திசைகளிலும் செல்வது. அந்த ஒளிப் பிழம்பின் நடுவே பரமாத்மா நிலைபெற்றிருக்கிறார். அவரே பிரம்மா. அவரே சிவபெருமான். அவரே திருமால் அவரே இந்திரன். அவரே அழிவற்ற விராட் புருஷன். மகாதேவனான பரம புருஷன். இதுதான் தஹராலய ரகசியம்.

கொடிக்கம்பம் - புருவமத்தியில் முடியும் சுழுமுனை நாடி. அதற்கு அடுத்து பலிபீடம், அதற்கும் அடுத்து மூலவர், நேர்பார்வையில் திருநந்தி தேவர்.

பிராணவாயுவை நடுநாடியான சுழுமுனை நாடியில் ஏற்றி அசைவற்று நிறுத்தி, ஆணவ மலத்தைப் பலியிட வேண்டும். பசுபோதமான ஜீவ போதம் விலகினால் சிவதரிசனம். இதுதான் ஆலயவழிபாட்டின் ரகசியம்.

இதிலும் பிரமரந்திரம் திறந்து அமிர்தம் சொரியும் பாவனை தான் கும்பாபிஷேகம்.

புதிய ஆலயங்கள்

சிலப்பதிகாரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காவியம். அதில் இருந்து அந்நாளின் வழிபாட்டில் இருந்த ஆலயங்களையும் அறிகிறோம். ஆலய நிர்மாணம் - கும்பாபிஷேகம் பற்றியும் அறிகிறோம்.

கண்ணகியின் திருவுருவச் சிலைக்கான கல்லை, இமயமலையில் இருந்து வெட்டி எடுத்தான் சேரன் செங்குட்டுவன். திருவுருவம் சமைத்து, படிமத்தைக் கங்கையில் நீர்ப்படை செய்வித்தானாம்!

*பால்படு மரபின்*
*பத்தினிக் கடவுளை*
*நூல்திறன் மாக்களின்*
*நீர்ப்படை செய்து*

சிலப்பதிகாரம்

நூல் திறன் மாக்கள் - வேதம் ஓதிய அந்தணர்கள். நீர்ப்படை - இன்றும் தேவதா பிரதிஷ்டை செய்யும் முன் நடைபெறும் ஜலவாசம் போல. தனவாசம், தான்யவாசம் முதலானவைகளும் கூடக் கண்ணகி படிமத்திற்கு நடந்திருக்கலாம்.

இதன்பின் வஞ்சிமாநகரில் பத்தினிக் கோட்டம் சமைத்து, கண்ணகியம்மைக்கு, கும்பாபிஷேகம் நடத்தினான். நித்திய - நைமித்திக வழிபாடுகளுக்கும் ஏற்பாடு செய்தான் சேரன் செங்குட்டுவன்.

*கங்கைப்பேர் யாற்றிருந்து*
*நங்கைதனை நீர்ப்படுத்தி,*
. . . .
*வஞ்சிமா நகர்புகுந்து,*
. . . .
*நிலவரசர் நீள்முடியால்*
*பலர்தொழு படிமம்காட்டி*
*கடவுள்மங்கலம் செய்தபின் . . .*
. . . .
*நித்தல் விழாவணி நிகழ்க . . .*

-சிலப்பதிகாரம்

(கடவுள்மங்கலம் - தேவதா பிரதிஷ்டை, கும்பாபிஷேகம்.)

பெரிய புராணம் - பூசலார் நாயனார் புராணத்தில், "தாபனம்" என்ற சொல் அடுத்தடுத்து மூன்று முறை வருகிறது.

"மன்னும் தாபனம் சிவனுக்கு ஏற்க விதித்த நாள்" என்பது பிரபு சேக்கிழார் வாக்கு.

செங்குட்டுவன் எடுத்த கண்ணகிகோவில் புதிய திருப்பணி. பூசலார் நாயனார் மற்றும் பல்லவ மன்னன் எடுத்த கோவில்களும் புதிய திருப்பணிகள். இதனால் தேவதாபிரதிஷ்டை - தாபனம் ஆகும் நூதன கும்பாபிஷேகங்கள்.

புனரமைப்புத் திருப்பணிகள்

"சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில் என்" என்று திருமூலரும், "ஆலயம் பதினாயிரம் நாட்டல்" என்று மகாகவி பாரதியாரும் குறிப்பிடுவன நூதன கும்பாபிஷேகங்கள்.

"பின்னர் உள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்" என்று பாரதியார் சொல்வது, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகங்கள்.

"சேலே றியவயல் தென்காசி
ஆலயம், தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செயல்
அல்ல; அதனை இன்னும்
மேலே விரிவுசெய்தே புரப்
பார்அடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவேன்
பராக்ரம பாண்டியனே"

என்பது பராக்ரம பாண்டிய மகாராஜாவின் தென்காசி ஆலய சிலாசாசனம்.

ஆலயம் புதிதாய் அமைப்பது புண்ணியம். சிதிலமடைந்த பழைய தருமங்களைத் திருப்பணி செய்து காப்பது அதைவிட மகாபுண்ணியம்.

ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகங்கள் புனரமைப்புத் திருப்பணிகள். இதில் தேவதா பிரதிஷ்டை - "தாபனம்" என்பது இல்லை.

முன்னமே உள்ள கோயில், முன்னமே நிறுவிய, வழிபாட்டில் இருந்துவரும் பிம்பம்.

வெளிவேலைகளை முடித்துக் கொண்டு, கருவறை உள்வேலைக்குப் போகவேண்டும்.

மூர்த்தியை உள்ளே வைத்துக் கொண்டு, தச்சுவேலை கொத்து வேலை செய்வது அபசாரம் ஆதலால் உள்வேலைகளின் அளவை ஒட்டி, இத்தனை காலம் யாகபூஜை என்று தீர்மானிக்கப்படுகிறது.

பிம்பத்தில் உள்ள தேவதையைக் கலாகர்ஷணம் செய்து பாவனா முகமாய், யாகசாலை வேதிகையில் உள்ள கும்பத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

பிம்பத்தில் இருந்து கும்பத்திற்குக் கொண்டுவருவது கலாகர்ஷணம். கும்பத்தில் இருந்து மறுபடி பிம்பத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேகத்தை நம் முன்னோர்கள் கடவுள் மங்கலம் என்றார்கள். பெருஞ்சாந்தி என்பதும் உண்டு.

திருமால் கோயில்களில் அபிஷேகம் என்பது இல்லை. புரோக்ஷணம் தெளித்தல்தான். ஆதலால் அவர்கள் மகாசம்ப்ரோக்ஷணம் என்று அழைப்பார்கள்.

சுவாமி ஒரு விருந்தாளிபோல் யாகசாலைக்கு எழுந்தருள்கிறார். ஆகவே விருந்துபசாரம் போல் யாகசாலையில் விசேட பூஜைகள்!

வேதிகையில் நேர்முகமான பூஜைகள். யாககுண்டத்தில், வேள்வியில், அக்னி பூர்வமான ஆகுதிகள். ஆயகலைகள் அறுபத்து நான்கினாலும் உபசாரங்கள்.

அஷ்டபந்தன விளக்கம்.

பீடமும் அதில் நிறுவப்படும் தெய்வப் படிமமும் தனித்தனியே வடிவமைக்கப்படுகின்றன. இரண்டையும் இணைத்துப் பூசப்படும் பூச்சே அஷ்டபந்தனம்.

"கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி,
செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு - தம்பழுது
நீக்கி, எருமைவெண் ணெய்கூட்டி, நன்கிடித்து,
ஆக்கல் அட்ட பந்தனம் ஆம்"

வெண்பாவில் கண்ட எட்டுச் சரக்குளையும் உரிய விகிதத்தில் சேர்த்து அஷ்டபந்தன மருந்து தயாரிக்கப்படுகிறது.

முன்னமே பூசப்பட்ட பந்தனம் கரைந்துவிட்டால் மறுபந்தனம் இடவேண்டும். பெரும்பாலும் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளே ஒரு பந்தனம் கரையாதிருக்கும்.

அர்ச்சகர் திருமேனி தொட்டு வழிபாடு செய்யும்போது, பிம்பம் ஆடுதல் கூடாது.

தெய்வம் நிலைகொள்ளாது ஆடினால், தேசம் நிலைகொள்ளாது ஆடும்! அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் ஏன் என்பதை இதனால் அறியலாம்.

தஞ்சைப் பெரிய கோவில் ஆதிகும்பாபிஷேகத்தின் போது, அஷ்டபந்தன மருந்து, இறுகிப் படியாமல் இளகி இளகி ஒழுகியதாம் ! கருவூர்த் தேவர் தம்முடைய ஆத்மசக்தியால் அதை இறுகிப் படிய வைத்தாராம்.!

திருப்பனந்தாளில் தாடகைப் பிராட்டியார் சிவபூஜை புரிந்தாராம். எடுத்த மலர் ஒரு கையில், பூக்குடலை இன்னொரு கையில். இடையில் ஒரு சோதனைபோல, ஆடை நெகிழ்ந்து இறங்கியதாம்!

அம்மையார் என்ன செய்வார்?

பூவைச் சூட்டுவதா? புடவையை இழுத்துப் பூட்டுவதா?

கருணையே வடிவான பெருமான் மலர் இருந்த கரம் நோக்கி வளைந்து கொடுத்து, மலரை ஏற்றருளினாராம்.

அன்று சாய்ந்து கொடுத்த திருமேனியை, அதன்பின், யாராலும் நிமிர்த்த முடியவில்லை.

கலயநாயனார் தம்முடைய கழுத்தில் கயிறுபூட்டி இழுத்து, லிங்கமூர்த்தியை நிமிர்த்தி நிலை நிறுத்தினார்.

தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதி சிவாசார்ய சுவாமிகளைப் புறக்கணித்து, திருவிழாவைத் தொடங்கினார்கள். துவஜஸ்தம்பத்தில் கொடி ஏறமறுத்தது.

உமாபதியார் வந்து கொடிக்கவி பாடிய உடனே யாரும் ஏற்றாமல் கொடி தானே ஏறியது!

பொருள் வளத்தால் மட்டுமே தெய்வ சாந்நித்தியம் வராது. ஞானிகளின் அருள் வலம் இருந்தால், தெய்வம், அவ்விடம் விட்டு ஒரு போதும் விலகாது.

# வாராணசீ மகத்துவம்

(மேன்மை பொருந்திய நமது நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள் இந்தியத் திருநாட்டிலும் மற்றும் பல வெளிநாடுகளிலும் தொன்று தொட்டு இன்று வரை செய்து வரும் தெய்வத் திருப்பணிகளையும், ஆன்மீகப் பணிகளையும் தம்மை நாடி வரும் பக்தர்களுக்கும் மற்றும் ஆன்மீகப் பெரியோர்களுக்கும் விரிவாக எடுத்துரைத்து போற்றி மகிழ்ந்து பாராட்டி அருளாசி வழங்கி வருகின்ற எனது குருநாதர், கர்நாடக மாநிலம், பெங்களூர் ஸ்ரீ ராஜேஸ்வரி நகர், ஸ்ரீ கைலாச ஆஸ்ரம மஹாசமஸ்தான பீடாதிபதி, பரமாச்சார்ய ஜெகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ திருச்சி மஹாஸ்வாமிகள் என்று அழைக்கப்படும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவரத்னபுரி பகவத் பாதாச்சாரியார் அவர்கள் காசியாத்திரையின் மகத்துவத்தைப் பற்றி அவ்வப்போது எடுத்துரைத்த அரிய விஷயங்களைத் தொகுத்து அவர்களின் பூரண நல்லாசியுடன் ஸ்ரீ காசியாத்திரை சென்று வரும் பெருமக்கள் படித்துப் பயன்பெறும் பொருட்டு ஸ்ரீ காசியில் நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்று பரிபாலித்து வரும் ஸ்ரீ விசாலாக்ஷி கோவில் குடமுழுக்கு விழா பிரமாதி வருடம் ஐப்பசி மாதம் 24ம் தேதி ஆங்கிலம் 10-11-1999க்கு நடைபெற இருப்பதை நினைவு கூறும் முகமாக ராயவரம் ராம. ராமசாமி அவர்களால் வெளியிடப்பட்ட வாராணசீ மகத்துவம் என்ற நூலில் இருந்து)

வாரணாசீ என்றழைக்கப் பெறும் ஸ்ரீ காசி நமது பாரத தேசத்தில் புகழ் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகும், குறிப்பாக இந்துக்கள் புனித யாத்திரை மேற்கொள்ளும் புண்ணியத்திருத்தலமாகும். ஸ்ரீ காசியாத்திரை சென்று வர பல நியமங்கள், வழிமுறைகள் இருந்தாலும் தென்னாட்டிலிருந்து காசிக்குச் செல்பவர்கள் முதலில் ஸ்ரீ ராமேஸ்வரம் சென்று ஸ்ரீ ராமனாதஸ்வாமி ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாளைத் தெரிசனம் செய்து அங்கிருந்து அலகாபாத்துக்குச் சென்று பிரயாகையில் தீர்த்தமாடி காசிக்குச் சென்று ஸ்ரீ காசி விஸ்வநாதர் மற்றும் ஸ்ரீ விசாலாட்சி தெரிசனம் செய்து கங்கை தீர்த்தத்துடன் மீண்டும் ராமேஸ்வரம் சென்று ஸ்ரீ ராமனாதஸ்வாமிக்கு கங்காபிஷேகம் செய்து தெரிசித்து காசியாத்திரையைப் பூர்த்தி செய்து வரவேண்டும். இராமேஸ்வரத்திலிருந்து மண், கோடி தீர்த்தம் எடுத்துச் சென்று மண்ணை கங்கையில் சேர்த்து கோடி தீர்த்தத்தை விஸ்வனாதருக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். காலப்போக்கில் இவ்வழி முறைகள் நடைமுறை சௌகரியங்களுக்கேற்ப நடந்து வருகின்றது.

காசியாத்திரை என்பது காசிக்கு மட்டும் சென்று திரும்புவது அல்ல. முதலில் அலகாபாத்தில் உள்ள திரிவேணி சங்கமத்துக்கு சென்று ஸ்நானம் செய்து விட்டு, காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்யவேண்டும். பின்னர் கயாவுக்குச் செல்ல வேண்டும். கங்கை யமுனை கண்ணுக்குத் தெரியாத சரஸ்வதி மூன்றும் சங்கமமாகும் இடம் திரிவேணி. திரிவேணியில் ஸ்நானம் செய்து பின்னர் சுத்த கங்கையில் ஸ்நானம் செய்து தீர்த்தம் எடுக்க வேண்டும். அக்ஷயவடம் என்பதின் அடிபாகம் (வேர்) திருவேணிசங்கமம், மத்திபம் காசி, நுனிபாகம் கயா. கயா என்பது மறைந்த மூதாதையர்களுக்குத் திதி கொடுக்கும் திருத்தலமாகும். திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்கிறவர் தனது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நற்கதியைத் தேடித் தருகின்றார் என்பது ஐதீகம். திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தை தெரிசனம் செய்தால் முக்தி, திருவண்ணாமலை நினைத்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி என்பது தொன்மைமிகு பொன்மொழி. உலகத்துக்கெல்லாம் தாய் தந்தையாக, தனக்குவமை இல்லாதவனாக விளங்குகின்ற அம்மையப்பன் காசியில் ஜீவனைக் கடையேற்றும் பொறுப்பினைச் செய்து அருள் பாலிக்கின்றார். ஆகையால் காசியில் இறப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கங்கை வானுலகத்திலிருந்து பூமிக்கு வருவதற்கு முன்பே தோன்றிய மகிமை பெற்ற திருத்தலம் காசி. காசியைத் தெரிசிக்க தேடிவந்த கங்கை அதனைக் கண்டதும் அதைத் தொட்டுப் புனிதம் பெற வேண்டும் என்று வடக்கு நோக்கி ஓடி காசியைத் தழுவிக் கொண்டமையினால் கங்கை புனிதமும் மகிமையும் பெற்றது. பாபங்களை நினைத்து வருந்தும் மனோ பாவமும் மீண்டும் அந்த பாபங்களை செய்யாதிருக்கும் வைராக்கியமும் ஒருவனைப் பவித்திரனாக்கும். இந்த வைராக்யத்தைப் பெறுவதற்கே கங்கையில் ஸ்நானம் செய்வது. காசியில் கவுளி குரல் கொடுப்பதில்லை, கருடன் வட்டமிடுவதில்லை, பசுவும் அம்மா என்று கத்துவதில்லை என்பார்கள். காசியில் பசுக்களெல்லாம் மிகவும் சாதுக்களாக உள்ளன.

காசியில் குறைந்தது ஐந்து நாட்களாவது தங்கவேண்டும். அப்படி தங்கி அஸி, வருணா, பஞ்சகங்கா, தசாச்வமேதம், மணிகர்ணிகை முதலிய பஞ்ச கட்டங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும். அவ்விதம் இயலாதவர்கள் மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்து ஸ்ரீ விஸ்வநாதரைத் தெரிசித்துக் கொண்டாலே காசிக்கு வந்த பலன் கிடைக்கும். காசியில் பல கோடி தீர்த்தங்கள் உண்டு என்றாலும் மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்தால் எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும். வில்லைப்போல் வளைந்து செல்லும் கங்கைக்கரையின் மத்தியில் கேந்திரஸ்தானமாக மணிகர்ணிகை

விளங்குகிறது. இங்குதான் மரணமடைபவர்களுக்கு ஹரியும் ஹரனும் நற்கதியளிக்கின்றார்கள். ஸ்ரீ விஸ்வேஸ்வர், காதுகளில் "ராம" தாரக மந்திரத்தை ஓதுவதாக ஐதீகம், பெருமான் மணிமந்திரத்தை ஓதுவதால் இக்கட்டத்துக்கு மணிகர்ணிகை என்ற பெயர் ஏற்பட்டது.

ஏழு மோட்சபுரிகளில் காசி ஒன்றாகும். அதனை கங்கை அலங்கரிக்கிறது. அந்த கங்கையில் மாணிக்கமாக ஒளிர்வது மணிகர்ணிகைக்கரை. பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் மணிகர்ணிகையின் மகிமையையும், பெருமையையும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். புண்ணியம் நிறைந்த மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்பவர் சிறிய குட்டையைக் கடப்பதைப்போல் சம்சாரக்கடலைக் கடந்து பிரம்மலோகத்தை அடைகிறார் என்று ஸ்ரீ சங்கர பகவத் பாதர் கூறியருளியுள்ளார். மணிகர்ணிகையில் ஸ்நானமும் அதன் கரையில் தகனமும் கிடைக்கபெற்றவன் மோக்ஷம் அடைவதாக ஐதீகம். அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இதற்காகவே காசிக்குச் சென்று வாழும் முதியவர்களும் உண்டு.

ஸ்ரீ விஸ்வேஸ்வரர் முகமதியர்களால் பாதிக்கப்பட்டு கங்கையில் மூழ்கடிக்கப்பட்டு இருந்த சமயம் விஸ்வேஸ்வரரின் பரம பக்தையாகிய அகல்யாபாய் விஸ்வேஸ்வரரையே நினைத்து வருந்தி ஸ்வாமி கிடைக்கவில்லை என்றால் கங்கையில் மூழ்கிவிடுவேன் என்று கூறி 48 நாள் உபவாசமிருந்து கங்கையில் மூழ்கும் தருணத்தில் அவருடைய கையில் விஸ்வேஸ்வரர் கிடைத்தார். அவரை இப்போது கட்டியுள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்தார்கள். பண்டாக்கள் அனைவரும் சேர்ந்து அவர் உண்மையான விஸ்வேவரர் இல்லை என்று தர்க்கம் செய்தார்கள். அகல்யாபாய் விஸ்வேஸ்வரரை வணங்கி உண்மையான விஸ்வேஸ்வரர் என்று நிரூபிப்பதற்கு ஸ்வாமி ஈசான்ய பாகத்தில் நகர்ந்து இருக்க வேண்டுமென்று முறையிட அவ்வண்ணமே ஸ்வாமியும் ஈசான்ய பாகத்தில் நகர்ந்து இருந்து இன்றும் காட்சி தருகின்றார். ஸ்வாமியின் மேல் முகமதியர்களால் பாதிக்கப்பட்ட வடுவை இன்றும் நாம் காணலாம். காசி விஸ்வனாதர் கோவில் மஹாத்வாரங்களில் அகல்யாபாய் மஹாத்வாரம் என்று அழைக்கப்படுவதும் உண்டு.

காசிக்கு வந்து கங்கையில் ஸ்நானம் செய்து, பின்னர் ஸ்ரீ டுண்டிவிநாயகர், ஸ்ரீ விஸ்வநாதர் , அன்னபூரணி, விசாலாட்சி, ஸ்ரீ துர்காதேவி, சங்கடஹர ஆஞ்சநேயர், கால பைரவர் அனைவரையும் தெரிசனம் செய்து கடைசியாக சோழி மாதாவை தெரிசனம் செய்ய வேண்டும். காலபைரவர் கோவிலில் இனி பாபம் செய்திலை என்று உறுதிபூண்டு காலபைரவர் சன்னிதியில் கங்கணமாகக் கட்டிக்கொள்வது காசிக்கயிறு, சத்தியக்கயிறு, ஸ்ரீ கால பைரவர் பிரசாதம். சோழி மாதா என்று அழைக்கப்படும் தேவி முன்னொரு காலத்தில் காசிக்கு வந்தவர்கள் புண்ணியத்தைப் பெறாமல் தடுத்துக் கொண்டிருந்தாள். பக்தர்கள் முறையிட்டதன் பேரில் ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அவளை ஊருக்கு கடைசியாக இருக்கும்படி கட்டளையிட்டார். அவள் மனம் வருந்தி தனக்கு விமோசனம் இல்லையா என்று கேட்டபோது மனம் இரங்கிய ஸ்ரீ விஸ்வேஸ்வரர் காசிக்கு வரும் பக்தர்களை அவர்கள் ஊர்களுக்கு திரும்பும் சமயம் உன்னை தெரிசிக்கும்படி செய்கிறேன். சோழிகளுடன் காசுகள் போட்டால் அவர்களுக்கு காசிக்கு வந்த புண்ணியம் கிடைக்கும்படி செய்கிறேன் என்று அருள் பாலித்தார்.

காசியில் அன்னை அன்னபூரணி தனிக்கோயில் கொண்டு அருளாட்சி நடத்துகின்றாள். ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய அன்னபூர்ணாஷ்டகத்தில் காசீபுராதீஸ்வரி என்று மனம் மகிழ்ந்து அழைக்கப்படும் அன்னபூர்னேஸ்வரி காசி நகரின் நடுநாயகமாக கொலு வீற்றிருக்கின்றாள். தீபாவளியின் போது அத்திருக்கோயில் தங்கக் குத்துவிளக்கில் நவரத்தின சுடரொளி படர்வது போல் ஒளிர்கிறது. அந்த மூன்று நாட்கள் மட்டுமே தங்க அன்னபூரணி ஈஸ்வரனுக்கு அன்னம் வழங்கும் தங்கத் திருமேனி திருக்காட்சியை கண்ணாரக் கண்டு களிக்கலாம். காசியில் பிந்து மாதவர், திரிவேணியில் வேணி மாதவர், ராமேஸ்வரத்தில் சேது மாதவர் இம்மூவரும் க்ஷேத்ரபாலகர்கள், இவர்களையும் காசியாத்திரை செல்பவர்கள் தெரிசிக்க வேண்டும்.

காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்திலிருந்து ஸ்ரீ விஸ்வேஸ்வரர் கோவிலுக்கு நித்யபடி மூன்று காலங்களுக்கு பூஜை சாமான்கள் (சம்போ) மங்கள வாத்யத்துடன் அனுப்பி வருவதும் ஸ்ரீ அன்னபூரணி கோவிலுக்கும் பூஜை சாமான்கள் அனுப்பி வருவதும் இன்றும் மிக நல்ல முறையில் நடந்து வருகின்றது. இத்தகைய வாய்ப்பு என்றும் நகரத்தார்களின் நல்வாழ்வுக்கு உகந்தது என்று எனது குருநாதர் அடிக்கடி சொல்லுவார்கள். நமது காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்திலும் தீபாவளியை ஒட்டிய மூன்று நாட்கள் தங்க விசாலாக்ஷி எழுந்தருளி எல்லோருக்கும் அருள் பாலிக்கின்றாள்.

நன்றி : ராயவரம் ஆர்எம். இராமசாமி அவர்களுக்கு

# ஆலய நிர்மாணம்

*நாகர்கோவில் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்கள் அருளியது*

நமது நாட்டில் சைவாகமங்களை ஒட்டியும், சாக்தேயம், பாஞ்சராத்திரிகம், தந்திரம் முதலியனவற்றையொட்டியும் ஆலயங்கள் நிர்மாணம் செய்யப்படுகின்றன. சிவாகமங்கள் இருபத்தெட்டோடு சைவ உபாகமங்கள் நூற்றுப்பதின் மூன்று உள்ளன. சாக்தேய ஆகமங்கள் அறுபத்துநான்காகும். பாஞ்சராத்ராகமங்கள் நூற்றெட்டென்பர். அவற்றுள் முக்கியமானவை பாஞ்சராத்ரமும், வைகானஸமுமாகும். குமாரதந்திரம் முதலிய தந்திர நூல்களை மேற்கொண்டு எழுந்த கோவில்களும் பல உள. இவை ஒவ்வொன்றும் ஆலய நிர்மாணம், பிரதிட்டை, நித்திய பூஜை, நைமித்திக பூஜை, திருவிழாக்கள், தீக்கைகள், மந்திரங்கள் முதலியவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறுகின்றன.

எந்த ஆகமத்தை ஒட்டி ஓர் ஆலயம் நிறுவப்பட்டதோ அந்த ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டு பூஜைகள் முதலியன நடைபெற்று வருகின்றன. ஆதலால் ஆலய பூஜை, பிரதிட்டை முதலியன பலவிதமாக நடந்து வருகின்றன. ஆலய நிர்மாணங்கள் ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், ஆந்திரதம் என நான்கு வகைப்படும்.

### 1. ஆவர்த்தம்

ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டிமுடித்து முதன்முதலாக விக்கிரகஸ்தாபனம் முதலியன செய்து அனுக்ஞை முதல் கும்பாபிடேகம் வரை செய்து முடிப்பதாகும்.

### 2. அநாவர்த்தம்

ஆற்றுநீர்ப் பெருக்காலோ, விடாமழை பொழிந்ததாலோ , பூமி அதிர்ச்சிகளாலோ, மணல் மூடியதாலோ ஆலயங்கள் அழிந்துபோனால் திரும்பவும் அதைக் கட்டிமுடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதிப்பித்துச் சீர்திருத்தம் செய்வதாகும்.

### 3. புனராவர்த்தம்

இதனை ஜீர்ணோத்தாரண அட்டபந்தன மகாகும்பாபிடேகம் என்பர். நடைமுறையில் இருக்கும் ஆலயத்தில் காலப்போக்கால் எவையேனும் சில பாகங்கள் சிதைந்து போனால், அவற்றைப் பூர்த்தி செய்து விக்கிரகங்கள் அலையாது அசையாது இருக்கும்படி மருந்துகள் சார்த்தி, எல்லாக் கிரியைகளையும் இனிது நடத்தி, யாக சாலைகளில் கும்பங்களில் எழுந்தருளப் பண்ணியிருந்த மூர்த்திகளைத் திரும்பவும் கோவில் விக்கிரகங்களில் ஆவாஹனம் பண்ணுதலாம். எட்டு சக்திகளோடு இறைவனை இணைப்பதால் அட்டபந்தனம் என இதனைக் கூறுவர்.

### 4. அந்தரிதம்

சில ஆலயங்களில் திருடுதற் பொருட்டு அசுத்தம் நிறைந்த பொருள்களோடு திருடர்கள் புகுந்து ஆலயத்தை அசுத்தப்படுத்தி விடுகின்றனர். அவ்வசுத்த நீக்கத்தின் பொருட்டுச் சம்பரோட்சனம் செய்யப்படும். அதுவே அந்தரிதம் ஆகும்.

### பிரதிட்டைக்குரிய கிரியைகள்

பிரதிட்டைக்குரிய கிரியைகள் அறுபத்து நான்காகுமென ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுள் இன்றியமையாக் கிரியைகள் சில உள.

### 1. அனுஞ்ஞை

ஆகம நூல்களை ஆராய்ந்தறிந்து, கிரியைகளை ஒழுங்குபடச் செய்யும் ஆற்றல் வாய்ந்த ஓர் ஆச்சாரியனைத் தேர்ந்தெடுத்து, இவ்வரிய செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்வதாகும்.

## 2. கணபதி பூஜை

எடுத்தகாரியம் இடையூறின்றி இனிது நிறைவேற அருள் புரியும் மகாகணபதியை வணங்குதலாம்.

## 3. வாஸ்து சாந்தி

தேவர்களைப் பூசித்து இடையூறு வராமற் காக்கும்படி வேண்டுதலாகும். கும்பாபிடேகம் இனிது நிறைவேற வேண்டிய பணிகள் புரிபவர்களுக்கும், அதில் கலந்து கொள்பவர்களுக்கும் எவ்விதமான இடையூறும் வராமலும், அசுரசக்திகளின் தொந்தரவு ஏற்படாமலும் இருக்கச் செய்யும் கிரியையாகும்.

## 4. மண் எடுத்தல்

இந்திரன் முதலிய எட்டுத் திசை காவலரிடமும் அனுமதி பெற்று, சுத்தமான பூமியிலிருந்து மண் வெட்டி எடுத்து, எடுத்த பள்ளத்தில் அபிடேகப் பொருள்களால் அபிடேகம் செய்தலாகும்.

## 5. முளையீடு

பாலிகையெனும் மண்பாத்திரத்தில் மண்ணினை நிரப்பி வித்துகளைச் சிதறி முளை வளர விடுதல் ஆகும். இது இறைவன் உலகை சிருட்டிப்பதை ஒக்குமாதலால் முக்கியமாயிற்று.

## 6. காப்புக் கட்டு

கிரியைகளை நடத்தும் ஆச்சாரியனுக்கு இடையூறுகள் வராமல் காத்தற் பொருட்டுக் கடவுளை வேண்டி அவன் கையில் மந்திர பூர்வமாகக் கயிறு கட்டுதல் ஆகும்.

## 7. கும்பத்தாபனம்

ஒரு குடத்தைச் சுத்தமாக்கி அதனை ஓர் உடல்போலப் பாவித்து, அதன் தோலாக ஆடை அணிவித்து, அதன் இரத்தமாக மேல் மண்பூசி, அதன் மாமிசமாகச் சிலவற்றை இட்டு, அதன் நரம்புகளாக நூல்களைச் சுற்றி. அதன் தாதுவாக இரத்தினமிட்டு, அதன் ஜீவனாக மந்திரம் கூறி, குடத்தை வித்தியாதேகமாகப் பாவிக்கவேண்டும்.

## 8. கலாகர்ஷணம்

எந்த மூர்த்தியை எந்தக் குடத்தில் ஆவாகனம் பண்ணுகிறோமோ அந்த மூர்த்தி அக்குடத்தில் இருப்பதாகக் கருதி அக்குடத்திற்கு அலங்காரம் முதலியன செய்து பூசித்து வழிபாடாற்றுதலாம்.

## 9. யாகசாலை

ஆலயத்தில் கும்பாபிடேகத்திற்கு முன் யாகசாலை ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது குண்டவிதானமாக அமைக்கப்படும். இக்குண்டத்தை எண்பத்தொரு பாகமாகச் செய்து நடுவில் பிரமபதத்தினை அமைப்பர். அதனைச் சுற்றிப் பதினாறு, இருப்பத்துநான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களை அமைப்பர். அதில் தீயை வளர்த்து இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைக்குரிய பொருள்களைத் தீயில் இட்டு எரிப்பர். அது இறைவனுக்கு "ஹவிஸ்" எனும் பொருளாக மாறி அவரிடம் சேர்கின்றது.

## 10. பிம்பசுத்தி

விக்கிரகத்திலுள்ள அழுக்கு நீங்குதற் பொருட்டு பட்டை, தளிர், மண் இவைகளைக் கொண்டு தேய்த்து அபிடேகம் செய்தலாம்.

### 11. ஸ்பர்சாகுதி

யாகசாலைக் குடத்திற்கும், மூலவிக்கிரகத்திற்கும் தர்ப்பைக் கயிறு, தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தலாம்.

### 12. அட்டபந்தனம்

இது மூலஸ்தான மூர்த்திக்குச் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல் அல்லது பந்தித்தல் ஆகும். இவ்வாறு ஒன்று சேர்ப்பதற்கு மருந்து சார்த்தல் எனக் கூறுவர். மருந்துப் பொருள்கள் சுக்கான், கற்பொடி, குங்கிலியம், கொம்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, இலிங்கம் வெள்ளை மெழுகு வெண்ணெய் என எட்டாகும். இந்த எட்டுப் பொருள்களால் பந்திப்பது பற்றி இது அட்டபந்தனம் எனப் பெயர் பெற்றது.

### 13. குடமுழுக்கு

யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்தக் குடம் வைத்துப் பூஜிக்கப்படுகிறதோ அந்தக் குடத்து நீரை மூர்த்திக்கு அபிடேகித்தலாம். அப்போது அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்றார். அந்த விக்கிரகத்திலிருந்து பலவித சக்திகள் வெளிவருகின்றன. அவை, அதனை வழிபடும் மக்களுக்குப் பல வகையில் அருள்புரிகின்றன.

### 14. மகாபிடேகம்

கும்பாபிடேகம் கழிந்த பிறகு இறைவன் எழுந்தருளியிருக்கும் விக்கிரகத்திற்கு முறைப்படி அபிடேக, அலங்கார, நிவேதனம் செய்தல் மகாபிடேகமாகும்.

### 15. மண்டலாபிடேகம்

மகாகும்பாபிடேகம் ஆகி மூன்று பட்சம் கழித்து செய்யப்படும் அபிடேக ஆராதனைக்கு மண்டலாபிடேகம் என்று பெயர்.

## பூஜை

பூஜை ஆத்மார்த்தம் எனவும், பரார்த்தம் எனவும் இருவகைப்படும். ஆத்மார்த்த பூஜை என்றால் பூஜிப்பவன் தனக்கும், தன் குடும்பத்திற்கும் நன்மை உண்டாவதன் பொருட்டுத் தன் வீட்டில் தன் சக்திக்கியன்றவாறு பூஜிப்பதாகும். இலிங்கம், சாளக்கிராமம், பிம்பம், சக்கரம் முதலியவற்றை வைத்துப் பூஜிப்பர். இதற்குள்ள விதிகள் ஒருவாறு ஆலய பூஜை விதிகளை ஒக்கும். மந்திரம், யந்திரம், தந்திரம் இவற்றை இதன் அங்கங்களாகவும் கொள்வர். மந்திரத்தோடு செய்து பதினாறு உபசாரங்களால் பூஜிப்பர். குருமுகமாகத் தீக்கை பெற்றவர்களே இப்பூஜைக்கு உரியவர்கள் ஆவர்.

பரார்த்த பூஜையென்பது ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு ஆகமமுறைப்படி ஆச்சாரியர்களைக் கொண்டு பூஜைசெய்வித்தல் ஆகும். அது நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும். நித்திய பூஜையென்பது நாள்தோறும் செய்யப்படும் பூஜையாகும். நாள்தோறும் பகலில் நான்கு காலங்களும், இரவில் நான்கு காலங்களுமாக எட்டுக்கால பூஜை செய்யப்படும் ஆலயங்கள் சில உள. பகலில் மூன்றும் இரவில் மூன்றுமாக ஆறுகால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் இரண்டும் இரவில் இரண்டுமாக நான்கு கால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் ஒன்றும், இரவில் ஒன்றுமாக இரண்டுகால பூஜை நடக்கும் கோவில்களும் பல உள்ளன. ஆலயங்களின் பொருள் வருவாய்க்கேற்ப பூஜைக் காலங்கள் நடந்து வருகின்றன.

## பஞ்ச சுத்தி

பூஜை செய்பவர் உடல் சுத்தமும் உளச்சுத்தமும் உடையவராக இருத்தல் வேண்டும். உடல் சுத்தத்திற்கு நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடைகட்டுதல், விபூதி, உருத்திராக்கம் அணிதல், நாமதாரணம். துளசிமணிமாலை அணிதல் முதலியன இன்றியமையாதவையாகும். உளச்சுத்தத்திற்கு ஐம்புலனடக்கலும், தீக்கை பெறுதலும் அவசியமானவை. பூஜை முறைகளைக் காரிய காரணத்தோடு அறிந்திருத்தல் நலம். இவ்விதச் சுத்திகளை பஞ்சசுத்தி எனக் கூறுவர். பஞ்சசுத்தி, என்பது ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி. திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தியென ஐந்துவகைப்படும். ஆத்ம சுத்தியில் அந்தர்யாகமும், சமாதியும் அடங்கும்.

### 1. ஆத்தும சுத்தி

பூஜை செய்யும் ஆச்சாரியன் தனது உடம்பைத் திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனிபோல சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

### 2. ஸ்தான சுத்தி

பூஜிக்கும் ஆலயமும், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக்கிரகமும், இதர மூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்பொழுதும் சுத்தமான தாயிருக்கச் செய்ய வேண்டும். அர்க்கிய நீரைப் பூமியில் தெளித்து இடத்தைச் சுத்திகரிக்க வேண்டும்.

### 3. திரவிய சுத்தி

பூஜைக்குரிய பாத்திரங்கள் நன்றாகக் கழுவி, சங்குநீர் முதலிய பூஜைக்குரிய பதார்த்தங்களில் அர்க்கிய நீரைத் தெளித்து சுத்தி செய்யவேண்டும்.

### 4. மந்திர சுத்தி

பீஜாட்சர மந்திரத்தை சுஷூம்னை நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரத்தைப் பத்துமுறை ஜபிக்கவேண்டும்.

### 5. இலிங்க சுத்தி

அபிடேக பாத்திரத்தில் நீர்நிரப்பி, கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களை அதில் ஆவாகனம் செய்து, இலிங்கத்தில் அபிடேகம் செய்யவேண்டும். விக்கிரகங்களில் ஒட்டிக்கிடக்கும் மெழுகினைக் களைந்து சுத்த ஆடை கட்ட வேண்டும்.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காக
பஞ்சவித பாசமறுப் பார்"
(சைவசமயநெறி)

"பஞ்சவித சுத்தி செய்து பாவித்துப் பூஜைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே" ( தாயுமானவர்)

## சோடசோபசாரங்கள்

இது இறைவனுக்குரிய பூஜையில் செய்யப்படும் பதினாறு உபசாரங்களாகும்.

### 1. ஆவாகனம்

இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி, விக்கிரகத்தில் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர். இது மூலாதாரத்திலுள்ள ஜீவசைதன்யத்தை எடுத்துச் சுஷூம்னை வழியாக மேலேற்றிக் கொண்டு வந்ததாகச் சங்கற்பம் செய்தல்.

### 2. ஸ்தாபனம்

இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து பீடத்தில் உள்ள விக்கிரகத்தில் இறைவனை அமர்த்துதல்.

### 3. சந்நிதானம்

இது பூசிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும் பூஜகன் அருள்பெறும் முறையுமாகும்.

### 4. சந்திரோதனம்

இறைவா! அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்கவேண்டும் என வேண்டி. பூஜை முடிவுவரை சாந்தித்யம் செய்யுமாறு கேட்டும் கொள்ளுதலாம்.

### 5. அவகுண்டனம்

விக்கிரகத்தைச் சுற்றிச் கவசமந்திரத்தால் மூன்று அகழ் உண்டாக்கித் தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூடவேண்டும்.

### 6. அபிடேகம்

எண்ணெய், மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சம் பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிடேகம் செய்யவேண்டும். அபிடேகத்திற்குத் தேனு முத்திரை காட்டவேண்டும். தேனு முத்திரை என்பது பசுவின் அகடு போன்ற முத்திரையாகும்.

### 7. பாத்யம்

சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருள்களையும் பாத்திய நீரில் கலந்து பாதத்தில் விட வேண்டும்.

### 8. ஆசமநீயம்

நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ, என்ற பொருள்களை இட்டுச் சம்கிதா மந்திரம் சொல்லி பாதத்தின் அடியில் வைக்க வேண்டும்.

### 9. அர்க்கியம்

இறைவனுக்கு மூலமந்திரம் கூறி என், யவநெல், தர்ப்பைநுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியவை கலந்த நீரால் அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

### 10. மாலை சாத்தல்

அழகிய புஷ்பங்களால் இறைவனை அலங்கரித்துக் கண்கள் குளிரக் கண்டுகளிக்க வேண்டும்.

*"உன்னை அலங்கரித்து உன் அழகைப் பாராமல்*
*என்னை அலங்கரித்து இழந்தேன் மனோன்மணியே"*

என்ற பாடல் இறைவனை அலங்கரித்துப் பார்ப்பதன் சிறப்பைக் கூறுகின்றது.

### 11. தூபம்

சந்நிதியில் சாம்பிராணிப் புகை புகைத்தல் தூபம் எனப்படும். இது கிரியா சக்தியைக் குறிக்கும். ஆணவ மலமான அஞ்ஞானத்தை கிரியா சக்தியால் அகற்றலாம் என்பது தத்துவம். அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியவை தூபப்பொருள்களாகும், தூபம் பாபங்களை அகற்றும்.

## 12. தீபம்

தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கிறது. தீபத்திற்குத் திரி, கர்ப்பூரம், துணி, நூல், பஞ்சு இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம். பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம். எண்ணெய் மத்திமம். தீபத்தை ஏற்றி நிரீட்சணம் செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீப முத்திரை காட்டி மணி அடித்து மந்திரங்கள் கூறிக் கிரீடம் முதல் பாதம் வரைகாட்ட வேண்டும்.

## 13. நைவேத்தியம்

இதற்கு நெல்லரிசி, கோதும்பை, முளைஅரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியைவிட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம். நெல், கல், உமி, ரோமம், இவை அரிசியில் கலந்திருக்ககூடாது. சுத்த அன்னம், பாயசம், பொங்கல் முதலிய சித்திரான்னங்களும் நிவேதனத்துக்கு உகந்தவையாகும். ஆத்மாவின் குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதை இது குறிக்கிறது.

## 14. பாநீயம்

வாசனையுள்ள தீர்த்தத்தை ஈசுவரப் பிரீதிக்காகச் சமர்ப்பித்தலாம்.

## 15. ஜபசமர்ப்பணம்

மூலமந்திரத்தை நூற்றெட்டு உருஜபித்து அதை ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஜபம், பூஜை, ஹோமம் முதலிய எல்லாப் புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பகவான் அதனை ஏற்றுக்கொண்டு பக்தி, முத்திகளை நமக்கு அருளுகிறான்.

## 16 - தீப ஆராதனை

பலவித தீபங்களை ஈசுவர சந்நிதியில் காட்டிச் செய்யும் ஆராதனைக்கு தீபாராதனை என்று பெயர். தீபாராதனை வேளையில் உண்டாகும் மேலதாளங்களும், மணி ஒலிகளும், சங்கநாதங்களும் அரக்கர், பிசாசர், பிரமராட்சகர் முதலியோரை வெகுதொலைவில் ஓட்டுகின்றன. தீபாராதனை 16 வகைப்படும் அவையாவன.

1. தூபம் 2.புஷ்பதீபம் 3.நாகதீபம் 4.விருஷபதீபம் 5.மேருதீபம் 6.புருஷாமிருகதீபம் 7.கும்பதீபம் 8. ஆராத்திரிகம் 9. நட்சத்திரதீபம் 10. கற்பூரதீபம் 11. பஸ்மோபசாரம் 12. கண்ணாடி காட்டல் 13. குடைபிடித்தல் 14. கொடிகாட்டல் 15.சாமரம் வீசுதல் 16.விசிறி வீசுதல்

தீபாலங்காரங்களின் தத்துவம் :- ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி விடுதல் ஆகும்.

குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் அனுபவங்கள் ஒளி, ஓசை, தீபம், ருசி, தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம், அலங்காரம், நைவேத்தியம், மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது. அர்ச்சகர்கள் ஞான ஒளியால் இறைவனைக் காட்ட ஜீவன் இறைவனைக் கண்டுகளிக்கிறான்.

மேற்கூறியதிலிருந்து ஆத்மார்த்தமாகவும் பரார்த்தமாகவும் பூஜை செய்ய வேண்டிய முறைகளும் அவற்றின் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

# ஆலய வழிபாடு

(நாகர்கோவில் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்கள் அருளியது)

ஆலயத்தைப் பற்றியும் அதன் உறுப்புகளைப் பற்றியும், அதில் உறையும் மூர்த்திகளைப் பற்றியும், முன்னர் ஆலயம் என்ற பகுதியில் விளக்கியுள்ளோம். ஆலய வழிபாடு அனைவருக்கும் இன்றி அமையாதது. ஆலயத்திற்குச் சென்று வழிபட விரும்புவோர் மேற்கொள்ளவேண்டிய சிலமுறைகள் உள்ளன. அம்முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் ஆலய வழிப்பாட்டாலாகிய நன்மையைப் பெறலாம். நீராடாதவர்களும், சுத்தமான உடை உடுத்தாதவர்களும், வீட்டில் ஜனன மரண ஆசௌசங்கள் உடையவர்களும், வீட்டிற்கு விலக்கான பெண்களும் ஆலயத்தினுள் செல்லக்கூடாது.

ஆலயத்துக்குப் போகுமுன் ஆறு, குளங்களில் வேட்டி முதலியவற்றை நன்கு தோய்த்து, நீராடி, பின்னர் தோய்த்துலர்ந்த ஆடை கட்டிக்கொள்ளவேண்டும். தீக்கை பெற்றவர்கள் அனுட்டானம் முடித்து உணவு அருந்தாமல் ஆலய வழிபாட்டிற்கு ஏகவேண்டும். சைவர்கள் விபூதி, சந்தனம், உருத்திராக்கம் முதலியவைகளையும், வைணவர்கள் நாமம், துளசிமணிமாலை முதலியவற்றையும் மற்றையோர் அவரவருக்குரிய சமயச் சின்னங்களையும் தரித்துக் கொள்ளவேண்டும்.

## 1. விபூதி

நாகர்கோவில் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் எழுதியது.

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை, அக்கினியில் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம். விபூதியைப் புதுத்துணியால் வடிகட்டி, நறுமலரிட்டுப் புதிய பாத்திரங்களில் வைத்து, அவசியத்திற்குத்தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அது தன்னைத் தரித்தவர்க்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், இரட்சித்தலால் இரட்சையென்றும், சிவதத்துவத்தை விளக்குவதால் பசிதம் என்றும் பாவங்களை நீக்கலால் பஸ்மம் என்றும் மலத்தைக் கழுவுவதால் க்ஷாரம் என்றும் பெயர் பெறும்.

துர்நாற்றத்தைப் பசுவின் சாணம் அகற்றுவது யாவரும் அறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள துர்நாற்றங்களை அகற்ற சாணத்தால் தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்தோசம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது. அன்றியும் இத்திருநீறு யாவரும் "முடிவில் பிடி சாம்பராவர்" என்ற நிலையாமையை நமக்கு உணர்த்தி, "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிதுகாலத்திற்குள் முடிவாய்: ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்" என எச்சரிக்கின்றது . பசுவாகிய ஆன்மாவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும் ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமையாதாகும்.

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று விபூதியைப் பூமியில் சிந்தாதபடி நடுவிலுள்ள மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவசிவ என்று சொல்லித் தியானித்துப் பூசுதல் வேண்டும். காலை மாலைகளிலும், குளித்த உடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

சமயதீட்சைமுறைப்படி விபூதி தரிப்பது தகுதியுடையது. எனினும், தீட்சை பெற்றுக்கொள்ளும் வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து "ஈசானமூர்த்தயே நம :" என்று சொல்லிச் சிரசிலும் "தத் புருஷ வக்த்ராய நம : " என்று சொல்லி நெற்றியிலும் "அகோர ஹிருதயாய நம : " என்று சொல்லி மார்பிலும் "வாமதேவ குஹ்யாய நம :" என்று சொல்லி கொப்பூழிலும் "ஸத்யோஜாதமூர்த்தயே நம :" என்று சொல்லிப் புஜங்களிலும், கைமுட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும் கால்முட்டுகளிலும் தரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 12. தீபம்

தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கிறது. தீபத்திற்குத் திரி, கர்ப்பூரம், துணி, நூல், பஞ்சு இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம். பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம். எண்ணெய் மத்திமம். தீபத்தை ஏற்றி நிரீட்சணம் செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீப முத்திரை காட்டி மணி அடித்து மந்திரங்கள் கூறிக் கிரீடம் முதல் பாதம் வரைகாட்ட வேண்டும்.

## 13. நைவேத்தியம்

இதற்கு நெல்லரிசி, கோதும்பை, முளைஅரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியைவிட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம். நெல், கல், உமி, ரோமம், இவை அரிசியில் கலந்திருக்ககூடாது. சுத்த அன்னம், பாயசம், பொங்கல் முதலிய சித்திரான்னங்களும் நிவேதனத்துக்கு உகந்தவையாகும். ஆத்மாவின் குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதை இது குறிக்கிறது.

## 14. பாநீயம்

வாசனையுள்ள தீர்த்தத்தை ஈசுவரப் பிரீதிக்காகச் சமர்ப்பித்தலாம்.

## 15. ஜபசமர்ப்பணம்

மூலமந்திரத்தை நூற்றெட்டு உருஜபித்து அதை ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஜபம், பூஜை, ஹோமம் முதலிய எல்லாப் புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பகவான் அதனை ஏற்றுக்கொண்டு பக்தி, முத்திகளை நமக்கு அருளுகிறான்.

## 16 - தீப ஆராதனை

பலவித தீபங்களை ஈசுவர சந்நிதியில் காட்டிச் செய்யும் ஆராதனைக்கு தீபாராதனை என்று பெயர். தீபாராதனை வேளையில் உண்டாகும் மேலதாளங்களும், மணி ஒலிகளும், சங்கநாதங்களும் அரக்கர், பிசாசர், பிரமராட்சகர் முதலியோரை வெகுதொலைவில் ஓட்டுகின்றன. தீபாராதனை 16 வகைப்படும் அவையாவன.

1. தூபம் 2.புஷ்பதீபம் 3.நாகதீபம் 4.விருஷபதீபம் 5.மேருதீபம் 6.புருஷாமிருகதீபம் 7.கும்பதீபம் 8. ஆராத்திரிகம் 9. நட்சத்திரதீபம் 10. கற்பூரதீபம் 11. பஸ்மோபசாரம் 12. கண்ணாடி காட்டல் 13. குடைபிடித்தல் 14. கொடிகாட்டல் 15.சாமரம் வீசுதல் 16.விசிறி வீசுதல்

தீபாலங்காரங்களின் தத்துவம் :- ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி விடுதல் ஆகும்.
குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் அனுபவங்கள் ஒளி, ஓசை, தீபம், ருசி, தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம், அலங்காரம், நைவேத்தியம், மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது. அர்ச்சகர்கள் ஞான ஒளியால் இறைவனைக் காட்ட ஜீவன் இறைவனைக் கண்டுகளிக்கிறான்.

மேற்கூறியதிலிருந்து ஆத்மார்த்தமாகவும் பரார்த்தமாகவும் பூஜை செய்ய வேண்டிய முறைகளும் அவற்றின் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

# ஆலய வழிபாடு

(நாகர்கோவில் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்கள் அருளியது)

ஆலயத்தைப் பற்றியும் அதன் உறுப்புகளைப் பற்றியும், அதில் உறையும் மூர்த்திகளைப் பற்றியும், முன்னர் ஆலயம் என்ற பகுதியில் விளக்கியுள்ளோம். ஆலய வழிபாடு அனைவருக்கும் இன்றி அமையாதது. ஆலயத்திற்குச் சென்று வழிபட விரும்புவோர் மேற்கொள்ளவேண்டிய சிலமுறைகள் உள்ளன. அம்முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் ஆலய வழிப்பாட்டாலாகிய நன்மையைப் பெறலாம். நீராடாதவர்களும், சுத்தமான உடை உடுத்தாதவர்களும், வீட்டில் ஜனன மரண ஆசௌசங்கள் உடையவர்களும், வீட்டிற்கு விலக்கான பெண்களும் ஆலயத்தினுள் செல்லக்கூடாது.

ஆலயத்துக்குப் போகுமுன் ஆறு, குளங்களில் வேட்டி முதலியவற்றை நன்கு தோய்த்து, நீராடி, பின்னர் தோய்த்துலர்ந்த ஆடை கட்டிக்கொள்ளவேண்டும். தீக்கை பெற்றவர்கள் அனுட்டானம் முடித்து உணவு அருந்தாமல் ஆலய வழிபாட்டிற்கு ஏகவேண்டும். சைவர்கள் விபூதி, சந்தனம், உருத்திராக்கம் முதலியவைகளையும், வைணவர்கள் நாமம், துளசிமணிமாலை முதலியவற்றையும் மற்றையோர் அவரவருக்குரிய சமயச் சின்னங்களையும் தரித்துக் கொள்ளவேண்டும்.

## 1. விபூதி

நாகர்கோவில் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் எழுதியது.

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை, அக்கினியில் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம். விபூதியைப் புதுத்துணியால் வடிகட்டி, நறுமலரிட்டுப் புதிய பாத்திரங்களில் வைத்து, அவசியத்திற்குத்தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அது தன்னைத் தரித்தவர்க்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், இரட்சித்தலால் இரட்சையென்றும், சிவதத்துவத்தை விளக்குவதால் பசிதம் என்றும் பாவங்களை நீக்கலால் பஸ்மம் என்றும் மலத்தைக் கழுவுவதால் குட்சாரம் என்றும் பெயர் பெறும்.

துர்நாற்றத்தைப் பசுவின் சாணம் அகற்றுவது யாவரும் அறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள துர்நாற்றங்களை அகற்ற சாணத்தால் தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்தோசம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது. அன்றியும் இத்திருநீறு யாவரும் "முடிவில் பிடி சாம்பராவர்" என்ற நிலையாமையை நமக்கு உணர்த்தி, "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிதுகாலத்திற்குள் முடிவாய்: ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்" என எச்சரிக்கின்றது . பசுவாகிய ஆன்மாவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும் ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமையாதாகும்.

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று விபூதியைப் பூமியில் சிந்தாதபடி நடுவிலுள்ள மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவசிவ என்று சொல்லிச் தியானித்துப் பூசுதல் வேண்டும். காலை மாலைகளிலும், குளித்த உடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

சமயதீட்சைமுறைப்படி விபூதி தரிப்பது தகுதியுடையது. எனினும், தீட்சை பெற்றுக்கொள்ளும் வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து "ஈசானமூர்த்தயே நம :" என்று சொல்லிச் சிரசிலும் "தத் புருஷ வக்த்ராய நம : " என்று சொல்லி நெற்றியிலும் "அகோர ஹிருதயாய நம : " என்று சொல்லி மார்பிலும் "வாமதேவ குஹ்யாய நம :" என்று சொல்லி கொப்பூழிலும் "ஸத்யோஜாதமூர்த்தயே நம :" என்று சொல்லிப் புஜங்களிலும், கைமுட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும் கால்முட்டுகளிலும் தரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஞானசம்பந்தர் பாண்டியனின் வெப்புநோயைப் போக்கிய "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப்பதிகத்தில் உள்ள சிலபாடல்களை ஓதியும் தரித்துக்கொள்ளலாம். அப்பாடல்களில் சிலவருமாறு ;

மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தில் உள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன்திருவால வாயான்தீருநீறே.

பூச இனியதுநீறு புண்ணிய மாவதுநீறு
பேச இனியதுநீறு பெருந்தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பதுநீறு அந்தம தாவதுநீறு
தேசம் புகழ்வதுநீறு திருவால வாயான்திருநீறே

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றை
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன்உடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள்பத்தும் வல்லவர் நல்லவர்தாமே

விபூதியைத் தரித்துக்கொண்டு "ஓம் நமச்சிவாய" என்ற பஞ்சாட்சர மந்திரத்தினைப் பலமுறை ஜபித்துக் கடவுளை வணங்க வேண்டும்.

2. உருத்திராக்கம்

சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்து கொள்ளும் மணிக்கு "உருத்திராக்கம்" என்று பெயர். உருத்திராக்கம் என்பது ருக்கினை அல்லது சம்ஸார துக்கத்தை திரவிப்பது அல்லது இல்லாமற் செய்வது. உருத்திராக்கம் சிவனது கண்ணோட்டம் எனவும் கூறுவர். நல்ல உருத்திராக்கத்தை உறைத்துப் பார்த்தால் பசும்பொன்னின் மாற்றிருக்கக் காணலாம். இதனுள் மக்கள் உடலுக்கு நன்மை பயக்கும் சிலபொருள்கள் இருக்கின்றன. இதனை உறைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாகின்றன என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். உருத்திராக்கத்தின் வழி உடலிற் பாயும் நீர் புனிதமானது.

"இலங்குமாமணி உருத்திர அக்கம் ஒன்றணியில்
விலங்கெயிற்று வெம்பூதங்கள் முதலிய மேவா"

என்றபடி உருத்திராக்கம் அணிபவரை எவ்வித உபாதிகளும் வந்தடையமாட்டா.

உருத்திராக்கத்தை அணிந்து கொள்வதற்கு எவன் கூசுகிறானோ அவனைக்காண்பதற்கு இறைவனும் கூசுகிறான்.

"பூண்பதற்குக் கண்டியினை கூசியிடும் புல்லியரை
காண்பதற்குக் கூசும் அரன் கைத்து"

ஆதலால், கோவில் அர்ச்சகர்களும், அடியார்களும், துறவிகளும் உருத்திராக்கத்தை அவசியம் தரித்தல் வேண்டும். இதில் ஒரு முகமணி முதல் பதினாறு முகமணிவரை உண்டு. கழுத்தில் முப்பத்திரண்டு மணிகளை ஒருங்கு சேர்த்து மாலையாக அணியலாம். மார்பில் நூற்றெட்டு, ஐம்பத்துநான்கு, இருபத்தேழு எண்ணிக்கையில் பொடி மணிகளை மாலையாகக் கோத்து ஜபத்திற்கும் பயன்படும்படித் தரித்துக் கொள்ளலாம்.

3. சந்தனம்

சந்தனம், மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும். அஃது. உடலிலுள்ள வெப்பத்தை நீக்கித் தண்மை ( குளிர்ச்சி )யைத் தந்து உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது. பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்கக் குளிர்ச்சியுடைய சந்தனத்திலகம் இடல் வேண்டும். பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுதற்கும் அடியார்கள் திலகம் அணிந்து கொள்ளுகின்றனர்.

### 4. திருமண்

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது . எல்லாம் முடிவில் மண்ணாய் விடும் என்பதை இது உணர்த்துகின்றது. அன்றியும் இறைவனது திருவடியல்லாது உயிர்களுக்கு வேறுகதியில்லை என்பதை உணர்த்தத் திருமாலின் திருவடியின் சாயலாய்த் திருமாலடியார்கள் இதனை இடுகின்றார்கள். எனவே, இந்துமதச் சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம். சந்தனம், நாமம் முதலியவற்றை அவரவர்கள் சமயாசாரப்படி அணிந்து இறைவன் திருவடிக்கு ஆளாக வேண்டும் என்பது பெறப்படும்.

### 5. விக்கிரகங்கள்

ஆலயங்களில் நிலைநிறுவப் பெற்றிருக்கும் திருவுருவங்களுக்கு 'விக்கிரகம்' என்று பெயர். அரசர்கள், ஜனநாயகத் தலைவர்கள் முதலியோரது பிறந்த நாள் முதலிய விசேட விழாக்களில் அவர்களது திருவுருவப் படங்களை வைத்துக் கொண்டாடி வருகிறோம். நமது தாய் தந்தையர்கள் நினைத்து மகிழவும் அவ்வுருவப் படங்கள் உதவுகின்றன. உண்மைக் காதலர்கள் ஒருவர் படத்தை மற்றொருவர் பார்த்து மகிழ்கின்றனர். இந்நாகரீக காலத்திலும் பெரியோர்களுக்கு படத்திறப்பு விழாக்களும், உருவச்சிலை நாட்டுதலும் ஏராளமாக நடைபெற்று வருகின்றன. இவையனைத்தும் தங்களின் மதிப்புக்குரிய பெரியவர்கள் பால் இவர்கள் வைத்த பேரன்பினை நன்கு விளக்குகின்றது. இவற்றை யாரும் குறை கூறுவதற்கில்லை. அதைப்போல இறைவனிடம் பேரன்புகொண்ட அடியவர்கள் இறைவனது திருவுருவத்தைப் படங்களிலும், ஆலய விக்கிரகங்களிலும் வணங்கி வருகின்றனர். ஒரு பெரியவரின் உருவப் படத்தை ஒருவன் எவ்வகையிலேனும் இழிவுபடுத்தினால் அப்பெரியோரிடம் பேரன்பு கொண்டோர் அதனைப் பொறுக்கமாட்டார்கள். அதைப்போல ஆலய விக்கிரங்களை இழிவுபடுத்துவதையும் இறைவன் அடியார்கள் பொறுக்கமாட்டார்கள். இறைவனை நேரிற்கண்ட பெரியோர்கள் நமது இந்து மதத்தில் பலர் உண்டு. அவர்கள் இறைவனைக் கண்டவிதத்தை அல்லது அவனது அங்க அடையாளங்களை, தமது தெய்வீகப் பாடல்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

திருநாவுக்கரசர்.

"பாலின் மொழியாள் ஓர்பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றி நுதல் கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே"

என்று தாம் பரமனைக் கண்டவிதத்தைப் பாடலின்கண் நிருபிக்கின்றார்.

பேயாழ்வார்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என் ஆழிவண்ணன்பால் இன்று"

என்று தாம் திருமாலினைக் கண்ட வண்ணத்தை கவினுறப் பாடுகிறார். இவர்களது காவியத்திலிருந்து இத்திருவுருவங்களின் உண்மை ஓவியம் நமக்கு நன்கு விளங்குகிறது.

விக்கிரங்களில் சில சுயம்புவாகவே முளைத்தலுயும் உண்டு. தேவர்கள், ரிசிகள் முதலியவர்களாலும் பிரதிட்டிக்கப்பட்டவையும் உள்ளன. பூஜையின் பொருட்டு எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளை மூலமந்திரங்கள் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆகமம் உணர்ந்த ஞானிகள் ஆவாகனம் செய்கின்றார்கள். அதன் பின் "தயாநிதியே! அடியேனை

அனுக்கிரகிப்பதற்காக இவ்விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டும்" என்று அன்புடன் யாசித்து ஸ்தாபனம் செய்கிறார்கள். இதனை "அலையாது அழுந்த நிலைபெறல் தாபனம்" என்பதால் அறியலாம். அதன்பின் பலவகைப் பூஜைகளாலும், நைவேத்தியங்களாலும் நித்திய, நைமித்திக ஆராதனைகளாலும், கடவுள் சக்தியை அங்கே நிலைநிறுத்தி, வழிபடுவோர் அதிலிருந்து பயன்பெறும்படி செய்துள்ளார்கள். ஆலய விக்கிரகத்தை வைணவர் அர்ச்சை எனக் கூறுவர்.

சூரியன் முன் சிறிது பஞ்சைக் காட்டினால், பஞ்சில் தீப்பிடிப்பதில்லை. சூரியனுக்கும், பஞ்சுக்கும் இடையில் ஒரு சூரிய காந்தக் கண்ணாடியைக் காட்டினால் அது சூரியகிரணத்தை அதிகமாக இழுத்து வெகு சீக்கிரமாகப் பஞ்சில் தீப்பற்றியெரியும்படி செய்கிறது. அது போல, பஞ்சாகிய நமது உள்ளத்தில் இறைவனது அருளாகிய தீ வெகு துரிதமாப் பற்றுவதற்குக் கண்ணாடியாகிய விக்கிரகம் மிக உதவுகின்றது. பசுவின் உடலெங்கும் வியாபித்திருக்கும் பால், அதன் மடிவழியாகச் சுரப்பது போல, பரந்து கிடக்கும் ஆண்டவனது அருள் விக்கிரக வழியாக நமக்குக் கிடைக்கின்றது. கடவுள் பாலில் நெய் போல் எங்கும் வியாபித்திருப்பினும் விக்கிரகங்களில் தயிரில் நெய்போல விளங்குகின்றார். "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" எனக் கூறியதன் கருத்து, கல் செம்பு முதலியவற்றில் மாத்திரம் அல்ல கடவுள் இருப்பது ; எங்கும் நிறைந்து விளங்குகின்றார் என்பதை விளக்குவதற்கேயாம்

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்

சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

"பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே"
"தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீயரே"
என்றெல்லாம் கூறியவர்கள்.

"பஞ்ச சுத்திசெய்து நின்னை பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே" எனவும்
"தீர்த்த லிங்கம் உம்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தானதாய்த் தெளிந்ததே சிவாயமே"

எனவும் ஏன் கூறல் வேண்டும். அவர்கள் சிவாலய வழிபாட்டைப் பற்றிக் கூறியது, சிவாலய வழிபாட்டின் தத்துவத்தை உணராது செய்கின்ற கிரியைகள் சீக்கிரம் பயன் தராவாதலால், அவற்றின் உண்மைகளை மக்கள் அறிய வேண்டும் என்பதை வற்புறுத்தவே ஆகும். சரியைவான்கள் முதல் ஞானவான்கள் வரை மக்களுக்கு விக்கிரக வழிபாடு இன்றியமையாததே. ஞானிகளாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியோர் விக்கிரக வழிபாடு செய்தே மேனிலையுற்றனர். இவர்களைப் பாமரர்கள் என்று சொல்லலாமா? இவர்கள் விக்கிரகங்கள் வாயிலாகவே அருள் பெற்றதை நோக்குமிடத்து விக்கிரக வழிபாடு பரமஞானிகள் வரை யாவருக்கும் இன்றியமையாதது என்பது விளங்கும்.

## 6. வழிபாடு செய்யும் முறை

கோயிலின் பக்கத்திற் சென்றதும் கைகால்களைக் கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன்சென்று, நின்று இரண்டு கரங்களையும் தலைமேற்குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், தோத்திரப் பாடல்களைப் பாடிக்கொண்டும், வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல் கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுள் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள் போக வேண்டும். கொடிமரத்தின் பக்கத்திற் சென்றதும் புருடர்கள் தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க் கட்டை ஆகிய எட்டு அவயவங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இது அட்டாங்க வணக்கம் என்று கூறப்படும். பெண்கள் தலை, கையிரண்டு, முழுந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இதனைப் பஞ்சாங்க வணக்கம் என்பர்.

கொடிமரத்தைக் கண்டதும் இறைவனை அடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என நினைத்து, அதனை சூட்சமலிங்கமாக எண்ணி வணங்க வேண்டும். மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பிரகாரங்களை வலம்வரல் வேண்டும். ஐந்து பிராகாரங்கள் உள்ள இடங்களில் அந்த ஐந்து பிராகாரங்களையும் பஞ்சகோசங்களாக மதித்து ஒவ்வொரு கோசத்திலும் ஆத்மா உழன்று தெளிந்து அதைவிடுத்து மேலே செல்வதாக நினைக்க வேண்டும்.ஐந்து பிராகாரங்களையும் கடந்தால் கடவுளது சாமீப்யபதத்தை அடையலாம் என்பதை உணர்தல் வேண்டும். பிராகாரங்களை வலம் வந்து, பலீபீடத்தின் அருகிற் சென்று, நம்மிடம் உள்ள காமம், குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்களைப் பலி கொடுக்க உறுதி செய்து கொள்ள வேண்டும். பின் கன்னிமூலையில் உள்ள விநாயகர் சந்நிதியில் சென்று வலக்கையை இடக்கையின் முன்வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக்கையால் வலப்புறத்திலும் மண்டையில் மூன்று முறை குட்டுகளிட்டு, வலக்கையால் இடக்காதையும், இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தோப்புகரணமிட்டு, விநாயகர் தோத்திரம் கூறி வணங்கல் வேண்டும்.

தேவர்கள் கயமுகாசுரனின் சந்நிதியில் தோப்புக்கரணம் இட்டு வந்தனர். அவனை விநாயகர் சங்கரித்த பிறகு அவன் முன்னர் இட்ட தோப்புக்கரணத்தையும் தலைக்குட்டுதலையும் நன்றியறிவு காரணமாக விநாயகரின் திருமுன்பு செய்தனர். ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை தானே விதித்துத் தானே அனுபவித்தல் போல், இறைவனின் சமீபத்தில் செல்லுதற்குத் தகுதியில்லாதபடி குற்றம்செய்யும் மக்கள் தாமே தண்டனைகள் செய்து கொள்ளுகிறார்கள்.

தலையின் இரு பக்கங்களிலும் குட்டிக்கொள்ளும் பொழுது உணர்ச்சி அற்ற நரம்புகள் உணர்ச்சி பெறுகின்றன. தமக்கு வாழ்க்கையில் எவ்வித இடையூறுகளும் குறுக்கிடா வண்ணம் இருப்பதற்காகவே விக்கினங்களைப் போக்கியருளும் விநாயகரை முதலில் மக்கள் வழிபடுகின்றனர். இவர் முன் தேங்காயை விடலை இடுவர். அது சிதறுவதைப் போல தனது பாவங்கள் அல்லது விக்கினங்கள் சிதற வேண்டும் என்பது விடலையிடுவோர் உள்ளக்கருத்தாகும். விநாயகரை வணங்கிய பிறகு துவாரபாலக விக்கிரங்கள் முன் சென்று "அடியேன் இறைவனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று வேண்டிக் கொண்டு சந்நிதியிற் சென்று , இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்கள் கூறல்வேண்டும். தேங்காய், பழம், முதலிய நிவேதனப் பொருள்களை கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம். கர்ப்பூரதரிசனம் செய்து, திருநீறு பெற்றுக்கொண்டு, மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில் பதியவைத்து எலும்புகள் எல்லாம் நெக்கு நெக்குருகக் கண்ணீர் அருவிபோலப் பாயக் கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். அம்பிகை சந்நிதியிலும் இவ்வாறே செய்தல் வேண்டும்.

உட்பிராகாரங்களில் இருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வரல் வேண்டும். தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தின் முன்னர் சென்று அவரை குருவாகப் பாவித்து வணங்கல் வேண்டும். (இவரது இதரப் பெருமைகளை தட்சிணாமூர்த்தி எனும் தலைப்பில் முன்னர் கூறப்பட்டுள்ளது)

பின்னர் முருகப்பெருமானிடம் சென்று வணங்கித் தோத்திரித்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து சிவத்தியானத்தில் இருக்கும் இவரிடம் மூன்றுமுறை கையால் கொட்டி அவர் நம்மைப் பார்ப்பதாகக் கருதிச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும். கையைத் தட்டுவதனால் உண்டாகும் ஒலி அவருக்குப் பிரீதி அளிப்பதால் அவரை ஒலிச்சண்டேசுவரர் எனவும் கூறுவர். பின்னர் நவக்கிரகங்கள் முதலியவைகளை வணங்க வேண்டும். கோள்கள் மனிதர்களுக்குச் செய்யும் தீமைகளைக் குறைப்பதற்காக நவக்கிரக ஆராதனை வணக்கமும், "சனீசுவர பகவானே! உனைத் தொழுவேன்; எனைத் தொடாதே" என வேண்டித் தீவினை நம்மை அணுகாதிருக்கவும் நவக்கிரக சனீசுவர ஆராதனை கோவில்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விஷ்ணு ஆலயங்களில் இறைவன் திருமுன்பு வீற்றிருக்கும் பெரிய திருவடியாகிய கருடாழ்வாரை வணங்கி உட்சென்று மூலஸ்தான மூர்த்தியின் முன்நின்று திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடித் துதித்துத் துளசியும், தீர்த்தமும் பெற்று, சடாரி சாத்தப்பெற்று, மூர்த்தியைத் தியானித்துத் தாயார் சந்நிதானத்துக்கும் சென்று அங்குத் தாயாரைச் சேவித்துக் கொண்டு வலம் வரும்பொழுது உட்பிராகாரத்தில் காணப்படும் மூர்த்திகளை வணங்கி வெளியே வரல் வேண்டும்.

இந்தவிதமாக ஆலய தரிசனம் உள்ளே முடிந்த பிறகு கொடி மரத்திற்குச் சற்றுதூரம் விலகியிருந்து உள்ளேயுள்ள மூர்த்தியின் மூலமந்திரத்தை (சிவத்தியானத்துக்குரியது "ஓம் நமசிவாய." விஷ்ணுத் தியானத்துக்குரியது "ஹரி ஓம் நமோ நாராயணாய") நூற்றெட்டு முறைக்குக் குறையாமல் ஜபித்து மூர்த்தியை தியானித்துக்கொண்டு மௌனமாக வீட்டிற்கு வரல் வேண்டும்.

### 7. தலங்களும் திவ்விய தேசங்களும்

ஆலயங்களில் சைவசமய குரவர்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற ஆலயங்கள் மிகச்சிறப்புடையன. தேவாரப்பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் 'தலங்கள்' என்றும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் 'திவ்விய தேசம்' என்றும் சிறப்பித்துக் கூறுவர். சமயாச்சாரியர்களால் பாடல் பெற்ற தலங்கள் இருநூற்று எழுபத்து நான்காகும்.

விபரம்

| | | | |
|---|---|---|---|
| சோழ நாடு | 190 | துளுவம் | 1 |
| தொண்டை நாடு | 32 | கொங்கு நாடு | 7 |
| நடு நாடு | 22 | ஈழ நாடு | 2 |
| பாண்டி நாடு | 14 | வட நாடு | 5 |
| மலை நாடு | 1 | ஆக தலங்கள் | 274 |

இதனை

"துங்கவட கயிலாய முதலா ஐந்துதுளு ஒன்று
 தொண்டை வடநாட்டு எண்ணான்கு
தங்கு நடுநாட்டு இருபத்திரண்டு பொன்
 னித் தலம் நூற்றுத் தொண்ணூறு
மலை நாட்டு ஒன்று
 கொங்கேழு சிங்களத்தில் இரண்டு
வைகைகொழி தமிழ் நாட்டு
 ஈரேழ் முதலாஞ் சூலச்
செங்கையார் தலம் இருநூற்று
 எழுபா நான்கு..."

என்ற பாடலால் அறியலாம்.

ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகள் நூற்றெட்டாகும், விவரம் :

| | | | |
|---|---|---|---|
| சோழ நாடு | 40 | தொண்டை நாடு | 22 |
| பாண்டி நாடு | 18 | வட நாடு | 12 |
| மலை நாடு | 13 | பரமபதம் | 1 |
| நடு நாடு | 2 | ஆக திருப்பதிகள் | 108 |

இதனை " ஈரிருபதாஞ் சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர் பதின்மூன்றாம் மலைநாடு ஓரிரண்டாம் சீர் நடுநாடு
ஆறோடு ஈரெட்டு தொண்டை அவ்வடநாடு ஆறிரண்டு
கூறு திருநாடு ஒன்றாகக் கொள்" எனும் பாடலால் அறியலாம்.

## 8. இதரச் சிறப்புப் பெற்ற தலங்கள்

திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை இவற்றைச் தென்திசைக் கயிலை எனக் கூறுவர்

அட்டவீரட்டங்கள் : சிவபிரான் புரிந்த எட்டு வீரச்செயல்களை தன்னகத்தே கொண்ட தலங்களை 'அட்டவீரட்டங்கள்' என்பர். அவை திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் முதலியனவாம்.

சில மூர்த்தி விசேட தலங்கள் : விநாயகர் வலஞ்சுழி, குமரன், திருவேரகம், தட்சிணாமூர்த்தி ஆலங்குடி, சண்டேசர்சேய்ஞலூர், நந்தி திருவாவடுதுறை, வடுகன் (வைரவர்) சீர்காழி, சபாபதி தில்லை, தியாகராஜர் திருவாரூர்.

காசிக்குச் சமமான தலங்கள் : திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை (மாயூரம்) திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) திருவாஞ்சியம்

நவ திருப்பதிகள் : 1. ஸ்ரீ வைகுண்டம், 2. ஆழ்வார்திருநகரி, 3. தென்திருப்பேரை, 4. தொலைவில்லிமங்கலம், 5. திருக்குளந்தை, 6. புளியங்குடி, 7. திருக்கோளூர், 8. வரகுணமங்கை

குறிப்பு : தொலைவில்லிமங்கலத்தில் அரவிந்தலோசனன் சன்னதி தனியாக ஒன்றிருக்கிறது. அதையும் சேர்க்க ஒன்பது திருப்பதிகளாகும். ஆலய வழிபாட்டினை முறைப்படி செய்தவர்கள் அடைந்த பேறுகளுக்கு அளவில்லை.

தாயுமானவர்,

*"மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த் தொடங்கி னர்க்கோர்*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

எனக் கூறுவதால் நாம் இறைவனைத் தலங்கள்தோறும் சென்று வழிபட்டு உய்வோமாக.

## மந்திரம்

மனனம் செய்பவனை திராணனம் செய்வது அல்லது இரட்சிப்பது மந்திரமாகும்.

*"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப"*

என்பது தொல்காப்பியச் சூத்திரமாகும்

*"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்"*

எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

இதற்குப் பரிமேலழகர் "நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே காட்டும்" என உரை வகுக்கின்றார்.

*"மந்த்ரம் விநாக்ரியா நாஸ்தி*
*கர்ஷணாத் யர்ச்சநாந்தகா"* (காரணாகமம்)

கர்ஷணத்திலிருந்து அர்ச்சனை வரை மந்திரம் இல்லாத கிரியையே கிடையாது என்பது இதற்குப் பொருளாகும். மந்திரம், சித்தம், ஸாத்யம், ஸ்வசிதம், ரிபு நான்கு வகைப்படும்.

## 1. மந்திரங்களின் மகத்துவம்

மந்திரத்தை ஜபிக்க மந்திரத்திற்குரிய தேவதை ஜபிப்பவன் முன் தோன்றுகிறது. என்பதை பாரிஸ் நகர விஞ்ஞானி ஒருவர் மெய்ப்பித்திருக்கிறார். பைரவ மந்திரம் ஜபிக்க நாயுடன் கூடிய பைரவர் காட்சியளித்ததாகக் கூறுவர்.

மந்திரத்தால் யானை முதலிய மிருகங்களும், பாம்பு முதலிய விஷ ஜந்துக்களும் கட்டுப்படுகின்றன. நமது நாட்டு மெய்ஞ்ஞானிகள் மந்திர ஜபத்தால் பலவிதப் பயன்களைப் பெற்றுள்ளார்கள். அதனால் பற்பல அற்புதச் செயல்களைச் செய்துள்ளார்கள். சைவ சமயாச்சாரியர்களும், ஆழ்வார்களும் முறையே பஞ்சாக்கர, அட்டாட்சர மந்திரங்களை நவின்று செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்திருக்கிறார்கள்.

மந்திரங்களைச் சந்த தவறாமல் உச்சரிப்பதால் அதற்குரிய தேவதையின் திருவுருவமே சூட்சும வடிவில் எழுந்தருளி உபாஸகனின் பார்வையில் தோன்றும். ஆகவே மந்திரத்தால் சூட்சும சலனங்களை உண்டுபண்ணி செயற்கரிய செயல்களைச் செய்வதோடு இறைவன் திருவருளையும் பெறமுடியும் என்பது தெளிவாகின்றது.

2. சில மூலமந்திரங்கள்

1. சிவன் மூலமந்திரம் - ஓம் நமசிவாய :
2 விஷ்ணு மூலமந்திரம் - ஓம் நமோ நாராயணாய :
3. தேவி மூலமந்திரம் - ஓம் உமா தேவ்யை நம :
4. கணபதி மூலமந்திரம் - ஓம் கணபதயே நம :
5. சுப்பிரமணியர் மூலமந்திரம் - ஓம் சரவண பவாயநம :
6. சாஸ்தா மூலமந்திரம் - ஓம் சாஸ்த்ரு மூர்த்தயே நம :

---

# காசி விஸ்வேசர் - அர்ச்சனைப் பதிகம்

ஓசையாய் ஒலியாய் நிற்கும் ஓமெனும் பொருளே போற்றி !
நேசமாய் நினைக்கும் சான்றோர் நினைத்ததை முடிப்பாய் போற்றி !
பாசமும் பற்றும் மாற்றிப் பழவினை ஒழிப்பாய் போற்றி !
காசியில் விசுவ நாதர் கழலிணை போற்றி போற்றி !

திங்களை முடியில் சூடித் திருவருள் புரிந்தாய் போற்றி !
மங்கையை ஒருபால் தாங்கி மனையறம் புரப்பாய் போற்றி !
பொங்கிய வெள்ளம் ஏற்றுப் புவிக்கருள் செய்தாய் போற்றி !
கங்கையாள் வடக்கு நோக்கும் காசியில் சிவமே போற்றி !

பொன்னுமெய்ப் பொருளும் செல்வ போகமும் கொடுப்பாய் போற்றி !
தன்முனைப் பில்லா தார்க்குத் தன்னையே தருவாய் போற்றி !
அன்னபூ ரணியாய்த் தோன்றி அறம்பல வளர்த்தாய் போற்றி !
மன்னுசீர் வார ணாசி மாதவப் பயனே போற்றி !

ஏர்வளர் காசி மண்ணில் எமபயம் கெடுத்தாய் போற்றி !
தீர்வரும் பிணிகள் காசிக் கயிற்றினால் தீர்ப்பாய் போற்றி !
நேர்வரும் பில்லி சூன்யம் நெருப்பென எரிப்பாய் போற்றி !
பார்வையால் ஈர்க்கும் கால பைரவா போற்றி போற்றி !

அகத்தினில் இலிங்க மாகி அன்பரை அணைப்பாய் போற்றி !
நகரேசர் வடிவம் தாங்கி நலமுறக் காப்பாய் போற்றி !
மகிழ்வினைத் தந்து போற்றும் மணியென ஒளிர்வாய் போற்றி !
புகழ்விசா லாட்சி யோடும் பொலிந்திடும் சிவமே போற்றி !

செவிக்கமு தாக நிற்கும் தேவாரச் சொல்லே போற்றி !
கவிக்க முதாகத் தோன்றும் கற்பனை கடந்தாய் போற்றி !
தவிக்கு மோர் பெண்ணுக் காகத் தாயுமாய் வந்தாய் போற்றி !
புவிக்கமு தூட்டும் அன்ன பூரணி பங்கா போற்றி !

ஒப்பிலா அகல்யா பாயின் உயர்தவம் உவந்தாய் போற்றி !
செப்பும் ஈசான்ய திக்கில் சிறப்புற நகர்ந்தாய் போற்றி !
எப்புறம் திரும்பி னாலும் இலிங்கமாய்த் திகழ்வாய் போற்றி !
முப்புரம் எரித்த காசி மூர்த்தியே போற்றி போற்றி !

சொல்லரும் சம்போ செல்லத் தொடர்ந்துசெல் ஒலியே போற்றி !
கல்லிலும் ஒளிவி ரிக்கும் கண்ணுதற் கடவுள் போற்றி !
நல்லற முனிவர் செய்யும் நற்றவப் பயனே போற்றி !
எல்லையில் அண்ட மெல்லாம் எழுந்தருள் புரிவாய் போற்றி !

தேசுடைக் குருபரர்க்குத் திருவருள் புரிந்தாய் போற்றி !
காசியில் மடம் அமைக்கக் காட்டிய கருணை போற்றி !
மாசிலாக் கருடன் தோன்றி வலம் வரச் செய்தாய் போற்றி !
வாசியாய் மாறித் தோன்றும் மந்திரப் பொருளே போற்றி !

பொய்யிலா நெஞ்சத் தார்க்குப் புலப்படும் பதமே போற்றி !
கையினால் அடியர் தீண்டக் களிப்புறும் கடவுள் போற்றி !
மைவருங் கண்டத் துக்குள் மறைந்தொளிர் சக்தி போற்றி !
ஐவரின் ஆட்டம் நீங்க ஆடிடும் அப்பா போற்றி !

தம்புகழ்க் கரைகா ணாத சங்கரர்க் கருள்வாய் போற்றி !
நம்பிரான் ஆகி வேத நாய்உடன் வந்தாய் போற்றி !
அம்பினால் ஆண்டு பார்த்தன் அணைக்கவே மகிழ்ந்தாய் போற்றி !
செம்பெலாம் ததும்பும் கங்கைத் தீர்த்தமே போற்றி போற்றி !

காசியில் இறந்தோர் ஆன்மா கடைத்தேற வைப்பாய் போற்றி !
மாசிலா மகாம யான மண்ணிலே நிலைத்தாய் போற்றி !
ஈசனாய் இறப்பைத் தானே இறக்க வைத்திடுவாய் போற்றி !
வாசமில் லாத பூவின் வாசமாய் மணப்பாய் போற்றி !

காசிக்கு நடந்து செல்லும் கால்களில் இருப்பாய் போற்றி !
காசி என் றுரைக்கும் நாவில் கவிமழை பொழிவாய் போற்றி !
காசியின் புகழைக் கேட்கும் காதுசெய் தவமே போற்றி !
காசியைக் கண்ணால் காணக் காட்டுவாய் போற்றி போற்றி !

தானந்தம் ஆதி இல்லாச் சாட்சியாம் பொருளே போற்றி !
வானந்தக் கங்கை பாயும் மணிமுடிச் சடையாய் போற்றி !
தேனுந்து கனியாய் எங்கள் சிந்தையில் இனிப்பாய் போற்றி !
ஆனந்த வனத்து ளாடும் அப்பனே போற்றி போற்றி !

பாலனுக் காக முன்னாள் பாற்கடல் கொடுத்தாய் போற்றி !
நீலமார் மணிகண் டத்து நின்மலச் சிவமே போற்றி !
சீலமும் தவமும் மிக்கோர் சேர்கதி ஆனாய் போற்றி !
காலனைக் காலால் ஊன் றும் காசிவிஸ் வேசா போற்றி !

அப்பரைத் தாங்கும் ஆழி அருந்தவக் கல்லே போற்றி !
செப்பரும் சம்பந் தர்க்குச் சிவிகைதந் தாண்டாய் போற்றி !
ஒப்பிலாச் சுந்த ரர்க்காய் உயர்தூது நடந்தாய் போற்றி !
கைப்பிடிக் குள்அடங்கும் காசிவிஸ் வேசா போற்றி !

வேதமும் காண வொண்ணா விரிபொருள் ஆனாய் போற்றி !
கீதமே பாடும் அன்பர் கிளையெலாம் காப்பாய் போற்றி !
மாதவக் கங்கை தும்பை மதிஅர வணிந்தாய் போற்றி !
காதலால் கசிவார் உள்ளக் காசிவிஸ் வேசா போற்றி !

வெள்ள மார் கங்கை வேகம் விலக்கியே காத்தாய் போற்றி !
உள்ளமே கோயில் ஆக்கும் உயர்பரம் பொருளே போற்றி !
வள்ளலாய்ச் சுந்த ரர்க்கு வான்பொருள் கொடுப்பாய் போற்றி !
கள்ளநெஞ் சுணர மாட்டாக் காசிவிஸ் வேசா போற்றி !

பெண்ணொரு பாகம் பேணிப் பித்தனாய்த் திரிவாய் போற்றி !
மண் அடி முடியும் காண வைகையில் நடந்தாய் போற்றி !
தண்ணருள் பொழிய இன்பத் தமிழமு தளித்தாய் போற்றி !
கண் இமைக் குள்விளங்கும் காசிவிஸ் வேசா போற்றி !

மான் இடக் கரத்தில் தாங்கி மான் இடம் கொண்டாய் போற்றி !
மானிடக் கோலம் காட்டி மணிமொழி வரைந்தாய் போற்றி !
வான் இடம் கொண்ட தேவர் மனத்தி னுள் மறைந்தாய் போற்றி !
கானிடை ஆடல் காட்டும் காசிவிஸ் வேசா போற்றி !

அண்டரும் முனிவர் தாமும் அறியொணா அறிவே போற்றி !
வண்டுலாம் கொன்றை சூடி வரந்தரும் வளமே போற்றி !
உண்டநஞ் சமுதாய் மாற்றும் உமையவள் பங்கா போற்றி !
கண்டமட் டிருண்ட மேனிக் காசிவிஸ் வேசா போற்றி !

பூணலா அரவம் சூடிப் புறம்புறம் திரிந்தாய் போற்றி !
ஊணலா ஊணை ஏற்கும் ஓட்டினைப் பெற்றாய் போற்றி !
பேணியே தொழுதால் வீட்டுப் பிள்ளையாய் வருவாய் போற்றி !
காணரும் சோதி லிங்கக் காசிவிஸ் வேசா போற்றி !

பற்றிலா ஞானச் செல்வர் பற்றிடும் பற்றே போற்றி !
செற்றவர் புரங்கள் மூன்றாய்த் திகழ்மலம் எரித்தாய் போற்றி !
கொற்றவன் வடிவ மேற்றுக் கூடலில் நடந்தாய் போற்றி !
கற்றவர் விழுங்கும் ஞானக் காசிவிஸ் வேசா போற்றி !

சொல்லிலே உலகம் காட்டித் தொண்டர்சீர் விரித்தாய் போற்றி !
நெல்லிலே மலையைக் காட்டி நிறைதமிழ் பெற்றாய் போற்றி !
இல்லக விளக்காய் வீட்டில் இன்பமே அளிப்பாய் போற்றி !
கல்லையும் கனியச் செய்யும் காசிவிஸ் வேசா போற்றி !

பொடி புனை புனித னாகிப் பூசுவெண் ணீற்றாய் போற்றி !
அடிமுடி காணா வண்ணம் அருணையில் ஒளிர்வாய் போற்றி !
வடிவுடைச் சூலம் தாங்கும் வயிரவக் கோலம் போற்றி !
கடியுலாம் சோலை சூழ்ந்த காசிவிஸ் வேசா போற்றி !

ஆதியும் அந்தம் தா னும் அமைந்திடா அளவே போற்றி !
மாதுமுப் பத்தி ரண்டாய் வளர்த்திடும் அறமே போற்றி !
சோதியாய்ப் பன்னி ரண்டு தோற்றமும் கொண்டாய் போற்றி !
காதிலே ஓங்காரம்சொல் காசிவிஸ் வேசா போற்றி !

உருவிலே கூத்த னாகும் ஒருவனே போற்றி போற்றி !
அருவிலே அண்டம் தாங்கும் அகிலேசா போற்றி போற்றி !
அருவுரு லிங்க மாகும் அப்பனே போற்றி போற்றி !
கருவிலே திருவைச் சேர்க்கும் காசிவிஸ் வேசா போற்றி !

பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம்

## சமய நெறி முத்துக்கள்

* "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" எனப் பெரியவர்கள் வாழ்த்துவார்கள். சங்கல்பம் செய்யும்போது அதிலும் பதினாறு பேறுகள் கூற(கோர)ப் பெறுகின்றன. ஸஹ குடும்பம் (குடும்பம் முழுவதற்கும்), க்ஷேமம்(நலம்), ஸ்தைர்யம் (ஸ்திரத்தன்மை, ஊசலாடாமை) வீர்யம் (வலிமை), விஜயம்(வெற்றி), ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம் (செல்வம்) ஆகியவற்றில் அபிவிருத்தி (மேம்பாடு) காண்பதற்கும்(7) தர்ம - அர்த்த - காம - மோக்ஷம் (அறம் - பொருள்-இன்பம்-வீடு) என்ற நான்கு புருஷார்த்தங்கள் (உறுதிப் பொருள்கள்) சித்திப்பதற்கும் (கிட்டுவதற்கும்) 4. இஷ்ட காம்யார்த்த சித்தியர்த்தம் (மனோரதங்களின் பூர்த்தி, விருப்பங்கள் நிறைவேற வேண்டிய (1) ஸமஸ்த (எல்லா) மங்களங்களும் கிடைப்பதற்காகவும் (1) ஸமஸ்த துரிதங்களும் (பாவங்களும்) ஒடுங்கிப் போவதற்கும் (1) புத்ர - பௌத்திரர்கள் (மக்கட் செல்வம்) அபிவிருத்தியாவதற்கும் (வம்ச வளர்ச்சிக்கும்) (1) கடைசியாக, எந்த சுவாமிக்குப் பூஜையோ அவருக்குப் ப்ரீதி (விருப்பம், அன்பு) ஏற்பட்டு (உதாரணமாகப், பரமேஸ்வரப் ப்ரீதியர்த்தம்) அவர் பிரசாதத்தால் நம் விருப்பம் நிறைவேற வேண்டும் (1) என்று, பதினாறு விஷயங்களைப் பிரார்த்தித்துச் சங்கல்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.
  16 என்பது மிக உயர்ந்த எண்- "ஷோடச கலா பூரணம்" இதில் உலகாயதம் நிறைய இருக்கிறது என்று நினைப்பவர்கள் முடிவாக இன்னும் இரண்டு (ஞான-வைராக்கிய சித்தியர்த்தம்) சேர்த்துக் கொள்வார்கள். -காஞ்சிப் பெரியவர்

* "முக்தம்" என்ற சொல்தான்"முத்து" ஆனது. "முக்தம்" என்றால் விடுபடுவது. சிப்பியிலிருந்து தெறித்து விடுபட்டு வருகிற மணியே முக்தம் என்கிற முத்து. அதுபோன்று சம்சாரத்திலிருந்து தெறித்து விடுபடுவது முக்தி. - காஞ்சிப் பெரியவர்

* முருகனுக்கும் ஆறு என்னும் எண்ணிக்கைக்கும் நிறையத் தொடர்பு உண்டு. குழந்தையாகப் பிறந்தோமே என்பதற்காக ஆறுநாள் - ஆறே நாள்தான் - குமாரஸ்வாமி (முருகன்) பால லீலைகள் பண்ணினார். அவருக்கு முகம் ஆறு ; அவர் மந்திரத்தில் எழுத்து ஆறு ; அவர் பிறந்தது ஆறாம் திதியான ஷஷ்டி ; அவருக்குப் பால் கொடுத்தது கிருத்திகா தேவிகள் என்று ஆறு பேர்; வேடிக்கையாகச் சொல்வது உண்டு அவர் உற்பவித்த (தோன்றிய ) கங்கையும் "ஆறு"தான் என்று. -காஞ்சிப் பெரியவர்

* எப்படியும் என்றைக்காவது ஒருநாள் அழிந்துபோகப் போகிற உடலைப் பேணுவதற்காகவே, வைத்தியர் தரும் கசப்பு மருந்து, உறைப்புக் கஷாயம் எல்லாம் சாப்பிட்டு, அவர் சொல்கிற பத்தியங்களை ஏற்று நடக்கிறோம். அப்படிப்பட்ட நாம், நம் ஆன்ம மேம்பாட்டுக்கு மருந்து சொல்கிற மகாப்பெரியவர்களான நம் பெரியோர், சாஸ்திரங்களில் சொல்லிவைத்த மருந்துகள், பத்தியங்களை அதைவிட நம்பிக்கையுடனும், பக்தியுடனும் ஏற்றுப் பின்பற்ற வேண்டும். - காஞ்சிப் பெரியவர்

* ஜீவனானது இவ்வுலகத்தை விட்டுப் போகும் தருணத்தில் கடைசியாக எதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்குமோ, அதற்குரிய உடலில் மறுபடி வந்து பிறக்கிறது. ஆதலால் பக்தி சாதனை மிகவும் அவசியமாகும். இடையறாத பக்தியினால் உலகப் பொருள்களைப் பற்றிய எண்ணம் மனத்தில் உண்டாகாமல் போவதால், ஈசுவரனைப் பற்றிய சிந்தனையே ஆத்மாவிடம் குடிகொள்ளும். சாகும் தறுவாயில்கூட அந்தச் சிந்தனை நீங்குவதில்லை. இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

* எல்லா நாடுகளிலும்"எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நினை" என்ற சிறந்த உண்மை சொல்லப்பெற்றிருக்கிறது. ஆனால் "ஏன் மற்ற உயிர்களைத் தன் உயிர்போல் நினைத்து அன்பு செய்ய வேண்டும்?" என்பதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப் பெறவில்லை."கடவுள் அருபமாய் எல்லா உயிர்களிலும் இருக்கின்றார். அதனால் எல்லா உயிர்களும் சமம்" என்று இந்து மதம் சொல்லுகின்றது. - சுவாமி விவேகாநந்தர்

* நன்றாகக் காய்த்துப் பழுத்த மரத்தின் கிளைகள் வளைந்து இருப்பதுபோல் கல்வியால் பக்குவமடைந்தவன் பணிவுடையவனாய் இருப்பான். பணிவின்மை, கல்வியின் குறைவைக் காட்டும், ஆன்ம ஞானத்தாலேயே கல்வி பூர்த்தியாகிறது. *-உபநிஷத்சாரம்*

* அகங்காரம் (ஆணவம்) நீங்காத வெறும் படிப்பு ஆபத்தைத்தான் உண்டாக்கும். - *காஞ்சிப் பெரியவர்*

* சுவையான உணவைத் தேடாமல், எது கிடைத்தாலும் திருப்தியாகச் சாப்பிடு, எதையு பொருட்படுத்தாமல் உதாசீனமாய் (விருப்பு - வெறுப்பு இன்றி) இரு; மக்களிடம் பாசமும் வைக்காதே வெறுப்பும் கொள்ளாதே; குளிர் - வெப்பம் முதலானவற்றையும் இப்படியே பொருட்படுத்தாதே; பேச்சைக் குறைத்து மௌனமாக ஏகாந்தத்துக்குச் செல்; ஆகாமியம் என்னும் பின்வினை ஒட்டாமல் செய்து கொள். ஆன்ம முன்னேற்றத்துக்கு இவை மிக அருமையான வழிமுறைகள். - *சங்கரர்*

* துன்புறுத்தாத வாய்மையும், இனிமையும் நலனும் கூடிய வார்த்தையும், வாக்கு மயமான தவம் என்று சொல்லப்பெறும். மன அமைதி, அன்புடைமை, மௌனம், தன்னடக்கம், தூயநோக்கம் - இவை மனத்தால் செய்யும் தவமாகும். - *பகவத் கீதை*

* நாம் ஏதோ ஒன்றில் ஆசைப்பட்டு விட்டால், அதை நாம் பெறுவதற்காகப் பிறர் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணம் வந்து விடுகிறது. எத்தனையோ கஷ்டங்களுக்குக் கொடுமைகளுக்குப் பிறரை ஆட்படுத்தி, நம் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள நினைக்கிறோம். இதெல்லாம் நம் பாவக் கணக்கில் ஏறி வருங்காலத்தில் நம்மை வட்டி போட்டுத் தீட்டிவிடும். *காஞ்சிப்பெரியவர்*

* பாவ ரூபம் எடுத்துப் பழி வாங்குவதில் தலையானது பொய். ஆசைதான் இப்படிப்பட்ட பொய்யையும் பேச வைக்கிறது. பொய்க்கு வித்து ஆசைதான். சகலருக்கும் (எல்லோருக்கும்) அஹிம்ஸை (கொல்லாமை) சத்தியம், திருடாமை, தூய்மை, புலன் அடக்கம் என்ற ஐந்து உயர்ந்த பண்புகள் இருக்கவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஐந்தையும் நாசம் பண்ணுவதாக ஆசை என்பது இருக்கிறது. - *காஞ்சிப் பெரியவர்*

* அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் பெற்ற முருகன் தலங்கள் திருப்புகழ்த் தலங்கள் என்று போற்றப் பெறுகின்றன. இவ்வாறு அருணகிரியாரின் திருப்புகழ் பெற்ற திருக்கோயில்கள் 106 ஆகும்.

* ஐந்து மன்றங்(சபை)களில் ஆடினார் சிவபெருமான், (ஐந்து மன்றங்கள், திருவாலங்காட்டில் இரத்தினசபை, சிதம்பரத்தில் கனக சபை (பொன்னம்பலம்) மதுரையில் இரஜதசபை (வெள்ளியம்பலம்) திருநெல்வேலியில் தாமிரசபை திருக்குற்றாலத்தில் சித்திரசபை)

* அழகான நெற்றியை உடைய சிவனிடம் என் உள்ளத்தை அர்ப்பணித்துவிட்டுக் கெட்ட எண்ணங்களைக் கைவிட்டவனாய்க் , கங்கைக் கரையில் உள்ள புதர்கள் போன்று அடர்த்தியான முடியைக் கொண்ட சிவ பெருமானைத் தலையால் வணங்கி, மாலை மாலையாய்க் கண்ணீர் பெருகச் "சிவ சிவ" என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்துகொண்டே இருக்கும்படியான சுகத்தை எப்போது பெறுவேன்? - *சிவதாண்டவ ஸ்தோத்திரம்*

* திருச்சாய்க்காடு (சாயாவனம்) - சோழ நாட்டு (வடகரை)த் தலம், காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறு தலங்களுள் ஒன்று (ஏனையவை: திருவெண்காடு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவையாறு, ஸ்ரீவாஞ்சியம்) இத்தலம் மிகப் பழைமையான சிறப்புடையது. இங்குள்ள வில் ஏந்திய வேலவர் திருமேனி சிறப்பானது.

* இராமேச்சுரத்தில் கோடித் தீர்த்தமும், கடற்கரை மண்ணும் எடுத்துக் கொண்டு, காசி யாத்திரை புறப்படவேண்டும், இராமேச்சுரத்து மண்ணைப் பிரயாகையில் கொட்டுவதும், கோடித்தீர்த்தத்தால் காசி விசுவநாதரை நீராட்டுவதும் அவர்கள் கடமை. இவ்வாறே காசியிலிருந்து திரும்பியதும், கங்கை நீரால் இராமலிங்கப் பெருமானை நீராட்ட வேண்டும். -இராமேஸ்வரம் கும்பாபிஷக மலர்

* இலக்குமி நித்திய வாசம் செய்யும் ஐந்து இடங்கள், தாமரைப் பூவின் மத்தி, யானையின் தலை, பசுவின் பின்புறம், வில்வ இலையின் பின்பக்கம், சுமங்கலியின்சீமந்தம் (வகிடு)

* இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட செல்வத்தை இறைவன் பிரசாதமாகக்கருதித் தங்களைத் தர்மகர்த்தாக்களாக நினைத்து நல்வழியில்அதனைப் பயன்படுத்தினாலேயே, அச்செல்வம் கிடைக்கப்பெற்றதன் பலனை அடையப் பெறுவதோடு அச்செல்வமும் மென்மேலும் பெருகி நிலைத்து நிற்கும். -ஸ்ரீவைஷ்ணவம்

* மாசி மாதத்தில் தேய்பிறைச் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமையிலேனும் ஞாயிற்றுக்கிழமையிலேனும் பொருந்தி வந்தால், அது முக்கோடி சிவராத்திரி எனப்பெறும் . -ந.ரா.முருகவேள்.

* திருவையாறு - சோழநாட்டு (வடகரை)த் தலம் காசிக்குச் சமமான தலங்களில் இதுவும் ஒன்று அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த அற்புதத் தலம். அப்பர் கயிலைக் காட்சி, ஆடி ஆமாவாசையன்று நடைபெறுகிறது. இங்குள்ள ஆவுடை விநாயகர் (ஆவுடையார் மீது விநாயகர்) தரிசித்து வழிபடவேண்டியவர். பிராகாரத்தின் கோடியில் ஓரிடத்தில், கற்சுவரில் அமைக்கப்பட்டுள்ள சிறிய குழியில் வாய் வைத்து உரத்த குரலில் "ஐயாறா" என்று அழைத்தால், அவ்வொலி பன்முறை பிரதிபலிக்கிறதாம்.

* இறைவனை எண்மலர்கள் கொண்டு அர்ச்சிப்பது தொன்றுதொட்டு வரும் மரபு, வைகறையில் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி,செந்தாமரை என்னும் எட்டு மலர்கள் கொண்டு வழிபடுக என்று சிவாகமங்களில் விதிக்கப்பெற்றுள்ளது.

* கொல்லாமை, அருள், ஐம்பொறி அடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு என்னும் எட்டுக் குணங்களும் எண்மலர்களாகக் கொள்ளப் பெறுகின்றன. - திருவாவடுதுறை ஆதீனம், ஸ்ரீ அம்பலவாண பண்டாரசந்நிதிகள்

* உயிர்களுக்கு மேன்மையை அளிக்கலுற்ற சிவபெருமானையே முத்தி பெறுவதற்காக, எப்போதும் பூசிக்கவும், அறியவும், தியானிக்கவும் வேண்டும். அவரே பரப்பிரமமும், பரதத்துவமும், பரஞ்சோதியும், பரந்தாமமும், தெய்வங்களுக் கெல்லாம் பெருந்தெய்வமும் ஆகிறார். ஆகையால் அத்தகைய மகாதேவரை யார் தொழுகின்றார்களோ, அவர்களே மேலானவர்கள். -சிவரகசியகண்டம்

* காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ள தொடர்பு போலவே, தெய்வத்துக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு இருந்துகொண்டே இருக்கிறது. மண் மூடிய இரும்புத் துண்டிலிருந்து மண்ணை அகற்றிவிட்டால் இரும்பு காந்தத்தால் இழுக்கப்பட்டு விடுவது போன்று, ஜீவனை மறைத்திருக்கும் மாயையாகிய மண்ணை, இடைவிடாத பிரார்த்தனையால் அகற்றிவிட்டால், ஜீவன் உடனே இறைவனால் கவர்ந்து இழுக்கப்படுவான் - ஸ்ரீ இராமகிருஷ்ணர்

* நடராசப் பெருமானுக்கு நிகழும் அபிஷேகங்கள், மூன்று நட்சத்திரங்களிலும் மூன்று திதிகளிலும் நடைபெறுகின்றன. மார்கழியில் திருவாதிரையிலும் சித்திரையில் திருவோணத்திலும், ஆனியில் உத்திரத்திலும், ஆக மூன்று நட்சத்திரங்களிலும் மாசி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் சதுர்த்தசி திதியிலுமாக, ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. ஆனித் திங்கள் உத்திர நட்சத்திரத்தில் நிகழும் நடராசர் அபிஷேகத்தைப் "பிரதோஷ கால அபிஷேகம்" என்பர்.

# காசி விஸ்வேசர் போற்றி

சீர்வளர் காசியில் சிவமே போற்றி !
வார ணாசியில் வளர்வாய் போற்றி !
அகல்யா பாய்க்கருள் அப்பனே போற்றி !
புகல் அடைந் தோர்களைப் புரப்பாய் போற்றி !
கங்கையைத் தாங்குசெஞ் சடையாய் போற்றி !
மங்கைக் கிடமே வழங்கினாய் போற்றி !
அன்னையின் வடிவில் அமர்ந்தாய் போற்றி !
அன்னபூ ரணியாம் அருந்தவ போற்றி !
மாசிலார் துன்பம் மாற்றுவாய் போற்றி !
காசிக் கயிற்றல் களைபவ போற்றி !
பூசும் நீற்றின் பொலிவே போற்றி !
பேசும் ஐந் தெழுத்தின் பெருமையே போற்றி !
தீர்வரும் மனநோய் தீர்ப்பாய் போற்றி !
பார்வையால் ஆட்கொள்ளும் பைரவ போற்றி !
அகிலம் காக்கும் ஐயா போற்றி !
அகிலே சன் எனும் அண்ணலே போற்றி !
ஆயிரம் பேர்கள் அமைந்தாய் போற்றி !
தாய்விசா லாட்சி தண்ணருள் போற்றி !
திருமறை தந்த திருவருள் போற்றி !
திருமுறைக் குள்வளர் சிவமே போற்றி !
கட்டளை பற்பல கண்டாய் போற்றி !
லட்டுத் தேரை நயந்தாய் போற்றி !
ஈசான்ய திக்கில் இலங்குவாய் போற்றி !
காசிவிஸ் வேசர் கழலினை போற்றி !
பொங்கிய கங்கைப் பொலிவே போற்றி !
எங்கும் தெரியும் இலிங்கமே போற்றி !
நம்பின வர்க்கருள் நம்பா போற்றி !
"சம்போ" செல்லத் தாங்குவாய் போற்றி !
மங்கலம் குமரர்க்கு வழங்கினாய் போற்றி !
கங்கைக் கரைமடம் கண்டனை போற்றி !
அட்சய வடமாய் அமைந்தாய் போற்றி !
பிச்சை ஏற்கும் பெருமான் போற்றி !
ஆதி லிங்கமாய் ஆனாய் போற்றி !
சோதி லிங்கமாம் சுடரே போற்றி !
பார்த்த னுக்கருள் பசுபதி போற்றி !
தீர்த்தச் செம்பில் திகழ்வாய் போற்றி !
தகரா காசத் தவமே போற்றி !
மகாம யான வாழ்வே போற்றி !
வீட்டில் திகழும் விளக்கே போற்றி !
காட்டில் ஆடும் கண்ணுதல் போற்றி !
மணமிலாப் பூவின் மணமே போற்றி !
தணல்எரி யேந்தும் தலைவா போற்றி !

பொன்னைக் காட்டிப் புரப்பாய் போற்றி !
தன்னைக் காட்டும் தத்துவ போற்றி !
மன்னுல கெல்லாம் வளைத்தாய் போற்றி !
அன்பர் பிடிக்குள் அடங்குவாய் போற்றி !
கட்டிப் பிடிக்கக் காட்டுவாய் போற்றி !
தொட்டுத் தழுவச் சுடர்பவ போற்றி !
காதில் மந்திரம் ஓதுவாய் போற்றி !
பாதாள ஈசனாய்ப் படர்ந்தாய் போற்றி !
அஞ்சு லிங்கமாய் ஆனாய் போற்றி !
மிஞ்சும் அமைதி விளக்கமே போற்றி !
மங்கல மீனாள் மணாள போற்றி !
தங்கவிசா லாட்சி தலைவா போற்றி !
நகரே சப்பெயர் நயந்தாய் போற்றி !
நகரத் தார் தவ நற்பயன் போற்றி !
ஆதி அனாதியும் ஆனாய் போற்றி !
ஓதும் மந்திரத் துட்பொருள் போற்றி !
அளக்க லாகா ஆற்றலே போற்றி !
விளக்கில் விளங்கும் விளக்கமே போற்றி !
பக்தர்க் கருளும் பரம்பர போற்றி !
முத்தி அளிக்கும் முதலே போற்றி !
ஞானியர் காணும் நல்லொளி போற்றி !
ஆனந்த வனத்தில் ஆடுவாய் போற்றி !
பூரண ஞானப் பொலிவே போற்றி !
காரணம் கடந்த கடவுள் போற்றி !
பதியில் சிறந்த பதியே போற்றி !
நதியில் சிறந்த நதியே போற்றி !
பயம் கெடுத் தாளும் பரனே போற்றி !
சுயம் பிர காசச் சோதி போற்றி !
அணைந்தவர்க் கின்பம் அளிப்பாய் போற்றி !
மணிகர் ணிகையில் வழங்குவாய் போற்றி !
தொடரும் பாசம் சுடுவாய் போற்றி !
அடைவோர் பிறவி அறுப்பாய் போற்றி !
வினையெலாம் மாற்றும் விஸ்வேச போற்றி !
மனையெலாம் சிவமாய் வந்தவ போற்றி !
தாயென மடியில் தாங்குவாய் போற்றி !
ஓய்வளித் தாளும் ஒருவனே போற்றி !
பாடும் பணிக்கே பணிப்பாய் போற்றி !
கோடி தீர்த்தம் கொண்டவ போற்றி !
மரண பயத்தை மாற்றுவாய் போற்றி !
திருவருள் புரியத் தேடுவாய் போற்றி !
எண் ணுவார் நெஞ்சில் இனிப்பாய் போற்றி !
எண்ணிய படியே வருவாய் போற்றி !
கரும வினைகள் களைவாய் போற்றி !
தரும வனத்தில் தங்குவாய் போற்றி !

ராக்கால பூசை நயந்தாய் போற்றி !
பூக்கோலம் காட்டிப் பொலிவிப்பாய் போற்றி !
கல்லா நெஞ்சில் நில்லாய் போற்றி !
எல்லாம் சிவமாய் இருந்தாய் போற்றி !
அயன்தலை மாலை அணிந்தாய் போற்றி !
பயன்தரும் ஆகமம் பயந்தாய் போற்றி !
மதியை வளர்க்கும் வள்ளால் போற்றி !
கதியென நின்ற கடவுள் போற்றி !
திரிவேணி சங்கமம் திகழ்வாய் போற்றி !
அருள்பொழி கயைப்பதி அமர்ந்தாய் போற்றி !
பருகா அமுதாம் பண்பே போற்றி !
கருவாய் உலகம் காப்பாய் போற்றி !
மூவர்க் கருளும் முதல்வா போற்றி !
தேவரும் காணாச் சிவமே போற்றி !
கண்டம் கறுத்த கனியே போற்றி !
துண்டி விநாயகர் துணையே போற்றி !
வந்த பிறப்பாம் வரவே போற்றி !
சிந்தும் இறப்பாம் செலவே போற்றி !
ஆல நீழல் அமர்ந்தாய் போற்றி !
காலனைக் காய்ந்த கண்அழல் போற்றி !
தேசு மிகுந்த திருவருள் போற்றி !
காசிவிஸ் வேசக் கடவுளே போற்றி !

பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம்

*In 1906, I first went to Varanasi to call on my aunt who lived there spending her last days in that holy city. I then had occasion to see the Puja and Arti Articles being carried to the Biswanath Temple by Chetiar People a solemn procession and in perfect South Indian style. This religious fervour of the Chetiars was evident in Kuala Lumpur and other places in Malaya and it was indeed a pleasure to me to see such spiritual forces at at work. The political unity of India is based - not on one language - but on cultural foundations, which have the roots in Hindu Religion. I therefore wish the Nattukottai Chettiar Institutions spread out all over the country many more years of solid and silent work.*

Padama Bushan
**Dr. Suniti Kumar Chetteriji @ Nanneri Murugan**

# சில முக்கிய செய்திகள்

* ஸ்ரீ விசுவேசருக்கு நாள் தோறும் நடைபெறும் நான்குகால பூஜைகளில் மூன்று கால பூஜைகளைச் செய்யும் பேறு பெற்றது காசி நகரச்சத்திரம்.

* கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் இந்துஸ்தானி கோஷாயி மடத்தை விலைக்கு வாங்கிப் புதுப்பித்து 1863ம் ஆண்டு ருத்ரோத்காரி ஆவணி 10 ஆம் நாள் நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் என்ற பெயரில் தொடங்கினார்கள்.

* பசுமடம் தொடங்கி 15.1.1897 இல் அதற்குரிய கட்டிடம் கட்டினர்.

* நந்தவனம் நடத்தி 1894 இல் சொந்த இடம் வாங்கி நந்தவனம் அமைத்தனர்.அது 1902 1905 ஆம் ஆண்டுகளில் புதிய இடங்கள் வாங்கி விரிவாக்கப் பெற்றது.

* சத்திரத்தினுள் அமைந்துள்ள நகரேஸ்வரர் கோவிலில் 1962, 1978, 1994 ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

* மிகச் சிறியதாக இருந்த விசாலாட்சி அம்மன் கோயிலை நகரத்தார்கள் வாங்கி 1893 இல் பெரிதாகக் கட்டினர். 1908 ல் குடமுழுக்கு நடைபெற்றது. அடுத்து 1985 ,1999 ஆம் ஆண்டுகளில் மீண்டும் குடமுழுக்கு நடைபெற்றது.

* பிரயாகை (அலகாபாத்)யில் கல்கத்தா நகரத்தார்களால் 1891 ஆம் ஆண்டு சத்திரம் தொடங்கப்பெற்றது.

* அயோத்தியாவில் கல்கத்தா நகரத்தார்களால் 1883 ஆம் ஆண்டு சத்திரம் தொடங்கப்பெற்றது. பல ஆண்டுகள் இத்தலத்தில் திருவிழாக்கள் நடத்தி வந்தனர். அதற்கென்று செய்த தேர் இன்றும் உள்ளது.

* கயாவில் நகரத்தார் 1910 இல் சத்திரம் தொடங்கினர் 1911, 1928 ஆம் ஆண்டுகளில் புதிய இடங்கள் வாங்கி அதை விரிவாக்கினர்.

* கல்கத்தாவில் நகரத்தார் ஹவுஸ் 1921 இல் கட்டப்பெற்றது.

* நாசிக் பஞ்சவடியில் சத்திரம் 1865 இல் கட்டிடம் வாங்கி 1867 இல் புதுப்பிக்கப்பட்டுத் தொடங்கப்பெற்றது. இங்கு மும்பை நகரத்தார்களால். தைப்பூசமும், கந்தர் சஷ்டியும் சிறப்பாக நடத்தப்பெறுகின்றன.

* சென்னையில் ரெங்கூன் நகர விடுதி 1907 இல் தொடங்கப் பெற்றது.

* காசி விசுவேசர் கோயில் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பைச் சில காலம் நகரச்சத்திரமே ஏற்றுக்கொண்டிருந்தது.

* காசி நகரச்சத்திரத்தின் நூற்றாண்டு விழா 1963 ஆம் ஆண்டு கொண்டாடப் பெற்று, ஒரு சிறப்பு மலர் அமரர் சோம.லெ.அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பெற்றது.

* காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொஸைட்டி முதலில் பர்மா இரங்கூனில் 1934ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. 1965இல் நம் நாட்டில் பதிவு செய்யப்பட்டது. 1970 ஆம் ஆண்டு கோவிலூரில் 76ஊர் நகரத்தார்கள் கூடிப் புதிய செயற் குழுவைத் தேர்ந்தெடுத்தார்கள்

* எல்லா சிவாலயங்களிலும் இருப்பதுபோல காசி விஸ்வநாதர் கோயிலில் அங்கமாக விசாலாட்சி அம்மன் சன்னதி அமையவில்லை. ஸ்ரீ விஸ்வநாதர் பிரம்மச்சாரியாக இருந்து தவம் செய்தார் என்பது காசி நகரத்தின் ஐதீகங்களில் ஒன்று. அதனால்தான் போலும் காசிக் கோயிலில் பள்ளியறை அமைக்கப்படவில்லை.

* பிரமச்சாரியாக வந்து பிச்சை ஏற்ற விசுவநாதருக்கு அன்னபூரணி அம்மன் அன்னம் பாலிக்கின்றாள் என்பது இத்தலத்தின் சிறப்பு. காஞ்சி நகரத்தில் அம்பிகை 32 அறங்களையும் செய்தாள் என்பது வரலாறு


நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுவதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிரெல்லாம் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பண்ணாறும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணாகும் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறக்குழைக்க காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்
(டாக்டர் வ.சுப.மாணிக்கம்)



காசிமாநகரின் வடகிழக்கு மூலையில் சாரநாத் என்னும் சிற்றூர் இருக்கிறது. சாரநாத்தில்தான் பௌத்தமதம் தோன்றிற்று என்று கூறலாம். புத்தர்க்கே உரிய அமைதி தவழும் புனித இடம் சாரநாத்.

இந்திய அரசாங்கத்தின் சின்னமாக விளங்கும் "சிங்கமும் தர்ம சக்கரமும்" சாரநாத்திலுள்ள அசோகத் தூணிலிருக்கும் வடிவத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை தான். புத்தர்பெருமான் அரிய அறவுரைகள் அருளிச் செய்து அறச் சக்கரத்தை இயக்கிய புனித இடம் இதுவே.


எண்கோணக் கோபுரத்தை உச்சியில் கொண்ட பெரிய செங்கற் கட்டிடக் குன்றும், மகாபோதி சங்கம் உருவாக்கியுள்ள மூலகந்தகுடி பௌத்தர் ஆலயமும், சீனர் அமைத்துள்ள பௌத்தர் கோயிலும், சமணர் கோயிலும், பௌத்தமதத்தின் சின்னங்கள் அடங்கிய கலைக் கருவூலமாய் விளங்கும் காட்சிக்கூடம் உள்ள சாரநாத் பௌத்தம் வளர்த்த பண்ணையாகும். இதைக் காணாத கண் என்ன கண்ணோ!



விசாலாட்சி கோயில், காசி.

Visalakshi Temple, Varanasi. (Built by Nattukkottai Chettiars)

विशालाक्षी मंदिर, काशी



காசி விசுவேசர் நாகாபரணப் பூசைக் காட்சி